இந்தியச் சூழலில் மொழி இழப்பு
ஒரு சமுதாய மொழியியல் பார்வை

வ. ஞானசுந்தரம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இந்தியச் சூழலில் மொழி இழப்பு
ஒரு சமுதாய மொழியியல் பார்வை

முனைவர் வ. ஞானசுந்தரம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

டாக்டர் தெ.பொ.மீ. அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர் : பேரா. மது. ச. விமலானந்தம்)
வரிசை எண் : 5

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	intiyaccūḻalil moḻi iḻappu oru camutāya moḻiyiyal pārvai
Author	:	Dr. V. Gnanasundaram Professor cum Deputy Director (Retd.) Central Institute of Indian Languages Manasagangothri, Mysore-570 006
General Editor	:	Dr. S. Jean Lawrence Professor Faculty of Tamil Language and Linguistics International Institute of Tamil Studies Tharamani, Chennai-600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	628
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2009
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	viii + 176
No. of Copies	:	1200
Price	:	Rs. 60/- (Rupees Sixty Only)
Printed by	:	United Bind Graphics 189-D, Royapettah High Road Mylapore, Chennai - 600 004.
Subject	:	Sociolinguistics- Endangered Language Studies

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

இருபதாம் நூற்றாண்டின் சிறந்த, தமிழ் மற்றும் மொழியியல் அறிஞர்களுள் குறிப்பிடத்தக்கவராக விளங்கிய பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் (தெ.பொ.மீ.) அவர்கள் பெயரால் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பேராசிரியர் மது. ச. விமலானந்தம் அவர்களால் நிறுவப்பட்டுள்ள அறக்கட்டளையின் சார்பாக இதுவரையிலும் 4 சொற்பொழிவுகள் நடைபெற்றுள்ளன. 5ஆவது சொற்பொழிவாக 'இந்தியச் சூழலில் மொழி இழப்பு ஒரு சமுதாய மொழியியல் பார்வை' என்ற தலைப்பில் விரிவான ஆய்வு நோக்கில் இந்தச் சொற்பொழிவு நூல் அமைகின்றது.

மொழி என்பது மனித குலத்தின் உன்னதவெளிப்பாடு; மனித குலத்திற்கு மாத்திரமே உரியது. உலகில் ஒரு காலத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டதாக இருந்த மொழிகள் இன்று ஆறாயிரம் முதல் ஏழாயிரம் வரையிலான மொழிகளாகக் குறைந்துள்ளன. உலகில் இன்று பேசப்பட்டு வரும் மொழிகளில் ஏறக்குறைய ஐம்பது விழுக்காட்டு மொழிகள் இன்னும் ஒரு நூற்றாண்டில் அழிந்துவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும் என்று மொழியியல் அறிஞர்கள் பலர் கணித்துள்ளனர். யுனெஸ்கோ நிறுவனத்தின் அண்மைச் செய்திக் குறிப்பு ஒன்று உலக வழக்கிலிருந்து நீங்கப்போகும் 196 உலக மொழிகளில் இந்திய மொழிகள்தாம் அதிக எண்ணிக்கையில் உள்ளன என்கிறது. யுனெஸ்கோ நிறுவனத்தின் அண்மைக்கால இந்தியமொழிகள் இழப்பு குறித்த எச்சரிக்கைச் செய்தியை மனதில் கொண்டு, இச்சொற்பொழிவு அமைந்துள்ளதாகத் தோன்றுகிறது.

இச்சொற்பொழிவை நிகழ்த்த இசைவு தெரிவித்தவர் மைசூர் இந்திய மொழிகள் நடுவண் நிறுவனத்தின் மேனாள் பேராசிரியர் மற்றும் துணை இயக்குநர் பேரா. வ. ஞானசுந்தரம் ஆவார். தெ.பொ.மீ.யின் உளம் கவர்ந்த மாணவர்களில் ஒருவராகவும் மொழியியல் வல்லுநராகவும் திகழும் முனைவர் வ. ஞானசுந்தரம் அவர்கள் மேற்சுட்டிய தலைப்பில் இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவை நிகழ்த்த இசைவு தந்து, அறக்கட்டளைக்குரிய எழுத்துருவை உரிய காலத்தில் அளித்தார். மொழி இழப்பு-மொழி தக்கவைப்பு குறித்த இந்திய நாட்டு, மேலை நாட்டு மொழியியல் அறிஞர்களின் பல்வேறு கருத்துகளையும், இத்துறையின் வளர்ச்சி;

போக்குகளையும், மொழி இழப்புக் குறித்து இந்திய மொழியியல் அறிஞர்களோடு இணைந்து தாம் மேற்கொண்ட கள ஆய்வுகளையும் அவற்றின் சில முடிவுகளையும் திறம்பட இந்நூலில் விளக்கியுள்ளார். சமுதாய மொழியியல் துறையில் நிகழ்ந்து கொண்டிருக்கும் மொழி இழப்பு ஆய்வுப் போக்குகளை அறிய விழைபவர்க்கும் இத்துறையில் ஆய்வினை -கள ஆய்வினை மேற்கொள்ள விழையும் ஆய்வாளர்கள், மாணவர்கள் பயன்பெறும் வண்ணமும் வினாத்தாள்கள், நோக்கு நூல்கள், கணினி வலைப் பின்னல்கள் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன. இவற்றை ஆய்வு உலகம் பயன்படுத்தி நலம்பெறும் என்பது திண்ணம்.

இந்த அறக்கட்டளை நிறுவிய பேராசிரியர் மது. ச. விமலானந்தம் அவர்கட்கு நன்றி.

இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவுக்குப் பொறுப்பாளராக இருந்து இவ்வறக்கட்டளை நடைபெறவும், நூல் வெளிவருவதற்குரிய பணிகளை மேற்கொண்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தமிழ் மொழி மற்றும் மொழியியல் புலப் பேராசிரியர் முனைவர் செ. ஜீன்லாறன்ஸ் அவர்களின் பணி பாராட்டத்தக்கது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள், கணிப்பொறியாளர் திருமதி பா. கௌசல்யா ஆகியோருக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

இயக்குநர்

ஆசிரியரைப் பற்றி

முனைவர் வ. ஞானசுந்தரம் அறையணி நல்லூரில் தந்தையார் து. வடிவேலு, தாயார் வ.கனகம் அவர்களுக்கு 20.10.1940இல் பிறந்தவர். இளங்கலை (பி.ஓ.எல்) 1963, மொழியியல் முதுகலை 1965, தெலுங்கில் பட்டயம், 1965, முனைவர் பட்டம் 1979 ஆகிய அனைத்தையும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பெற்றவர்.

ஆய்வுப்பணி: அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயர் ஆய்வு மையத்தில் 'தொண்டை மண்டலக் கிளைமொழி ஒரு முன்னோடி எல்லையளவு ஆய்வு' (A Pilot dialect survey of Tondaimandalam), என்ற ஆய்வையும், மைசூர் இந்திய மொழிகள் நடுவண் நிறுவனத்தில் பழங்குடி மொழியினர்க்கான இருமொழியக் கல்வி ஆய்வு, சமுதாய மொழியியல் ஆய்வு, அழியும் நிலையில் உள்ள பழங்குடியினர் மொழி இழப்பு குறித்த ஆய்வு, மொழியியல்வழி சங்கத் தமிழ் நடை குறித்த ஆய்வு ஆகியவற்றை மேற்கொண்டிருந்தவர்.

ஆசிரியப்பணி: மைசூர் இந்திய மொழிகள் நடுவண் நிறுவனத் தென்மண்டல மொழிகள் பயிற்சி நிறுவனத்தில் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளைத் தமிழ், மலையாளம் அறியாத ஆசிரியர்களுக்கு, குறிப்பாக, இந்திபேசும் மாநில ஆசிரியர்களுக்கும், மைசூர் இந்திய மொழிகள் நடுவண் நிறுவனத்தில் முதுகலை ஆசிரியர்களுக்கும், ஆய்வு மாணவர்களுக்கும் பயனாக்க மொழியியல், பழங்குடியினர்மொழி தொடர்பான மொழியியல் ஆகியவற்றைக் கற்பித்துள்ளார்.

நிருவாகப்பணி : 1970 முதல் 1978 வரை மைசூர், இந்திய மொழிகள் நடுவண் நிறுவனத் தென்மண்டல மொழிகள் பயிற்சி மையத்தில் விரிவுரையாளர், 1978 முதல் 1998 வரை மைசூர் இந்திய மொழிகள் நடுவண் நிறுவனத்தில் இணைப்பேராசிரியர் மற்றும் ஆய்வு அலுவலர்; 1998 முதல் 2000 வரை இந்திய, மொழிகள் நடுவண் நிறுவனத்தில் பேராசிரியர் மற்றும் துணை இயக்குநர்.

குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பண்கள் : இருமொழியக் கல்வி தொடர்பான கல்வித்திட்டத்தைப் பழங்குடியினர் மொழிபேசும் தமிழ்நாடு, இராஜஸ்தான், தாத்ரா நகர் ஹவேலி, இலட்சத்தீவு, பீகார், அந்தமான் நிகோபார் தீவுகள் முதலான பகுதிகளில் சோதனை முறையில் நடைமுறைப் படுத்தியது, நீலகிரிப் பழங்குடியினக் குழந்தைகள் தமிழ் கற்றலில் மேம்பாடு அடைவதற்காக (பேராசிரியர் க. கருணாகரன் அவர்களுடன் இணைந்து) ஆசிரியர் கைவிளக்கு என்ற நூலைத் தயாரித்தது, (பேராசிரியர் ந. நடராசப் பிள்ளை அவர்களுடன் இணைந்து நீலகிரிப் பழங்குடியினக் குழந்தைகள் தமிழ்

கற்றலில் மேம்படத் தயாரித்தளித்துள்ள ஒலிநாடாப் பேழைகள், ஜப்பான் காக்சின் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் ஓநோ அவர்களது ஜப்பானியம் - தமிழ் உறவு குறித்த கருத்தரங்கப் பணிமனையில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவித்தமை, சென்னை தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தில் ஆய்வுசாரராக இருந்து வலைத் தளத்திற்கேற்ற உயர்நிலைத் தமிழ்ப் பாடங்கள் தயாரித்தளித்தது, தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியல் துறை வழியாகப் பல்கலைக்கழக நல்கைக் குழுவின் (UGC) உதவியோடு, தமிழகத்தில் பயன்பாட்டில் உள்ள தமிழ் மற்றும் சிறுபான்மையினர் மொழிகள் குறித்த மொழித்திட்டமிடலுக்கான ஆய்வு நிகழ்த்தி (2000 - 2006) ஆய்வு நூலைத் தயாரித்தளித்துள்ளது. சென்னை நடுவண் நிறுவனச் செம்மொழித்தமிழ் உயர் ஆய்வுமையத்தில் (பேராசிரியர் ஆர். பெரியாழ்வோரோடு இணைந்து) தமிழ்நாட்டுப் பழங்குடியினரது தமிழ்க்கிளை மொழிகள், குறித்த ஆய்வு (2007-2009) நிகழ்த்தி ஆய்வு நூலைத் தயாரித்தளித்துள்ளது ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

ஆய்வு நெறியாளர் : மூன்று பேர் முனைவர் பட்டம்பெற ஆய்வு நெறியாளராக இருந்துள்ளார். 1998இல் ஐதராபாத் உஸ்மானியப் பல்கலைக் கழக மொழியியல் துரை வருகைதரு பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

நூல்கள் : Onomatopoeia in Tamil 1985, தமிழ்நடைக் கையேடு (பேரா.பா.ரா. சுப்பிரமணியம் மற்றும் பலருடன் இணைந்து) 2005, Linguistic Identity of an endangered tribe: Present Great Andamanese (முனைவர் எஸ். மனோகரனுடன் இணைந்து) 2007.

ஆய்வு கட்டுரைகள் : பாரதியாரின் உரைநடையில் இருநிலை 1986, அகநானூற்றுக் குறிஞ்சிப் பாடல்களில் மொழிப்பயன்பாடு 1996, A study of eye dialects in Tamil 1971, Negation in Mysore Tamil (with K. Rangan) 1976, Standand spoken Tamil: What and how? 1980, Spoken Tamil in contem- porary fiction (with R. Perialwar 1980), Research in Tamil dialectology 2000, Language endangerment and Tribal languages of India(with R.Elangaiyan 2000), Andamanese: Biological challenge for language reversal (with E. Annamalai) 2001, Diglossia and use of written Tamil in Public sphere, 2002, Language endangerment in the Indian context and globalization (with K. Rangan) 2006, Language use in Akam poems with reference to Kurincittinai 2006, Survey of Tamil dialects some methodological issues, 2008.

குறுவட்டுகள் : செந்தமிழ் 1, 4, - சிங்கப்பூர்ப் பன்மொழிச் சூழலில் தமிழ் பயிலும் மாணவர்க்கான குறுவட்டுகள் (பேரா. நடராசப்பிள்ளை முதலியோரோடு இணைந்து) தமிழ் உலகம் : தமிழ் அறியாதோர்-வெளிநாட்டவர் இரண்டாம் மொழியாகப் பேச்சுத்தமிழ், எழுத்துத் தமிழ் இரண்டையும் கற்பதற்கான குறுவட்டுகள் (பேரா. ஜீன்லாறன்ஸ், பேரா. நடராசப்பிள்ளை மற்றும் பலருடன் இணைந்து)

நன்றியுரை

பல்கலைச் செம்மல் பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்களின் பெயரில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைந்திருக்கும் அறக்கட்டளைச் சொற்பொழிவை **இந்தியச் சூழலில் மொழி இழப்பு – ஒரு சமுதாய மொழியியல் பார்வை** என்ற தலைப்பில் நிகழ்த்த வாய்ப்பளித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் பேராசிரியர் முனைவர் கரு. அழ. குணசேகரன் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன். இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளர் பேராசிரியர் முனைவர் செ.ஜீன்லாறன்ஸ் அவர்களுக்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனக் கல்வி மற்றும் நிருவாகத்தினர்க்கும் எனது உளங்களிந்த நன்றி.

1963 ஆம் ஆண்டு பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களின் மொழியியல் (முதுகலை) மாணவனாகும் பேற்றினைப் பெற்றேன். பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களுடன் 1963 - 65 ஆம் ஆண்டுகள் வரையிலும் ஆசிரியர் மாணவர் உறவு தொடர்ந்தது; வலுப்பட்டது. மொழியியலில் முதுகலைப் பட்டம்பெற்ற பிறகு அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயர் ஆய்வுமையத்தில் 'தொண்டை மண்டலத் தமிழ்க் கிளை மொழிகள்' குறித்த ஆய்வினை மேற்கொள்ளுமாறு பணித்தார். பேராசிரியர் சண்முகம் பிள்ளை பேராசிரியர் அகத்தியலிங்கனார் அவர்களது சீரிய வழிகாட்டுதலிலும், ஆய்வு நிறைவு பெற்றுப் பட்டமும் பெற்றேன். மொழியியலைச் செம்மையாக அறிமுகம் செய்து மொழியியல் மீது பற்றையும் பிடிப்பையும் உண்டாக்கிய பெருந்தகை பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரின் பெயரில் அமைந்த அறக்கட்டளைச் சொற்பொழிவை நிகழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நூலின் பதிப்புப் பணிக்கு உதவிய முனைவர் ஆ. தசரதன், (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்) அவர்களுக்கும், பங்களூர் 'ஆப்பிள் சாஃப்ட்' நிறுவன இயக்குநர் திரு. அன்பரசன் அவர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் கையெழுத்துப்படியைப் புரிந்து கொண்டு தட்டச்சு செய்து கொடுத்த செல்வி விக்டோரியா எஸ்தர் ராணிக்கும் திருமதி பி.கௌசல்யாவுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது போன்ற பணியை மேற்கொள்ளும் போதெல்லாம் எனது தேவைகளை நிறைவேற்றியவாறே உதவிடும் எனது வாழ்க்கைத் துணைவி சாந்தி ஞானசுந்தரத்திற்கு எனது நன்றி. எனது பெற்றோர் வ.கனகம், து. வடிவேலு அவர்களது நினைவைப் போற்றி மகிழ்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

பேராசிரியர் இ. அண்ணாமலை அவர்களது

Satan and Saraswathi. The double face of English, (1992) மற்றும்

Tribal bi-lingualism in India. In: Managing Multilingualism in India. Political and Linguistic Manifestations, (2001) என்னும் ஆய்வுக் கட்டுரைகளின் கருத்துகளில் சிலவற்றைத் தமிழாக்கம் செய்து இந்நூலில் பயன்படுத்த அனுமதியளித்தமைக்கு அன்னார்க்கு எனது உளங்கனிந்த நன்றி.

வ. ஞானசுந்தரம்

உள்ளே

பக்கம்

அணிந்துரை

ஆசிரியரைப் பற்றி

1. முன்குறிப்பு 1

2. இயல் - 1
இந்தியாவின் பன்மொழிச் சூழல் 7

3. இயல் - 2
தமிழ் நாட்டின் மொழிச் சூழல் 15

4. இயல் - 3
உலகமொழி ஆங்கிலத்தின் செல்வாக்கும்
பயன்பாடும் 40

5. இயல் - 4
இருமொழியம் 51

6. இயல் - 5
மொழி இழப்பு 65

7. இயல் - 6
இந்திய மொழி வகைகளில்
மொழி இழப்பு 79

8. இயல் - 7
மொழி இழப்பு குறித்த கள ஆய்வுகள்:
குறும்பர், இருளமொழிகள் 126

பிற்சேர்க்கைகள்

துணை நூல்கள், கட்டுரைகள்

முன்குறிப்பு

உலகில் ஒரு காலத்தில் ஏறக்குறைய பத்தாயிரம் மொழிகள் வழக்கில் இருந்தன. ஆனால் இன்றோ உலக முழுவதும் உள்ள நாடுகளில் பேசப்படும் மொழிகள் ஆறாயிரம் முதல் ஏழாயிரம் வரைதான் என்று ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது (Crystal 2000). உலகில் பேசப்படும் இம் மொழிகளில் ஏறக்குறைய ஐம்பது விழுக்காட்டளவில் உள்ள மொழிகள் இன்னும் ஒரு நூற்றாண்டில் அழிந்துவிடும் நிலைக்குத் தள்ளப்படும் எனத் திடுக்கிடும் வகையில் கணிப்புகள் கூறுகின்றன (Halle, 1992; Crystal, 2000; Mackey, 2003; Maurias and Morris 2003). இது மாத்திரமல்ல;. அண்மையில் யுனெஸ்கோ (UNESCO) நிறுவனத்தின் செய்திக் குறிப்பு ஒன்று உலக வழக்கிலிருந்து நீங்கப்போகும் 196 உலக மொழிகளில் இந்தியமொழிகள் தான் அதிக எண்ணிக்கையில் உள்ளன என்கிறது. (இது தொடர்பான நாளிதழ் செய்திகள் அறியப் பிற்சேர்க்கைகள் 1,2,3 ஆகியவற்றைக் காணவும்)

மொழி இழப்பு என்பது என்ன?

வழக்கில் உள்ள ஒரு மொழி, அம்மொழி பேசுபவர் எவரும் அக்கூட்டத்தில் இல்லாதுபோனால் உலகில் இருந்து அம்மொழி நீங்கிவிடுகிறது எனலாம். சமுதாய மொழியியல் நோக்கில் கூறுவதானால் ஒரு மொழி பேசும் சமுதாயத்தைச் சேர்ந்த குழந்தைகள் தங்கள் மொழியைக் கற்றுக் கொள்ளாமலேயே இருந்துவிட்டால், பெற்றோர் மற்றும் ஏனைய பெரியோரிடமிருந்து அம்மொழி தங்களிடம் வந்து சேர்வதில் இடர் ஏற்பட்டால் அந்த மொழி அழிவை நோக்கிச் செல்கிறது என்று பொருள். பொதுவாக ஒரு தலைமுறையினரிடமிருந்து இன்னொரு தலைமுறையினரிடம் சென்று சேரும் (Intergeneational transmission). மொழி சென்று சேராவிட்டால் அதை மொழி இழப்பு (language loss) எனலாம். சென்று சேர்ந்திருந்தால் அது மொழிதக்கவைப்பு (language maintenance) எனலாம்.

வரலாற்றுக் காலத்தில் மொழியின் தோற்றமும் அழிவும்

மொழி உலகின் எங்கோ ஒரு பகுதியில், எடுத்துக்காட்டாக, யுரேசியா அல்லது ஆப்பிரிக்கா போன்ற பகுதியில் முதலில் தோன்றியிருக்கலாம். அல்லது ஒரே காலக் கட்டத்தில் ஒன்றுக்கு

மேற்பட்ட பல பகுதிகளிலும் தனித்தனியாகத் தோன்றிப் பிறகு உலகின் பல பகுதிகளிலும் பரவியிருக்கலாம். மொழி ஒன்றிலிருந்து கிளைத்துப் பரவியதாகவோ (mono genesis) அல்லது உலகின் பல பகுதிகளில் ஏறக்குறைய ஒரு காலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் தோன்றிப் பிறகு அவை உலகின் எஞ்சிய பகுதிகளுக்கும் சென்றடைந்ததாகவோ (poly genesis) இருக்கலாம். எதுவாக இருப்பினும் மனித வரலாற்றின் இந்த நெடிய காலத்தில் ஒரு மொழி இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட மொழிகளாகப் பிரிய, இவ்வாறு மொழிகள் கிளைத்து, கிளைத்துப் பெருகியிருக்கக் கூடும் (Dixon *1991: 232*). கிராஸ் என்னும் மொழியியல் அறிஞரது யூகத்தின்படி ஏறக்குறைய பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது கற்காலத்துக்குப் பிந்தைய காலத்தில் (neolithic invention of food production) மிக அதிகமான மொழிகள், உலகில் பல்கிப் பெருகி விட்டன. அப்போதிருந்த மொழிகள் ஐந்து ஆயிரத்திலிருந்து இருபது ஆயிரம் வரை என்பது அவரது கணக்கீடு (Krass *1998:105*). கிறிஸ்டல் போன்ற (Crystal *2000*) வேறு சில அறிஞர்கள் ஒரு காலத்தில் பத்தாயிரம் மொழிகள் வரை வழக்கில் இருந்தன என்பர்.

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மிக அதிகமான மொழிகள் உலக வழக்குக்கு வந்தன என்று குறிப்பிட்டோமல்லவா, இந்தக் காலக்கட்டத்திற்குப் பிறகு உலகின் பல பகுதிகளிலும் மொழிகள் அழிவைச் சந்திக்கத் தொடங்கின. வரலாற்றுக் காலத்திற்கு முன்பே தொடர்ச்சியாகப் பலமுறை மொழிகள் அழிந்துள்ளன. 16 ஆம் நூற்றாண்டு தொடங்கி உலகின் பல பகுதிகளில் பலமொழிகள் அழியத் தொடங்கின. அழிந்தன என்பர். (Dixon *1991 : 232*).

இதற்கு மிக முக்கியக் காரணமாக விளங்குவது ஐரோப்பிய நாடுகளது காலனியாதிக்கம் தான். மொழி இழப்பினைப், பொதுவாக ஐரோப்பியரது காலனியாதிக்கக் காலத்திற்கு முந்தையகாலம் என்றும் ஐரோப்பியரது காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய காலம் என்றும் வகைப்படுத்துவர்.

ஐரோப்பியக் காலனியாதிக்கக் காலத்திற்கு முன்பு, பழங்குடியினரிடையே சிறிய அளவுகளில் நிகழ்ந்துள்ள 'போர்' போன்ற காரணங்களால் மொழிகள் அழிந்திருக்கலாம். ரோமப் பேரரசு விரிவுபடுத்தப்பட்ட போது இலத்தீன் மொழி பல பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டது. காலனியாதிக்கத்திற்கு உட்பட்ட பல்வேறு மக்கள் தங்கள் மொழிகளைப் புறந்தள்ளி இலத்தீன் மொழிகளைத் தழுவினர். அதுவே பின்னாளில் ருமேனிய மொழி, பிரெஞ்சு மொழி, போர்ச்சுக்கீசியமொழி, ஸ்பானிய மொழி

என ரொமான்ஸ் மொழிகளாக மாறியது. அதாவது இலத்தீன் மொழி எட்ருஸ்கன் என்ற பழமையான ரோமானிய இத்தாலிய மொழி உட்படப் பல மொழிகளை அழித்துள்ளது. (Ridgway 1994; Swadesh *1948 : 226).* சுருக்கமாகச் சொல்வதானால் ஐரோப்பிய மற்றும் ஆசிய மைனர் பகுதிகளில் வழக்கில் இருந்த 75 மொழிகள் இன்று இல்லை. அமேரியன், எலாமைட், ஹிட்டைட் போன்ற மொழிகள் இன்று இல்லை.

ஐரோப்பியக் காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய காலக்கட்டத்தில் ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தினரது மொழிகளான ஆங்கிலம், போர்ச்சுக்கீசியம், பிரெஞ்சு போன்றவை ஐரோப்பாவில் வழக்கில் இருந்த பல பழங்குடியினர் மொழிகளை அழித்துள்ளன. அதாவது ஆங்கிலம் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, வட அமெரிக்கப் பழங்குடியினர் மொழிகளையும் ஸ்பானியம் மத்திய தென் அமெரிக்கப் பழங்குடியினர் மொழிகளையும் போர்ச்சுக்கீசியம் பிரேசில் பழங்குடியினர் மொழிகளையும், உருசியன் சைபீரியப் பழங்குடியினர் மொழிகளையும் அழிந்தொழியும்படி செய்துள்ளன.

இந்தியாவில் அந்தமான் நிக்கோபர் தீவுகளில் உள்ள 'கிரேட் அந்தமான்' என்ற நிலப்பரப்பில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த பத்து வகையான அந்தமானிய மொழி வகைகளில் பல இன்று வழக்கொழிந்துவிட்டன. ஆங்கிலேயரது காலனியாதிக்கத்தின் விளைவாக ஆங்கிலேயர் அந்தமானியரிடையே நிகழ்ந்த போர்கள், பழங்குடியினர் அல்லாத பிற மக்களது தொடர்பால் விளைந்த சமுதாயப் பண்பாட்டு மாற்றங்கள் போன்றவையே கிரேட் அந்தமானியர்களின் அழிவுக்கும் அவரது மொழிவகைகளின் அழிவுக்கும் காரணங்களாகும். (Brown *1914:12,* Mann *1932* : xxI, Manoharan *1989,* Manoharan and Gnanasundaram *2007,* Annamalai and Gnanasundaram *2001,* Anvita Abbi *68: 3-4).*

மொழி இழப்பு என்பது கவலைப்படவேண்டிய ஒன்றா?

உலகில் வாழும் 4,400 விலங்கினங்களில் 326 விலங்கினங்கள் அதாவது 7.47 விழுக்காட்டு விலங்கினங்களும் 8,600 பறவை இனங்களில் 231 பறவை இனங்கள் அதாவது 27 விழுக்காட்டுப் பறவை இனங்களும் எதிர்காலத்தில் அழிந்தொழியக்கூடிய அபாயத்தில் உள்ளன என்பது உயிரியல் விஞ்ஞானிகளைப் பெரிதும் கவலைப்படவைத்துள்ளது. அதே சமயம் உலகில் இன்று பேசப்பட்டு வரும் மொழிகளில் ஏறக்குறைய 50 விழுக்காட்டு மொழிகள் அழியக்கூடிய நிலையில் உள்ளன என்ற செய்தி

மொழியியலார் உட்பட மனித குலத்தை அதிர்ச்சியடையச் செய்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் மொழி இழப்பு என்பது காலந்தோறும் அங்கங்கே நிகழ்ந்து கொண்டிருந்த ஒன்று தான் என்றாலும் இந்த நூற்றாண்டில் நிகழ்ந்து கொண்டிருப்பதாகக் கணிக்கப்பட்டிருக்கும் மொழி இழப்பின் அளவும், வேகமும் அதிகம் எனலாம். 1961 மக்கட் தொகைக் கணக்கின்படி இந்தியாவில் பேச்சுவழக்கில் உள்ள குறிப்பிட்ட ஏதாவது ஒரு மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாக (Classified Languages) உள்ள 153 மொழிகள் ஒவ்வொன்றின் மக்கட்தொகையும், எந்த ஒரு மொழிக்குடும்பத்திலும் சேராததாக உள்ள 289 மொழிகள் (unclassified languages) ஒவ்வொன்றின் மக்கட் தொகையும் 1 முதல் 5 என்ற எண்ணிக்கைக்கு மேல் மிகவில்லை என்பது திகைப்பூட்டும் ஒரு செய்தி (Mehrotra 1999). இனி, இம்மொழிகள் எவ்வளவு காலத்திற்கு வாழும் என்ற கவலையை ஏற்படுத்துகின்றன.

மொழி என்பது மனிதகுலத்தின் ஒட்டு மொத்த அறிவின் உன்னத வெளிப்பாடு என்பதையும் மொழி, மனித குலத்திற்கு மாத்திரமே உரியது என்பதையும் நாம் இங்கே நினைவுகூர வேண்டும். உலகில் வாழும் எண்ணிறந்த உயிர்களின் சமன்பாட்டு விகிதம் எப்படி உலக இயற்பியலில், ஒரு நிலைத்த தன்மையை உண்டாக்குகிறதோ அது போல உலகில் வாழ்ந்து வரும் பலமொழிகளினால் நேரிடும் பன்மொழிச்சூழல் உலகின் பன்முகப் பண்பாட்டுச் சூழலைக் காப்பாற்றுவதாக அமைகிறது எனலாம். உலகின் பன்முகப் பண்பாட்டுக் கூறுகள் மொழிகள் மூலமாகத்தான் வெளிப்படுத்தப்படுகின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. மொழிகள் அழிந்தால் மொழிகள் மூலமாக மனித குலம் தேக்கிவைத்துள்ள அறிவு, (Wisdom) பட்டறிவு (Experience) அழிந்துவிடும். அவை மூலிகை மருத்துவமாகவோ, விலங்கியல்-பறவை இயல் அறிவாகவோ, காலச்சுழற்சி, இயற்கைச் சீற்றம் பற்றிய அறிவாகவோ இருக்கலாம். இயற்கைச் சீற்றம் நிகழ்வதற்கு முன்பே உணர்ந்து கொள்ளும் அறிவு பெற்றவர்களாக அந்தமானியப் பழங்குடியினர் இருந்ததாலேயே அண்மையில் நிகழ்ந்த சுனாமிப் பேராபத்திலிருந்து அவர்கள் தப்பிப் பிழைத்துள்ளார்கள். (இது தொடர்பான விரிவான செய்தியை அறியப் பிற்சேர்க்கை 4 ஐக் காண்க).

பல மொழிகளுக்கிடையே உருவாகி வளரும் முதிர்ந்த எண்ணங்களும் அறிவும் (Cross fertilization of thought and wisdom) பன்மொழிச் சூழலில்தான் உருவாகி மனித குலத்தை வளப்படுத்தியுள்ளன என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒரு மொழியின் கட்டமைப்பே அதாவது இலக்கண

அமைப்பே மனித இனத்தின் மேம்பாட்டின் வெளிப்பாடாகவும் அமைந்துகிடக்கிறது எனலாம்.

வாழ்க்கை அனுபவங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் மூலம் ஆவணப்பட்டுக்கிடப்பதால் வாழ்க்கை பற்றிய பரந்துபட்ட புரிதல்கள் பன்மொழியாளர்களுக்குக் கிடைக்கின்றன.

ஒருவிதத்தில் மொழி, நமது பண்டைய வரலாற்றைப் பாதுகாத்து வைத்துள்ள பேழையாகவும் அமைந்துள்ளது. ஒரு மொழியின் சொற்கள், மரபுச் சொற்கள் எல்லாம் மொழி பேசிய முன்னோரது மனப்பாங்கு, மனவளம், பிறமொழியினரோடு பெற்ற பண்பாட்டுத் தொடர்பு போன்றவற்றை அறிந்து கொள்ள உதவும் கருவியாகச் செயல்படுகின்றன எனலாம். சுருக்கமாகச் சொல்வதானால், உலகை அறிந்து உணர்ந்து கொண்ட விதத்தின் ஒரு வெளிப்பாடு- ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு வகையான குறியீடுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது எனலாம். (ivanov, 1992). உலகை ஆறாயிரத்துக்கும் அதிகமான மொழிகள் மூலம் வெளிப்படுத்த முடிகிறது என்றால் அந்த வெளிப்பாடு மனித குலத்தின் ஒட்டு மொத்த எண்ணச் செழுமையை வெளிப்படுத்துவதாகத் தானே அமைகிறது?

ஒருமொழி அழிகிறதென்றால் உலகப்புரிதல் வெளிப்பாட்டின் ஒரு கூறு அழிகிறது என்றுதானே பொருள். சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் எவ்வளவு அக்கறை தேவையோ அதே அக்கறை மொழி இழப்பைக் காப்பாற்றிப் பன்மொழிச் சூழலைப் போற்றிப் பாதுகாப்பதிலும் தேவைப்படுகிறது. மொழியியலின் வளர்ச்சி பல உலகமொழிகளை ஆராய்ந்ததால் கிடைத்த வளர்ச்சி என்பது உண்மையாயின் அழிந்துபோகின்ற ஒவ்வொரு மொழியுமே மொழியியல் அறிவு வளர்ச்சிக்கு ஏதாவது ஒரு முறையில் இழப்பை உண்டாக்குவதாகவே அமையும்.

மொழி இழப்பு என்ற சமுதாய மொழியில் கருத்தமைவு அதன் மறுதலையான மொழி தக்கவைப்பு என்ற கருத்தமைவை உட்படுத்தியுள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே இந்நூலில் இவை இரண்டுமே விளக்கம் பெறும். மொழி இழப்பு என்ற கருத்தமைவு, இரண்டு மாறுபட்ட கொள்கைக் கோட்பாட்டு முறைகளில் அணுகப்படலாம். அவை

1. மொழி அழிப்பு (Linguistic genocide and linguistic Imperialism)
2. மொழி இழப்பு /அழிவு (Language loss or death and liberalist modernisation) (Skutnabb kangas 2000: 371)

இந்தியச் சூழலில் உள்ள மொழி இழப்பு, இந்த நூலில்

1. சிறுபான்மை மொழியினர் மொழி இழப்பு
2. பழங்குடி மொழியினர் மொழி இழப்பு
3. கிளைமொழிகள் இழப்பு
4. வளரும் (அட்டவணை)மொழிகள் இழப்பு என்பவைகளாக இனங்கண்டு கொள்ளப்படும்.

மேலும் இழப்பு நேரிட அல்லது நேராமல் இருப்பதற்குக் காரணமாக உள்ள இயற்கைக் காரணிகள், மொழி இயல் காரணிகள் ஆகிய இரண்டும் எவ்வாறு காரணிகளாக உள்ளன என்பவை விளக்கப்படும். மொழிவாழும் சூழல் (ecology) மொழி இழப்பின் இன்றியமையாத இன்னொரு காரணியான இருமொழியம் இருமொழியத்தின் விளைவான மொழி இழப்பை ஊக்குவிக்கும் செயல்துணைகளாக உள்ள (agents)

1. உலகப் பொது மொழி ஆங்கிலம்
2. அதிகார வலிமை கொண்ட மாநில மொழி
3. கிளைமொழிகள் தரப்படுத்தம் அல்லது தரத்தகுதி கொண்ட கிளைமொழி ஆகியவைகளின் செயல்பாடுகள் விளக்கப்படும்.

மேலும் வலிமை மிக்க பெரும்பான்மையோர் மொழிக்ககூறுகளுக்கு ஏற்பத் தாய்மொழி மாற்றமடைவதை, மொழி மாற்றத்தினால் விளையும் கலப்பு மொழியினை, மொழி இழப்பு என்பதா மொழித் தக்கவைப்பு என்பதா போன்ற வினாக்களுக்கு விடைகாணவும் இந்நூல் முயற்சிக்கும்.

இந்நூலில் மொழி இழப்பு என்பது வழக்கில் உள்ள மொழி பேசுபவர் எவரும் அம்மொழிக்கு இல்லாமலேயே போகப் பிறகு, அம்மொழி உலகில் இருந்து நீங்கி விடுவது, வழக்கில் உள்ள மொழி, மொழியியல் மாற்றங்களை உட்கொண்டு மொழி மாற்றம் அடைவது, ஒரு மொழியின் வலிமையான களங்கள் வலிமையற்ற களங்கள் ஆகியவற்றில் வலிமையான களங்கள் குறைந்து போதல் என்ற பொருள் நிலைகளில் பேசப்படும்.

இயல் 1

இந்தியாவின் பன்மொழிச் சூழல்

இந்தியாவில் ஐந்து மொழிக் குடும்பங்கள் உள்ளன. அவை:

1. இந்தோ ஆரியம்
2. திராவிடம்
3. ஆஸ்திரோ ஏசியாடிக்
4. திபெத்தோ பர்மியம்
5. அந்தமானியம்

1991 ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி ஐந்து மொழிக் குடும்பங்களைச் சேர்ந்த 114 தாய் மொழிகள் 80 கோடி மக்களால் பேசப்படுகின்றன. அதாவது இந்தியாவின் மொத்த மக்கட் தொகையான 83, 85, 83, 988 இல் (1991 மக்கட் தொகைக் கணக்கெடுப்பு) இது 96.29 விழுக்காடு ஆகும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் (Constitution of India) 18 மொழிகளை எட்டாவது அட்டவணை மொழிகளாக (VIII Scheduled languages Article 343: 751)அங்கீகரித்துள்ளது.

1.1. எட்டாவது அட்டவணை மொழிகள்

அட்டவணை எண் 1.

அட்டவண்ணை மொழிகளும் மொழிபேசும் மக்கட் தொகையும் இறங்கு வரிசையில் (1991)

எண்	மொழிகள்	மொழிப்பேசப்படும் மாநிலம்	பேசுபவர் எண்ணிக்கை	விழுக்காடு மொத்த மக்கட் தொகையில்
1.	இந்தி (இந்தோ ஆரியம்)	இந்திபேசும் வளையம் பீகார், சட்டீஸ்கர், இராஜஸ்தான், ஹரியானா, தில்லி, ஹிமாசலப் பிரதேசம், ஜார்கண்டு, மத்தியப்பிரதேசம், உத்திரப்பிரதேசம்	33,72,72,114	39.85
2.	வங்காளம் (இந்தோ ஆரியம்)	மேற்கு வங்காளம்	6,95,95,738	8.22
3.	தெலுங்கு (திராவிடம்)	ஆந்திரப்பிரதேசம்	6,60,17,615	7.80
4.	மராத்தி (இந்தோ ஆரியம்)	மஹாராஷ்டிரம்	6,24,81,681	7.38
5.	தமிழ் (திராவிடம்)	தமிழ்நாடு	5,30,06,368	6.26
6.	உருது (இந்தோ ஆரியம்)	ஜம்மு காஷ்மீர்	4,34,06,932	5.13
7.	குஜராத்தி (இந்தோ ஆரியம்)	குஜராத்	4,06,73,814 *	4.81

எண்	மொழிகள்	மொழிப்பேசப்படும் மாநிலம்	பேசுபவர் எண்ணிக்கை	விழுக்காடு மொத்த மக்கட் தொகையில்
8.	கன்னடம் (திராவிடம்)	கர்நாடகம்	3,27,53,676	3.87
9.	மலையாளம் (திராவிடம்)	கேரளம்	3,03,77,176	3.59
10.	ஒரியா (இந்தோ ஆரியம்)	ஒரிசா	2,80,61,313	3.32
11.	பஞ்சாபி (இந்தோ ஆரியம்)	பஞ்சாப்	2,33,78,744	2.76
12.	அஸ்ஸா-மியம் (இந்தோ ஆரியம்)	அஸ்ஸாம்	1,30,79,696	1.55
13.	சிந்தி (இந்தோ ஆரியம்)	தனிமாநிலம் இல்லை மேற்கு இந்தியாவின் மெட்ரே நகரங்கள்	21,22,848	0.25
14.	நேபாளி (இந்தோ ஆரியம்)	நேபாளம்	20,76,645	0.25
15.	கொங்கனி (இந்தோ ஆரியம்)	கோவா	17,60,201	0.21
16.	மணிப்புரி (திபெத்திய பர்மியம்)	மணிப்பூர்	12,70,216	0.15
17.	காஷ்மீரி (இந்தோ ஆரியம்)	ஜம்மு காஷ்மீர்	*	
18.	சமஸ்கிருதம் (இந்தோ ஆரியம்)	தனிமாநிலம் இல்லை	49,736	0.01
**	ஆங்கிலம் (இந்தோ ஐரோப்பியம்)		17,8598	

* இந்தியாவின் மொத்த மக்கட் தொகை எண்ணிக்கைக்கு ஏற்ப ஜம்முகாஷ்மீர் மாநிலத்தின் ஊகமான மக்கட் தொகையையும் சேர்த்து ஒவ்வொரு அட்டவணை மொழியினரது விழுக்காடும் கொடுக்கப்பட்டுள்ளது. கலவரம் காரணமாக 1991 மக்கட்தொகைக் கணக்கெடுப்பு காஷ்மீர் ஜம்மு மாநிலத்தில் நடைபெறாததால் காஷ்மீரி மொழி பேசுவோர் எண்ணிக்கை இடம் பெறவில்லை.

** ஆங்கிலம் அட்டவணை மொழியல்ல. தாய்மொழி ஆங்கிலம் பேசுவோரது எண்ணிக்கை 1991 இல் குறைந்துள்ளது. 1981 மக்கட் தொகைக் கணக்கின்படி ஆங்கிலத் தாய்மொழியாளர்கள் எண்ணிக்கை 20,20,00.

1.2. அட்டவணை மொழிகளாக இல்லாமல் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களால் பேசப்படும் மொழிகள்.

அட்டவணை மொழிகளின் பட்டியலில் இடம்பெறாத மொழிகளில் பல பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களால் பேசப்படுகின்றன. பெரிய மக்கட் கூட்டத்தினரால் அவை பேசப்பட்டாலும் இந்திய மொழிச் சூழலில் அவை சிறுபான்மையினர் மொழிகள் என்றே குறிக்கப்படுகின்றன. ஏனெனில் அவை எட்டாவது அட்டவணை மொழிகளின் பட்டியலில் இடம்பெறாத மொழிகள் (காண்க அட்டவணை 2).

அட்டவணை எண் 2

அட்டவணை மொழிகள் பட்டியலில் இடம்பெறாத 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களால் பேசப்படும் மொழிகள்.

எண்	மொழிகள்	மக்கட் தொகை இந்தியாவில்	அதிகமாக வழக்கில் உள்ள மாநிலங்கள்	மக்கட் தொகை: மாநிலங்களில்
1.	பிலி (இந்தோ ஆரியன்)	55,72,308	மத்தியப் பிரதேசம் இராஜஸ்தான் தாதரா நாகர்ஹவேலி	22,15,399 22,58,721 76,207
2.	போடோ (திபெத்திய பர்மியம்)	21,21,881	அருணாச்சலப் பிரதேசம்	11,84,569
3.	கோண்டி (திராவிடம்)	21,24,852	மத்தியப் பிரதேசம் மஹாராஷ்டிரம்	14,81,265 4,41,203
4.	குடுஃக் / ஒரோவன் (திராவிடம்)	4,26,618	பீகார் மத்தியப் பிரதேசம் மேற்குவங்காளம் ஒரிஸா	6,81,921 3,93,825 1,92,833 85,358

எண்	மொழிகள்	மொழிப்பேசப்படும் மாநிலம்	பேசுபவர் எண்ணிக்கை	விழுக்காடு மொத்த மக்கட் தொகையில்
5.	முண்டா- (முண்டாரி ஆஸ்திரோ ஏசியாடிக்)	12,75,272	அஸ்ஸாம் பீகார் ஒரிஸா	89,643 6,92,308 3,98,303
6.	சந்தாலி ஆஸ்திரோ ஏடியாடிக்	12,75,272	அஸ்ஸாம் பீகார் ஒரிஸா	89,643 6,92,308 3,98,303
7.	துளு (திராவிடம்) *	15,52,259	கர்நாடகம் கேரளம் மகாராஷ்டிரம்	13,78,779 1,11,670 56,373

* காண்க பிற்சேர்க்கை : 5

1.3. மொழிச் சிறுபான்மையினர் மற்றும் பழங்குடியினர் மொழிகள்

எட்டாவது அட்டவணை மொழிகளின் பட்டியலில் இடம்பெறாத மொழிகளைப் பொதுவாகச் சிறுபான்மையினர் மொழிகள் என்பர். எடுத்துக்காட்டாக துளு, மைதிலி இராஜஸ்தானி போன்ற மொழிகளும் பழங்குடியினர் மொழிகளும் இந்தவகைப் பட்டியலில் அடங்கும். ஆனால் எட்டாவது அட்டவணை மொழிகளின் பட்டியலில் (ஒரு மாநிலத்தில் பெரும்பாலோரால் பேசப்படும் மொழியாக) அமைந்து வேறுசில மாநிலங்களில் சிறுபான்மையோரால் பேசப்படும் மொழியாக உள்ளபோது அது மொழிச் சிறுபான்மையினர் மொழி என்ற தகுதியைப் பெறுகிறது. எடுத்துக்காட்டாக ஆந்திர மாநிலத்தில் பெரும்பாலோரால் பேசப்படும் எட்டாவது அட்டவணைத் தகுதிபெற்றுள்ள தெலுங்கு மொழி தமிழ்நாடு, ஒரிஸா, கருநாடகம் போன்ற மாநிலங்களில் மொழிச்சிறுபான்மையினர் மொழியாகக் கருதப்படுகிறது. ஏனெனில் இந்த மாநிலங்களில் முறையே தமிழ், ஒரியா, கன்னடம் பெரும்பாலோரால் பேசப்பட, தெலுங்கு மேற்குறித்த மாநிலம் ஒவ்வொன்றிலும் சிறுபான்மையோரால் பேசப்படுகின்றது. தத்தம் மாநிலங்களில் பெரும்பாலோரால் பேசப்படுகின்ற அட்டவணை மொழிகள் பிறமாநிலங்களில் சிறுபான்மையினர் மொழிகளாக உள்ளன என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

இனி, பழங்குடியினர் மொழிகளைப் பற்றிய புரிதல்களைக் காண்போம். இந்தியாவில் பழங்குடியினர் ஒரே சீரான சமூகப் பண்பாட்டுத் தளத்தில் வாழ்பவர் அல்லர். இவர்கள் இந்திய அரசியல் அமைப்பு பிரிவு 342இன் படி இந்திய ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தால் ஷெட்யூல்டு பழங்குடியினர் தகுதியைப் பெற்றுள்ளனர். எனவே இந்தியாவில் பழங்குடியினர் என்ற கருத்துருவம் நீதித்துறை மற்றும் அரசியல் துறை சார்ந்த ஒன்று. ஷெட்டியூல் பழங்குடியினர் 623 இனக் குழுக்களாக (Singh and Manoharan 1977) வாழ்கின்றனர். இப்பழங்குடியினரில் ஏறக்குறைய 50 விழுக்காட்டிற்கும் குறைவாக உள்ளோர் மாத்திரமே தங்கள் தாய்மொழிகளைப் பேசுகின்றனர். எஞ்சிய 50 விழுக்காட்டினர் தங்கள் தாய் மொழி அல்லாத வேறொரு இந்திய மொழியைப் பேசுவதாகத் தாய் மொழி மக்கட் தொகைக் கணக்கெடுப்பின் போது கூறியுள்ளனர். (Annamalai 2001) இந்த ஷெட்யூல்டு பழங்குடியினர் பேசும் மொழிகள் பழங்குடியினர் மொழிகள் எனப்படுகின்றன. பழங்குடியினர் மொழி என்பதற்கு மொழியியல் நோக்கு வரையறை எதுவும் இல்லை.

ஏற்கெனவே கூறியபடி இந்திய அரசு 114 மொழிகளைத் தாய்மொழிகள் பட்டியலில் இனங்கண்டுள்ளது. இந்த 114 மொழிகளில் 18 மொழிகள் எட்டாவது அட்டவணை மொழிகளாக அங்கீகாரம் பெற்றுள்ளன. எஞ்சியுள்ள அதாவது எட்டாவது அட்டவணையில் இடம்பெறாத 114-18=96 மொழிகளில் (Non Scheduled languages) 92 மொழிகள் பழங்குடியினர் மொழிகளாக (Tribal languages) உள்ளன. வேறு விதமாகக் கூறுவதானால் எட்டாவது அட்டவணையில் இடம் பெறாத மொழிகளில் 96 விழுக்காட்டு மொழிகள் பழங்குடியினர் மொழிகளாக உள்ளன.

பழங்குடியினர் மொழிகள் மற்றும் பிற சிறுபான்மையினர் மொழிகள் இந்தியச் சமூகத் தரத்தட்டில் (social status) தாழ் நிலையில் உள்ளன. ஆங்கிலம் உட்பட இந்திய மொழிகளின் தரவரிசைப் பிரிப்பு இறங்குவரிசையில் பின்வருமாறு அமையப்பெற்றுள்ளது. (Gupta, Anvita Abbi and Agarwal 1995: 1-7)

ஆங்கிலம்
இந்தி

இந்தி நீங்கலாக உள்ள எட்டாவது அட்டவணை: மொழிகள் அதாவது அஸ்ஸாமியம், வங்காளம், குஜராத்தி, கன்னடம், காஷ்மீரி, கொங்கனி, மலையாளம், மணிப்புரி, நேபாளி, ஒரியா, பஞ்சாபி, சமஸ்கிருதம், சிந்தி, தெலுங்கு, உருது.

சாகித்திய அகாதமியால் அங்கீகாரம் பெற்றுள்ள 22 மொழிகளில்: ஆங்கிலம், 18 அட்டவணைமொழிகள் நீங்கலாக உள்ளவை: டோக்ரி, இராஜஸ்தானி, மைதிலி, பழங்குடியினர் மற்றும் இதர சிறுமொழிகள், கிளைமொழிகள் (tribal and minor languages) முதலியன.

1.4. இரு மொழியமும் இந்தியச் சமுதாயம்

இந்தியத் துணைக் கண்டத்தில் பொதுவாக இருமொழியம் எப்போதுமே நிலைத்த ஒன்றாக இருக்கிறது. 2500 ஆண்டுகளுக்கும் மேலாகவே இந்தியாவில் ஒரு மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் இன்னொரு மொழிக் குடும்பத்து மொழிகளை எதிர்கொண்டு அக்குடும்பத்து மொழிகளோடு தொடர்புகொண்டு மொழிக் கூறுகளைப் பரிமாறிக்கொண்டுள்ளன. ஒரு மொழி இன்னொரு மொழிக் குடும்பத்தின் மொழிக்கூறுகளை ஏற்றுத் தன்னை மாற்றிக் கொண்டுள்ளது. சொல் நிலை, ஒலி நிலை, இலக்கண நிலை என்ற மொழியியலின் பல நிலைகளில் இந்த மொழித் தழுவல் (Convergence) நிகழந்துள்ளது. சில எடுத்துக்காட்டுகளைக் காண்போம்.

1. வளை நாவாக்க ஒலியன்கள் திராவிட மொழிகளிலிருந்து இந்தோ ஆரிய மொழிகளுக்குச் சென்றுள்ளன. (Block, 1965 Emeneau 1956, Ramanujan and Masica 1969)
2. இரட்டிப்புச் சொற்கள் (Abbi 1992)
3. எழுவாய் செயப்படுபொருள் வினைமுற்று (SOV) என்ற முறையில் உள்ள வாக்கிய அமைப்பு
4. எதிரொலிச்சொல் அமைப்பு Echo formations (Emeneau 1969, Abbi 1992, 1994)

நகர்ப்புறம் கிராமப்புறம் என இரண்டு நிலப்பரப்புகளிலுமே இந்தியர்கள் பொதுவாக இருமொழியாளர்களாக உள்ளனர். ஒரு மொழியம் என்பது இங்கு அருகிலேயே உள்ளது. (Singh and Manoharan 1993). பழங்குடியினரிடையே இரு மொழியம் இந்திய இருமொழியத்தைக் காட்டிலும் 50 விழுக்காடு அதிகமாக உள்ளது. ஒரு குழுவினரிடையே இருவேறுபட்ட சக்திகளாக, ஒரு புறம் மொழி இழப்பு இன்னொருபுறம் மொழி தக்கவைப்பு (மொழி பாதுகாப்பு) என்று நிகழ்கின்றன. முண்டா மற்றும் திராவிட மொழிக் குடும்ப மொழிகள் பேசும் நகர்ப்புறப் பழங்குடியினர், தங்கள் மொழிகளைச் சுலபமாக இழந்து விடுகின்றனர். ஆனால் கிராமப் புறப் பழங்குடியினரிடையே மொழிதக்கவைப்பு அதிகமாக உள்ளது. சில பழங்குடியினர் தமது முன்னோர் மொழியை

முற்றிலுமாக விடுத்து இன்னொரு பழங்குடியினர் மொழியை ஏற்றுக்கொள்வதும் இங்கு நிகழ்கிறது. குடுஃக் மொழி பேசும் ஒரோவான் இனத்தினரில் பலர் ஜார்கண்டு மாநிலத்தின் தலை நகர் இராஞ்சிப் பகுதியில் தங்களது மொழியான குடுஃக் மொழியை விடுத்து முண்டாரி மொழியை- கெரா முண்டாரி என்ற வகையை ஏற்றுக் கொண்டதோடு முண்டாரி சமுதாயப் பண்பாட்டுக் கூறுகளையும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இவர்களை ஒரோவோன் இனத்தைச் சேர்ந்தவர்களாக இனங்கண்டு கொள்ள முடிவதில்லை. ஒரோவோன் என்று கூற முடியாத அளவிற்கு இவர்களிடையே பண்பாட்டு மொழி மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும் (Abbi, 2001).

பழங்குடியினரது இருமொழியம் பால்வேறுபாடு என்ற காரணியில் வேறுபடுகிறது. அதாவது ஆண்களது இருமொழியம் ஒரு வகையாகவும் பெண்களது இருமொழியம் இன்னொரு வகையாகவும் பகுதிக்குப் பகுதி வேறுபடுகிறது. (இந்தியச்சூழலில் பழங்குடியினர் இருமொழியம் ஆகிய வகைகளின் விளக்கத்தினை இயல் 4.3இல் காண்க).

பழங்குடியினர் பொதுவாக, தனித்த நிலப்பகுதிகளில் வாழ்கின்றனர். பழங்குடி இன மக்களோடும் பழங்குடியல்லாத மக்களோடும் வாரச் சந்தைகளில், கிராமப்புற விழாக்களில் தொடர்புகொள்ளுகின்றனர். இச்சூழல்களால் பழங்குடியினர் இருமொழியாளர்களாக, பன்மொழியாளர்களாக விளங்குகின்றனர். எட்டாவது அட்டவணை மொழிபேசும் மொழிச் சிறுபான்மையினர் தமது தாய்மாநிலத்தை விடுத்துப் பிறமாநிலங்களுக்குக் குடியேறிப் பலகாலம் வாழ்ந்து வந்தாலும் மொழி இழப்பு அவர்களிடையே நேர்வது பொதுவாக மிகக் குறைவாக உள்ளது என நம்பப்படுகிறது. (இது தொடர்பான விளக்கத்தினையும் குறிப்பிட்ட சில சிறுபான்மையினர் சமுதாய மொழியியல் ஆய்வுகளையும், முடிவுகளையும் இயல் 6 இல் காண்க.)

இயல் 2

தமிழ்நாட்டின் மொழிச் சூழல்

தமிழ்நாடு மற்ற மாநிலங்களைப் போலவே பன்மொழியாளர்களைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் தமிழ் 209 சமுதாயக் குழுக்களால் (Communities) பேசப்படுகிறது. தமிழுக்கு அடுத்த நிலையில் மிக அதிகமான சமுதாயக் குழுக்களால் பேசப்படும் திராவிட மொழிகள்: தெலுங்கு (70), கன்னடம் (25), மலையாளம் (21), படகமொழி (4) ஆகும். இதற்கு அடுத்த நிலையில் உள்ள இந்தோ ஆரியமொழி பேசும் சிறுபான்மையினர் மொழிகள் வருமாறு: உருது (15), குஜராத்தி (5). மொத்தம் 32 சிறு சமுதாயக் குழுக்கள் பின்வரும் இந்தோ ஆரியமொழிகளைப் பேசுகின்றன. அவை பஞ்சாரி, இந்தி, கச்சி, மராத்தி, மார்வாரி, பஞ்சாபி, சௌராஷ்டிரா, சிந்தி, வாகடி முதலியன ஆகும். ஆங்கிலம் ஆங்கிலோ இந்தியர்களால் பேசப்படுகிறது.

தமிழகத்தில் ஷெடில்யூடு பழங்குடியினர், ஆடுமாடு மேய்ப்போர் (Pastero lists), மீனவர், உழவர் முதலியோர் உள்ளனர். பலகாலமாக இந்தியாவின் பிற, பகுதிகளிலிருந்து தமிழகத்தில் குடியேறி, தமிழ்ச் சமுதாயத்தோடு ஒருங்கிணைந்து வாழும் மக்களாக உருமிக்காரன், சக்கிலியன் போன்றோர் உள்ளனர்.

2.1. தமிழ்நாட்டில் பழங்குடியினர் மொழிகள் மற்றும் தமிழ்க்கிளைமொழிகள்

தமிழகத்தில் தலித் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் நிரம்ப உள்ளனர். (41 சமுதாயக் குழுக்கள்). இவர்கள் தமிழகத்தில் 11.26 விழுக்காட்டினராக உள்ளனர். இந்திய அளவில் 16.20 விழுக்காடு ஆகும். தமிழகத்தில் 36 இனக்குழுக்களாக வாழும் பழங்குடியினரது மக்கட்தொகை 5.2 இலட்சமாகும். இந்திய அளவில் இவர்கள் 13.72 விழுக்காடு. சில பழங்குடியினங்களில் உள்ளோர் இரண்டு விதமான மொழிகள் பேசுபவர்களாக உள்ளனர். அவை :

1. தமிழிலிருந்து வேறுபட்டுக் காணப்படும் தனித்த ஒரு பழங்குடியினர் மொழி
2. தமிழின் கிளை மொழி

எடுத்துக்காட்டாக எறவலன் என்ற பழங்குடியினரில் சிலர் தங்களது முன்னோர் மொழியான எறவல மொழியையும் அவர் வாழும் பகுதியில் வழக்கில் உள்ள தமிழ் வட்டாரக் கிளை மொழியையும் பேசுகின்றனர். சில பழங்குடியினர் தமிழின் ஒரு கிளை மொழி வகையை மாத்திரம் பேசுவர்.

எடுத்துக்காட்டு: மலையாளி எனப்படும் பழங்குடியினர் (அட்டவணை 3இல் எண் 25 ஆகும்) தங்கள் தாய்மொழியாகத் தமிழ்க் கிளைமொழி வகைகளைப் பேசுகின்றனர். இவர்கள் தமிழிலிருந்து வேறுபட்ட எந்த ஒரு பழங்குடியினர் மொழியையும் (Indigenous tribal language) பேசவில்லை.

தமிழகத்தில் தொண்டை மண்டலப் பகுதியில் வாழும் இருளர் (வில்லியன் என்பது இன்னொரு பெயர்) தொண்டை மண்டலத் தமிழ்க் கிளைமொழி வகையைப் பேசுகின்றனர். கோவை, நீலகிரியில் வாழம் இருளர்களது தாய்மொழியான இருளமொழியை தொண்டை மண்டல இருளர்கள் பேசுவதில்லை. பழங்குடியினர் பற்றிய மற்ற விவரங்களுக்குப் பின்வரும் அட்டவணையைக் காணவும்.

அட்டவணை 3

தமிழ்நாட்டில் வாழும் பழங்குடியினர்/ பழங்குடியினர் மொழிகள்

எண்	பழங்குடியினர் பெயர்	வாழும் நிலப்பரப்பு	தாய்மொழி மற்றும் அறிந்த பிறமொழிகள்
1.	அடியன்	கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டைத் தாலுகா நீங்கலாக உள்ள தமிழகப் பகுதி	***
2.	அரநாடன்	கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டைத் தாலுகா நீங்கலாக உள்ள தமிழகப்பகுதி	***

எண்	பழங்குடியினர் பெயர்	வாழும் நிலப்பரப்பு	தாய்மொழி மற்றும் அறிந்த பிறமொழிகள்
3.	எறவலன்	கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி உடுமலைத் தாலுகாக்களில் உள்ள ஆனைமலை மற்றும் கேரளம்	பழங்குடியினர் மொழி எறவலன் வயது முதிர்ந்தோர், தமிழ் கிளைமொழி: இளையோர்
4.	இருளர் வில்லியன் (Diffloth 1968, Perialwar 1978, Shanmugam 1974)	நீலகிரி கோயம்புத்தூர் மாவட்டங்கள் காஞ்சிபுரம் மாவட்டம், திருவள்ளூர்	இருளப் பழங்குடிமொழி தொண்டை மண்டலத் தமிழ்க் கிளைமொழி
5.	காடர் (620) (Indira 1976 Suresh 1981 Gnanasundaram &Perialwar 2009)	கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைமலை தமிழ் நாடு மற்றும் கேரளா	பழங்குடியினர் மொழிகாடர்
6.	கம்மாரா	. . . .	. . . .
7.	காணிக்காரன்/ காணிக்கார் (3968 1981 மக்கட் தொகைக் கணக்கெடுப்பு) (Agesthialingom, 1976)	கன்னியாகுமரி, திருநெல்வேலி செங்கோட்டைத் தாலுகா	தமிழ்க்கிளை மொழி
8.	கணியன்,கண்யன் (1038:1981 மக்கட் தொகைக் கணக்கெடுப்பு)	கன்னியாகுமரி மாவட்டம், வடகிழக்குப் பகுதி மலைத்தொடர் கேரளம்	தமிழ்க்கிளை மொழி
9.	காட்டு நாயகன் காட்டு, நாய்க்கன்:	மேற்குத் தொடர்ச்சிமலை:	பழங்குடியினர் மொழி காட்டு

எண்	பழங்குடியினர் பெயர்	வாழும் நிலப்பரப்பு	தாய்மொழி மற்றும் அறிந்த பிறமொழிகள்
	(26,383 1981 மக்கட் தொகைக் கணக்கெடுப்பு)	நீலகிரி கோயம்புத்தூர் கோயம்புத்தூர்-மதுரை மாவட்டங்கள் -நிலம்பூர் வயநாடு-மலைத்தொடர் கேரளா	நாயக்கர் மொழி - படகமொழி தமிழ் மொழி இரு பன்மொழியாளர்கள் நீலகிரியில் தமிழ் மொழி இரு மொழியாளர்கள்
10.	கொச்சுவேலன்		தமிழ்க் கிளை மொழி
11.	கொண்டகபு		தெலுங்குக் கிளைமொழி
12.	கொண்டரெட்டி, ரெட்டியார் என்றும் அழைக்கப்படுவர்		தெலுங்குக் கிளைமொழி
13.	கொரகா		தெலுங்குக் கிளைமொழி
14.	கோத்தர் (1300; 1981 மக்கட் தொகைக் கணக்கெடுப்பு) Emeneau 1944, Subbiah 1985)	நீலகிரி மாவட்டம் கோத்தகிரி திரச்சங்காடி, கொல்லி மலை	பழங்குடியினர் மொழி கோத்தமொழி
15.	குடியா/மேலகுடி		
16.	குறிச்சன், ஆலம்பாடி குறிச்சன்: தமிழ்நாடு (1169: 1981 மக்கட் தொகைக் கணக்கெடுப்பு)	தருமபுரி மாவட்டம்	கன்னடக் கிளைமொழி தமிழ், தெலுங்கு உருது இரு பன் மொழியாளர்கள்
17.	குறும்பர்:முக்கிய உட்பிரிவுகள் ஆலு குறும்பர், பால் குறும்பர்,	நீலகிரி மாவட்ட கூடலூர் தாலுகா கர்நாடகம், கேரளம்	

எண்	பழங்குடியினர் பெயர்	வாழும் நிலப்பரப்பு	தாய்மொழி மற்றும் அறிந்த பிறமொழிகள்
	முள்ளு குறும்பர்; பெட்ட குறும்பர், காட்டுக் குறும்பர். மற்ற பிரிவுகள்: ஜேனு குறும்பர். தேன் குறும்பர் (4874: 1981 மக்கட் தொகைக் கணக்கெடுப்பு)		
18.	குறுமன், குறுபா (14,932;1981 மக்கட்தொகைக் கணக்கெடுப்பு) Bettakurumba: Jeyapaul 1978; Úpadhyaya, 1982; Gail 2003, Gnanasundaram, Perialwar and Rangan 2007; Mullukurumba: Satya Joseph, 1982; Jenukurumba; Narayanan.	தருமபுரி மாவட்டம்	கன்னடக் கிளைமொழி தமிழ் இருமொழியாளர்
19.	மகாமலசர், மலை மலசர், மலை அரசர் (239:1981 மக்கட் தொகைக் கணக்கெடுப்பு)	இந்திராகாந்தி வனவியல் சரணாலயம் பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம்	பழங்குடியினர் மொழி மலையாள மொழிக்கு நெருக்கமானது
20.	மலை அரையன்	. . . .	. . . .
21.	மலைப்பண்டாரம்	. . . .	. . . .
22.	மலை வேடன் (தமிழகத்தில் 7098:1981 மக்கட்	கன்னியாகுமரி கல்குளம், விளவன் கோடு தாலுகாக்களின்	பழங்குடியினர் மொழி, வேடன்பாஷை மலையாளத்திற்கு

எண்	பழங்குடியினர் பெயர்	வாழும் நிலப்பரப்பு	தாய்மொழி மற்றும் அறிந்த பிறமொழிகள்
	தொகைக் கணக்கெடுப்பு)	மலைத்தொடர்ப் பகுதிகள்	நெருக்கமானது
23.	மலைக்குறவன்	....	\ \ \ \
24.	மலசர் (4,162:1981 மக்கட்தொகைக் கணக்கெடுப்பு)	கோயம்புத்தூர் மாவட்டத்துப் பொள்ளாச்சித் தாலுகா: ஆனைமலைப் பகுதி	தமிழ்க் கிளை மொழி வகை
25.	மலையாளி உட்பிரிவுகள்: சேர்வராயன்மலை மக்கள், கொல்லி மலை மக்கள், ஜவ்வாது மலை மக்கள் (தமிழகத்தில் 2,09,039 1981 மக்கட்தொகைக் கணக்கெடுப்பு) மொத்த தமிழகப் பழங்குடியினரில் இவர்கள் 44.5 விழுக்காட்டினர் எழுத்தறிவு ஆண்கள் 44.5% பெண்கள்11.32% (Annadurai 1982; Kollimalai Malayali: Karunakaran 1971; Malayali: Mageswaran 1979; Varma 1979; Muthukumaran, 1988)	பச்சைமலை மற்றும் அருணோதய மலைத் தொடர்	தமிழ்க் கிளை மொழிகள்
26.	மலைய கண்டி		

எண்	பழங்குடியினர் பெயர்	வாழும் நிலப்பரப்பு	தாய்மொழி மற்றும் அறிந்த பிறமொழிகள்
27.	மன்னன்(274:1981	கன்னியாகுமரி திருநெல்வேலி மாவட்டங்கள் நீங்கலாக உள்ள தமிழக மலைப் பகுதிகள்	
28.	முதுகர், முதுவன், முதுவர் (696: 1981 மக்கட் தொகைக் கணக்கெடுப்பு)	மதுரைமாவட்ட ஏலக்காய் மலை, கோயம்புத்தூர் மாவட்ட ஆனைமலைப் பகுதிகள்	
29.	முதுவன் (தகப்பன் மக்கள் என்றும் அழைக்கப் படுவர்) (310:1981 மக்கட் தொகைக் கணக்கெடுப்பு)	மதுரை மாவட்ட ஏலக்காய் மலை கோயம்புத்தூர் மாவட்ட ஆனைமலைப் பகுதிகள்	
30.	பள்ளயன்		
31.	பள்ளியர் (பழனி மக்கள் என்றும் அழைக்கப் படுகின்றனர்) (1818:1981 மக்கட் தொகைக் கணக்கெடுப்பு) (Muralidharan, 1989)	விருதுநகர் மாவட்ட மேற்கு மலைத் தொடர்கள் குறிப்பாகச் செண்பகத் தோப்பு, சதுரகிரி மலைத்தொடர்கள், திருநெல்வேலி மாவட்டத்துப் புளியன்குடிப் பகுதிகள், மதுரை மாவட்ட வசநாடு	

எண்	பழங்குடியினர் பெயர்	வாழும் நிலப்பரப்பு	தாய்மொழி மற்றும் அறிந்த பிறமொழிகள்
		மலைத்தொடர்கள், போடி நாயக்கனூர். கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களது மலைப்பகுதிகள் (Gardener 1965)	
32.	பணியன் (6,393: 1981 மக்கட் தொகைக் கணக்கெடுப்பு) (Lawrence 1970)	நீலகிரிமாவட்டக் கூடலூர்ப் பகுதியும் இதனை ஒட்டிய கேரள, கர்நாடகப் பகுதிகளும்	பணியா எனப்படும் பழங்குடியினர் மொழி தமிழ், மலையாளம் இரு மொழி யாளர்கள்
34.	ஷோளகா, ஷோலகர், ஷோளிகா, சோளகா, ஷோளிகர். (4827:1981 மக்கட் தொகைக் கணக்கெடுப்பு) (Gowda, 1968)	நீலகிரி, ஈரோடு, சேலம் தருமபுரி மாவட்டங்கள் கர்நாடகத்தில் பிளிகிரிரங்கண்ணா மலை	பழங்குடியினர் மொழி சோளகர், சோளிகா, ஹளேகன்னடா பழைய கன்னடத்திற்கு நெருக்கமானது என்ற பெயர்களில், இரு மொழி யாளர்கள்
35.	தோடா 875, 1981 மக்கட் தொகைக் கணக்கெடுப்பு (Metz, 1875: Emeneau 1957 Sakthivel 1976, 1977)	உயர்மட்ட நீலகிரி மலைப்படி உதகமண்டலம் 60 மந்துகளில் (கிராமங்களில்)	பழங்குடியினர் மொழி: தமிழ்மொழியில் இரு மொழியாளர்

எண்	பழங்குடியினர் பெயர்	வாழும் நிலப்பரப்பு	தாய்மொழி மற்றும் அறிந்த பிறமொழிகள்
36.	ஊராளி (Urali kurumba: Sam Mohanlal 1991)	ஈரோடு மாவட்டத்துச் சத்தியமங்கலம் தாலூகா மற்றும் அதைத் தொடர்ந்த கருநாடக, கேரளப் பகுதிகள்	பழங்குடியினர் மொழி இருள-மொழியோடு தொடர்புடையது

2.2. நீலகிரியில் வாழும் பழங்குடியினர்

நீலகிரியில் மாத்திரமே பத்து விதமான பழங்குடியினக் குழுக்கள் உள்ளன. அவை

1. ஆலு குறும்பர்
2. பெட்ட குறும்பர்
3. முள்ளுக்குறும்பர்
4. இருளர் (மேல் நாடு இருளர், வேட்டக்காடு இருளர்)
5. கசபர்
6. காட்டு நாயக்கர்
7. கோத்தர்
8. பணியர்
9. சோளிகர்
10. தோடர்

ஆனால் நீலகிரி மாவட்டத்தில் வாழும் பெரும்பான்மை இனத்தவர் படகர் ஆவர். இவர்கள் பழங்குடியினர் அல்லர் பின்தங்கிய இனக்குழுவினராகும்.

2.3. தமிழ்நாட்டின் நாடோடிப் பழங்குடியினர்

தமிழ்நாட்டில் உள்ள நாடோடிக் கூட்டத்தினர் தங்கள் தாய்மொழிகளாகப் பொதுவாகத் தெலுங்கு, வாக்ரிபோலி (இந்தோ ஆரியமொழி), தமிழ், உருது, மராத்தி, மேவாரி போன்ற மொழிகளைப் பேசுகின்றனர். அவர்கள் பெயர்கள் வருமாறு: 1. பூம்பூம் மாட்டுக்காரர் (தாய்மொழி தெலுங்கு, தமிழும் பேசுவர். 2. மண்டிகர் (தாய்மொழி மராத்தி) 3. பதனியர் (மராத்தி, குஜராத்தி, இந்தி மொழிகள் கலக்கப் பெற்று உருவான தாய்மொழி பதனி) 4. கண்ட ஜங்கம் (தாய்மொழி தெலுங்கு) 5. ஜங்கமபண்டாரம்

(தாய்மொழி தெலுங்கு) 6. குடுகுடுப்பை நாய்க்கர் (தாய்மொழி : 16வது நூற்றாண்டுத் தெலுங்கு) 7. குறவர் (தாய்மொழி தமிழ்) 8. நரிக்குறவர் (தாய்மொழி வாக்ரிபோலி (இந்தோ ஆரிய மொழி)) 9. வேட்டைக்காரர்: இருளரில் ஒரு பிரிவு (தாய்மொழி தமிழ்) 10. சாட்டையடிக்காரர் (தாய்மொழி தெலுங்கு) 11. சதிப் பிள்ளை: வன்னியரில் ஒரு பிரிவு (தாய்மொழி தமிழ்) 12. லம்பாடி (தாய்மொழி கடிபோலி: இந்தோஆரிய மொழி) 13. பண்டாரம் (தாய்மொழி தமிழ்) 14. ஜோகி (தாய்மொழி தெலுங்கு) 15. குலுவர் (தாய்மொழி தெலுங்கு) 16. இடையர் (தாய்மொழி தமிழ்) 17. ஃபக்கீர் (தாய்மொழி தமிழ்) 18. மம்பர் (ஒர்க்கும்ஹர்) (தாய்மொழி மேவாரி, தமிழ்-மலையாளம்-கன்னடம் பன்மொழியாளர்கள்) (Thurston and Rangachar (1909, 1975).

2.4. தமிழ்நாட்டில் பெரும்பான்மையோர் மொழி மற்றும் சிறுபான்மையினர் மொழிகள்

தமிழ் நாட்டில் தமிழ், பெரும்பாலோரால், 86.7 விழுக்காட்டினரால் பேசப்படுகின்றது. (48,434 :744 பேர்) தமிழகத்தில் வழக்கில் உள்ள 25க்கும் மேற்பட்ட சிறுபான்மையினரது மொழிகளில், தமிழக மொத்த மக்கட் தொகையின் ஒரு விழுக்காட்டினருக்கும் அதிகமானோரால் பேசப்படும் மொழிகள் வருமாறு (1991 மக்கட்தொகைக் கணக்கெடுப்பு):

1. தெலுங்கு 3,973,831 (7.1%)
2. கன்னடம் 1,067,292 (1.91%)
3. உருது 1,036,612 (1.86%)
4. மலையாளம் 0,655,612 (1.17%)

ஒரு விழுக்காட்டிற்கும் குறைவாக உள்ள மற்ற மொழிச் சிறுபான்மையினர் பேசும் மொழிகள் வருமாறு

5. சௌராஷ்டிரம் சௌராஷ்டிரி 0,2,16,364 (0.39%)
6. இந்தி 1, 35, 418 (0.24%)
7. படகமொழி 1,39,101 (0.24%)
8. மராத்தி 70,031 (0.13%)
9. குஜராத்தி 27, 584 (0.05%)
10. ஆங்கிலம் 22,729 (0.04%)

2.5. தாய்மொழியாளரது இருமொழியம், பன்மொழியம்

தமிழ்நாட்டில் தாய்மொழி பேசுவோர்களிடையே உள்ள இருமொழியம்-பன்மொழியம் (1971 மக்கட் தொகைக்

கணக்கெடுப்பின்படி) இருமொழிகளிடையே செறிவாகக் காணப்படுகிறது.

1. தமிழ்த்தாய்மொழியாளர்களில் ஆங்கில இரு மொழியாளர்கள் (10,76,467), தெலுங்கு இரு மொழியாளர்கள் (3,38,540), மலையாள இரு மொழியாளர்கள் (61,746), கன்னட இரு மொழியாளர்கள் (37,545), உருது இரு மொழியாளர்கள் (33,032), இந்தி இரு மொழியாளர்கள் (17,142), அராபிய மொழி இரு மொழியாளர்கள் (7,706), மராத்திய இரு மொழியாளர்கள் (1,534) உள்ளனர்.
2. தெலுங்குத் தாய்மொழியாளர்களில் தமிழ் இரு மொழியாளர்கள் (205471), கன்னட இருமொழியாளர்கள் (32,318), இந்தி இருமொழியாளர்கள் (1,484) உள்ளனர்.
3. கன்னடத்தாய்மொழியாளர்களில் தமிழ் இரு மொழியாளர்கள் (5,16, 070), தெலுங்கு இரு மொழியாளர்கள் (45,748), ஆங்கில இருமொழியாளர்கள் (10,209) உள்ளனர்.
4. உருதுத் தாய்மொழியாளர்களில் தமிழ் இரு மொழியாளர்கள் (3,26,508), ஆங்கில இரு மொழியாளர்கள் (18, 968), தெலுங்கு இருமொழியாளர்கள் (10,258), அராபிய இருமொழியாளர்கள் (4,145), கன்னட இருமொழியாளர்கள் (2,812) உள்ளனர்
5. மலையாளத்தாய்மொழியாளர்களில் தமிழ் இருமொழியாளர்கள் (1,27,863), ஆங்கில இருமொழியாளர்கள் (41,943), இந்தி இருமொழியாளர்கள் (1,585) உள்ளனர்.
6. குஜராத்தித் தாய்மொழியாளர்களில் ஆங்கில இருமொழியாளர்கள் (4,399) இந்தி இருமொழியாளர்கள் (2,306) உள்ளனர்.
7. மராத்தித் தாய்மொழியாளர்களில் தமிழ் இருமொழியாளர்கள் (27,814), ஆங்கில இருமொழியாளர்கள் (4,589), தெலுங்கு இருமொழியாளர்கள் (2,000), கன்னட இருமொழியாளர்கள் (1,172) உள்ளனர்.
8. ஆங்கிலத் தாய்மொழியாளர்களில் (ஆங்கிலோ இந்தியர்களில்) தமிழ் இருமொழியாளர்கள் (16,834), இந்தி இருமொழியாளர்கள் உள்ளனர் (1,586).
9. துளு தாய்மொழியாளர்களில் ஆங்கில இருமொழியாளர்கள் (326), கன்னட இருமொழியாளர்கள் (161) உள்ளனர்.

இரு மொழியத்தில் இரண்டாவது மொழியாக உள்ளவைகளில் தமிழுக்குப் பிறகு அடுத்த நிலையில் ஆங்கிலமே இரண்டாவது மொழியாக உள்ளது. அதாவது தமிழ்நாட்டில் தமிழ் இருமொழியாளர்களுக்குப் பிறகு அடுத்த நிலையில் ஆங்கில இருமொழியாளர்கள் அதிகம் உள்ளனர். ஆங்கில இருமொழியம் பெரும்பாலும் கல்வி மூலமாகப் பெற்ற ஒன்று. மற்ற இருமொழியங்கள் போல இயற்கையான மொழித்தொடர்பால் அல்ல.

தமிழ் நாட்டின் இருமொழியத்தில் உள்ள இரண்டாவது மொழிபற்றித் தகவல் அறியப் பின்வரும் அட்டவணையைக் காண்க:

அட்டவணை 4

தமிழ்நாட்டின் இருமொழியத்தில் இரண்டாவது மொழி

எண்	இருமொழியத்தில் இரண்டாவது மொழி	மொத்த எண்ணிக்கை	தாய்மொழிப் பின்புலம்	
1.	தமிழ் (இருமொழியாளர்கள்)	32,20,560	தெலுங்கு	22,05,471
			கன்னடம்	5,16,070
			உருது	3,26,508
			மலையாளம்	1,27,863
			மராத்தி	27,814
			ஆங்கிலம்	16,834
2.	ஆங்கிலம்(இருமொழியாளர்கள்)	11,47,587	தமிழ்	10,76,467
			மலையாளம்	0041,943
			உருது	0018,968
			கன்னடம்	00,10,209
3.	தெலுங்கு (இருமொழியாளர்கள்)	03,96,546	தமிழ்	3,38,540
			கன்னடம்	0,45,748
			உருது	010,258
			மராத்தி	002,000
4.	கன்னடம் (இருமொழியாளர்கள்)	45,737	தெலுங்கு	32,318
			உருது	10,258
			மராத்தி	2,000
			துளு	161
5.	இந்தி (இருமொழியாளர்கள்)	06,961	குஜராத்தி	2306
			ஆங்கிலம்	1586
			மலையாளம்	1,585
			தெலுங்கு	1484

2.6. தமிழக மாவட்டங்களில் தமிழ் மற்றும் மொழிச்சிறுபான்மையினரது மொழிகளின் பரவல் விவரம்

தமிழ் மற்றும் மொழிச் சிறுபான்மையோரது மொழிகளின் பரவல், மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகின்றது. சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங்களில் ஏறக்குறைய ஒரு மொழியமே (தமிழே) வழக்கில் உள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் தமிழ் 98.77 விழுக்காட்டினரால், புதுக்கோட்டை மாவட்டத்தில் 97.93 விழுக்காட்டினரால், திருநெல்வேலி மாவட்டத்தில் 97.39 விழுக்காட்டினரால் பேசப்படுகின்றது. சிறுபான்மையினர் மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது ஆகியவை ஒரு விழுக்காட்டிற்கும் குறைவாக உள்ள மக்களாலேயே இம்மாவட்டங்களில் பேசப்படுகின்றன. மராத்தி மொழி வரலாற்றுச் சிறப்பு மிக்க மொழியாகத் தஞ்சாவூரில் புழக்கத்தில் இருந்தாலும் அது 0.16 விழுக்காட்டு மக்களால் மட்டுமே பேசப்படுகின்றது. குறிப்பிடத்தக்க இன்னொரு மொழியான சௌராஷ்டிரி மொழி சிவகங்கை மாவட்டத்தில் 0.03 விழுக்காட்டினராலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் 0.02 விழுக்காட்டினராலும் தஞ்சை மாவட்டத்தில் 0.59 விழுக்காட்டினராலும் திருநெல்வேலி மாவட்டத்தில் 0.24 விழுக்காட்டினராலும் பேசப்படுகின்றது.

விழுப்புரம் கடலூர் மாவட்டங்களில் தமிழ் 95.65 விழுக்காட்டினரால், சிறுபான்மையினர் மொழிகள் தெலுங்கு 2.05 விழுக்காட்டினரால், உருது 1.8 விழுக்காட்டினராலும் பேசப்படுகின்றன.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தமிழ் 94.6 விழுக்காட்டினரால், உருது 1.16 விழுக்காட்டினரால், கன்னடம் 0.38 விழுக்காட்டினரால் பேசப்படுகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் தமிழ் 47.9 விழுக்காட்டினரால், மலையாளம் 15.95 விழுக்காட்டினரால், கன்னடம் 6.85 விழுக்காட்டினரால், மராத்தி 0.3 விழுக்காட்டினரால், படகமொழி 0.24 விழுக்காட்டினரால் பேசப்படுகின்றன. பழங்குடியினர் மொழிகளான தோடா, கோத்தா, இருளா,பணியா, குறும்பா போன்றவை மொழிகளாக இனங்கண்டு கொள்ளப்பட்டு இந்திய, மேலைநாட்டு அறிஞர்கள் பலர் இம்மொழிகளை மொழியியல், சமுதாய மொழியியல், மானிடவியல் நோக்குகளில் ஆராய்ந்துள்ளனர். நீலகிரி மாவட்டம் பன் மொழி வழக்குள்ள பகுதியாகும். இன்னொரு பன்மொழி வழக்குப் பகுதி தருமபுரி மாவட்டமாகும்.

தருமபுரி மாவட்டத்தில் தமிழ் 69.11 விழுக்காட்டினரால், தெலுங்கு 16.32 விழுக்காட்டினரால், கன்னடம் 9.45 விழுக்காட்டினரால், உருது 4.37 விழுக்காட்டினரால், மலையாளம் 0.13 விழுக்காட்டினரால், பேசப்படுகின்றன. இம்மாவட்டத்தில் பழங்குடியினர் மொழிகளான குறுமன்/ குறுபா (14,932:1981) சோளகா (4,827 1981) ஆகியவையும் பேசப்படுகின்றன.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தமிழ் 69.11 விழுக்காட்டினரால், தெலுங்கு 21.3 விழுக்காட்டினரால், மலையாளம் 4.04 விழுக்காட்டினரால், உருது 1.29 விழுக்காட்டினரால் பேசப்படுகின்றன.

சென்னைப்பகுதியில் தமிழ் 76.71 விழுக்காட்டினரால், தெலுங்கு 10.54 விழுக்காட்டினரால், உருது 4.78 விழுக்காட்டினரால், மலையாளம் 3.23 விழுக்காட்டினரால், இந்தி 1.83 விழுக்காட்டினரால், கன்னடம் 0.6 விழுக்காட்டினரால், பேசப்படுகின்றன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ் 85.72 விழுக்காட்டினரால், தெலுங்கு 9.87 விழுக்காட்டினரால், உருது 1.72 விழுக்காட்டினரால், பேசப்படுகின்றன.

வேலூர் மாவட்டத்தில் தமிழ் 79.45 விழுக்காட்டினரால், தெலுங்கு 10.08 விழுக்காட்டினரால், உருது 8.76 விழுக்காட்டினரால், பேசப்படுகின்றன.

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டை மண்டலப் பகுதி (சென்னை, திருவள்ளூர் காஞ்சிபுரம்) அடங்கிய இந்த நிலபரப்பு வட தமிழ்க் கிளைமொழிப் பகுதியாக (dialect area) இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளது. தமிழிலிருந்து வேறுபட்ட ஒலியன்கள் அமைப்புக் கொண்ட பகுதியாக அதாவது ஒலிப்புள்ள வெடிப்பு ஒலிகள் /b d ḍ j g / ஒலிப்பிலா வெடிப்பு ஒலிகளோடு /pttck/ பொருள் வேறுபாட்டினை உண்டாக்கும் விதமாக மாறுபட்டு விளங்குகின்றன (Gnanasundaram 1973).

2.7. தமிழ்நாட்டில் சிறுபான்மையினர் மொழிகள்

தமிழ்நாட்டில் சிறுபான்மையினர் மொழிகள் பொதுவாகப் பின் வரும் வகைகளாக உள்ளன.

1. எட்டாது அட்டவணை மொழிகள் தமிழ்நாட்டில் சிறுபான்மையினர் மொழித் தகுதி பெற்று வழங்குதல் (எ.டு தெலுங்கு, குஜராத்தி போன்றவை)
2. பழங்குடியினர் மொழிகள்

3. எட்டாவது அட்டவணை மொழியாகவும் இல்லாத, பழங்குடியினர் மொழியாகவும் இல்லாத வேறு மொழிகள்

(எ.டு சௌராஷ்டிரி (இந்தோ ஆரிய மொழி) துளு (திராவிட மொழி) வாக்ரிபோலி நரிக்குறவர் மொழி (இந்தோ ஆரிய மொழி)

4. வெளிநாட்டினர் மொழிகள் ஆங்கிலம், அரேபியம்.

2.8. இருவகை மொழிச்சிறுபான்மையினர்

மொழிச்சிறுபான்மையினரில் பின்வரும் இரண்டு வகையினர் உள்ளனர்.

2.8.1. நிலைத்த மொழிச்சிறுபான்மையினர் (Settled Minorities)

போர், அரசியல், பொருளாதாரக் காரணங்களால் தங்கள் தாய் மாநிலங்களை விடுத்துப் பிற மாநிலங்களில் நிரந்தரமாகக் குடியேறி விடுவர் (எ.டு. தமிழ்நாட்டில் தெலுங்கு, கன்னடம், சௌராஷ்டிரி மொழிகள் பேசும் மொழிச் சிறுபர்ன்மையினர்)

2.8.2. நிலையாத மொழிச்சிறுபான்மையினர் (Floating Minorities)

வேலைவாய்ப்பு போன்ற காரணங்களுக்காகத் தாய் மாநிலங்களை விடுத்துப் பிற மாநிலங்களில் தாற்கலிமாகத் தங்கி வாழ்தல்.

(எ.டு) தமிழ்நாட்டில் மலையாள மொழி, சிந்தி மொழி பேசுவோர். நிலைத்த மொழிச்சிறுபான்மையினர் பொதுவாகக் குழுக்களாக, குறிப்பிட்ட பகுதியில் வாழ்வர். நிலையாத மொழிச்சிறுபான்மையினர் பெரும்பாலும் தனித்து வாழ்பவர். குழுக்களாக வாழ்வதில்லை.

நிலைத்த மொழிச்சிறுபான்மையினர் பள்ளிகளில் மாநில மொழி மற்றும் ஆங்கிலம் பயில்பவர். தங்களது தாய்மொழிகளில் எழுத்தறிவு பெறுவதில்லை. இதனாலேயே நிலைத்த மொழிச்சிறுபான்மையினரது யொழிகள் பெரும்பாலும் வீடு என்ற களத்தில் மாத்திரமே பயன்பாட்டில் நின்றுவிடுகின்றன. ஆனால் நிலையாத மொழிச்சிறுபான்மையினர் தங்களது தாய்மொழிகளில் எழுத்தறிவு பெற்றவர்களாக இருப்பர்.

2.8.3. மொழிச்சிறுபான்மையினரது தாய்மொழி வரலாறு

இனி, தமிழகத்தில் உள்ள சில மொழிச்சிறுபான்மையினர் மொழிகளின் வரலாறு, மற்றும் மொழியியல் பின்னணி ஆகியவற்றைக் காண்போம்.

2.8.3.1. தெலுங்கு

தமிழகத்தில் வழக்கில் உள்ள 25க்கும் மேற்பட்ட சிறுபான்மையினர் மொழிகளில் மிக அதிகமானவர்களால் பேசப்படும் மொழியாகத் தெலுங்கு முதலிடத்தில் உள்ளது. மொத்தம் 3,93,831 பேர் அதாவது 7.11 விழுக்காட்டினர் (சென்னை 10.54%, காஞ்சிபுரம், திருவள்ளூர் 9.87%, வேலூர் 10.08%, தருமபுரி 16.32%, திருவண்ணாமலை 3.39%, நீலகிரி 4.6%, கோயம்புத்தூர் 7.74%, திண்டுக்கல் 8.36%.)

தென்மாவட்டங்களில் பேசப்படும் தெலுங்கிற்கும் ஆந்திர-தமிழக எல்லைகளான சென்னை, தொண்டை மண்டலப்பகுதி போன்ற பகுதிகளில் பேசப்படும் தெலுங்கிற்கும் வேறுபாடுகள் உள்ளன. சென்னை போன்ற எல்லைப்புறப் பகுதிகளில் வாழும் தெலுங்கு மொழிபேசுவோர் பொதுவாக ஆந்திர மாநிலத் தெலுங்கு பேசுவோரோடு தொடர்பு வைத்துக்கொண்டுள்ளனர். ஆந்திர மாநிலத்திற்கு அடிக்கடி சென்று வருவர். ஆனால். தென் மாவட்டங்களில் உள்ள தெலுங்கு மொழிச் சிறுபான்மையினர் ஆந்திர மாநிலத்தினரோடு திருமண உறவு போன்ற உறவுகள் எதுவும் வைத்துக் கொள்ளாததாலும், நண்பர்களோ உறவினர்களோ ஆந்திர மாநிலத்தில் இல்லாததாலும் இவர்கள் ஆந்திர மாநிலத்திற்குப் பொதுவாகச் செல்வதில்லை.

இந்தக் காரணங்களால், சென்னை போன்ற எல்லைப் பகுதிகளில் பேசப்படும் தெலுங்கு ஆந்திர மாநிலத்தில் பேசப்படும் தெலுங்கு மொழியோடு பெரும்பாலும் ஒத்துள்ளது. ஆனால் தென்மாவட்டங்களில் பேசப்படும் தெலுங்கு மொழி வகைகள் பழைய தெலுங்கு மொழி வடிவத்தைப் பிரதிபலிக்கின்றன. (Perialwar, 1984). தமிழகத் தென் மாவட்டங்களில் வாழும் தெலுங்கு மொழி பேசுவோரின் மூதாதையர் ஏறக்குறைய 14 வது நூற்றாண்டுக் காலக்கட்டத்தில் ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்து குடியேறியவர்கள் (Stin 1980:372): இதனாலேயே தென் மாவட்டங்களில் வாழும் இந்தச் சந்ததியினரின் தெலுங்கு மொழியில் பழைய தெலுங்கின் வடிவங்கள் (மாற்றம் அதிகம் பெறாமலேயே) உள்ளன.

தெலுங்கு மொழிச் சிறுபான்மையினர் மொழி மற்றும் பண்பாட்டு நிலைகளில் தமிழ்ச் சமூகத்தோடு ஏறக்குறைய இரண்டறக் கலந்து விட்டனர் எனலாம். தெலுங்கு மொழியை இவர்கள் வீட்டுச் சூழல் தவிர வேறு எந்தச் சூழலிலும் பயன்படுத்துவதில்லை. இவர்களது கல்வி பொதுவாகத் தமிழ் அல்லது ஆங்கிலம் மூலமாகவே நிறைவேறுகிறது. தாய்மொழித்

தெலுங்கைக் கற்றுக் கொள்ள வாய்ப்போ, அவசியமோ உள்ளதாகத் தெரியவில்லை. இவர்களிடையே ஏராளமான தமிழ் அறிஞர்கள், தமிழ்க் கவிஞர்கள், தமிழ் எழுத்தாளர்கள் உள்ளனர். தெலுங்கு மொழிக்கான அச்சு மற்றும் கணினி வழித் தகவல் தொடர்புச் சாதனங்கள் எவையும் இவர்களிடம் இல்லை. இவர்கள் சமூக நிலையில் பெரும்பான்மை மொழியினரோடு ஒன்றுபடும் விதமாகத் தமிழைத் தாய்மொழி போன்ற நிலையில் பயின்றுள்ளனர். ஏறக்குறைய தமிழைத் தங்களது பண்பாட்டு மொழியாகவே ஏற்றுக்கொண்டுள்ளனர் (Pattanayak, 1987). இந்தச் சமுதாய மொழியியல் சூழலை மனதில் கொண்டு தமிழகத்துத் தெலுங்கு மொழிச் சிறுபான்மையினரைப் 'புதிய தமிழர்கள்' என்ற சொற்றொடரால் குறிப்பிடுகிறார், நீதிவாணன் (Neethivanan 2006).

தமிழத்தில் வழங்கி வரும் தெலுங்கு மொழியில் தமிழ் மொழியின் தாக்கத்தினால் நேர்ந்துள்ள மொழித்தழுவல் கூறுகளில் (convergence aspect) சில இங்கே குறிப்பிடப்படுகின்றன (Renuga Devi, 1977). ஆந்திரமாநிலத் தெலுங்கு (Standard Telugu) மொழியில் மொழி முதலில் இடம்பெறும் உயிர்ப்பொலி (aspiration) தமிழ்நாட்டுத் தெலுங்கில் இல்லை.

(எ.டு) **போ'ன் செய்யி** (bhoon ceyyi) **போன் செய்யி** (boon ceyyi). ஆந்திரத் தெலுங்கில் உள்ள இடவேற்றுமை உருபு (locative case suffix) - லோ வுக்குமாறாகத் தமிழகத்தெலுங்கில் தமிழ் மொழி இடவேற்றுமை உருபு -லே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்ச் சொற்கள் பலவற்றைத் தமிழகத் தெலுங்கு ஏற்றுக் கொண்டுள்ளது.

2.8.3.2. கன்னடம்

தமிழ்நாட்டில், கன்னடச் சிறுபான்மை மொழியினரின் மக்கட்தொகை, 1,067,292 (1.91%) ஆகும். (தருமபுரி 9.45%, கோயம்புத்தூர் 7.74%, நீலகிரி 6.85%, ஈரோடு 5.73%, மதுரை 3.9%, சேலம் 2.69%, திண்டுக்கல் 2.62%, சென்னை 3.23%, காஞ்சிபுரம் 1.3% ஆகும்).

தமிழ்மொழித் தொடர்பால் தமிழ்நாட்டில் வழங்கும் கன்னட மொழியில் சில மொழித் தழுவல்கள் (Convergence) நிகழ்ந்துள்ளன. எடுத்துக்காட்டுகளுக்குப் பின்வரும் அட்டவணையைக் காண்க.

அட்டவணை 5 (Renuga devi 1977)

கன்னட மொழியில் நிகழ்ந்துள்ள மொழித்தழுவல்கள்

எண்	மொழிநிலை	கர்நாடகம் கன்னட மொழி வகை	தமிழ்நாட்டுக் கன்னட மொழி	பொருள்
1.	உயிர்ப்பொலி இழப்பு	பா'ரிசி(bhaarisi)	பாரிசி (baarisi)	'அடி (வினை)'
2.	மொழிமுதல் ஹ இழப்பு	ஹாலு	ஆலு	'பால்'
3.	மொழிமுதல் மெய் ஒலிக் கூட்டு இழப்பு	:க்லாசிலி (glaacali) க்ருஷனி	கிலாசலி (kilaacali) கிருசனி	'தம்ளரில்' 'கிருஷ்ண ணிடம்'
4.	கருவிப்பொருள் உருபு - இந்த (கர்நாடகக் கன்னடம்)- ஆல தமிழ்ப் பேச்சு வழக்குக்கு ஏற்ப	ராமனிந்த அவனிந்த தாயிந்த	ராமனாலெ அம்மாவாலெ அவனாலெ	'இராமனால்' 'அம்மாவால்' 'அவனால்'
5.	சொல் தமிழ்ச் சொல் வடிவமாக மாறுதல்	ஆஹாச	வானம் கண்ட்டெ	'ஆகாயம்' மணி 'மணி' (நேரத்தைக் குறிப்பது)

2.8.3.3. மலையாளம்

தெலுங்கு, கன்னடம், உருது மொழிகளுக்குப் பிறகு தமிழ்நாட்டில், மிக அதிகமானோரால் பேசப்படும் மொழி மலையாளம் ஆகும். தமிழ்நாட்டின் பல பகுதிகளில் அவர்கள் குழுக்களாக இல்லாமல் தனித்தனிக் குடும்பங்களாக வாழ்கிறார்கள். நீலகிரி (15.95%), கன்னியாகுமரி (8.35%), கோயம்புத்தூர் (4.1%), சென்னை (3.23%) காஞ்சிபுரம் (1.3%) போன்ற மாவட்டங்களில் வாழ்கின்றனர். தெலுங்கு, கன்னட மொழிச் சிறுபான்மையினரைப்போல இவர்கள் குறிப்பிட்ட நிலப்பகுதிகளில் வாழ்வதில்லை. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மலையாள மொழி பேசுவோர் அண்மைக்காலங்களில் வந்து குடியேறியவர்கள் (migrants) அல்லர். மிக அதிகமான காலத்திற்கு முன்பே மொழிவாரி மாநிலங்கள்

தோன்றுவதற்கு முன்பே கன்னியாகுமரி மாவட்டம் திருவாங்கூர் சமஸ்தானத்தின் ஒரு பகுதியாக இருந்துள்ளது. எனவே கன்னியாகுமரிப்பகுதிகளில் வாழும் மலையாள மொழிபேசுவார் ஏறக்குறைய தங்களது பூர்வீக மாநிலத்தின் ஒரு பகுதியில் வாழ்பவர்களாகவே கருதப்பட வேண்டும். தமிழகத்தின் ஏனைய பகுதிகளில் உள்ள மலையாள மொழி பேசுபவர்கள் தான் அண்மைக்காலத்தில் கேரளத்திலிருந்து வந்தவர்கள் ஆவர். கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு பகுதிகளில் வாழும். மலையாளமொழி பேசுவோர், பள்ளிகளில் தங்கள் தாய்மொழி மலையாளம் மூலமாகக் கல்வி கற்கின்றனர். முக்கியமான அரசு அறிக்கைகள் இவர்களது பயன்பாட்டிற்காக மூன்று மொழிகளில் தமிழ், மலையாளம் ஆங்கிலம் என மூன்று மொழிகளில் வெளியிடப்படுகின்றன. வாக்குச் சீட்டுகளிலும் அவ்வாறே மூன்று மொழிகளும் இடம்பெறுகின்றன.

பெரும்பாலோர்க்குத் தாய்மொழி மலையாளத்தில் எழுத்தறிவு இருப்பதால் தமிழ்நாட்டில் வாழ்ந்தபோதிலும் அவர்கள் மலையாளத்தில் வெளியாகும் செய்தித்தாள்கள், பத்திரிகைகள் முதலியவற்றைப் படிக்கிறார்கள். தொலைக்காட்சியில் மலையாள மொழி நிகழ்ச்சிகளைக் காண்பதற்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள். தவிர, ஆங்கிலமொழியில் வெளியாகும் செய்தித்தாள்களையும் படிக்கிறார்கள். பொதுவாகத் தமிழ் பயிற்று மொழி மூலமாகக் கல்வி கற்பதில்லை. ஆங்கில வழிக்கல்வியை மேற்கொள்கின்றனர். தங்களது மொழி மற்றும் பண்பாட்டுக் கூறுகளைக் கடைப்பிடிப்பதில் தாய் மாநிலமான கேரளத்தில் வாழும் போது அதிகம் அக்கறை காட்டுவதில்லை. ஆனால் தமிழ்நாட்டிற்கு வந்து குடியேறிய பிறகுதான் அதிக அக்கறை காட்டுகிறார்கள். பொதுவாக, தாய்மொழியான மலையாளம் குறித்து அவர்கள் கொண்டுள்ள மனப்பாங்கு மற்ற மொழிச் சிறுபான்மையாளர்களிடையே இருந்து வேறுபட்டு உள்ளது.

2.8.3.4. உருது

உருது மொழிபேசுபவர்கள் தமிழ்நாட்டில் 1,036,612 பேராகும் (1.86%). உருது மொழிச் சிறுபான்மையினர்க்கு என்று தனிமாநிலம், இந்தியாவில் இல்லை. உருது மொழியாளர்கள் தமிழ் நாட்டின் பல மாவட்டங்களில் (வேலூர் மாவட்டம் (8.76%), சென்னை (4.78%), தருமபுரி (4.37%), திருவண்ணாமலை (2.89%)) வாழ்கிறார்கள். இவர்கள் வெளிமாநிலங்களிலிருந்து வந்தவர்கள் இல்லை. முகலாயர்களது ஆட்சியின் போதும், அவரது ஆட்சிக்குப் பின்னரும் தமிழர்கள் மதமாற்றத்தினால் இஸ்லாமியர் ஆனவர்கள்.

தமிழ் நாட்டில் உள்ள இசுலாமியரின் மொத்த மக்கட்தொகை 3,052,712 ஆகும் (1981 மக்கட் தொகைக் கணக்கெடுப்பு). இது தமிழகத்தின் மொத்த மக்கட் தொகையில் 5.47 விழுக்காடு ஆகும். மொத்த இசுலாமிய மக்கட் தொகையான 3,052,712 பேரில் 1,036,660 பேர் மட்டுமே, அதாவது 33,96 விழுக்காட்டினர் மட்டுமே உருதுமொழியைத் தாய்மொழியாகப் பேசுகின்றனர். அதாவது மூன்றில் ஒரு பகுதி இசுலாமியர்களே உருது பேசுகின்றனர். எஞ்சிய இரண்டு பங்கினரது தாய்மொழி தமிழாக உள்ளது.

1991 மக்கட் தொகைக் கணக்கெடுப்பின் படி இந்தியாவில் 12.12 விழுக்காட்டினர் மட்டுமே உருது மொழியைத் தாய் மொழியாகப் பேசுகின்றனர். இங்கே குறிப்பிட வேண்டியவை வருமாறு:

1. உருது மொழியை எல்லா இசுலாமியர்களும் பேசுவதில்லை
2. உருது மொழி இந்துக்களாலும், சீக்கியர்களாலும் பேசப்படுகின்றது.

சில அராபிய இசுலாமியர்கள் தமிழ்நாட்டில் வாழ்கின்ற போதிலும் இசுலாமியர்கள் பெரிய அளவில் வெளியிலிருந்து வந்து தமிழ்நாட்டில் குடியேறியவர்கள் என்று கூற முடியவில்லை (Subbarayulu 2000: 147).

தமிழ்நாட்டு இசுலாமியர்களது உருது பெரிய அளவில் தமிழ் மொழித் தாக்கத்தினால் மாறியதாகத் தெரியவில்லை. மாறாக இசுலாமியர்கள் பேசும் தமிழில் பல உருதுச் சொற்கள் நிலைத்துள்ளன.

பின்வரும் எடுத்துக் காட்டினை ஒரு நிகழ்ச்சி மூலம் கூறலாம். இந்நிகழ்ச்சி பேராசிரியர் சீனிவாசவர்மா (முன்னாள் இயக்குநர், திராவிடமொழிகள் உயர் ஆய்வு மையம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.) அவர்களால் 1964-65 வாக்கில் கூறப்பட்டதாகும்.

சிதம்பரத்திற்கு அருகில் உள்ள பரங்கிப் பேட்டை இசுலாமியச் சிறுவர்கள் படிக்கும் பள்ளியில், ஆசிரியர் தமிழ் நெடுங்கணக்கில் உள்ள உயிர் எழுத்துக்களைக் கரும்பலகையில் எழுதிக் கற்பித்துக் கொண்டிருக்கும் போது நடந்த நிகழ்ச்சி இது. பின்வருபவை கரும்பலகையில் எழுதப்பட்டிருந்தன.

அம்மா

அப்பா

இசுலாமியச் சிறுவர்கள் எழுத்துக் கூட்டிப் படிக்கின்றனர்

அ,ம்,மா உம்மா

அ,ப்,பா வாப்பா

நகைச்சுவையை விளைவிக்கும் நிகழ்ச்சியாக இது அமைந்திருந்த போதும் இந்த நிகழ்ச்சியின் மூலமாக ஒன்று தெள்ளத்தெளிவாக விளங்குகிறது. இசுலாமியச் சிறுவர்களிடையே உருது உறவுமுறைப் பெயர்கள் ஆழமாகப் பதிந்திருப்பதால், அவர்கள் பேச்சு வழக்கில் இப்பெயர்களே இடம் பெறுவதால், எழுத்துக்கூட்டியது அ,ம்,மா என்றும் அ,ப்,பா என்றும் இருந்த போதும் கூட்டிய எழுத்துக்களை ஒன்றாக இணைத்து அம்மா, அப்பா என்று படிப்பதற்குப் பதிலாகத் தங்களது தமிழ்ப்பேச்சு வழக்கில் உள்ள உருதுச் சொற்களான உம்மா, வாப்பா ஆகியவற்றைக் கூறிவிடுகின்றனர். அவர்களது மத நூலான குரான் உருதுமொழியில் உள்ளதால் சிறுவர்களுக்கு மதரசாபள்ளிகள் மூலமாக உருது மொழி கற்பிக்கப்படுகின்றது. உருது வீட்டுச் சூழல் மற்றும் தொழுகைச்சூழலில் பயன்படுத்தப்படுகின்றது. சென்னை, வேலூர், தருமபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஊர்களில் பள்ளிகளில் உருது மொழிப்பாடமாக உள்ளது.

மொழிச்சிறுபான்மையினர் நலம் காக்கும் கமிஷன் ஆண்டு அறிக்கைகளில் தொடக்க, நடுநிலை மற்றும் பிற சிறுபான்மையினர் பள்ளிகளில் உருது பயின்ற மாணவர்களின் புள்ளிவிவரம் ஆண்டு வாரியாகத் தரப்படுகின்றது.

தமிழ்நாட்டுப் பாடத்திட்டத்தின்படி மொழிச் சிறுபான்மையினரது மொழிகளான தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது, இந்தி ஆகியவை பள்ளிகளில் கற்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. (Gnanasundaram 2007 : 225-226).

2.8.3.5 சௌராஷ்டிரா மொழி–சௌராஷ்டிரி

சௌராஷ்டிரா மொழிச் சிறுபான்மையினர் தமிழகத்தில் நிலைத்த மொழிச்சிறுபான்மையினர் (Seltled minorities). அவர்களது மக்கட்தொகை (1991 மக்கட்தொகைக் கணக்கெடுப்பு) 2,16364 (0.39%) ஆகும். சௌராஷ்டிரா மொழி பழங்குடியினர் மொழியோ அல்லது எட்டாவது அட்டவணை மொழிகளில் ஒன்றோ அல்ல.

இது மூன்றாவது வகைச் சிறுபான்மையினர் மொழிப்பிரிவைச் சேர்ந்தது. மொழி வழி மாநிலங்கள் உருவாவதற்கு முன்பு சௌராஷ்டிரர்கள் தமிழ் நாட்டில் தெலுங்கு மொழியை இலக்கிய மொழியாகப் பயன்படுத்தினார்கள்.

அப்போது தெலுங்கு உயர்மதிப்புப் பெற்ற மொழியாகவும், தமிழ் அன்றாட நடைமுறை வாழ்க்கையில் தமிழர்களோடு தொடர்பு கொள்வதற்கான பேச்சு மொழியாகவும் இயங்கி வந்துள்ளன. மொழி வழி மாநிலங்கள் பிரிந்த பிறகு சௌராஷ்டிரச் சமுதாயத்தினர் தங்கள் குழந்தைகளைத் தமிழ்வழிக் கல்வி தரும் பள்ளிகளுக்கு, தமிழ் பயிற்று மொழிப்பள்ளிகளுக்கு அனுப்பினர். தமிழை இலக்கிய மொழியாகவும் பயன்படுத்தத் தொடங்கினர். சௌராஷ்டிர மொழி இந்தோ ஆரியமொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழியாக இருந்த போதிலும், தமிழோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததால் தற்போதைய சௌராஷ்டிரா மொழி உருவாக்கிக் கொண்டுள்ள இலக்கணம் ஏறக்குறைய திராவிட மொழி அமைப்பைக் கொண்டதாக உள்ளது (Pandit, 1972 (a)). சௌராஷ்டிரர் இருமொழி மற்றும் பன்மொழியாளர்கள் தங்கள் மொழியையும் பண்பாட்டையும் தக்கவைத்துக் கொள்ள முயற்சி மேற்கொண்டுள்ளனர். சௌராஷ்டிரமொழி, (இவர்களது நிருவாகத்தில் பள்ளியும் கல்லூரியும் மதுரையில் உள்ளன) பள்ளிகளில் கற்பிக்கப்படவில்லை. சமீபகாலம் வரை தங்கள் தாய்மொழியான சௌராஷ்டிர மொழியைச் சிறுவர்களுக்குக் கற்பிக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. இன்றைய தலைமுறையினர் தாய்மொழி சௌராஷ்டிர மொழி மீது நாட்டம் இல்லாதிருப்பதை உணர்ந்த மொழிப்பாதுகாவலர்கள் சிலர் (முனைவர் தாமோதரன் சௌராஷ்டிரக்கல்லூரி மதுரை, திருவாளர் சுப்பிரமணியன் போன்றோர்) சௌராஷ்டிரா மொழியைக் கோடை விடுமுறைக் காலங்களில் மதுரை சௌராஷ்டிரக் கல்லூரியில் விருப்பமானவர்களுக்குச் சொல்லித் தரும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

2.8.3.6. மராத்தி (தஞ்சாவூர் மராத்தி)

தமிழகத்தில் பேசப்படும் மராத்தி பொதுவாகத் தஞ்சாவூர் மராத்தி என்று அழைக்கப்படுகிறது. 1991 ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பின் படி இம்மொழி 70,031 பேர்களால் (0.13) பேசப்படுகின்றது. 'விக்கிபீடியா' என்கிற அமெரிக்கக் கலைக்களஞ்சியத்தின் தகவலின் படி (Wikipedia the free encyclopaedia, 2009) தஞ்சாவூர் மராத்தி அறிஞர்களது புழக்கத்தில் உள்ள ஒரு கிளை மொழி. ஏறக்குறைய பத்து இலட்சம் மக்கள் பேசுவதாக இக்கலைக் களஞ்சியம் குறிப்பிடுகிறது. இதன் கிளைமொழிகள் கும்பகோணம், நாமதேவ் முதலியன ஆகும்.

மராத்தியப் பேரரசை நிறுவிய சத்ரபதி சிவாஜியின் ஒன்று விட்ட சகோதரர் வெங்கோஜி தலைமையில் தஞ்சாவூரில் 1674

வாக்கில் மராத்திய அரசு தொடங்கியது. அப்போது மராத்தி மொழி பேசியவர்கள் தஞ்சாவூர் வந்தடைந்தனர்.

தஞ்சாவூரில் உள்ள மராத்தியர்கள் பிற மராத்தியக் குழுக்களோடு பேசத் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறது. இது இந்தத் தலைமுறையினரிடம் குறிப்பாக குறைந்த வயதினரிடம் அதிகமாக நிகழ்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (Arokianathan, *1983*).

ஏறக்குறைய இம் மராத்திய மொழிச் சிறுபான்மையினர் அனைவரும் தமிழ் இரு மொழியாளர்களாக உள்ளனர். தமிழ்மொழி பெரும்பாலோரிடையே தாய்மொழித் தகுதி நிலையில் நிலைத்துவிட்டது எனலாம்.

2.8.3.7. ஆங்கிலம்

ஆங்கிலோ இந்தியர்களது தாய்மொழி ஆங்கிலம். இந்தியாவில் ஆங்கிலோ இந்தியர்களது மக்கட் தொகைக்கணக்கு 1,78,598 ஆகும். 22,724 பேர் தமிழ்நாட்டில் வாழ்கின்றனர். மேலை மற்றும் கீழை நாடுகளின் பண்பாட்டுக் கலவை கொண்டவர்கள் இவர்கள். இவர்களது மதம் கிருத்தவம். மைசூரில் ஆங்கிலோ இந்தியர் குறித்துப் பேயர் (Bayer, *1986:9*) மேற்கண்ட சமூதாய மொழியியலின் ஆய்வுக் கருத்து பின்வருமாறு உள்ளது:

இவர்கள் பொதுவாகத் தனித்து வாழும் சமூகத்தினர். பிற சமூகத்தினரோடு ஒட்டாது வாழ்வதோடு பிற சமூகத்தினரின் அங்கீகாரம் அதிகம் பெறாதவர்களாக உள்ளனர்.

மதுரை நகர ஆங்கிலோ இந்தியர் குறித்து இது போன்ற ஆய்வு ஒன்றை மேற்கொண்ட டிசோசா (D'souza *1983*)

"ஆங்கிலோ இந்தியர்கள் மேலைநாட்டினரோடு கலந்து பழகுவதை விரும்புகிறார்களே தவிர இந்தியர்களோடு கலந்து உறவாடுவதை விரும்புவதில்லை; இந்திய மொழிகளைக் கற்பதில் நாட்டம் இல்லாதவர்கள்; வேறு வழியில்லாத போது மாத்திரமே இந்திய மொழிகளைக் கற்கின்றனர்"

என்கிறார். இவர்கள் இந்திய மொழிகள் பயிற்று மொழிகளாக மாறுவதை விரும்பாதவர்கள். தங்களிடையே வாழும் பிற மொழியினரது தொடர்பினை உருவாக்கிக் கொள்ள முடியாதவர்கள். தமிழகத்தில் சில பகுதிகளில் மாத்திரமே இவர்கள் தமிழ், இந்தி இரு மொழியாளர்களாக மிகக் குறைந்த அளவில் உள்ளனர். இந்திய மொழிகளில் (தமிழ் மொழி உட்பட) ஓர் ஆசிரியரோ, எழுத்தாளரோ அல்லது திறனாய்வாளரோ இவர்களிடையே இல்லை.

2.8.3.8. படக மொழி

நீலகிரி மாவட்டத்தில் உள்ள மொத்த மக்கட் தொகையில் 40 விழுக்காட்டினர் படகமொழி பேசுபவர்கள். படகமொழி கன்னட மொழியின் கிளை மொழியாகக் கருதப்படுகிறது. பால் ஹாக்கின்ஸ் போன்ற மானிடவியல் அறிஞர்களின் கருத்துக்கு ஏற்பப் படகர்கள் 16,17 ஆம் நூற்றாண்டுகளில் முகலாயர்களின் படையெடுப்பு மற்றும் பஞ்சம் போன்ற காரணங்களால் தாய் மாநிலமான கர்நாடகத்தை விடுத்துத் தமிழக நீலகிரிப் பகுதிக்கு வந்துவிட்டவர்கள். படகமொழியில் 6 கிளை மொழிகள் உள்ளதாகப் ஹாக்கின்ஸ் (Hockings, 1998) கூறுகிறார். கிறிஸ்டியன் பைலட் ரெய்சூர் (Raichoor, 1988) படகப் பழமொழிகள், பக்திப்பாடல்கள், சகுனங்கள் ஆகியவற்றை மொழித்தரவுகளாகக் கொண்டு படக மொழி இலக்கணம் எழுதியுள்ளார். படகர் வாழ்வியல் முறைகள் சமூக மானிடவியல் கண்ணோட்டத்தில் பார்வதி (Parvathi, 2001) ஆய்வு செய்துள்ளார்.

2.8.3.9. பழங்குடியினர் மொழிகள்

ஏற்கெனவே 2.1. இல் தெரிவித்தபடி தமிழ்நாட்டில் இருவிதப் பழங்குடியின மக்கள் உள்ளனர்.

1. தமிழிலிருந்து வேறுபட்ட தனித்த பழங்குடியினர் மொழி ஒன்றைப் பேசுபவர்கள் (Speakers of Indigenous tribal languages)
2. தமிழின் கிளைமொழி ஒன்றினைத் தாய்மொழியாகப் பேசுபவர்கள்.

சில பழங்குடியினரது தமிழ்க் கிளைமொழிகளில் பழந்தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன. (Mageswaran, 1972)

எடுத்துக்காட்டாகப் பச்சை மலையாளிப் பழங்குடியினரது தமிழ்ப் பேச்சு வழக்கில் பின்வரும் பழந்தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன. ஓயி 'கவனத்தை ஈர்க்கப் பயன்படுத்தும் வினைச்சொல் இது' (தமிழ் லெக்சிகன் பக்கம் 626.)

நோரு இதன் பொருள் 'வாய்' என்பதாகும் (தமிழ் லெக்சிகன் (Tamil Lexican, 1982) பக்கம் 374)

இசு 'வெட்டு' என்பது இதன் பொதுப் பொருள். அதாவது 'கிளையை முறித்தல், வெட்டுதல்' என்பதாகும் (தமிழ் லெக்சிகன் பக்கம் 271)

பழங்குடியினர் மொழிகள் பொதுவாக அழிந்தொழியும் நிலையில் உள்ள மொழிகள். நீலகிரி உயிரியல் நிலப்பரப்பைச் சேர்ந்த (Nilgiris biosphere) முதுமலை, திம்பம், வயநாடு தொடர்ப் பகுதிகளில் இன்று வழக்கில் உள்ள திராவிடப்பழங்குடியின மொழிகளில் பல இனி எவ்வளவு காலம் வாழும் என்று தெரியவில்லை. இந்த நூலாசிரியர் மற்றும் மொழியியல் பேராசிரியர்கள் பெரியாழ்வார், அரங்கன் ஆகியோரால் தமிழ் நாடு, கருநாடகம், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களில் பேசப்படும் குறும்பமொழி குறித்த (தமிழ் நாட்டில் இது பெட்ட குறும்ப மொழி, கேரளத்தில் இது ஊராளி குருமன் மொழி, கருநாடகத்தில் இது பெட்ட குறுப மொழி) இழப்பு, மொழி தக்கவைப்பு தொடர்பான சமுதாய மொழியியல் ஆய்வு ஒன்று நிகழ்த்தப்பட்டுள்ளது. அது தொடர்பான கள ஆய்வு விவரங்களையும் முன்னோடி ஆய்வு முடிவுகளையும் இயல் 7.1இல் காண்க.

இயல் 3

உலகமொழி ஆங்கிலத்தின் செல்வாக்கும் பயன்பாடும்

உலகின் பொது மொழி ஆங்கிலம். மொழி இழப்பு என்ற விளைவிற்கு ஒரு முக்கியக் காரணியாக அமைந்துகிடப்பதால் சிலர் ஆங்கிலத்தைக் கடுமையான சொற்றொடரால் அதாவது கொலைகார ஆங்கிலம் (Killer English) என்ற முறையிலும் குறிப்பிடுவர். ஏனெனில், ஆங்கிலம் ஆஸ்திரேலிய நாட்டு மொழிகளின் அழிவிற்குக் காரணமாக அமைந்திருக்கிறது என்பது இவர் போன்றோரது விளக்கம் (Crystal, 2000).

இந்த நூலின் மையப் பொருளான மொழி இழப்பு என்ற கருத்தமைவிற்கு ஏற்ப உலகமொழியான ஆங்கிலம் எவ்வாறு உலகின் சில நாடுகளில் உள்ள மொழிகளின் இழப்பிற்குக் காரணமாக அமைந்து விட்டது என்பதை இயல் 6 இல் காண்போம்.

அதற்கு முன்பு ஆங்கிலம் எவ்வாறு உலகமொழியாக மாறியது என்ற விவரங்களையும் இந்தியத் துணைக்கண்டத்தில் ஆங்கிலத்தின் நிலை என்ன, செல்வாக்கு எவ்வாறுள்ளது போன்ற விவரங்களையும் இங்குக் காண்போம்.

3.1. உலக அளவில் ஆங்கிலத்தின் செல்வாக்கு

உலகில் இன்று ஆங்கிலம் பரவலாகப் பயன்பாட்டில் உள்ளது. ஆங்கிலம் தாய்மொழியாகப் பயன்பாட்டில் உள்ள நாடுகள்: அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, அயர்லாந்து, நியுசிலாந்து, தென் ஆப்பிரிக்கா, கரிபியன் நாடுகள் ஆகும். இனி, ஆட்சிமொழித்தகுதி பெற்ற நிலையிலும், இரண்டாவதுமொழித் தகுதி நிலையிலும் ஆங்கிலம் கானா, நைஜீரியா, இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பயன்பாட்டில் உள்ளது. பல நாடுகளில், பள்ளிகளில் இன்று குழந்தைகள் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் கற்கிறார்கள். ஏறக்குறைய 100 நாடுகளின் பள்ளிகளில் ஆங்கிலம் தலையாய அயல்மொழியாகக் கற்பிக்கப்படுகிறது. ஆங்கிலத்தை முதல்மொழியாகக் கற்றவர்களின் எண்ணிக்கை உலகில் ஏறக்குறைய 400 மில்லியன், அதாவது 40 கோடி என்றால்

ஆங்கிலத்தை முதல் மொழியாகக் கற்றவர்களின் எண்ணிக்கையும் 400 மில்லியன் அதாவது 40 கோடியைத்தொடுகிறது. உலகில் ஆங்கிலத்தை முதல் மொழியாகப் பேசுபவர்களின் மக்கள் தொகையை விட ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகப் பயன்படுத்துவேரின் மக்கள்தொகை, அதிகமாக உள்ளது. இது உலக மொழி ஆங்கிலம் தவிர வேறு எந்த மொழிக்கும் இல்லாத நிலை எனலாம். மேலும், ஆங்கிலம் உலகின் பல நாடுகளில் அயல்மொழியாகக் கற்றுக் கொள்ளப்படுகிறது. தகவல் தொழில்நுட்பம் ஆங்கிலம் வழியாகப் பரவத் தொடங்கியவுடன் சீனா போன்ற நாடுகளில் ஆங்கிலமொழிக் கல்வி வேகமாகப் பரவத் தொடங்கிவிட்டது. உலகில் இன்று ஏறக்குறைய ஒரு பில்லியன் மக்கள் அதாவது 100 கோடி மக்கள் ஆங்கிலத்தை முதல்மொழியாகவோ, இரண்டாவது மொழியாகவோ கற்கிறார்கள் என்று பிரிட்டிஷ் தூதரக் கணக்கெடுப்பு கூறுகிறது. அதாவது, உலகமக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் ஆங்கிலம் கற்கிறார்கள் என்பது இதன்பொருளாகும்.

ஆங்கிலம் உலகமொழியான விவரம்

உலகமொழிச் செல்வாக்கை ஆங்கிலம், எவ்வாறு பெற்றது, அதாவது ஆங்கிலம் எவ்வாறு உலகமொழியானது என்ற வினாவிற்கு இங்கு விடை காணமுயல்வோம்.

ஆங்கிலமொழி பேசுபவர்களின்-குறிப்பாகத் தாய்மொழியாகப் பேசுபவர்களின் அதிகாரவலிமையே இந்த மொழியை உலகமொழி என்ற நிலைக்கு உயர்த்தியுள்ளது எனலாம். ஆங்கிலமொழியின் வலிமை வரலாற்றின் பல்வேறு காலக்கட்டங்களில் படிப்படியாக உயர்ந்திருக்கிறது. 16 ஆம் நூற்றாண்டிலிருந்து ஆங்கிலம் ஏகாதிபத்தியமொழியாக மாறியிருக்கிறது. 18,19 ஆம் நூற்றாண்டுகளில் உலகின் 50 விழுக்காட்டு விஞ்ஞானிகளும் இயந்திரத் தொழில் நுட்ப வல்லுநர்களும் ஆங்கிலமொழி மூலமாக இயந்திரப் புரட்சியை உண்டாக்கியிருக்கின்றனர். ஆங்கிலமொழிக்குத் தொழில் நுட்ப வல்லமையை உண்டாக்கியிருக்கின்றனர். உலகின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் இங்கிலாந்துக்கும் பிறகு அமெரிக்காவுக்கும் சென்று ஆங்கிலம் வழியாகப் புதிய தொழில்நுட்பத்தைக் கற்றுள்ளனர். அமெரிக்காவின் பொருளாதாரவளம், அந்நாட்டின் மக்கள் தொகைப் பெருக்கத்தால் 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டின் பொருளாதார வளத்தையும் மிஞ்சியிருக்கிறது. இது அமெரிக்க ஆங்கிலம் பெற்ற பொருளாதார வலிமையை உணர்த்துகிறது. உலக அரசியல் கூட்டங்கள் உலகின் எந்தப் பகுதியில் நிகழ்ந்தாலும் அவை ஆங்கில

மொழி மூலம்தான் நிகழ்கின்றன. உலகில் உள்ள அரசியல் குழுமங்களில் (International Political organizations) 85 விழுக்காட்டுக்கும் மேலான குழுமங்கள் மாநாடுகளை ஆங்கில மொழி மூலம்தான் நிகழ்த்தியுள்ளன. இதற்கு அடுத்த நிலையில்தான் பிரெஞ்சுமொழி உள்ளது. இயந்திரத்தொழில் நுட்பம் பெரும் புரட்சியை அச்சு மற்றும் பதிப்புத் துறையில் உண்டாக்க, ஏராளமான நூல்கள் ஆங்கிலமொழியில் உருவாகி அவை உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்று சேர்ந்துள்ளன. 19ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் உலகவங்கியல் துறை (International banking system) ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்க நாடுகளில் தழைக்க, முடிவில் இலண்டன், நியூயார்க் நகரங்களே உலகின் பணமுதலீட்டு மையங்களாகத் திகழ்ந்துள்ளன. இந்தப் பொருளாதார ஏகாதிபத்தியம் இந்நாட்டினரது மொழியான ஆங்கிலத்திற்குப் பொருளாதார வலிமையைத் தந்துள்ளது. பணம் பேசும் என்ற உருவக மொழிக்கு ஏற்பப் பணம் ஆங்கில மொழியில் பேசத் தொடங்கியது. ஏறக்குறைய 400 ஆண்டுக்கும் மேலாகத் தகவல் தொடர்புச் சாதனக் களத்திலும் ஆங்கில மொழியே மேம்பாட்டில் இருந்து வந்து கொண்டிருக்கிறது. அமெரிக்காவில் செயல்படத் தொடங்கிய சுதந்திரத் தன்மை கொண்ட செய்தி மையம் கி.பி. 2000 ஆவது ஆண்டில் ஏறக்குறைய 2000 செய்தித்தாள்களைக் கொண்டிருக்க உலகமுழுவதும் செய்தி ஆங்கில மொழி மூலம் பரவியது (Crystal, 2000). இது போலவே விளம்பரத்துறை, எடுத்துக்காட்டு- கோகோ கோலா விளம்பரம், வானொலி, பிபிசி, வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா, பேசும்படம் (ஹாலிவுட் படங்கள்), வான் மற்றும் கடல்வழியாக நிகழும் உலகச் சுற்றுப் பயணம் ஆகிய துறைகளிலும் ஆங்கில மொழியே பயன்பட்டு, ஆங்கிலம் உலகநாடுகளில் பரவும் முகமாக உலகமொழியாக மாற்றம் பெற்றிருக்கிறது. பொதுவாக, உலகின் அறிவு குறிப்பாக அறிவியல், தொழில் நுட்பம் போன்ற துறைகளின் அறிவு ஆங்கிலமொழி மூலம் பெறமுடிவதால் உலகின் பலநாடுகள் ஆங்கிலத்தையே ஆட்சிமொழியாகக் கொண்டுள்ளன. அல்லது தங்கள் பள்ளிகளில் மாணவர்கள் ஆங்கிலத்தை அயல்மொழியாகக் கற்கும் வண்ணம் ஏற்பாடு செய்துள்ளன. 1977 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி கணினி வலைப்பின்னலில் (internet) பயன்பாட்டில் உள்ள மொழிகளில் ஆங்கிலம், முதல் இடம் (84.0 விழுக்காடு) வகிக்கிறது. பிறகே ஜெர்மானியமொழி (3.1 விழுக்காடு) பிரெஞ்சுமொழி (1.8 விழுக்காடு) போன்றவை இடம்பெறுகின்றன. 2003 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி ஆங்கிலமொழி வழியாக வலைப்பின்னலைப் பயன்படுத்துவோரே மிக அதிகமாக உள்ளனர். இப்பயன்பாட்டில் ஆங்கில மொழி முதல் இடத்தில் உள்ளது. 270

மில்லியன் மக்கள் ஆங்கிலத்தைப் பயன்படுத்துகின்றனர். பயன்பாட்டில் உள்ள பிறமொழிகள் பயன்படுத்துபவர் எண்ணிக்கை வருமாறு: ஜெர்மானியமொழி 49 மில்லியன், ஸ்பானிஷ்மொழி 53 மில்லியன், பிரெஞ்சுமொழி 28 மில்லியன், சீனமொழி 125 மில்லியன், ஆசியமொழி அனைத்தும் சேர்ந்து 254 மில்லியன். ஒரு மொழி உலகமொழி என்ற தகுதியைப் பெறும்போதும் அந்த உலகமொழி மற்ற நாடுகளில் ஊடுருவும் போதும் அந்த நாட்டின் மொழிகளின் நிலை என்னவாகும் என்ற வினாவிற்கு விடையை இயல் 7 இல் காணலாம். அதற்கு முன்பு இந்தியாவில் உலகப் பொதுமொழி ஆங்கிலத்தின் நிலை என்ன என்பதை இப்பகுதியில் விரிவாகக் காண்போம்.

3.2. இந்தியாவில் ஆங்கிலத்தின் நிலை

இந்தியா சுதந்திரம் பெற்றுக் குடியரசு நாடாக மாறிய போது இந்தியப் பாராளுமன்றம் ஆட்சிமொழி ஆங்கிலத்திற்குப் பதிலாகத் தேவநாகரி எழுத்தமைப்பு கொண்ட இந்திமொழி ஆட்சி மொழியாக மாறும் என்று முதலில் தீர்மானம் கொண்டு வந்தது. பிறகு, முடிவான தீர்மானமாக 1950 ஆம் ஆண்டிலிருந்து 15 ஆண்டுகளுக்குள் ஜனாதிபதியின் உத்திரவின்படி பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தி மொழி இந்தியாவின் ஒரே ஆட்சி மொழியாகும். அது வரையிலும், ஆங்கிலமொழி, இந்தி மொழியோடு ஆட்சி மொழியாகத் தொடரும். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஜனாதிபதியால் அங்கீகரிக்கப்படும் ஆட்சிமொழிக் குழுக்கள் (language commissions) ஆட்சிமொழிகளின் செயல்பாட்டை வழிநடத்திச் செல்லும் வகையில் ஜனாதிபதிக்கு அவ்வப்போது அறிவுரைகள் வழங்கும். இதைப் போலவே இந்தியாவின் மாநில அரசுகளும் மாநிலத்திற்கென்று-அரசுப்பயன்பாட்டிற்கென்று ஒரு ஆட்சி மொழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டதோடு தொடர்ந்து ஆங்கிலத்தையும் அரசுப் பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கூறப்பட்டது. எவ்வளவு காலம் வரை ஆங்கிலத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட அம்மாநில மொழியிலேயே முழுவதுமாக ஆட்சி செய்யுமளவிற்கு மொழி வளர்ந்து விட்ட பிறகு என்றனர். ஆனால் இந்த மாற்றத்திற்கு எந்த ஒரு கால வரையறையும் குறிக்கப்படவில்லை.

ஆட்சி மொழி மாற்றத்திற்காகக் கெடுவிதிக்கப்பட்டிருந்த ஆண்டுக்காலத்திற்குள் முழுவதுமாக இந்தியே ஆட்சி மொழியாவதற்குச் சில மாநிலங்கள் எதிர்ப்புத் தெரிவித்தன

(Kumara mangalam, 1965). 1963 இல் அதாவது 15 ஆண்டுக்காலக் கெடு முடிவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இந்தியப் பாராளுமன்றம், ஆங்கில மொழி காலவரையறையின்றி ஆட்சி மொழியாகத் தொடர்வதற்கு ஒப்புதல் அளித்து ஆட்சிமொழித்தீர்மானத்தை (official language bill) நிறைவேற்றியது. இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆங்கிலமே தொடரவேண்டும் என்ற கோரிக்கையை மனதில் கொண்டு பாராளுமன்றத்தில் அன்றைய பிரதமர் ஜவகர்லால் நேரு தந்த வாக்குறுதியின் சட்ட வடிவமாகும். இது, ஆங்கிலம் இந்திக்கு இணையான ஆட்சி மொழியானது (associate official language). இது போலவே மாநிலங்களிலும் மாநிலத்தில் பெரும்பாலோரால் பேசப்படும் ஒரு இந்திய மொழியையே அல்லது இரண்டு மொழிகளையே தேர்ந்தெடுத்துக் கொண்டதோடு தொடர்ந்து ஆங்கிலமும் ஆட்சிமொழியாக நீடிக்கும் வகையில் ஆட்சி மொழித் தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டனர். நாகலாந்து மாநிலம் ஆங்கில மொழியை மாத்திரம் ஆட்சி மொழியாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டது. வேறு சில மாநிலங்களில் சுதந்திரம் பெறுவதற்கு முன்பு ஆட்சி மொழியாக இருந்த ஆங்கில மொழியையே ஆட்சி மொழியாகக் கொண்டனர்- ஆட்சிமொழித் தீர்மானம் எதுவும் நிறைவேற்றிக் கொள்ளாமலேயே. எனவே இன்று எல்லா மாநிலங்களிலும் யூனியன் பகுதிகளிலும் ஆங்கிலமே பெருமளவில் ஆட்சி மொழியாக உள்ளது எனலாம். இந்திய மொழிகளின் ஆட்சி மொழிப் பயன்பாடு மாநிலத்திற்கு மாநிலம், தமிழகம் உட்பட, வேறுபட்ட சுருங்கிய நிலைகளில் உள்ளது. (Annamalai; Gnasundaram 2007). நீதித்துறையிலும் ஆங்கிலப் பயன்பாடே மேலோங்கியுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி (Indian constitution) உச்ச நீதிமன்றத்திலும் (supreme court) மாநில உயர்நீதிமன்றங்களிலும் (High court) ஆங்கிலமே வழக்குகளில் பயன்படுத்த வேண்டும், பாராளுமன்றம் இப்போக்கை மாற்றினாலன்றி. அது போலவே சட்டசபைகளிலும் பாராளுமன்றத்திலும் அதிகாரப் பூர்வமான ஆவணங்கள் ஆங்கிலத்தில் தான் இருக்க வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட மொழிச் சட்டம் உச்ச நீதிமன்றத்தில் வழக்குகளை இந்திமொழியில் நிகழ்த்தவும் உயர்நீதிமன்றங்களில் வழக்குகளை மாநில ஆட்சி மொழிகளிலும் நடத்தவும் அனுமதித்த போதிலும் தீர்ப்புகள் முதலானவை, அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்போடு இருத்தல் வேண்டும் என்றது. மாநிலச்சட்டசபைகளின் நடப்பு (Proceedings) அம்மாநிலத்தின் ஆட்சி மொழியில் இருக்கலாம். ஆனால் ஆங்கில மொழிபெயர்ப்போடு (authorized English texts) இருத்தல் வேண்டும் ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிபெயர்ப்புகள்

இருந்தால் அவை அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகும் (Dwiwedi *1981*). இரு மொழியில் உள்ள சட்டசபை மற்றும் உச்ச, உயர்நீதிமன்ற நீதித்துறை ஆவணங்கள் அங்கீகரிக்கப்பட்டவை ஆகும். நிறையப் பள்ளிகளில்- தொடக்க உயர்நிலைப்பள்ளிகளில் பயிற்று மொழி ஆங்கிலம் நீக்கப்பட்டிருந்தாலும் ஆங்கிலமொழி வழிக்கல்வி, தனியார் நடத்தும் பள்ளிகளில், மொழிச் சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளில், கிருத்துவ மிஷனரிமார் நடத்தும் பள்ளிகளில், உள்ளன.

ஆங்கில வழிக்கல்வி, பள்ளிக் கல்வியின் எல்லா நிலைகளிலும் - தொடக்க, நடுநிலை மற்றும் உயர் நிலைப்பள்ளி நிலைகளில் எல்லா மாநிலங்களிலும், யூனியன் பகுதிகளிலும் உள்ளன. இந்தியாவில் வேறு எந்த ஒரு மொழியோ அல்லது இந்தியோ ஆங்கிலம் போல ஒரு மாற்றுப்பயிற்று மொழியாக (altenative medium) செயல்படவில்லை (Chaturvedi and Singh *1981*). பயிற்று மொழியான ஆங்கிலம் உயர்மதிப்புப் பெற்றதோடு பொதுவாகவே, எல்லோருக்கும் அதிகமாகத் தேவைப்படுகின்ற ஒன்றாகவும் ஆனது. உயர் கல்வி நிலைக்கு-கல்லூரி, பல்கலைக்கழக, தொழிற்கல்வி நிலைகளுக்கு ஆங்கிலம் தவிர்த்து இந்திய மொழிகளைப் பயிற்று மொழியாகக் கொள்வதில் நமது கொள்கை தெளிவாக இல்லை. மேலும் இந்த மாற்றத்தை விரும்பாத, ஏற்றுக்கொள்ளாததற்கான காரணங்களாகப் பின் வருபவை தெரிவிக்கப்படுகின்றன: கல்வி, மாநில மொழி வழியாக மாறும் போது ஆசிரியர்களோ மாணவர்களோ ஒரு மாநிலம் விட்டு இன்னொரு மாநிலத்திற்கோ வெளிநாடுகளுக்கோ மேற்படிப்பு, ஆராய்ச்சி, வேலைவாய்ப்பு போன்ற காரணங்களுக்காகச் சென்று முன்னேற்றம் காண்பதில் தடையாக இருக்கும் என்றும், தேவையான பாடநூல்கள், நோக்கு நூல்கள் இந்தியமொழிகளில் இல்லாமை, அவற்றை உருவாக்குவதில் உள்ள பொருட் செலவு, இந்தியமொழிகள் வளர்ச்சி பெறாதநிலை, குறிப்பாக அறிவியல் துறைகளுக்கு ஏற்ற கலைச்சொற்கள் இல்லாமை, போன்றவை காரணங்களாகத் தெரிவிக்கப்படுகின்றன (Sha, *1968*).

பல கல்லூரிகளில் பட்டப்படிப்பு மற்றும் உயர்படிப்புத் தளங்களில் கலை மற்றும் மனித இயல் பாடங்களைக் (arts and humanities) கற்பிக்க இந்திய மொழிகள் பயிற்று மொழிகளாக உள்ளன. அரசுக் கலைக் கல்லூரிகளில் பட்டப்படிப்பு நிலையில் ஆங்கிலத்திற்கு மாறாக தமிழ்மொழி, கட்டாயப் பயிற்று மொழியாக உள்ளது. அதாவது இந்தி, இந்தியமொழி அல்லது ஆங்கிலம் விருப்பப் பயிற்று மொழிகளாக உள்ளன. **இந்தியமொழி கட்டாயப் பாடமொழியாக இல்லை.**

சில மாநிலங்களைத் தவிரப் பொதுவாக இந்தியாவின் எல்லாப்பகுதிகளிலும் பள்ளி கல்லூரிகளில் ஆங்கிலம் கட்டாய மொழிப்பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது. அந்த மாநிலங்களில் ஆங்கிலம் விருப்பப் பாடமாகவோ தேர்வுக்கு உட்படாத பாடமாகவோ உள்ளது. (Government of India 1984). ஆங்கிலத்தைப் பொதுவாக, நிறுவன வழி மூலமாகக் கல்வி மூலமாகப் பெறுவதால் ஆங்கில இருமொழியம் (English bilingualism) இந்தியாவில் முதல் இருமொழியத் தானத்தில் உள்ளது. அதாவது ஆங்கில இருமொழியாளர்கள் (இரண்டாவது மொழி என்ற தகுதியில்) இந்தியாவில் முதல் நிலையில் உள்ளனர் (Annamalai 1986). சுதந்திரத்திற்குப் பிறகு பள்ளிகளில் ஆங்கிலம் கற்போரின் தொகை ஒரு புறம் மிக அதிகமானது; இன்னொரு புறம் அவர்களது ஆங்கிலப்புலமையின் தரம் தாழ்ந்தது. பள்ளிகளில் ஆங்கிலம் கற்க விரும்பும் மாணவர்களின் தொகை பெருகிய அளவிற்கு ஆங்கிலம் முறையாகக் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை பெருகவில்லை. ஆங்கில மொழியின் தேவை ஆங்கில மொழியின் தரத்தைக் குறைத்துவிட்டது எனலாம்.

மேலே விவரித்த மொழிக் கொள்கைகள் மூலமாக ஒன்றை விளங்கிக்கொள்ளலாம். இந்தியாவில் ஆங்கிலம் முக்கியப் பயன்பாட்டுக் களங்களில் (major domains) ஒரு மாற்று மொழியாகத் தொடர்வது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றானது. சுதந்திரத்திற்குப் பிறகு ஆங்கில ஊடகத்தை விரும்பி, ஏற்றுக்கொள்பவர் தொகை குறிப்பாக, கல்விக் களத்தில் பெருகியுள்ளது. இந்தியா சுதந்திரம் பெற்றபோது எழுந்த ஆங்கில மொழி நீக்கம் அதாவது சமூகத்தின் பலதுறைகளில் பயன்பாட்டில் இருந்த ஆங்கில மொழி நீக்கம் என்ற உணர்வும், விருப்பமும் நாளடைவில் மங்கி ம்றைந்து போயின. ஆங்கில நீக்கத்திற்குப் பதிலாக ஆங்கில மொழிப் பயன்பாடு தொடரவேண்டும் என்ற விருப்பமும் ஆர்வமும் பெருகிவிட்டன. இந்த மாற்றத்திற்கான காரணங்கள் வருமாறு:

இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு நலிந்திருந்த இந்திய சமூகத்தினர், பொருளாதார வளத்தில் தன்னிறைவு பெற வேண்டிய கட்டத்தை எதிர்கொண்டனர். சுதந்திரத்திற்குப் பிறகு உள்ள பலன்களைப் (பொருளாதாரத் தன்னிறைவு உட்பட) பெறுவதில் இந்தியாவில் உள்ள பல பகுதியினர்க்கு இடையேயும் போட்டி உண்டாகத் தொடங்கியது. இந்தப் பலன்களைப் பெறுவதில் உலகமகா சக்திகளின் ஆதரவும் தேவைப்பட்டது. ஆங்கிலம் இந்தச் சக்திகளின் மொழி வெளிப்பாடாக அமைந்திருக்கிறது. ஆங்கில மொழிமூலம் ஏற்கெனவே பலன் அடைந்தவர்கள் அதிகாரத்தில்

உள்ளவர்களாகவும் இருந்தனர். இவர்கள், தங்கள் அதிகாரத்தை, அதிகார வலிமையை இழக்க விரும்பாததால் பின்வரும் கருத்தை வலியுறுத்தினர்: ஆங்கிலம், இந்தியர் அனைவருமே கல்வி மூலமே பெறக்கூடிய இரண்டாவது மொழி; இது இந்தியாவில் யாருடைய தாய்மொழியும் இல்லை. (மொழிச் சிறுபான்மை ஆங்கிலோ இந்தியர்கள் தொகை மிகக் குறைவு). எனவே இந்தப் பொது மொழியை எல்லோருமே கடினமான முறையில் தான் பெற முடியும்; பளு எல்லோருக்கும் பொதுவான ஒன்று; விரும்பி ஏற்றுக் கொள்ள வேண்டிய பளு என்றனர். குடியரசு ஆட்சி முறை இந்தியாவில் நிலைத்துவிட்டபோது, எல்லாப் பெரும்பான்மையினரது மொழிகளுக்கும் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்ததோடு, ஆங்கிலமொழி எந்த ஒரு பகுதியினர்க்கும் இனக்குழுவினர்க்கும் சொந்தமில்லாத ஆனால் இந்தியர் அனைவருக்கும் பொதுவான ஒரு மொழி என்ற வாதமும் வலுத்தது. இந்த வாதம், ஆங்கில மொழி பயன்படுத்தும் உயர்மட்டக் குழுவினரோடு தங்களை இணைத்துக் கொள்ளவிழையும் இந்தி பேசாத உயர்மட்டக் குழுவினருக்கு (non Hidni elites) ஓர் அரசியல் ஆயுதமாக, இந்தி - புதிய ஏகாதிபத்திய மொழியாக மாறுவதைத் தடுப்பதற்கான அரசியல் ஆயுதமாகப் பயன்பட்டது. இதே போன்று மொழிவழி மாநிலங்களின் தோற்றத்திற்குப் பிறகு மொழிச்சிறுபான்மையினர் வலிமை பெற்ற மாநிலமொழிகளிடமிருந்து தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள ஆங்கில மொழியிடம் தஞ்சம் அடையத் தொடங்கினர். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் நலிந்த சாதியினர்க்குக் கல்வி வேலைவாய்ப்பு போன்ற துறைகளில் முன்னுரிமை (reservation) அளித்துள்ளது. காலங்காலமாக இது போன்ற வாய்ப்புகளை இவர்கள் பெற்றது இல்லை. பொருளாதார முன்னேற்றம், அதிகாரம், சமூக மதிப்பு ஆகியவற்றை உயர்சாதியினர் பெற்றது ஆங்கிலமொழி மூலமாக என்பதை உணரத் தொடங்கிய நலிந்த சாதியினர் ஆங்கில மொழியைத் தேர்ந்தெடுக்கத் தொடங்கினர்.

1) இந்தி பயன்படுத்தாத உயர்மட்டக் குழுவினர்
2) மொழிச் சிறுபான்மையினர்
3) நலிந்த சாதியினர்

ஆகிய மூன்று பிரிவினரிடையேயும் ஆங்கில மொழி மூலம் பெறும் நன்மை குறித்த புரிதல்கள் ஒன்றுபோலவே அமைந்துவிட்டன எனலாம், அவரவரது தேவைகள் வெவ்வேறாக இருந்தபோதிலும். இரண்டாவது உலகப்போருக்குப் பிறகு உலக முழுவதும் ஆங்கிலத்தின் ஆளுமையும் அதிகாரச் சக்தியும் குறிப்பாக அரசியல் வணிகச்சூழல்களில் பெருகியிருந்ததை ஏற்கெனவே கண்டோம்.

இதன் காரணமாக இந்தியா ஆங்கிலம் பயன்படுத்தும் நாடாகத் தொடர்ந்து விளங்கினால் உலக அரங்கில் அரசியல், வணிகம் போன்ற களங்களில் பலன் பெறலாம் என்ற நம்பிக்கை உண்டானது. இதே காலக்கட்டத்தில் அறிவியல், தொழில் துறை அறிவியல் (technology) போன்றவை மிக வேகமாக முன்னேறின. அந்த முன்னேற்றம் ஆங்கில மொழி மூலமாகவே என்பதை ஏற்கெனவே நாம் கண்டோம். மேலும் ஆங்கில மொழி மூலமாகக் கிடைத்துள்ள இந்த அறிவினை இந்தியமொழிகளில் உடனுக்குடன் தேக்கி வைப்பது அவ்வளவு எளிதான காரியமாகப்படவில்லை. எழுகின்ற அறிவியல் இடைவெளியை, இந்திய மொழிகளின் மூலமாக (உள்ளடக்கம், (கலைச்) சொற்கள் வழியாக) நிரப்ப முடியுமா என்ற அச்ச உணர்வும் எழுந்தது. வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பின் அளவு, வெளிநாடுகளில் பெறும் உயர் கல்வி வாய்ப்பின் அளவு பெருகப் பெருகவும், இவ்வாய்ப்புகளால் பெறும் புதிய பலன்களும் இப்பலன்களை ஏற்கெனவே அனுபவித்துள்ள உயர்மட்டக் குழுவினர் ஆங்கில வழிக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தினர். வேடிக்கை என்னவென்றால் சுதந்திரப் போராட்டத்தின் போது போராட்ட வீரர்கள் எந்த மொழியை வெறுத்துப் புறந்தள்ள நினைத்தார்களோ அந்த மொழியை (மூத்த அறிஞர் இந்தியாவின் முதலாவது கவர்னர் ஜெனரல் இராஜாஜி போன்றவர்கள்) பின்னாளில் 'கல்விக்கடவுள்; கலைமகளின் அருள்பெற்ற மொழி ஆங்கிலம்' என்றனர்.

ஆங்கில மொழி இலக்கணம் மற்றும் பயன்பாட்டுக்களங்களில் ஏறக்குறைய இந்தியமொழி போல ஆகியுள்ளது. பல்வேறு இந்தியத்தாய் மொழியாளர்கள் அதிகமாக ஆங்கிலத்தைப் பயன்படுத்துகின்றனர். தற்போது பயன்பாட்டு வேகம் கூடிய முக்கியக் களங்களாக உயர்கல்வி, வணிகவியல், பத்திரிகையியல் போன்ற துறைகள் உள்ளன. இதனாலேயே இந்திய ஆங்கிலத்தை அயல்நாட்டு ஆங்கிலம் எனக் கூறமுடியாது என்பர் (Kachru *1983*). இந்தியப் பண்பாட்டுக் கூறுகளை வெளியிடும் சாதனமாக இந்திய ஆங்கிலம் விளங்குகிறது என்பதை ஆங்கிலப் புதினம் எழுதும் இந்திய எழுத்தாளர்களும் (Indian creative writers in English) இந்தியப் பத்திரிகையாளர்களும் நிரூபித்துள்ளனர். இந்தியாவில் வாழும் ஆங்கிலோ இந்தியர்களது தாய்மொழி இது (1991 மக்கட்தொகையில் இவர்கள் 0.02 விழுக்காட்டினர்.) பாராளுமன்ற ஆங்கிலோ இந்தியப் பிரதிநிதி ஃப்ராங் அந்தோணி (Frank Antony) ஆங்கிலத்தை எட்டாவது அட்டவணை மொழிப்பட்டியலில் சேர்ப்பதில் வெற்றி பெறவில்லையென்றாலும் (Dwivedi *1961*) பம்பாய் (தற்போது மும்பை) உயர்நீதிமன்ற உயர்நீதிபதி (Chief Justice) ஆங்கிலத்தை இந்திய மொழி என ஒரு தீர்ப்பில் மொழிந்துள்ளார். (AIR-BOM-*468/1954*).

கல்வி இந்திய மொழிகளிலேயே இருத்தல் வேண்டும் என்ற கோரிக்கை பொதுவாக உணர்வு சார்ந்த வெற்றுக் கோரிக்கையாக

உள்ளது. கல்லூரி பல்கலைக்கழகங்களில், ஆங்கிலவழிக் கற்று வெளிவந்தவர்கள், தாங்கள் கற்ற ஆங்கிலம் மூலமாகவே தங்கள் அலுவல்களைச் செய்வது (அது நிருவாகமாகவோ (administration) அல்லது வாணிக மேற்பார்வை (Business Management) இயலாகவோ இருக்கலாம்) அவர்களுக்கு எளிதாக உள்ளது. இங்கே ஒன்றை நினைவுகூரலாம். ஆங்கில ஏகாதிபத்தியத்தினர் இந்தியாவில் ஆங்கிலவழிக் கல்வியைப் புகுத்தியது எதற்காக?. மக்கள் ஆங்கில வழியாகக் கற்று, ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்று, ஆங்கிலேயர் இந்தியர்களை ஆள்வதற்கு இந்தியர்களும் துணை போக வேண்டும் என்பதற்காகவே அல்லவா? தற்போது, ஆங்கில வழிமூலம் கல்வி கற்பதில் மாற்றம் கொண்டு வர விருப்பம் இல்லாமல் இருப்பதும் ஏறக்குறைய இந்திய சுதந்திரத்திற்கு முன்பு ஆங்கிலேயர்கள் கூறிய காரணங்களுக்கு ஒப்பானவை தான். ஆங்கிலவழிக் கல்வி இந்தியாவில் அதிகம் விரும்பப்படுவதற்கும் ஆங்கிலப் பயன்பாடு அதிகமாக ஆவதற்கும் உள்ள காரணங்களில் சிலவற்றை, மேலும் இங்கே குறிப்பிடலாம்.

இந்திய மொழிகளைப் பயிற்று மொழியாகக் கொண்டு உயர் கல்வி கற்பவர்கள் பொதுவாகச் சிறு எண்ணிக்கையில் உள்ளவர்களாகவும் பொருளாதார வசதி மற்றும் படிப்பில் பின் தங்கியவர்களாகவும் உள்ளனர். கோடிக்கணக்காகப் பணம் செலவழித்து இந்தியமொழிகளில் உருவாக்கப்பட்ட கல்லூரி நிலைப் பாடநூல்கள், நோக்கு நூல்கள் (அவை நேரடியாக எழுதப்பட்டவையாகவோ அல்லது மொழி பெயர்க்கப் பட்டவையாகவோ இருக்கலாம்.) எல்லாமே தேங்கிக் கிடக்கின்றன. அகில இந்திய அரசுத்துறை அதிகாரப் பதவிக்களுக்கான (IAS, IPS, IFS) போட்டித் தேர்வுகளை மிகச் சிலரே இந்திய மொழிகள் மூலம் எழுதி வெற்றி பெறுகின்றனர். 1978 இல் 23 விழுக்காட்டினர் கட்டாயப்பாடமான கட்டுரை எழுதுதலுக்கு இந்திய மொழிகளைப் பயன்படுத்தியுள்ளனர். அவற்றில் 88 விழுக்காட்டினர், இந்தி மொழி மூலம் எழுதினர் என்பது புள்ளி விவரம். பாடத் தேர்வுகளை (Subjects) இந்திய மொழிகளில் எழுதுவோர் (இந்திமொழியில் எழுதிய ஒரு சிலரைத் தவிர) இல்லை என்றே கூறலாம் (Sharma 1985). தினத்தாள்களில் வெளியாகும் 91 விழுக்காட்டு வேலைவாய்ப்புக்கான விளம்பரங்கள், விண்ணப்பிப்போரிடம் அலுவல் தகுதியாக ஆங்கில மொழியில் இருக்கவேண்டிய பல்வேறு திறன்களைப் பற்றிக் கேட்கின்றன. (Rajyashree and Jernud 1984). ஆங்கிலத் தினத்தாள்கள் இந்திய மொழிகளில் வெளியாகும் தினத்தாள்களைவிட மிக அதிகம். ஆங்கிலத்தில் வெளியாகும் தினத்தாள்கள், வார மாத இதழ்கள், இந்தியமொழிகளில் வெளியாவதைவிடச் சற்றுக் குறைவாக இருந்தாலும், படிப்பவர் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், ஆங்கிலத்தில் இவற்றை வாசிப்போர் கல்வி, பொருளாதார நிலைகளில் மேம்பட்டவர்களாக இருப்பதால் இவற்றில் உள்ள கருத்துகள் சமூகத் தாக்கத்தை

அதிகமாக உண்டாக்குவதாக உள்ளன எனலாம். ஆங்கிலத்தில் வெளியாகும். தினத்தாள்களில் இவற்றில் இடம்பெறும் 53 விழுக்காட்டு விளம்பரங்களின் வருமானம் இந்திய மொழிகளின் வெளியீடுகளின் வருமானத்தை விட அதிகம். மற்றும், ஆங்கில மொழியில் புத்தகங்கள் வெளியிடுவதில், இந்தியா அமெரிக்கா இங்கிலாந்துக்குப் பிறகு, உலகில் மூன்றாவது இடத்தில் உள்ளது. இந்தியாவில் 1982 இல் வெளியான புத்தகங்களில் 42 விழுக்காட்டிலான புத்தகங்கள் (7000 தலைப்புகளில்) ஆங்கில மொழியில் உள்ளன. ஆங்கில மொழியை இரண்டாவது மொழியாகப் பேசுபவர்கள் இந்தியாவில் 2.5 விழுக்காட்டினராக உள்ளனர் (1961 மக்கட்தொகைக் கணக்கெடுப்பு). ஒவ்வொரு ஆண்டும் அதிகமான அளவில் ஆங்கில வழிக்கல்விக் கூடங்கள் (மழலையர் பள்ளிகள் உட்பட) தனியார்துறையில் திறக்கப்படுகின்றன. பெற்றோர், மிக ஏழ்மை நிலையில் உள்ள பெற்றோர் உட்படச் சக்திக்கு மீறிப்பணம் செலவழித்துத் தங்கள் குழந்தைகளை ஆங்கில வழிக்கல்விக் கூடங்களுக்கு அனுப்புகின்றனர். இந்தியாவில் ஒரு காலத்தில் வணிகத்திற்காக நுழைந்த அந்த ஆங்கிலமே இன்று வணிகப் பொருளாகி விட்டது. **ஆங்கிலம் இந்தியாவில் 25 விழுக்காட்டு இருமொழியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. இந்தி மொழி இரண்டாவது மொழியாக 22 விழுக்காட்டு இருமொழியாளர்களால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.** ஆங்கிலம் தனியார் துறைகளில்-வெளிநாட்டு நிறுவனங்களின் தொடர்போடு உள்ள உயர்மட்டத் தொழில்துறைகளில் (high-tech Industries) பயன்படுத்தப்படுகிறது. (Bayer: to appear).

பன்மொழியாளர் ஒருவர், ஒரு பேச்சுக்காக, ஒருமொழியாளராக மாற வேண்டிய கட்டாயத்தில் இருந்தால் இந்தியாவில் அவர் ஆங்கிலமொழியைத் தான் தேர்ந்தெடுப்பார். (Chaudhai, 1985). இக்காரணங்களால் ஆங்கில மொழி தேர்ந்தெடுக்கப்படுவது இந்தியாவில் ஒருவரது அந்தரங்க விருப்பமாக உள்ளது. பொது மேடைகளில் தெரிவிக்கக் கூடிய விருப்பமோ தேர்வோ அல்ல. எந்த ஓர் அரசியல் கட்சியும் தங்கள் கொள்கை விளக்க அறிவிப்பில் ஆங்கில ஆதரிப்பைக் குறிப்பிடாது. ஆனால் தனிப்பட்ட தங்கள் வாழ்க்கையில் ஆங்கில நாட்டம் உள்ளவர்களாக இருப்பார்கள். எடுத்துக்காட்டாக, தங்கள் குழந்தைகளை ஆங்கிலவழிக் கல்விக் கூடங்களுக்கு அனுப்புவர். ஆங்கில எதிர்ப்பு என்பது பொது வாழ்வில் பொது மேடைகளில் மாத்திரமே ஏறக்குறைய இந்தியத் தேசியத்தின் அடையாள எதிர்ப்புப் போல (Symbol of national oppression) அமைந்துள்ளது. தனிப்பட்ட அந்தரங்க வாழ்வில் ஆங்கில ஏற்பு தான் கொடிகட்டிப் பறக்கிறது, பொருளாதார முன்னேற்றம் என்ற காரணத்திற்காக.

இயல் 4

இருமொழியம்

இருவேறு மொழிக்குழுவினர் தொடர்பு கொள்ளும்போது இருமொழியம் உருவாகின்றது. ஓரிடம் விட்டு மற்றவர் மொழி வழங்கும் இடத்திற்குக் குடியேறும்போது தம் தாய்மொழியுடன், குடியேறிய இடத்தின் மொழியையும் கற்று நாளடைவில் இருமொழிக் குழுவினரர்க மாறுவர். பிறமொழிக் குழுவினர், அரசாளும் நோக்கில் ஒரு நாட்டைத் தன்வயமாக்கிக் கொள்ளும்போது ஆட்சி மொழிமாற்றத்தினால் அந்நாட்டு மக்களில் சிலர் இருமொழியாளர்களாக மாறும் நிலை உருவாகலாம். எடுத்துக்காட்டாக இந்தியாவில் ஆங்கிலேயரது வருகைக்குப் பின்பு ஆங்கிலக் கல்வி கற்றவர்கள் இருமொழியாளர்களாக மாறியது நாம் அறிந்த ஒன்று தான். இங்கே ஒன்றைக் குறிப்பிட வேண்டும். ஒரு நிலப்பகுதியில் வாழும் ஒரு மொழிக்குழுவினர் இன்னொரு மொழியினரை எதிர்கொள்ளும் போது, அவரோடு தொடர்புகொள்ளும்போது அவரது மொழியை, பேச்சுவழக்கை இரண்டாவது மொழியாக **இயல்பான முறையில்** கற்றுக் கொள்வது **இயற்கையான இருமொழியம்** எனலாம். இதுபோல் அல்லாமல் கல்வி மூலம் இன்னொருவர் மொழியைக் கற்றுக்கொள்வது கல்வி மூலம் பெறும் இருமொழியமாகும். ஏற்கெனவே கூறியபடி, இந்தியர்களில் பலர் கல்வி மூலம் ஆங்கில இருமொழியத்தைப் பெற்றுள்ளனர். மொழி இழப்பு மொழி தக்கவைப்பு என்ற நோக்கில் பொதுவாக இந்தியமொழிச்சூழலில் உள்ள இருமொழியத்திற்கும் ஆங்கிலம் போன்ற ஐரோப்பியமொழிகள் பேசும் மேலை நாடுகளில் உள்ள இருமொழியத்திற்கும் வேறுபாடுகள் உண்டு.

4.1. மேலைநாட்டு இருமொழியம்

எடுத்துக்காட்டிற்காகப் பின்வரும் ஒரு மொழிச் சூழலைக் குறிப்பிடலாம். தமிழ்பேசும் தாய்மொழியாளர்கள் பொருளாதார

நிர்ப்பந்தம் அல்லது உயர்வேலைவாய்ப்பு தொடர்பாகக் குடும்பத்தோடு ஏதாவது ஒரு ஐரோப்பிய மொழி பேசும் மேநாட்டுக்குச் சென்று தங்கிவிடுகின்றனர் என்று கொள்வோம். இக்குடும்பத்தில் உள்ள கணவன் மனைவி இருவரும்- முதல் சந்ததியினர், தாங்கள் குடிபெயர்ந்த நாட்டினரது அதிகார வலிமை பெற்ற மொழியை (அது பிரெஞ்சாகவோ ஜெர்மானியமாகவோ ஆங்கிலமாகவோ இருக்கலாம்) அந்நாட்டு மொழிச் சூழலுக்கு ஏற்ப, வீட்டுச் சூழல் நீங்கலாக, பல புறச் சூழல் களில் இரண்டாவது மொழியாகப் பயன்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்கு உட்படுகின்றனர். அந்த நாட்டு மொழிச் சூழல் நிர்ப்பந்தத்தை உருவாக்குகிறது. இதுபோன்ற சூழலுக்கு உட்படுபவர்கள் தங்கள் தாய்மொழித் திறன்களோடு இரண்டாவது மொழியான அந்த நாட்டு மொழியை முறை சார்ந்த வகையிலோ (formal learning) மொழித் தொடர்பு உள்ளதால், முறைசாரா இயற்கை வழியிலோ (non formal natural learning) கற்றுப் பயன்படுத்துவர்.

அவர்கள் குழந்தைகளைப் பொறுத்த வரையில், பெற்றோரோடு வீட்டில் மாத்திரம் தாய்மொழியைப் பயன்படுத்தும் சூழலில் வளர்கின்றனர். பெற்றோர் எந்த அளவுக்கு வீட்டுச் சூழலில் தங்கள் தாய்மொழியைப் பயன்படுத்துகின்றனரோ அந்த அளவிற்குக் குழந்தைகள், தாய் மொழியில் பேசும் திறன்களைப் பெறுவர். வீட்டுச் சூழல் தவிர்ந்த மற்ற எல்லாச் சூழல்களிலும் அவர்கள் அதிகமாக எதிர்கொள்கிற இரண்டாவது மொழியைத் தாய்மொழித் திறன்கள் போலக் கற்கின்றனர். பயன்படுத்துகின்றனர். தங்கள் தாய் மொழியில் திறன்கள் குறைவாகவும் குடியேறிய அந்நாட்டு மொழியில் திறன்கள் அதிகமாகவும் இருக்கும் இரண்டாம் சந்ததியினராக இக் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகின்றனர்.

இரண்டாவது சந்ததியினர் தாய் மொழியை- முன்னோர் மொழியை வீட்டுச்சூழல் என்ற களத்தில் தக்கவைத்துக் கொள்கின்றனர். ஆனால் அதிகார வலிமை பெற்ற அந்நாட்டுமொழியில் இந்த இரண்டாவது சந்ததியினர் கற்ற மொழித்திறன்களின் அளவீடு மிக மிக அதிகம். ஏறக்குறைய இந்த அளவீடு தாய்மொழிக் கற்றலின் அளவீட்டிற்கு இணையாக அமைகிறது எனலாம். தொடர்ந்து வெளிநாட்டு மொழிச்சூழலிலேயே வாழ்ந்தால் இவர்களது குழந்தைகள், குழந்தைகளுக்குக் குழந்தைகள்- அதாவது மூன்றாவது நான்காவது சந்ததியினரிடையே இந்த முதலாவது மொழியில் அதாவது தம் (முன்னோர்) பெற்றோர் மொழியில் உள்ள திறன்கள் படிப்படியாகக் குறைந்து, திறன்கள் ஏதும் அற்ற நிலைக்கு மாற்றம்

அடைகின்றனர். இரண்டாம் மொழியாகக் கற்ற அம்மொழியில் திறன்களின் வளர்ச்சியின் வேகம் அதிகரிக்க, மொழித்திறன்களின் வளர்ச்சி அதிகமாக இந்த இரண்டாவது மொழியே காலப்போக்கில் மூன்றாவது நான்காவது சந்ததியினரின் முதல் மொழியாக (தாய்மொழிக்கு நிகராக) அமைந்துவிடுகிறது. இந்தக் கட்டத்தில் தங்களது முன்னோரது மொழியை இழந்து விடுகின்றனர்.

இதனைப்பின் வரும் வரைபடம் கொண்டு விளக்குவோம்.

அட்டவணை 6

இருமொழிய நிலைகள்

அதிகாரமொழியை (இரண்டாவது மொழி) பயன்படுத்த வேண்டிய சூழல் நிர்ப்பந்தம்	முதல்மொழி தாய்மொழி எல்லா மொழித் திறன்களோடும்	இரண்டாம் மொழி கற்றல் பயன்படுத்தல்
அதிகாரமொழியை (இரண்டாவது மொழி) பயன்படுத்த வேண்டிய சூழல் நிர்ப்பந்தம்	முதல்மொழி தாய்மொழி (முன்னோர் மொழி) திறன்கள் தக்கவைப்பு	இரண்டாம் மொழி திறன்கள் அதிகரிப்பு
இருமொழியும் குறைதல் ஒரு மொழியம் ஆதல்	முதல்மொழி தாய்மொழி முன்னோர் மொழி) திறன்கள் குறைதல் திறன்கள் அற்றநிலையாதல் -இழப்பு	இரண்டாம் மொழி திறன்களின் வளர்ச்சி மிக அதிகம் இரண்டாம் மொழி முதல் மொழியாகவே ஆதல் பயன்படுத்தப்படல்

மேலை நாடுகளில் நிலைபெற்றுள்ள இது போன்ற இருமொழியத்தை நிலைத்த தன்மையற்ற இருமொழியம் அதாவது நிலையா இருமொழியம் (Unstable bilingualism) எனலாம். ஏனெனில் மேலை நாடுகளில் குடியேறுபவர் மக்கட்தொகை எவ்வளவு அதிகமாக இருந்தாலும் அந்நாட்டினரது மொழிக்கொள்கை, நிருவாகம் மற்றும் சமூக நிர்ப்பந்தம் போன்ற காரணங்களால் தங்கள் தாய்மொழியை, மொழிப்

பெரும்பான்மையோரால் பேசப்படும் வலிமை பெற்ற மொழிக்காக, இழக்க நேரிடுகிறது.

பொதுவாக வளர்ந்த, முன்னேறிய மேலைநாட்டினரது உளப்பாங்கு (attitude) ஒரு மொழியத்தைத் தான் (mono lingualism) ஆதரிக்கும் வண்ணம் உள்ளது. அவர்களது பண்பாண்மை (ethos) பன்மொழிச் சூழலைச் சகித்துக் கொள்வதில்லை. இருமொழிய நிலையை ஏற்றுக் கொள்ளும் மனப்போக்கு இவர்களிடையே இல்லை. இருமொழியம் என்பது இவர்களது நோக்கில் மொழிக்குறைப்பு கொண்டது. ஒன்றுக்கு மேற்பட்டமொழிகள் என்பது இவர்களது நோக்கில் பளு. இருமொழியக் கல்விக் கொள்கை அரசியல் காரணங்களுக்காகச் செயல்பட்டாலும் இதன் எழுதப்படாத குறிக்கோளாக முடிவில் ஒரு மொழிப்பயன்பாடாகவே மாறுகிறது. வேறு விதமாகக் கூறுவதானால் இங்குள்ள இருமொழியம் மற்றும் இருமொழியக் கல்விக் கொள்கை எல்லாமே இவர்களது நாடுகளில் வாழும் மொழிச்சிறுபான்மையினர்களை, குடியேறியவர்களை (Immigrants) நாட்டில் ஆட்சி செலுத்தும் பெரும்பான்மை மொழியோடு இணைத்து விடுகின்றன. இந்த இணைப்பால், சிறுபான்மையினர் மொழிகள் பெரும்பான்மையினர் மொழிகளோடு ஐக்கியமாகி விடுகின்றன. அதாவது சின்னமீன்கள் பெரிய மீன்களுக்கு இரையாவது போல.

4.2. இந்திய இருமொழியம்

இந்தியச் சமூகம் தனித்தன்மை கொண்ட இனக்குழுக்களாக ஒவ்வொரு குழுவும் தங்களுக்குள்ளேயே மண உறவு முறை மேற்கொள்ளும் விதமாகச் சாதிக்குழுக்களாகப் பிரிந்து வாழ்கின்றனர். இக்குழுக்கள் ஒவ்வொன்றும் தனித்துத் தொடர்பு இல்லாதது போலத் தனித்த, இருப்பிடங்களில் வாழ்ந்தாலும் (Thirumalai, 1983) பல நேரங்களில் சமூக விஞ்ஞானிகள் கூறுவது போல இவர்கள் உடனொத்து. கூட்டுக் குடும்பம் போல ஒருபெருங்குழுவாயும் வாழ்கின்றனர். தாம் பின்பற்றும் மதநம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றில் ஒத்துள்ளனர். தங்களது பரம்பரைத் தொழில் மூலமாக ஒருவருக்கொருவர் அவ்வப்போது உதவிக்கொள்வதால் தொடர்ந்து இக்குழுக்கள் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொள்கின்றன. காலம் காலமாக இத்தொடர்பு நீடித்த போதும் ஒவ்வொரு குழுவினரும் தங்களது தனித்தன்மையுள்ள ஒரு மொழியையோ கிளைமொழியையோ இழந்து விடாமல் வீட்டுச் சூழலில் பயன்படுத்துவர். இது மேலை நாடுகளைப் பொறுத்தவரையில் காணமுடியாத ஒன்றாகும். அங்குக்

குழுக்களிடையே நிகழும் தகவல் பரிமாற்றம் காலஓட்டத்தில் மொழி இழப்பிற்கு வித்திட்டு விடும். (Gumperz, 1969).

ஒரு நாட்டில் பலமொழிகள் வழங்குவது தகவல் பரிமாற்றத்திற்குத் தடைக்கல்லாக இருப்பதில்லை. பன்மொழி பேசுபவர்கள் நிறைந்த நாடு என்றால் ஒரு மொழிபேசும் மக்கள் வாழும் பகுதிகள் நிறைந்துள்ள நாடு என்று பொருளல்ல. பன்மொழி பேசும் பெரிய நாடான இந்தியாவில் வரலாற்றுக் காலத்திலிருந்தே ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குப் பல்வேறு மொழிகள் பேசும் மக்கள் சென்று வந்தனர். இதனாலேயே ஒரு மொழிக்குடும்பத்தின் மொழியியல் கூறுகள் இன்னொரு மொழிக்குடும்பத்திற்குச் சென்று சேர்ந்தன. பன்மொழிகள் வழக்கில் உள்ள இந்தியாவின் தனித்தன்மை என்னவென்றால் நிலைத்த இருமொழியாளர்களும் (stable bilinguals) மற்றும் பன்மொழியாளர்களும் இந்தியத் துணைக் கண்டத்தில் நிலைத்து இருப்பது தான். பெரிய நகரங்களிலும் சிறிய ஊர்களிலும் மக்கள் தங்கள் சிறுபான்மையினர் மொழிகளைத் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். சந்ததிகள் மாறிக் கொண்டேயிருந்தபோதும் பொதுவாகத் தங்கள் (சிறுபான்மையினர்) மொழிகளை வீட்டுச் சூழலிலும், பிறமொழியினரோடு வெளிச்சூழலில் பேசும் போதும் மாநிலப் பெரும்பான்மையினர் மொழிகளைப் பயன்படுத்துகின்றனர்.

இதுபோன்ற தொடர்ந்த மொழித்தாவலால் (code switching) சிறுபான்மையினர் மொழி பெரும்பான்மையினர் மொழியின் மொழிக் கூறுகளைத் தழுவும் நிலையை அடைகிறது. எடுத்துக்காட்டாக, தமிழ்-சௌராஷ்டிர இருமொழியத்தினால் விளைந்த மொழித்தழுவல், நிலைத்த இருமொழியத்தால் விளைந்த ஒன்றாகும்.

பன்மொழிச் சூழலையே பண்பாண்மையாகக் கொண்ட இந்தியா போன்ற நாடுகளில் காணப்படும் இருமொழியம் நிலைத்த இருமொழியம் என்பது மொழியியல் அறிஞர் பலரது கருத்தாகும். அதாவது மேலை நாடுகள் போல் அல்லாது பன்மொழிச் சூழமைவு கொண்ட இந்திய நாட்டில் வலிமையற்றமொழி, வலிமை பெற்ற மொழி என்ற இரண்டுமே இருமொழியக் களத்தில் வாழ்கின்றன. ஒன்றை இன்னொன்று அழிப்பதில்லை என்பது இதன் பொருளாகும். எடுத்துக்காட்டாக அரசியல் பொருளாதாரச் செல்வாக்குப் பெற்ற பெரும்பாலோரால் பயன்படுத்தப்படும் தமிழ், சிறுபான்மையினரது மொழிகளான சௌராஷ்டிரி, தெலுங்கு, மலையாளம், கன்னடம், குஜராத்தி, மராத்தி, போன்ற மொழிகளைத் தமிழ்நாட்டில் தன்னகப்படுத்தி அழிப்பதில்லை.

இதுபோலவே மற்ற மாநிலங்களில் பேசப்படும் சிறுபான்மையினர் மொழிகள் அந்தந்த மாநிலங்களில் பெரும்பாலோரால் பயன்படுத்தப்படும் மொழிகள் மூலமாக அழிந்து விடுவதில்லை. வேறுவிதமாகச் சொல்வதானால் இந்தியாவில் உள்ள மொழிச்சிறுபான்மையினரது இருமொழியம் எடுத்துக்காட்டாகத் தமிழ் நாட்டில் தெலுங்கு - தமிழ்; வங்காளத்தில் மலையாளம்- வங்காளம்; உத்திரப்பிரதேசத்தில் கன்னடம் - இந்தி போன்ற இருமொழியங்கள் மேலைநாட்டுச் சூழலைப் போல மொழி அழிவுக்கு வித்திடுவதில்லை எனலாம். (முற்றிலுமாக மொழி அழிவு நேர்வதில்லை என்றாலும், மொழிப்பயன்பாட்டுக் களன்கள் சுருங்கி விடல், மொழித்தழுவல் நிகழல் போன்றவைகளுக்கு வழிவகுத்துவிடுகின்றன. இவை மொழி இழப்பின் கூறுகளா என்பதற்கு இயல் 6 ஐக் காணவும்.)

4.3. பழங்குடியினர் இருமொழியம்

இந்தியாவில் பன்மொழியம் பொதுவாக, இயற்கை வழியில் பெற்ற நிலைத்த தன்மை கொண்ட ஒன்று தான். இந்தியமொழிச் சூழலில் பொதுவாகப் புறனடை இல்லாது போலத் தோன்றுகிறது.

ஆனால், இந்தியாவின் பன்மொழிச் சூழலில் உள்ள சில கூறுகள் மேலைநாடுகளில் உள்ள இருமொழியக் கூறுகளோடு ஒத்துள்ளன. எதிர்ப்படும் மொழிக் குழுவினரது மொழிகள் சமவலிமையற்றதாக இருந்தால் இரு குழுவினரும் தத்தம் மக்கட்தொகையில் சமவலிமை அற்றவர்களாக இருந்தால் இருமொழியம், ஒரு திசையை நோக்கியே, வலிமை பெற்றமொழியை நோக்கியே செல்லும். இருமொழியம், ஒரு திசையை நோக்கியே மாத்திரம் செல்வது மொழிகளுக்கிடையே சமவலிமை அற்று இருப்பதால் மாத்திரமல்ல; குறிப்பிட்ட சமுதாயச் சூழலில் எந்த முறையில் இருமொழியம் கற்கப்படுகிறது, உண்டாகிறது என்பதைப் பொறுத்தும் உள்ளது. அதாவது ஒரு மொழியினர் இன்னொரு மொழி பேசும் குழுவினரை எதிர்ப்படும் போது இயற்கையாக ஏற்படும் இருமொழியம் ஒரு வகையாகும். இன்னொன்று (பள்ளிக்) கல்வி மூலம் பெறும் இருமொழியமாகும். இது, பொதுவாக அதிகார வலிமையுள்ள எழுதப்படிக்கும் கற்றல் திறன்களைத் தரும் மொழியை நோக்கிச் செல்லும் இருமொழியமாகும். இயற்கை வழியில் பெறும் இருமொழியம் வாய்மொழித்திறன்களை (Oral skills) மாத்திரம் கொண்டது என்பதை நினைவில் கொள்வோம்.

பழங்குடி மொழியினர் இருமொழியம் பள்ளிக்கல்வி மூலம் பெற்ற ஒன்று அல்ல. ஏனெனில் இந்தியாவில் பழங்குடியினரில் ஒரு

விழுக்காட்டினர் மாத்திரமே, 1961 மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி பத்தாவது வகுப்புவரை படித்துள்ளார்கள். எனவே இவர்களது இருமொழியம் பொதுவாக, இயல்பான மொழிச்சூழல்களில் இயற்கையாக வாய்மொழித்திறன்களை (Oral skills) மாத்திரம் பெற்ற இருமொழியாகும். அதாவது தாய்மொழி இரண்டாவது மொழி என இரண்டிலுமே வாய்மொழித் திறன்களை மாத்திரமே பெற்றிருப்பர்.

இங்கே ஒன்றைக் குறிப்பிட வேண்டும். எல்லாப் பழங்குடியினருமே மொழிச் சிறுபான்மையினராக இருப்பதில்லை. வடகிழக்கு மாநிலங்களில், பழங்குடியினர் மொழிகள் பெரும்பான்மையினரால் பேசப்படும் மொழிகளாக உள்ளன. இவைகளே ஆங்கிலத்தோடு இணைந்த ஆட்சி மொழிகளாக உள்ளன. எடுத்துக்காட்டு: மிசோரம், அருணாச்சலப் பிரதேசம்.

1961 இன் மக்கட்தொகைக் கணக்கெடுப்பின் படி இந்தியாவில் பழங்குடி மொழியினரின் மக்கட் தொகை எண்ணிக்கை 29.9 மில்லியன் ஆகும். இது இந்தியாவின் மொத்த மக்கட்தொகையில் 6.78 விழுக்காடு ஆகும். (இது 1981 இல் 51.6 மில்லியனாக (7.76 விழுக்காடாக) உயர்ந்தது.) இந்த மக்கட் தொகையில் 15.73 விழுக்காட்டினர் (1961 ஆவது மக்கட் தொகையின்படி 4.7 மில்லியன் பேர்) இருமொழியினர். இது இந்தியத் துணைக்கண்டத்தின் மொத்த இருமொழியத்தை (0.97 விழுக்காடு) விட ஒன்றரை மடங்கு அதிகம்.

இந்தியப் பழங்குடியினர் இந்தியாவில் ஒரே இனக்குழுவினர் அல்லர். இந்தியாவில் பழங்குடியினர் 613 இனக்குழுக்களாக உள்ளனர். (Government of India 1978). தற்போது 45 என்ற அளவில் மிகக் குறைந்த மக்கட் தொகை கொண்ட கிரேட் அந்தமானியப் பழங்குடியினரிலிருந்து நான்கு மில்லியனுக்கு மேல் உள்ள மக்கட் தொகை கொண்ட கோண்டி என்ற பழங்குடியினர் வரை இந்த 613 இனக்குழுக்களில் அடங்குவர். 613 இனக்குழுவினரும் 304 பழங்குடியினர் தாய்மொழிகளை அதாவது, 101 மொழிகளைப் பேசுகின்றனர். (இவை, இயல் 1.4. இல் குறிப்பிட்டுள்ளபடி இந்தியாவின் ஐந்து மொழிக் குடும்பங்களைச் சேர்ந்தவையாகும். நான்கு மொழிக் குடும்பங்களோடு அண்மையில் புதிதாக இனங்கண்டுகொள்ளப்பட்ட அந்தமானிய மொழிக் குடும்பத்தையும் சேர்த்துக் கொண்டால் இது ஐந்து ஆகிறது). இந்த 101 மொழிகளில் பழங்குடியினர் அல்லாதோர் பேசும் மொழிகளும் உள்ளன. இது பழங்குடியினர் தமது பூர்வீகப்பழங்குடியினர் மொழிகளை இழந்து வேறு இந்திய மொழிகளைப் பெற்றதால் நேர்ந்திருக்கலாம். அல்லது ஓர் இனக்குழுவைப் பழங்குடியினர்

இனக்குழு, பழங்குடியினர் அல்லாதோர் இனக்குழு என்று பிரிப்பதில் நேர்ந்த சிக்கலால் விளைந்திருக்கலாம் (Annamalai, 2001).

பழங்குடியினரது எழுத்தறிவு விகிதம் இராஜஸ்தான் மாநிலத்துப் பழங்குடியினரிடையே உள்ள 4 விழுக்காட்டிலிருந்து மணிப்பூர் மாநிலப்பழங்குடியினரிடையே உள்ள 27 விழுக்காடு என்ற அளவில் வேறுபடுகிறது. இந்தியா முழுமைக்கும் பழங்குடியினரது எழுத்தறிவு 8.53 விழுக்காடு. இது 1981 இல் 16.35 விழுக்காடாக உயர்ந்துள்ளது. இந்தியா முழுவதிலும் உள்ள எல்லா மொழிபேசுபவர்களது எழுத்தறிவு விழுக்காடு 23.93 (1961). இது 36.23 விழுக்காடாக 1981 இல் உயர்ந்துள்ளது. இந்தியப் பழங்குடியினரது இருமொழியம் 0.2 விழுக்காட்டிலிருந்து (இராஜஸ்தான்) 33 விழுக்காடு (திரிபுரா) வரை வேறுபடுகின்றது.

இந்தியப் பழங்குடியினரிடையே மொழி வேறுபாடுகள் அதிகமாக உள்ளமை போலவே அவர்களது இருமொழியத்திலும் வேறுபாடுகள் உள்ளன. குறிப்பிட்ட சமுதாயம் ஒன்றில் அங்கத்தினராகும் சமுதாய இயல் வழிமுறையின்படி, எப்போது ஒருவன், அக்குழுவினரின் விதிகளையும் மதிப்பீடுகளையும் ஏற்றுக்கொள்கிறானோ அட்போது தான் அவன் அச் சமூகக் குழுவில் ஓர் அங்கத்தினன் ஆகிறான். அக்குழுவினரின் மொழி தனது மொழியிலிருந்து மாறுபட்டிருந்தால் அவன் அப்போது அக்குழுவினரின் மொழியைக் கற்றுக் கொண்டாக வேண்டும். இந்த நோக்கில் இருமொழியாளரது இரண்டாவது மொழியைச் சமுதாயம் தீர்மானிக்கிறது.

ஒரு மொழி பேசும் சமுதாயக் குழுவில் ஒருவர் அங்கமாவதற்கான சமூகக் களன்களாக (domains) அமைந்துள்ளவை: வீடு , கிராமம், அல்லது அண்டை வீடு, பள்ளி மற்றும் பணியிடம் ஆகும். பழங்குடியினர்க்குப் பள்ளிக்கூடம் என்ற களன் ஏற்ற சிறப்பான களமாக அமையவில்லை. ஏனெனில், பள்ளிக்கல்வி என்பது பழங்குடியினரைப் பொறுத்தவரையில் தனித்த ஒரு களமாகவே இது நாள் வரையிலும் அமையவில்லை. காரணம் செலவுக்கு மேற்பட்ட வருமானம் பெறும் பொருளாதார அமைப்பு (Surplus economy) கொண்டதாக அவர்களது சமுதாயம் இன்னமும் மாறவில்லை (Hamalton 1978). பழங்குடியினரது பொருளாதாரம் இன்னமும் வாழ்வாதாரப் பொருளாதாரமாகவே (Subsistence economy) உள்ளது எனலாம். எனவே சமுதாயக் குழு ஒன்றில் அங்கத்தினர் ஆவதற்கான களங்களாக வீடும், கிராமமும் தான் உள்ளன.

பழங்குடியினர் வீடுகளில்கூட இருமொழியம் தழைப்பதற்கான வாய்ப்புகள் உண்டாகின்றன. வெவ்வேறு

குழுக்களில் திருமண உறவு ஏற்படும்போது பெண்களது உரிமைகள், பழங்குடியினர் அல்லாத சமுதாயத்தில் காணப்படும் ஆணிய ஆளுமைக்கு மாறாகப் பாதுகாக்கப்படுகின்றன. இதன் காரணமாகக் குழந்தைகள் தங்கள் தந்தை மொழியோடு தாயின் மொழியையும் கற்று இருமொழியாளர்களாக மாறுவதற்கான வீட்டுச் சூழல் இவர்களுக்குக் கிடைக்கின்றது. பன்மொழி வழக்குள்ள பழங்குடியினர் கிராமங்களில், ஒரு மொழிபேசுவோர் அங்கு வாழும் உயர் மதிப்புப் பெற்றுள்ள இன்னொரு குழுவினரது மொழியைக் கூடக் கற்றுக் கொள்ளலாம். வெவ்வேறு மொழிகள் பேசுவோரது மக்கட் தொகை ஏறக்குறைய சமஅளவில் இருந்தால், ஒரு குழு இன்னொரு குழுவின் மொழி கற்றுக் கொள்ளல், அந்த இன்னொரு குழு முதலாவது குழுவின் மொழிகற்றுக்கொள்ளல் என்ற அளவில் (Reciprocal bilingualism) (Gumperz and Wilson *1971*) அமையலாம்.

இதுவரையிலும் விவரித்த சமுதாய அங்கத்தினராதல் போக்குக்கு மாறாகப் பழங்குடியினரிடையே இன்னொரு போக்கும் காணப்படுகிறது.

பழங்குடியினர், ஒரு விதமான இணை வாழ்வுத்திறப் பண்பினை (Symbiotic relationship) பழங்குடியினர் அல்லாதோரிடத்துப் பண்டமாற்று போன்ற காரணங்களால் கொள்ளலாம். பழங்குடியினர் அல்லாதோர், பழங்குடியினரிடமிருந்து அவரது உழைப்பு மற்றும் காடுகளில் விளையும் பொருட்களைப் பெற்றுக் கொண்டு பதிலாகப் பணமும் தானியங்களும் அளிப்பது இன்றுவரையிலும் நடைமுறையில் காணக்கூடிய ஒரு வழக்கம். இருவரிடையேயும் (பழங்குடியினர் - பழங்குடியினர் அல்லாதோரிடம்) உருவாகும் இது போன்ற பொருளாதார உறவுகள் அமைப்பியல் சார்ந்தவை (Structural). சமுதாயக்குழுவில் அங்கத்தினராதல் போன்ற உள்ளார்ந்த உயிரியக்கவியல் (Organic) தன்மை கொண்டதல்ல. பொருளாதார உறவுகளால் உருவாகும் இதுபோன்ற இருமொழியம் சுருங்கிய தன்மை கொண்டவை. பொருளாதார நோக்கத்திற்காகவே உருவாகிச் செயல்படும் ஒன்றாக உள்ளது.

இதுவரையிலும் விளக்கிய கருத்துகளின் அடிப்படையில் பழங்குடியினரின் இருமொழியத்தைப் பின்வருமாறு வரையறை செய்யலாம். பழங்குடியினரது இருமொழியம் தங்களது பழங்குடியின மொழியைப் பொறுத்தவரை அது சமூகம் சார்ந்தது; தீவிரமானது; பழங்குடியினர் அல்லாத மொழியைப் பொறுத்தவரையில், அது தனிநபர் தொடர்பானது; தனிநபர்களால் பெறப்பட்டது, குறைந்த பயன்பாட்டுத் தகுதியைக் கொண்டது (Annamalai, *2001*).

பழங்குடியினர் இருமொழியத்தில் பெற்ற இரண்டாவது மொழியின் அளவீட்டைப் பின்வரும் அட்டவணை தெளிவாக்குகிறது.

அட்டவணை 7

மாநிலந்தோறும் பழங்குடியின இருமொழியாளர்கள்: விழுக்காட்டளவில் (Government of India 1996)

மாநிலம்/ யூனியன் பகுதி	பழங்குடியின இருமொழியாளர்கள் (விழுக்காட்டளவில்)	பெற்ற மற்ற மொழிகள் (other languages) (விழுக்காட்டளவில்)
ஆந்திரமாநிலம்	19.21	தெலுங்கு 87.47
அஸ்ஸாம்	29.77	அஸ்ஸாமியம் 75.71
பீகார்	23.71	இந்தி 59.37 வங்காளம் 17.72 சதரி 11.38
குஜராத்	1.37	குஜராத்தி 44.84 இந்தி 25.29 மராத்தி 16.82
கேரளம்	1.47	கன்னடம் 53.74 ஆங்கிலம் 29.88 மலையாளம் 13.21
சென்னை (தமிழ்நாடு)	3.76	தமிழ் 62.50 தெலுங்கு 18.91
மத்தியப்பிரதேசம்	8.43	மராத்தி 60.79 இந்தி 20.61
மகாராஷ்டிரம்	8.43	மராத்தி 60.79 இந்தி 20.61
மைசூர் (கர்நாடகம்)	16.23	கன்னடம் 53.22 துளு 33.98
ஒரிஸா	20.75	ஒரியா 88.39
பஞ்சாப் (தற்போதைய ஹிமாசலப் பிரதேசத்தின் ஒரு பகுதி உட்பட)	19.04	இந்தி 44.82, போடியா (எந்தமொழிக் குடும்பம் என அறியப்படாத மொழி) 26.38
இராஜஸ்தான்	0.18	இந்தி 52.73 ஆங்கிலம் 32.70 வங்காளம் 86.94

மாநிலம்/ யூனியன் பகுதி	பழங்குடியின இருமொழியாளர்கள் (விழுக்காட்டளவில்)	பெற்ற மற்ற மொழிகள் (other languages) (விழுக்காட்டளவில்)
வடமேற்கு வங்காளம்	29.61	வங்காளம் 86.94
அந்தமான் நிக்கோபார் தீவுகள்	7.58	இந்தி 84.11 ஆங்கிலம் 13.08
இமாச்சலப் பிரதேசம்	6.22	இந்தி 90.60
மணிப்பூர்	27.62	இந்தி 80.17
இலட்சத் தீவுகள்	3.54	அரேபியம் 51.21 ஆங்கிலம் 20.41 மலையாளம் 14.01
திரிபுரா	32.70	வங்காளம் 98.79
நேஃபா அருணாச்சலப் பிரதேசம்	40.10	அஸ்ஸாமி 72.59 இந்தி 19.44
நாகலாந்து	5.52	அஸ்ஸாமியம் 48.36 ஆங்கிலம் 29.26 இந்தி 16.27

இந்தப் பட்டியலில் இடம்பெற்ற மொழிகள் என்ற கட்டத்தில் எந்த ஒரு பழங்குடியினர் மொழியுமே இல்லை. ஆனால் சில மாநிலங்களில், சில பழங்குடியினர் மொழிகள் பழங்குடியினர் இருமொழியத்தின் மூலம் பெற்ற இரண்டாவது மொழிகளாக உள்ளன. அவை பத்து விழுக்காட்டிற்கும் குறைவாகவே உள்ளன. குஜராத்தில் வார்லிப் பழங்குடி மொழி (9.55%), மத்தியப் பிரதேசத்தில் கோண்டிப் பழங்குடி மொழி (4.49%), மணிப்பூரில் மைத்தே பழங்குடியினர் மொழி (4.31%). இப்படி இவை எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டாலும் பழங்குடியினரது இருமொழிய விளைவால் பெற்ற மொழிகளின் மொத்த கூட்டுத் தொகையானது பழங்குடியினரது இருமொழிய விளைவால் பெற்ற பழங்குடியினர் அல்லாதோரது மொழிகளின் மொத்த கூட்டுத் தொகையை மிஞ்சாது.

மேலும், நாம் விவரித்த வேறு குழுக்களைச் சேர்ந்தவரோடு திருமணம் (Inter tribal marriages), பழங்குடியினர் மொழிகள் பன்மொழிகளாக உள்ள கிராமங்கள் (multi lingual villages),

பொருளாதார நோக்கில் விளையும் தொடர்புகள், மொழி உறவுகள் (Symbiotic relationship) இவை எல்லாமே, இந்தியப் பழங்குடியினர் தங்களது பழங்குடித் தாய்மொழிக்கு அடுத்த நிலையில் இரண்டாவது மொழியாகப் பெரிய அளவில் மற்ற பழங்குடியினர் தாய்மொழிகளைப் பெற்று விடவில்லை என்பதைக் காட்டுகின்றன. வேறு விதமாகச் சொல்வதானால் பழங்குடியினர் அல்லாதோரது அதிகார வலிமைபெற்ற மொழிகளை இரண்டாவது மொழியாகக் கொண்டுள்ளது இந்த அட்டவணையால் தெளிவாகிறது. மேலும் இந்த அட்டவணையில் மொழிப்பரிமாற்றம் மற்றும் மொழிக் கலப்பால் விளைந்த (convergence) தொடர்பு மொழிகள் குறிப்பிடப்படவில்லை. அவை பீஹாரில் வழங்கும் **சதரி** மத்தியப் பிரதேசத்தில் பேசப்படும் **ஹல்பி** ஆகும். மற்ற தொடர்பு மொழிகளான நாகலாந்தில் வழக்கில் உள்ள **நாகமீஸ்** (அஸ்ஸாமியமொழியிலிருந்து உருவானது) ஒரிஸாவில் வழக்கில் உள்ள **தேசியா** (ஒரிய மொழியிலிருந்து உருவானது), அட்டவணையில் இடம்பெறவில்லை. சதரி, ஹல்பி போன்ற தொடர்பு மொழிகள் சில பழங்குடியினரது தாய்மொழிகளாகவும் ஆகிவிடுகின்றன. எடுத்துக்காட்டாகப் பீஹார் மாநிலத்தில் குடுஃக் மொழி பேசும் திராவிட மொழிப் பழங்குடியினரில் சிலர், தங்கள் முன்னோர் மொழியை இழக்க, அந்த இடத்தில் சதரி மொழி தாய் மொழித் தரத்தில் நிலைத்துவிட்டது.

பொதுவாக மாநிலங்களில் வாழும் பழங்குடி இருமொழியினரிடையே அவர்கள் வாழும் பகுதியில் உள்ள அதிகாரவலிமை பெற்ற மொழியே இரண்டாவது மொழியாக உள்ளது. தாத்ரா நாகர்ஹவேலி, அருணாசலப் பிரதேசம், நாகலாந்து போன்ற மாநிலங்களில் தங்கள் மாநிலத்திற்கு அடுத்து உள்ள மாநில மொழியே இரண்டாவது மொழியாக உள்ளது. கேரளா, பஞ்சாப் மாநிலங்களில் வாழும் பழங்குடியினரது இரண்டாவது மொழிகளாக அண்டை மாநிலத்து மொழிகளான கன்னடம், இந்தி ஆகியவைகளே குறிக்கப்பட்டுள்ளன. பழங்குடியின மொழியினரது இருமொழியத்தில் காணப்படும் ஒரு பொதுவான போக்கு: அதிகார வலிமை பெற்ற தங்களது மாநில மொழியோ அல்லது பக்கத்து மாநில மொழியோ இரண்டாவது மொழியாக உள்ளது எனலாம். கேரளத்தில் பழங்குடியினரது இருமொழியத்தில், இரண்டாவது மொழியாக ஆங்கிலம் இடம் பெற்றிருப்பதன் காரணம் அம் மாநிலத்தில் அதிகரித்துள்ள பள்ளிப்படிப்பும் எழுத்தறிவும் தான். கேரளப் பழங்குடியினரில் பலர் தங்கள் தாய்மொழியாக மலையாளத்தைக் குறிப்பிட்டுள்ளனர். இந்தியா முழுமைக்கும் உள்ள எழுத்தறிவு 16.35 விழுக்காடு ஆகும். (1981 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு) கேரளப்

பழங்குடியினரிடையே உள்ள எழுத்தறிவு இந்தியா முழுமைக்கும் உள்ள எழுத்தறிவின் விழுக்காட்டை விட இருமடங்கு அதிகமாக, 31.75 விழுக்காடாக உள்ளது. பஞ்சாப் மாநிலத்தில் அதிக விழுக்காட்டில் இரண்டாவது மொழியாக உள்ள உருது, அருணாச்சலப் பிரதேசத்தில், அந்தமான் நிகோபார் தீவுகளில், நாகலாந்து மற்றும் இலட்சத்தீவுகளில் அதிக விழுக்காடுகளில் உள்ள இரண்டாவது மொழியான இந்தி ஆகியவற்றிற்கு எழுத்தறிவைக் காரணமாகக் கூறமுடியாது. ஏனெனில் இங்கெல்லாம் எழுத்தறிவு விகிதம் இந்திய நாட்டின் எழுத்தறிவு விகிதத்தை விடச் சற்றுத்தான் கூடுதல். இராஜஸ்தான் மாநிலத்தில் அதிக விழுக்காட்டில் உள்ள இரண்டாவது மொழி ஆங்கிலம் 49 விழுக்காடு. இந்தியா முழுமைக்குமே ஆங்கில எழுத்தறிவு 26 விழுக்காடு மட்டுமே. பழங்குடியினர் இருமொழியத்தில் காணப்படும் ஒழுங்கமைப்பும் (Pattern) பொதுவான இந்தியமொழிகளது இருமொழிய ஒருங்கமைப்பும் (பொதுவாக இராஜஸ்தானிலும் ஒன்றாகவே காணப்படுகிறது (Annamalai, 2001). இந்தியாவில், இருமொழியம், கிராமப் பகுதிகளை விட நகரப்பகுதிகளில் தான் அதிகம் உள்ளது. இந்திய இருமொழியத்தை விட இரண்டு மடங்கு அதிகமாக உள்ள பழங்குடியினர் இருமொழியம், ஏறக்குறைய முழுவதும் கிராமம் சார்ந்ததாக உள்ள இருமொழியமாகும்.

பழங்குடியினர் இருமொழியத்தில் பால் வேறுபாடு என்பது 12 விழுக்காட்டு அளவில் தான் உள்ளது. 4.7 மில்லியன் விழுக்காட்டினரான பழங்குடியினர் இருமொழியாளர்களில் ஆண்கள் 56 விழுக்காட்டினர், பெண்கள் 44 விழுக்காட்டினர். பழங்குடியினரில் ஆண் இருமொழியாளர்கள் 33 விழுக்காட்டினர். பெண் இருமொழியாளர்கள் 32 விழுக்காட்டினர். பழங்குடியின மொழி பேசாதவர்களில் ஆண்கள் 12 விழுக்காட்டினர்; பெண்கள் 6 விழுக்காட்டினர். பழங்குடி மொழியினரில் ஏறக்குறைய ஆண்களும் பெண்களும் சம அளவில் இருமொழியாளர்களாக உள்ளார்கள். (பழங்குடியினர் மொழிகளல்லாத) இந்திய இருமொழியத்தில் பெண் இருமொழியாளர்கள் ஏறக்குறைய ஆண் இருமொழியாளர்களின் எண்ணிக்கையில் பாதியாகத்தான் உள்ளார்கள். இவை, பொருளாதார நலன் சார்ந்த அன்றாட நிகழ்வுகளில் பழங்குடியினப் பெண்கள் ஆண்களுக்குச் சரிசமமாகப் பங்கேற்கிறார்கள் என்பதையும் ஆண்களுக்கு அடங்கிச் செல்லும் அடிமை நிலையில் இல்லை என்பதையும் மேலும் உறுதிப்படுத்துகிறது.

இந்த இயலின் தொடக்கத்தில் இந்திய இருமொழியம் நிலைத்த இருமொழியம் என்றோம். ஆனால் பழங்குடியினர் இருமொழியத்தை இந்திய இருமொழியத்தோடு ஒப்பிட்டால் நிலையாத இருமொழியம் எனலாம். 43 விழுக்காட்டுப் பழங்குடி மொழியினர் பழங்குடியினர் அல்லாதோரது மொழிகளைத் தங்களது தாய்மொழிகளாகக் குறிப்பிட்டுள்ளனர் (Itagi et al 1986). 1961 மக்கட் தொகைக் கணக்கெடுப்பின்படி 29.8 மில்லியன் பழங்குடியினரில் பழங்குடி மொழியைப் பேசுபவர்களாக 12.8 மில்லியன் மக்களே காணப்படுகின்றனர். (இது 1981 மக்கட் தொகைக் கணக்கெடுப்பில் 37 விழுக்காடாக உள்ளது. அதாவது 51.6 மில்லியன் மக்கள் தங்கள் தாய்மொழியாகப் பழங்குடி மொழியல்லாத ஒரு இந்திய மொழியைக் குறிப்பிட்டுள்ளனர்.) இதன் பொருள் என்னவென்றால் ஏறக்குறைய 50 விழுக்காட்டுப் பழங்குடியின மக்கள் தங்கள் முன்னோரது பழங்குடி மொழியிலிருந்து (தாய்மொழியிலிருந்து) மாற்றமடைந்து இந்திய மொழிகளுக்குத் தாவி விட்டனர் என்பதாகும். பழங்குடி மொழியினரில் பெரும்பாலோர்க்கு இந்த இருமொழியம் ஏறக்குறைய இடைவரவான இரு மொழியமாக (Transit bilingualism) உள்ளது.

இயல் 5

மொழி இழப்பு

மொழி பேசும் மக்கட்கூட்டம் ஏதாவது ஒரு காரணத்தினால் முற்றிலும் அழிந்துவிட்டால் பேச்சுவகையாக மாத்திரம் உள்ள அவர்களது மொழி உலகிலிருந்து, உலக வழக்கிலிருந்து நீங்கிவிடுகிறது. இதனை மனித உயிர் இழப்பால் நேரிடும் மொழி இழப்பு எனலாம். எடுத்துக்காட்டாக 1995 நவம்பர் 4 ஆம் தேதிவரை (ஆப்பிரிக்க நாட்டு) காமரூனின் அதமவா மாகாணத்தின் மாம்பிலாப் பகுதியில் வாழ்ந்து வந்த கசபெ என்ற மொழி, அம்மொழி பேசி வந்த கடைசி மனிதரான போகன் என்பவர் 1995 நவம்பர் மாதம் 5 ஆம் தேதி இறந்துவிடப் பேச்சுவழக்கில் மாத்திரமே இருந்து வந்த அந்த மொழி, அம்மொழி பேசும் ஆற்றல் கொண்ட அம்மனிதரோடு உலகில் இருந்து நீங்கியது, அண்மைக் காலத்தில் நிகழ்ந்த ஓர் அவலம். அந்த மனிதர்க்கு ஒரு சகோதரி உள்ளார். அச்சகோதரியோ யாராவது அந்த மொழியைப் பேசினால் புரிந்து கொள்வார்; ஆனால் அம்மொழி பேசும் ஆற்றலை அவர் கொண்டிருக்கவில்லை. மொழியியல் வல்லுநர் ஒருவர் மொழி ஆய்வு மேற்கொண்டிருக்கும்போதே இம்மொழி உலக வழக்கிலிருந்து நீங்கியது வருத்தத்தோடு குறிப்பிடப்பட்டுள்ளது (Crystal 2000:1). அந்தமான் தீவுகளில் ஒன்றான ஸ்டிரெய்ட் அயலண்டு என்ற தீவினை நல்லவேளையாக, அண்மையில் நிகழ்ந்த சுனாமி பேராபத்து தாக்காததால் 45 நீக்கிரிட்டோ பழங்குடியினரால் மட்டுமே பேசப்பட்டு வரும் அந்தமானியமொழி Abbi, 2007) அண்மையில் அழிவிலிருந்து தப்பிப் பிழைத்துள்ளது எனலாம். இது தொடர்பான செய்தி அறியப் பிற்சேர்க்கை 4ஐக் காண்க.

மொத்த மனிதக் கூட்டத்து இழப்பால் நேரிடும் மொழி இழப்பு என்பது விபத்து போன்றது. இந்த இயல் இதைப்பற்றிப் பேசாது. மாறாக, ஒரு மொழி பேசும் சமுதாயத்தில் குழந்தைகள் தங்கள் பெற்றோர் அல்லது முன்னோர் மொழியைக் கற்றுக்

கொள்வதை முழுவதுமாக நிறுத்திவிட்டால் பிறகு அந்த மொழி கால ஓட்டத்தில் தனது இறப்பைச் சந்திக்க நேரிடும். ஏனெனில், குழந்தைகள் தங்கள் மொழியைக் கற்பதை நிறுத்திவிட்டால், குறிப்பிட்ட இந்த மொழிச் சமுதாயத்தில் குழந்தைகள் நீங்கலாக உள்ள எஞ்சியோர் இறந்துபோகும்போது இவர்கள் மொழி, உலகிலிருந்து நீங்கத் தொடங்கி விடும். ஒரு சந்ததியினரிடம் இருந்து அடுத்த சந்ததியினரிடம் சென்றடையும் போது தான் (inter generational transmission) மொழி தொடர்ந்து வாழும்; வழக்கில் இருக்கும். குழந்தைகள் எப்போது தங்கள் மொழியைக் கற்பதை நிறுத்திவிடுகிறார்களோ அப்போது, குழந்தைகள் நீங்கலாக எஞ்சியுள்ள மற்றவரிடம் இருந்து அதாவது அந்தச் சந்ததியினரிடமிருந்து அந்த மொழி குழந்தைகளிடம் சென்று சேராததால் அந்தக் கட்டத்தில் மொழி அழியத்தொடங்குகிறது (Wurm 1993). இறுதி மனிதர் இருக்கும் வரை அந்த மொழிவாழும். அந்த மனிதரும் இறந்து விட்டால் அவரோடு அந்தமொழி உலக வழக்கிலிருந்து நீங்கி விடும்.

குழந்தைகள் மொழி கற்றுக்கொள்ளும் செயல் பின்வரும் மூன்று நிலைகளுக்கு வழிவகுக்கிறது.

1. குழந்தைகள் மொழி கற்றுக் கொள்வதை அறவே நிறுத்தி விடல்- இது ஏறக்குறைய இறந்துவிட்ட நிலையில் உள்ள அழியப்போகும் மொழிகள் (Moribund languages) எனலாம்.

2. குழந்தைகள் தற்போது கற்றுக் கொண்டிருக்கும் செயலைக் கெடுக்கும் வகையில் சூழல்கள் தொடர்ந்து அமையப் பெற்றால், அடுத்து வரும் நூற்றாண்டிற்குள் மொழி கற்பது நின்று விடும். இது போன்ற சூழல்களில் சிக்கியுள்ள மொழிகளை அழிவு நிலையை நோக்கியுள்ள மொழிகள் (endangered languages) (Krauss 1992:6) எனலாம்.

3. அழியப் போகும் மொழிகளாகவோ (moribund languages) அழியும் நிலையில் உள்ள மொழிகளாகவோ இல்லாதவற்றைப் பாதுகாப்பான மொழிகள் எனலாம் (Krauss 1992: 5 -7). மொழி இழப்பு என்ற இந்த நூலின் மையப் பொருளில் மேலே குறிக்கப்பட்டுள்ள முதல் இரண்டு வகை இழப்புகளும் அடங்கும்.

5.1. மொழி இழப்பு இயற்கையானதா?

உயிரியலாளர்கள் ஓர் உயிர் இனத்தின் ஆயுட்காலம் பொதுவாக ஐந்து முதல் பத்து மில்லியன் ஆண்டுகள் என்பர். 3.5

பில்லியன் வருடங்களுக்கு முன்பு தோன்றிய உயிரினங்களில் 95 விழுக்காட்டு உயிரினங்கள் இன்று உலகில் இல்லை. ஆனால் அக்காலக்கட்டத்தில் உயிர் இனப்பெருக்கம் என்பது செறிவாக இருந்தது. (Baillie 1998: 12) இது போன்ற அழிவு, மொழிகளுக்கும் பொருந்துமா?

மொழிகளுக்கும் வாழ்வுக்காலம் என்று ஒன்று உண்டா? இருந்தால் அதைக் கணக்கிட முடியுமா? உலகில் எத்தனை மொழிகள் இருந்தன, எத்தனை அழிந்து விட்டன, முன்பு வரலாற்றுக் காலத்தில் இருந்ததைவிட அதிகமான மொழிகள் தற்போது உள்ளனவா என்பன போன்ற வினாக்கள் இந்த அடிப்படையில் எழலாம். மொழிகள் வரலாற்றுக் காலத்தில் பத்தாயிரத்திலிருந்து பதினைந்தாயிரம் வரை இருந்திருக்கலாம் என்பது ஒரு கணிப்பு (Krauss 1995). இது பற்றி மேலும் அறிந்துகொள்ளக் காண்க: Skutnabb kangas, 2000:216-217. எண்ணிக்கை என்னவாக இருந்தபோதிலும் ஒன்று தெளிவாக உள்ளது. ஒரு காலக்கட்டத்தில் எல்லா மொழிகளும் வாழ்ந்திருக்க முடியாது. இந்த மொழிகளின் எண்ணிக்கை, வரலாற்று மொழியியலின் நோக்கில் மொழிகளில் சில, பலமொழிகளாக மாற்றம் பெற்றிருக்கலாம். மாற்றம் பெறும்போது சிலமொழிகள் அழிந்திருக்கலாம். எடுத்துக்காட்டாக ஐரோப்பியக் காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய காலக்கட்டத்தில் உரோமப்பேரரசு விரிவுபடுத்தப்பட்டபோது காலனியாதிக்கத்திற்கு உட்பட்ட பல்வேறு மக்கள் தங்கள் பூர்வீக மொழிகளைப் புறந்தள்ளி இலத்தீன் மொழியைத் தழுவ, அதுவே பின்னாளில் ருமேனிய மொழி, பிரெஞ்சு மொழி, போர்ச்சுக்கீசிய மொழி, ஸ்பானிய மொழி என ரொமான்ஸ் மொழிகளாக மாறின என்று முதல் இயலில் தெரிவித்ததை நினைவுகூருங்கள்.

அப்படியானால், உயிர் இனங்களைப் போலவே, மொழிகளுக்கும் வாழ்வுக்காலம் என்று ஒன்று உள்ளதா? மொழிகள் தோன்றுவதும் பல்கிப் பெருகுவதும், அழிவதும் உயிர் இனங்களின் வாழ்வியல் நெறியைப் போலவே இயற்கையானதா? ஆம் என்றால் மொழிகளை அழிவிலிருந்து பாதுகாக்கவேண்டும் என்ற சமுதாய மொழியியல் ஆர்வலர்களது முயற்சி தவறானதா?

இயற்கையாக நிகழக்கூடிய ஒரு நிகழ்வினைத் (மொழி இழப்பினை) தடுத்துத் தக்கவைத்துக் கொள்வது, பாதுகாப்பது என்பது இயற்கைக்கு மாறான எதிரான செயலா என்ற வினா இங்கே எழக்கூடும். அல்லது இந்த நூல் விரும்புவது போல் மொழி இழப்பைத் தடுத்துத் தக்க வைத்துக் கொள்வது ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய கடமை; உலகில் பன்மொழிகளும் பல

பண்பாடுகளும் ஒருங்கிணைந்து வாழ்வது என்பது எதிர்கால மனித குலத்திற்கே தேவையான ஒன்று; எதைப்போல என்றால் இந்தப்புவியில் வேறுபட்ட உயிரினங்களை உயிரியல் வேற்றுமைகளை (bio-diversity) போற்றிப் பாதுகாக்க விழைகிறோமே அதைப் போல எனலாம். இங்கே ஒரு ஐயம் எழுகிறது.

பன்மொழி வழக்கினை உயிரியல் வேற்றுமை யோடு ஒத்திட்டு வாதிடுவது சரியா?

இயற்கையில் காணப்படும் உயிரினங்களை மொழிகளோடு ஒத்திட்டுச் சமமாகக் காண்பது சரியல்ல. உயிரினம் ஒன்றை, ஒரு மொழியோடு சமமாகக் கொள்ள முடியாது. ஒரு பறவை அல்லது சில பறவைகள் அழிந்தால் பறவை இனமே அழிவதில்லை. ஒரு மனிதன் அல்லது சில மனிதர்கள் இறந்து விடுவதாலேயே அவர்கள் பேசும் மொழியும் அழிந்து விடுவதில்லை. ஆனால், (எடுத்துக்காட்டாக) தமிழ்க் குழந்தை தான் பிறந்து வளர்ந்த சமுதாயச் சூழலுக்கு ஏற்ப அந்த மொழியைக் கற்றுக் கொள்கிறது. இங்கிலாந்துச் சூழல் என்றால் சூழலுக்கு ஏற்பத் தமிழ்மொழியை இழந்து ஆங்கில மொழியைக் கற்றுக்கொள்கிறது. ஆப்பிரிக்கச் சூழல் என்றால் ஒரு ஆப்பிரிக்க மொழியைக் கற்றுக்கொள்கிறது. ஆனால், ஒரு பறவை தனது இனமான பறவைகளின் கூட்டத்தில் வளராமல், குதிரைகளில் கூட்டத்திற்கிடையே வளர்ந்தால் கூட அது குதிரையாக மாறாது.

அதாவது ஓர் உயிரினம் பறவையாக இருப்பின் அதன் விருப்பப்படி குதிரையாகவோ, வெட்டுக்கிளியாகவோ தன்னை மாற்றிக்கொள்ளமுடியாது. மாற்றிக்கொண்டு இன்னொரு குறிப்பிட்ட உயிர் இனத்தின் பிரதிநிதியாக இருக்கமுடியாது. மேலும் ஒரே சமயத்தில் ஓர் உயிரினம் கிளியாகவும், பன்றியாகவும் இருக்க முடியாது. (சிறுவர் கதைகளில் தவிர). ஆனால் மனிதர் ஒருவர், ஒரே நேரத்தில் தமிழ் பேசுபவராகவும் கன்னடம் பேசுபவராகவும் இருக்கமுடியும். மனிதகுலத்துக்கு மாத்திரமே சொந்தமாக உள்ள மொழிகளை உயிர் இனங்களோடு ஒப்பிடுவது பொது அறிவின்பால்கூடச் சரியல்ல.

பின்வரும் ஒப்புமை வேண்டுமானால் சரியாக இருக்கலாம். உயிர் இனங்கள் பருவகாலத்திற்கு ஏற்பத் தாங்கள் இயற்கையில் கற்ற சில வழக்கங்களை மாற்றிக் கொள்கின்றன அல்லவா? எடுத்துக் காட்டாக, குளிர்ப்பகுதிகளில் வாழும், 'ரெயின்டீர்' என்ற மான்வகை மழைக்காலத்தில் சில வகை உணவுகளை உட்கொள்ளும்; கோடைக்காலத்தில் வேறு வகையான உணவுகளை

உட்கொள்ளும். இந்த நியதியை இந்த உயிரினம் இயற்கையில் இருந்து கற்றுக்கொண்டுள்ளது. மனித குலம் இந்த மான் வகையைப் போலச் சில சமுதாயச் சூழல்களில் ஒரு மொழியையும் (அல்லது மொழிகளையும்) வேறு சில சமுதாயச் சூழல்களில் வேறு ஒரு மொழியையும் (அல்லது மொழிகளையும்) பயன்படுத்துகின்றது. பன்மொழிச் சூழலில் இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பயன்படுத்த மனித இனம், தான் வாழும் சமுதாயச் சூழலில் இருந்து கற்றுக் கொள்கிறது எனலாம்.

இன்னும் சிலர் இயற்கை அறிவியலைச் சார்ந்து இப்படியும் விவாதிப்பர். இயற்கையில் சுற்றுச்சூழல் மாற்றம் ஏற்படும்போது வலிமையற்ற சில நலிந்த உயிரினங்கள் சூழல் மாற்றத்திற்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ள முடியாமல் அழிவைச் சந்திக்கின்றன. இதுபோல இன்றைய விஞ்ஞானத் தொழில் நுட்பம், சந்தைப் பொருளாதாரம் போன்ற இவற்றின் முன்னேற்றத்திற்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ளும், வளர்த்துக்கொள்ளும் மொழிகள் வாழ்கின்றன. விஞ்ஞானத் தொழில் நுட்ப வளர்ச்சிகளை எதிர்கொள்ளமுடியாத பண்பாட்டு மரபுகளை மட்டுமே தழுவிக் கொண்டுள்ள மொழிகள் அழிந்துவிடுகின்றன. தற்போதைய காலக்கட்டத்தின் தேவைகளை நிறைவேற்ற முடியாத இது போன்ற வலிமையற்ற மொழிகள் உலகில் வாழ்வதில் பொருளில்லை என்பது இவர்களுடைய வாதம். இப்படிப்பட்ட வாதம் மொழி ஏகாதிபத்தியத்தின் (Linguistic hegemony) பாற்பட்டது. இக்கட்டத்தில் ஒன்றை நினைவுகூர்வது நல்லது. எந்த மொழியும் தன் இயல்பில் வலிமையற்றதோ வலிமையானதோ அல்ல. மனிதர்கள் தான் சில சமுதாய மொழியியல் காரணங்களுக்காகப் பயன்படுத்திப் பயன்படுத்தி வலிமையான மொழிகளாக மாற்றுகிறார்கள். பயன்படுத்தப்படாமலேயே பலமொழிகள் வலிமை குறைந்த நிலையிலேயே நின்றுவிடுகின்றன. வலிமை பெற்ற வலிமையற்ற மொழிகள் என்ற அதிகார வேறுபாடு உண்டாவது மொழிகளால் (மொழிகளின் இயல்புகளால்) அல்ல; அதிகார வலிமை கொண்ட களங்களில் பயன்படுத்த விரும்பும் - விரும்பாத மனித குலத்தால் தான் அதிகார வேற்றுமை மொழிகளுக்கிடையே உண்டாகிவிடுகிறது.

மனித குலத்தின் இச்செயல்பாட்டை வழிநடத்திச் செல்லும் செயலிகள் (agents) போல உள்ள அரசியல் சந்தைப் பொருளாதாரச் சக்திகள்தான் மொழிகளுக்கிடையே அதிகார வேற்றுமைகளை உண்டாக்கிவிடுகின்றன. எனவே, மொழிகள்

தங்களுக்குள்ளேயே வலிமை, வலிமையற்றவை என்ற பண்புகளைக் கொண்டிருக்கவில்லை என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். மனித குலம், அதன் செயலிகள் மூலமாக விரும்பினால் மொழிகளுக்குப் பயன்பாட்டு வலிமையை உண்டாக்கலாம்.

மனித மொழி உரிமைப் பாதுகாப்புச் சட்டம் (Linguistic human rights) (Skutnabb - kangas, 2000: Chapters 7-8) மொழிகளுக்கிடையே உள்ள இந்தப் பாகுபாட்டை வலிமையுள்ளது, வலிமையற்றது என்பதை நீக்க முனைகிறது. எனவே மொழிகளின் அழிவு இயற்கையின் நியதி என்ற வாதம் ஏற்றுக் கொள்ள முடியாத வாதம்.

5.2. மொழிக்கொலை, மொழி இழப்பு

மொழிகள் இருப்பதும் இல்லாமல் போவதும் அந்தந்த இடங்களில் நிலவுகிற சந்தர்ப்ப நிகழ்ச்சிகளைப் பொறுத்ததே தவிர உயிரியலோடு எந்தத் தொடர்பும் உடையதல்ல என்று சில சமூக விஞ்ஞானிகள் வாதிடுகிறார்கள் (கைல் வின்னஸ், 2000). இந்த நூற்றாண்டில் மனித குலத்தின் மொழி ஏகாதிபத்திய மனப்பான்மையினால் நிகழும் மொழி இழப்பினைச் சிலர் மொழிக்கொலை (Language genocide) என்ற சொற்றொடரால் குறிக்கின்றனர். மொழி இழப்பு என்பது மொழிக் கொலை தான் என்ற சித்தாந்தத்தை நம்பும் இவர்களது நோக்கில் மொழி அழிவு (Language death) என்ற சொற்றொடர் மிதவாதப் போக்கினை வெளிப்படுத்துகிறது. இது போன்ற மொழிக் கொள்கை அழியும் மொழிகளை அழியாமல் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதில், மொழிதக்கவைப்பில் நாட்டமில்லாத ஒன்றாகும் என்பது இவர்களது வாதம். மொழிக்கொலை, மொழி இறப்பு அல்லது அழிவு என்னும் இரண்டு விதக் கொள்கைகளுக்கும் இடையே உள்ள வேற்றுமைகளில் சிலவற்றை இங்கே பட்டியலிடலாம். (Skutnabb - kangas: 371, 2000).

அட்டவணை 8

மொழிக்கொலை, மொழி இழப்பு : வேறுபாடுகள்

எண்	மொழிக்கொலை மற்றும் மொழி ஏகாதிபத்தியம் **(Linguistic genocide & linguistic imperialism)**	மொழி அழிவையும், தாராள மனப்பான்மையின் பாற்பட்ட மொழி நவீன மயமாக்கலையும் ஏற்றுக் கொள்ளல் **(Language death and liberalist modernisation)**
1.	வலிய-நலிந்த என இருவேறு மொழி பேசுபவர்களுக்கிடையே உள்ள மொழி அதிகார உறவுகள் (Power relations) ஆராயப்படுதல்	அதிகார வலிமை ஆராயப்படாமை
2.	மொழி மனித சமுதாயத்தில் உருவானது எனவே மனிதர்கள் இதை வளப்படுத்தலாம், தக்கவைத்துக் கொள்ளலாம்.	மொழிகள் இயற்கையில் உள்ள உயிர்ப்பொருள்கள் போலவும் அவை இயற்கை நியதியோடு கூடிய வாழ்வுக்காலம் கொண்டவை போலவும் கருதப்படுகின்றன.
3.	இருமொழிகளுக்கிடையே சமமாக இல்லாத அதிகார உறவுகளை (Power relations) சமன்படுத்த முயலுதல்	மொழிகள் அழிவதற்கு முன் அவற்றை ஆவணப் படுத்துவதிலேயே நாட்டம்
4.	பலதுறைசார்ந்த ஆய்வு அணுகல்: சமூகவியல், அரசியல், சமுதாய மொழியில் ஆய்வு அணுகுமுறைகள்	பலதுறை சார்ந்த ஆய்வு அணுகுமுறை குறைவு
5.	முதல் மொழி, இரண்டாவது மொழி வெளிநாட்டினர் மொழி கற்றபின் இதன் நல்ல விளைவான பன்மொழிச் சூழல் தக்கவைப்பு	முன்னோர் மொழி, இழப்பை உள்ளீடாகக் கொண்ட இரண்டாவது (வெளி நாட்டினர்) மொழி கற்றலால் நேரிடும் மொழி இழப்புக்கு ஈடான - பொருளாதார முன்னேற்றம், நவீன மயமாதல் போன்ற விளைவுகள் முன்னிறுத்தப்படல்
6.	மொழித் தாவல் என்பது பல நேரங்களில் புறக்காரணிகளால் வலிந்து உண்டாக்கப்படுவது	மொழித்தாவல் என்பது மொழி பேசுபவர்களே சில பல நன்மைகளை மனதில்கொண்டு விரும்பிச் செயலாக்கிக் கொள்வது.

5.3. மொழி தக்கவைப்பிற்கான சூழல்கள்

மொழி இழப்பினையோ அல்லது மொழி தக்க வைப்பினையோ ஊக்கப்படுத்தும் அளவில் உள்ள பொதுவான மொழிச் சூழல்களை இப்பகுதியில் காண்போம். சில மொழிச்சூழல்கள் மொழி தக்கவைப்பிற்கு உறுதுணையாக உள்ளன. சில மொழி இழப்பிற்கு வித்திடுவதாக உள்ளன.

இவற்றை இந்திய மொழிச் சூழலில் விளக்கலாம். ஆந்திர மாநிலத்தில் இலக்கிய இலக்கண வளமிக்க நெடுங்காலமாகவே மாநிலத்தில் பெரும்பான்மையோரால் பேசப்பட்டு வரும் ஆட்சி அதிகார வலிமை கொண்டுள்ள மொழியான தெலுங்கு பாதுகாப்பான நிலையில் வாழ்கிறது. தெலுங்கு மொழியினரால் தக்கவைத்துக் கொள்ளப்படுகிறது. தமிழ்நாடு, கேரளம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் அதிகார வலிமையற்றுப் பெரும்பாலும் பேச்சு வழக்கில் மாத்திரம் சிறுபான்மையினரால் பயன்படுத்தப்படும் தெலுங்கு எந்த அளவிற்குத் தக்கவைத்துக் கொள்ளப்படுகிறது அல்லது இது போன்ற மொழிச் சூழல்கள் மொழிகளின் இழப்புக்கு வித்திட்டு விடுகிறதா என்பது இப்பகுதியில் மொழி வாழும் சூழல்களின் நோக்கில் ஆராயப்படும் பொருளாகும்.

எடுத்துக்காட்டாக ஜப்பான் நாட்டில் பேசப்பட்டு வரும் அய்னு மொழிச் சூழலை இங்கே காண்போம். 15 ஆவது நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தில் இருந்து 19 ஆவது நூற்றாண்டின் பிற்பகுதிவரை படிப்படியாக அய்னு மொழி பேசுபவர்களது எண்ணிக்கை குறையத் தொடங்கியது. அய்னு மொழி பேசாத ஏனைய ஜப்பானியர்களது அதிகார வலிமை, படையெடுப்பு போன்ற காரணங்களால் அய்னு மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட அவர்களது எண்ணிக்கை குறைந்தது அதாவது அய்னு மொழி பல ஜப்பானிய மக்களின் வழக்கில் இருந்து அழிந்துபோனது.

இந்த அய்னுமொழி இழப்பிற்கான வேறு சில காரணிகள் வருமாறு.

1. அய்னு மொழியினர் வாழ்ந்திருந்த பூர்வீக நிலப்பகுதி கையகப்படுத்தப்பட்ட, இவர்கள் நிலம் பெயர்ந்து அய்னு மொழி பேசாத வேறு இடங்களில் இடங்களில் குடியேறினர்.
2. ஜப்பானிய அரசின் மொழிக்கொள்கையின் படி வகுப்பறைகளில் அய்னு மொழியைப் பயன்படுத்துவதில் தடை விதிக்கப்பட்டது. மாறாக ஜப்பானிய மொழியே பயன்படுத்தக் கட்டாயப் படுத்தப்பட்டனர். அய்னு

பள்ளிக்குழந்தைகள் இந்தத் தடையால் தங்கள் மொழியை வேகமாக இழந்தனர்.

3. அய்னு மொழி பேசாத ஐப்பானியர்களால் அய்னு மொழியினர் அவமதிப்புக் குள்ளாகிச் சுரண்டலுக்குட்படுத்தப் பட்டனர்.

மொழி இழப்பு அல்லது தக்கவைப்பிற்கு ஏதுவான மொழிச் சூழல்கள்

மொழி வாழும் சூழல்கள் என்பது பல காரணிகளால் ஆனவை. எடுத்துக்காட்டாக நிலவியல் அமைப்பு, மக்கட் தொகை (population), மொழிபேசுவோரது சமூக மதிப்பு என்ற உளவியல் நோக்குக் காரணி எனக் காரணிகள் பல்துறை சார்ந்ததாக இருக்கும். இனி, மொழி இழப்பு அல்லது தக்கவைப்பிற்கான மொழிச்சூழல்களைக் காரணிகள் அடிப்படையில் இனங்கண்டுகொள்வோம்.

5.3.1. நிலவியல் (Geography)

பூர்வீக நிலப்பகுதியில் மொழி பேசும் பெரும்பான்மையினராக இருந்தவர் அணை கட்டுதல் போன்ற காரணங்களுக்காக, வேலை வாய்ப்பு காரணங்களுக்காக நிலம் பெயர்தல்.

5.3.2. மக்கட்தொகை (Demography)

அ) பிறப்பு விகிதம்

பிறப்பு விகிதம் குறைய மக்கட்தொகை குறையலாம். அப்போது மொழி இழப்பு நேரிடலாம்.

ஆ) வாழுமிடம், கிராமமா, நகரமா?

வாழுமிடம் கிராமமாக இருந்தால் மொழி தக்கவைப்பின் சாத்தியக் கூறுகள் அதிகமாகவும் நகரமாக இருந்தால் மொழி இழப்பின் சாத்தியக் கூறுகள் அதிகமாகவும் இருக்கலாம்.

இ) மக்கட் கூட்டத்தின் நெருக்கம் மக்கட் கூட்டம் நெருக்கமாகக் குறிப்பிட்ட நிலப்பகுதியிலே வாழ்ந்தால் மொழி தக்கவைப்பின் சாத்தியக் கூறுகள் அதிகமாக இருக்கும். மக்கட் கூட்டம் சிதறிப் பல பகுதிகளில் வாழ்ந்தால் மொழி தக்கவைப்பைக் காட்டிலும் மொழி இழப்பிற்கே சாத்தியக்கூறுகள் அதிகமாகும். ஏனெனில் தங்கள் மொழியினரோடு உள்ள தொடர்பு குறைவாகவும்

பிறமொழியினரோடு உள்ள தொடர்பு அதிகமாகவும் அமைந்து விடுவதுதான்.

ஈ) வயது (age)

மொழிபேசுபவர் எண்ணிக்கை ஒவ்வொரு வயதினரிடமும் (age group) வயதானோர் (old age people) நடுத்தர வயதுடையோர் (middle age group) இளம் வயதினர் (younger age group) கணிசமான அளவில் இருந்தால் மொழிதக்கவைப்பின் சாத்தியக்கூறுகள் அதிகமாக இருக்கும். இளம் வயதினரிடையே மொழி பேசுவோர் எண்ணிக்கை குறைந்தால் மொழி இழப்பின் சாத்தியக்கூறுகள் அதிகமாக இருக்கும்.

உ) ஆண் பெண் வேறுபாடு (sex)

மொழி இழப்புப் பொதுவாக சில சூழல்களில் ஆண்களிடையேயும் வேறு சில சூழல்களில் பெண்களிடையேயும் உள்ளது.

ஊ) கலப்புத் திருமணம்

தனது மொழியினர் அல்லாத வேறு மொழிக்கூட்டத்தினர் ஒருவரை குறிப்பாக, அதிகார வலிமை பெற்ற மொழியினர் ஒருவரைத் திருமணம் செய்யும் போது மொழி இழப்பிற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாகின்றன. உலக அளவில் ஆஸ்திரேலியப் பழங்குடியினர் ஆங்கில மொழியினரோடு திருமணத்தொடர்பு கொண்டது (Dixon 1980:32), நீலகிரிப் பழங்குடியினரான கிருத்துவத் தோடர்கள் தமிழ் கிருத்துவத் தோடர்களோடு திருமண உறவு கொண்டது (Perialwar 1987, Mulley 2009) ஆகியவை இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

5.3.3. சமுதாய இயல் (sociology)

அ) வாழ்வியல் முறை

தங்களது மரபுசார்ந்த சமுதாய வாழ்வியல்முறைகள் பணியை எல்லோரும் பகிர்ந்துகொண்டு நிறைவேற்றல் போன்றவை நிலைத்திருக்கும் வரை மொழிதக்கவைப்புக்கான சாத்தியங்கள் அதிகமாக உள்ளன.

ஆ) மொழிபேசுபவர்களது சமுதாய மதிப்பு (Status of the speakers)

மொழிபேசுபவர்களது சமுதாய மதிப்பு உயர்வானதாக இருந்தால் மொழிதக்கவைப்பின் சாத்தியம் அதிகமாகிறது.

5.3.4. மொழியியல்; சமுதாய மொழியியல்

அ) சந்ததிகளுக்கிடையே மொழிப்பரிமாற்றம் ஒரு சந்ததியிடமிருந்து இன்னொரு சந்ததியினர், குறிப்பாக இளம்தலைமுறையினர் குழந்தைகள் மொழியைக் கற்றுக்கொள்ளும்போது மொழிதக்கவைப்பு இருக்கும் கற்றுக்கொள்வது தடைப்பட்டால் மொழி இழப்பு நேரிடும்.

ஆ) வேறு ஒரு மொழியோடு, மொழிகளோடு தொடர்பு அதிகமாகும்போது மொழி இழப்பிற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் ஆகின்றன. ஆனால் வேறு மொழி எனும்போது ஒரு பழங்குடியினர் இன்னொரு பழங்குடியினர் மொழியை எதிர்கொள்ளும்போது தாய்மொழி இழப்பு நேரிடுவதில்லை. வலிய மொழியை / மொழிகளை எதிர்கொள்ளும் போதுதான் மொழி இழப்பு நேரிடுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாகின்றன. இந்தியா உட்பட உலக அளவிலான ஆங்கிலம், இந்தியாவில் ஆட்சி அதிகாரப் பொருளாதார வலிமை கொண்ட மாநில மொழிகள்- ஆகியவைகளை எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

இ) மொழிப் பயன்பாட்டுக் களன்களின் **சுருக்கம்** மொழிப் பயன்பாடுகளின் குறைவு எப்படிபட்ட களன்களில் மொழி பயன்பாட்டில் உள்ளது என்பது மொழிதக்கவைப்பிற்கு அல்லது மொழி இழப்பிற்கான காரணியாக அமைகிறது.

ஈ) **எழுத்தறிவு (literacy)**

எழுத்தறிவு வேறு ஒரு மொழியில் மாத்திரம் அதிகமாகும் போது தாய்மொழி இழப்புக்கான சாத்தியம் அதிகமாகிறது.

உ) **கிளைமொழி பொதுமொழியாகத்தரப்படுதல்** கிளைமொழிகளில் ஒன்று தரப்படுத்தப்பட்டுப் பொது வழக்காக மாறும்போது மற்ற கிளைமொழிகள் இழப்பைச் சந்திக்க நேரிடலாம். எடுத்துக்காட்டாக, பொதுப்பேச்சுத் தமிழ் என்ற வழக்கு (Standard spoken Tamil) (Annamalai 1976, Gnanasundaram, 1980)தமிழின் வட்டார சாதிக்கிளைமொழிகளின் இழப்புக்குக்காரணியாக அமையலாம். (இது தொடர்பான விளக்கத்தினை இயல் 6.3 இல் காணலாம்.)

ஊ) தாற்காலிக இருமொழியம் அல்லது நிலையாத இருமொழியம்-ஒரு மொழி, அதிகார வலிமை பெற்றமொழியை எதிர்கொள்ளும் போது

மேலைநாட்டில் இந்திய மொழிகள் பேசுவோர் அந்நாட்டின் அதிகார மொழியின் ஆளுமையினால்- எடுத்துக்காட்டாக, இந்தியத் தாய்மொழி - ஆங்கிலம் என தொடக்கத்தில் இருமொழியாளர்களாக இருந்த இடம் பெயர்ந்த குழுவினர் (Immigrants) மூன்று நான்கு சந்ததியினர்க்குப்பிறகு தம் தாய் மொழியை இழந்து, ஆங்கில ஒரு மொழியாளர்களாகவே ஆகிவிடுவதை நாம் ஏற்கெனவே இயல் 4.1இல் விவரித்திருந்தோம். இந்தத் தாய்மொழி இழப்பு நிலையில்லாத இந்தத் தாற்காலிக இருமொழியத்தால் விளைந்தது ஆகும். இங்கே ஒன்றைக் கவனத்தில் கொள்ளவேண்டும். ஒரு மொழி பெரும்பாலும் அதிகார வலிமை பெற்ற மொழியை எதிர்கொள்ளும்போது தான் மொழி இழப்பு நிகழ்கிறது. அதிகார வலிமையில் ஏறக்குறைய சம அளவில் உள்ள மொழிகள் எதிர் கொள்ளும்போது இச்சூழல் நிலைத்த இருமொழியச்சூழலாக இருப்பதால் மொழி இழப்பு நேர்வதில்லை. அதாவது நிலையாத (தாற்காலிக இருமொழியம்) மொழி அழிவிற்கு வித்திடுகிறது எனலாம். நிலைத்த இருமொழியம் மொழித்தக்கவைப்பைக் காக்கிறது.

5.3.5. உளவியல் (Psychology)

அ) **ஒரு மொழிக் குழுவினர் பிறமொழியினரைப் பற்றிக் கொண்டுள்ள மனப்பாங்கு (மதிப்பீடு)** அதுபோலப் பிறமொழிக் குழுவினர் தம்மொழிக் குழுவினரைப் பற்றிக் கொண்டுள்ள (மதிப்பீடு) மனப்பாங்கு.

ஆ) **தம்மைப் பற்றித் தமது மொழியைப் பற்றிக் கொண்டுள்ள உயர்மதிப்பீடு.** மொழியைப் பற்றியும் தமது குழுவைப்பற்றியும் உயர் மதிப்பீடு கொண்டிருந்தால் மொழிதக்கவைப்புக்கு அது உதவும்.

இ) **நிறுவனங்களின் ஆதரவு** மொழி பயன்படுத்த நிறுவனங்களின் ஆதரவும், உதவியும் இருக்கும்போது பொதுவாக மொழிதக்கவைப்பில் சிரமம் நேர்வதில்லை.

5.3.6. மொழி உரிமைகள்

மொழி பேசுவோரது மொழி உரிமைகள் அங்கீகாரம் பெற்றுப் பாதுகாக்கப்படல்: அங்கீகாரம், பாதுகாப்பு இவற்றிற்கு

ஏற்ப - இவற்றின் அளவிற்கு ஏற்ப மொழி தக்கவைப்பு அல்லது இழப்பு நேரலாம்.

அமெரிக்கப் பள்ளிகளில் தாய்மொழியில் பேசியதற்காகத் தண்டனையாக அடிவாங்கியதைக் கூறலாம் (Hinton *1994: 175-179.* Thomson *2001: 240* in Tsunoda). ஆஸ்திரேலியப் பள்ளிகளில் அமெரிக்க இந்தியச் சிறுவர்கள் தங்கள் இந்தியத்தாய் மொழிகளை எப்போதெல்லாம் பேசினார்களோ அப்போது எல்லாம் அவர்களது வாய் காரம் அதிகமுள்ள சோப்புக் கட்டி கொண்டு (Harsh G.I. Soap) கழுவப்பட்டதாம் (Little bear *1999:3*). இது போன்ற அநியாயங்கள் உலகம் முழுவதும், இந்தியா உட்பட அவ்வப்போது நடந்துகொண்டுதான் உள்ளன.

5.3.7. பொருளாதாரம்

பொருளாதார வலிமை கொண்ட மொழிகள் பொதுவாக மொழி இழப்பைச் சந்திப்பதில்லை. அதாவது குறிப்பிட்ட ஒரு மொழி கற்பதால், பயன்படுத்துவதால் ஒருவரது பொருளாதார நலம் பெருகும் என்ற சூழல் உள்ளபோது அந்த மொழி இழப்பைச் சந்திக்காது.

5.3.8. கல்வி

அ) ஒருமொழி எழுத்து வடிவம் கொண்டதாக, அம்மொழி மூலம் எழுத்தறிவு பெற்றவர் தொகை அதிகமாக உள்ளபோது மொழிதக்க வைப்பு பொதுவாக அதிகமாக இருக்கும்.

ஆ) மொழி, மொழிப்பாடமாக பாடமொழியாக இருக்கும் நிலைகளைப் பொறுத்து மொழிதக்கவைப்பு அல்லது இழப்பு நேரலாம்.

இ) இளம் வயதினர், சிறுவர் சிறுமிகள் கல்விக்காகத் தாங்கள் வாழும் இருப்பிடத்தை, மொழிச் சூழலை விடுத்து வேறு இடங்களில் சிற்றூர்களில் உள்ள உண்டு உறைவிடப் பள்ளிகளில் (Residential schools) தங்குகிறார்களா அல்லது வேறு ஊர்களில் விடுதிகளில் தங்குகிறார்களா என்பதைப் பொறுத்தே மொழிதக்கவைப்பு இருக்கும். எடுத்துக்காட்டாக, கேரளா மாநிலத்தில் மாநந்தவாடிப் பகுதியில் உள்ள 'ஊராளிக்குருமன்' என்ற பழங்குடியினர் மொழி பேசும் சிறுவர்கள், பள்ளிக் கல்வியின் பொருட்டுத் தங்களது பழங்குடியினர் கிராமங்களை விடுத்து அருகில் உள்ள மானந்தவாடி போன்ற சிறு நகரங்களிலேயே, ஏறக்குறைய ஆண்டில் பெரும்பகுதிக் காலம் தங்கிக் கல்வி

கற்கும் சூழல்களில் இவர்களது தாய்மொழிதக்கவைப்பு பாதிப்புக்குள்ளாகிறது.

5.3.9. பால் வேறுபாடு

ஆண்களது மொழி இழப்பின் அளவு, பெண்களின் மொழி இழப்பின் அளவை விட அதிகமாக இருப்பது மேலே 5.3.8 (இ)யில் குறிப்பிட்டுள்ள ஊராளிக்குருமன் பழங்குடியினரிடையே நிகழ்கிறது. (இது தொடர்பான, விரிவான விளக்கத்தை இயல் 7 இல் காண்க). சிறுவர்கள் தங்கள் தாய்மொழியாளர்களோடு குறிப்பாகத் தாத்தா-பாட்டியினரோடு உரையாடுவது ஏறக்குறைய மிக அரிதாகிவிடுகிறது.

5.3.10. மதம்

மதம், இந்தியாவில் குறிப்பாக, கிருத்தவ மதம் மொழிதக்கவைப்புக்கும் உதவியுள்ளது. மொழி இழப்பினையும் ஏற்படுத்தியுள்ளது. (மொழிதக்கவைப்புக்கு நாகலாந்து பழங்குடியினர் மொழிகளைக் குறிப்பிடலாம். இது தொடர்பான விளக்கத்திற்கும் விரிவான செய்திகளுக்கும் இயல் 6 ஐக் காணவும்)

இயல் 6

இந்திய மொழி வகைகளில் மொழி இழப்பு

இந்தியச் சூழலில் மொழி இழப்பு என்பது ஏற்கெனவே கூறியபடி அதன் மறுதலையான மொழிதக்கவைப்பு என்பதையும் உள்ளடக்கியுள்ளது. மேலும் மொழி இழப்பின் சித்தாந்த வேற்றுமைகளாக..............

அ) மொழி இறப்பு அல்லது இழப்பு என்றும்

ஆ) மொழிக்கொலை மற்றும் மொழி ஏகாதிபத்தியம் என்றும் விரிவடைகின்றன என்பதையும் இயல் 5 இல் கண்டோம். இந்தியச் சூழலில் மொழி இழப்பு-மொழிதக்கவைப்புக்கு உட்படும் மொழி வகைகள் பின்வருவனவாக உள்ளன.

1. மொழிச்சிறுபான்மையினர் மொழிகள்
2. பழங்குடியினர் மொழிகள்
3. கிளை மொழிகள்
4. வளர்ச்சிநிலையில் முன்னேற்றம் கண்டுள்ள அட்டவணை மொழிகள்

ஒவ்வொரு மொழிவகைகளின் மொழி இழப்பு அல்லது பாதுகாப்பின் தன்மைகளை இந்த இயலில் இனி, விளக்குவோம்.

6.1. மொழிச்சிறுபான்மையினர் மொழிகள்

தாய் மாநிலங்களில் ஆட்சி அதிகார வலிமை கொண்ட எட்டாவது அட்டவணை மொழிகள் பிறமாநிலங்களில் சிறுபான்மையினர் மொழிகள் என்ற தகுதிநிலையில் உள்ளவை (எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் தெலுங்கு, குஜராத்தி முதலியன) மற்றும், எட்டாவது அட்டவணை மொழித்தகுதியோ பழங்குடியினர் மொழித்தகுதியோ பெறாத வேறுமொழிகள் (எடுத்துக்காட்டாக, கர்நாடகத்தில் துளு, தமிழ் நாட்டில் சௌராஷ்டிரி ஆகியவை) பொதுவாக மொழிச்சிறுபான்மையினர் மொழிகளாகக் கருதப்படும்.

மொழிச்சிறுபான்மையினர் மொழிகள் வழக்கில் உள்ள ஒரு மாநிலத்தின் ஆட்சி அதிகார வலிமை கொண்ட மொழியை எதிர்ப்படும்போது அம்மாநிலத்து மொழிச்சிறுபான்மையினர் இருமொழியாளர்களாக இருப்பர். இவர்களது இருமொழியம் பண்டிட், கம்பர்ஸ் போன்றோரின் கூற்றுகளுக்கு ஏற்ப (Pandit, *1972* Gumperz *1969)* பொதுவாக நிலைத்த இருமொழியம் ஆகும்.

நிலைத்த இருமொழியம் என்ற கொள்கையைச் சோதிக்கும் வகையில் ஆய்வுகள் அவ்வப்போது இந்தியமொழிகளில் நடந்துள்ளன. சமுதாய மொழியியல் கோட்பாடான மொழிதக்கவைப்பு, மொழி தாவல் என்ற வகையில் இந்திய மொழிகளில் சிறுபான்மையினர் மொழிச்சூழலில் நடந்துள்ள சில ஆய்வுகளையும் அவற்றின் முடிவுகளையும் இப்பகுதியில் காண்போம்.

6.1.1. தெலுங்கு

புதுச்சேரி (புதுவை) ஒரு காலத்தில் பிரான்ஸ் நாட்டின் காலனியாதிக்கத்தில் இருந்துள்ளது. புதுச்சேரி யூனியன் பகுதியில் வாழும் தெலுங்கு மொழியினர் புதுச்சேரிப் பன்மொழிச் சூழலில் தங்கள் பயன்பாட்டிற்குத் தேர்ந்தெடுக்கும் மொழிகள் எவை என்பதும் தங்களது தாய்மொழி தெலுங்கைத் தக்கவைத்துக் கொள்கிறார்களா அல்லது தெலுங்குமொழியிலிருந்து வேறு ஒரு மொழிக்குத் தாவி விடுகிறார்களா என்பது இராமமூர்த்தி அவர்களது ஆய்வு (Ramamoorthy, *2000)*. இந்த ஆய்வில் இடம் பெற்றுள்ளவர்கள் புதுச்சேரியில் தெலுங்கு பேசும் சாதிக்குழுவினர்களான (1) அருந்ததியர் (2) பிராமணர் (3) செட்டியார் (4) நாயுடு (5) ரெட்டியார் ஆவர். குறைந்தது தொடக்கநிலைக் கல்வியாவது பெற்றுள்ள இந்த ஐந்து சாதிக் குழுவினைச் சேர்ந்துள்ள தகவலாளர்கள் (Subjects) வயதானோர், நடுத்தர வயதுள்ளோர், இளம் வயதினர் என்ற பிரிவுகளையும் அடையாளப்படுத்துவர்.

புதுவை மாநிலத்தின் மொழிச் சூழலைச் சுருக்கமாகக் காண்போம். பிரெஞ்சுமொழி இங்கே ஊடுருவியுள்ளது. பிரான்ஸ் நாட்டின் காலனியாதிக்கத்திற்கு முன்பு புதுவை மாநிலத்தில் பிரெஞ்சு மொழியும் ஆங்கில மொழியும் ஆட்சி மொழிகளாக இருந்தன. 1965 இல் அறிவிக்கப்பட்ட எட்டாவது அட்டவணை மொழிகளின் சட்டத்தின்படி புதுவையில் தமிழ், புதுவை மாநில ஆட்சி மொழி ஆனது. தெலுங்குமொழி ஏழாம் பகுதியில் துணை ஆட்சி மொழியாகவும், மலையாளம் மாகி பகுதியில் துணை ஆட்சி மொழியாகவும் இச்சட்டத்தின்படி ஏற்றுக்கொள்ளப்பட்டன. இச்சட்டம் புதுவை ஆட்சி மொழிச் சட்டம் எனப்படும் (Rajaram, *1997)*.

இனி இந்த ஆய்வுக்கு வருவோம். புதுச்சேரியில் படிப்பறிவுள்ள தெலுங்கு இருமொழியாளர்கள் பொதுவாகத் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகியவைகளைப் பயன்படுத்த முடியும். தெலுங்கு இருமொழியாளர் ஐந்து சாதியினரும் எந்தக் களத்தில் எந்த மொழியை யாரிடம் பயன்படுத்துகிறார் என்பது இந்த ஆய்வின் பொதுவான குறிக்கோள். இந்த ஆய்வுக்குக் குடும்பம், நட்புவட்டாரம், பணியிடம் ஆகியவை களங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

அதாவது இந்த ஐந்து சாதிக் குழுவினைச் சேர்ந்த தெலுங்கு இருமொழியாளர்கள் (வயதானோர், நடுத்தர வயதினர், இளைய வயதினர்) தங்கள் குடும்பத்தினரிடம், தாத்தா பாட்டியுடன், பெற்றோருடன், வாழ்க்கைத் துணையுடன் உறவினரிடம், நண்பர்களிடம், அதிகாரிகளுடன் உரையாட எந்த மொழி அல்லது மொழிகளைத் தேர்வு செய்கின்றனர் என்பதைக் கண்டுபிடிப்பது இந்த ஆய்வின் குறிக்கோள் ஆகும். தாய்மொழித் தெலுங்கு இத்தகைய பயன்பாட்டில் உள்ளதா? உள்ளது என்றால் எவ்வளவு அல்லது இந்தப் பயன்பாட்டிற்குத் தெலுங்கு புறந்தள்ளப்பட வேறு மொழி, மொழிகள் (தமிழ், ஆங்கிலம்) புறம் மொழித்தாவல் நடைபெறுகின்றதா என்பதும் மொழிமீது ஒருவர் தாம் கொண்டுள்ள மனப்பாங்கிற்கு ஏற்ப மொழிதக்கவைப்பு அல்லது மொழித் தாவல் நிகழும். அதாவது நன்மதிப்பு என்றால் மொழிதக்கவைப்பு, நலமற்ற இழி மதிப்பு என்றால் மொழித் தாவல் என்பதும் இது தொடர்பான இன்னொரு குறிக்கோள் ஆகும். இது போன்ற மொழித் தேர்ந்தெடுப்புக்கும் அம்மொழி மீது அவர் கொண்டுள்ள மனப்பாங்கிற்கும் இடையே ஒரு உள்ளார்ந்த உறவு உள்ளது என்பது சமுதாய மொழியியலின் ஆய்வுத் துறையான மொழித் தேர்வு மற்றும் மொழித் தாவலில் காணப்படும் ஒரு கொள்கையாகும்.

மேலே குறிப்பிட்ட ஆய்வு நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் உள்ள வினாக்களுக்குத் தகவலாளர்களான ஐந்து சாதிக்குழுவைச் சேர்ந்த தெலுங்கு இருமொழியாளர்கள் அளித்த விடைகளும் தகவலாளர்களது உரையாடல் சூழல்களைக் கவனித்து எடுத்துக்கொண்ட குறிப்புகளுமே இவ்வாய்வின் தகவல்கள் ஆகும்.

இவ்வாய்வில் பெறப்பட்ட முடிவுகளாக உள்ளவை வருமாறு (Ramamoorthy, 2000) :

1. குடும்பச் சூழலில் ரெட்டியார், செட்டியார், பிராமணர் ஆகியோரது தெலுங்கு மொழிப்பயன்பாடு நிலைத்துள்ளது.

(இதன் மறுதலையாக வேறுசூழல்களில் அதாவது நட்பு அலுவல் போன்ற சூழல்களின் மொழித்தாவல் நிகழ்ந்துள்ளது என்பது பொருள்.) அருந்ததியர், நாயுடு இவர்களது பயன்பாட்டில் தமிழ், தெலுங்கு இரண்டுமே உள்ளன. அலுவலகப் பயன்பாட்டிற்கு எல்லாச் சாதியினருமே தமிழைப் பயன்படுத்துகின்றனர்.

2. எல்லாச் சாதியினரிலும் வயதானோரும், நடுத்தர வயதினரும் பெரும்பாலும் தெலுங்கு மொழியைப் பயன்படுத்துகின்றனர். இளம் வயதினர் பெரும்பாலும், குடும்பச் சூழலில் மாத்திரம், தாத்தா பாட்டியுடன், பெற்றோருடன், வாழ்க்கைத் துணையுடன், குழந்தைகளுடன் மாத்திரம் தெலுங்கு மொழியைப் பயன்படுத்துகின்றனர்.

இதன்மூலம் நாம் விளங்கிக் கொள்வது தாய்மொழி தெலுங்கு இந்தத் தலைமுறையினரிடையே தனது பயன்பாட்டுக் களங்கள் குறையப் பெறக் குடும்பம் என்ற அளவில் சுருங்கிவிட்டது. தெலுங்குமொழி, புதுவை மாநில மொழிச்சூழலில், குடும்ப அமைப்பு ஒருமைப்பாட்டின் ஓர் அடையாளம் என்ற அளவில் சுருங்கிவிட்டது எனலாம். குழு அடையாளம் என்ற நிலையில் கூட இது இல்லை எனலாம். வயதானவர்களது, நடுத்தரவயதுள்ளோரது தெலுங்கு மொழிப் பயன்பாட்டோடு ஒப்பிடும்போது பயன்பாட்டுக் களன்களின் சுருக்கத்தை நாம் அறிந்து கொள்ளமுடிகிறது. இந்த நோக்கில் இது மொழிப் பயன்பாட்டுக் களங்களில் இழப்பாக முதல் நிலையில் தோன்றுகிறது. மொழிக்களன் இழப்பும் ஒரு வகையில் மொழி இழப்புதான்.

3. எல்லாச் சாதியினரிலும் பொதுவாகக் கல்வியில் மேம்பட்டவர்கள் தெலுங்கு மொழியைப் பயன்படுத்துவதில் குறைவானவர்களாகவும், கல்வியில் குறைந்த தரத்தில் உள்ளவர்கள் அதிகமாகத் தாய்மொழித் தெலுங்கைப் பயன்படுத்துபவர்களாகவும் உள்ளனர். (இது, பொதுவாக இந்தியமொழிச் சூழல் பலவற்றில் காணக் கூடிய ஒன்று.)

6.1.2. தில்லிப் பன்மொழிச் சூழலில் பஞ்சாபி மொழி

தில்லிப் பல்கலைக்கழக முன்னாள் மொழியியல் பேராசிரியர் அமரர் பண்டிட் அவர்கள் தில்லிப் பன்மொழிச் சூழலில் உள்ள பஞ்சாபி மொழி (பஞ்சாபி ஒரு இந்தோ

ஆரியமொழி) பற்றிப் பின்வரும் கருத்தைத் தெரிவித்துள்ளார். சீக்கிய மதத்தைச் சார்ந்துள்ள பஞ்சாபியர் பஞ்சாபி மொழியைத் தக்கவைத்துக்கொண்டுள்ளனர். ஆனால் மத்திய தரவர்க்கத்தைச் சார்ந்த இந்து பஞ்சாபியர் தம்மொழியான பஞ்சாபியை விடுத்து இந்திமொழித் தாவலை மேற்கொண்டிருப்பதோடு, இந்த இந்தி மொழித்தாவல் பாதுகாப்பற்றதாக, பயனற்றதாகக் கருதிப் பின் ஆங்கிலமொழித் தாவலை மேற்கொண்டுள்ளனர். (Pandit 1974:1978).

இக்கருத்தினை மறுக்கும் வகையில் அமைந்துள்ள இரங்கீலா அவர்களது ஆய்வு (Rangeela, 1986) பின்வரும் விவரங்களைக் கொண்டுள்ளது. எக்காலத்திலும் பஞ்சாபி மொழி பேசுவோர் பஞ்சாபில் உள்ள சிறிய பெரிய நகரங்கள் எங்குமே பஞ்சாபி மொழியை மாத்திரமே பேசும் ஒரு மொழியாளராக இருந்ததில்லை. 1881 ஆவது மக்கட்தொகைக் கணக்கெடுப்பின் (Ibbetson 1881) படி பஞ்சாப்பில் படித்த கனவான்கள் அதிகம் பயன்படுத்திய மொழியாக உருது இருந்திருக்கிறது. பஞ்சாபிய மொழி அதிகம் படிக்காத கிராமத்தவர்கள் பயன்படுத்திய மொழியாக இருந்திருக்கிறது. இந்திய நாடு பிரிந்ததற்குப் பிறகு பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்திலிருந்து பஞ்சாபியர்கள் தில்லிக்கு வந்து குடியேறினர். தில்லியில் வழங்கிவரும் இந்தி மொழியின் அதிகார வலிமையை உணர்ந்து கொண்ட பஞ்சாபியரில் பலர் குறிப்பாக, இந்து மதம் சார்ந்த பஞ்சாபியர் தங்கள் மொழியை விடுத்து இந்தி மொழியோடு ஐக்கியமாகவும் தலைப்பட்டனர். அடுத்து, பஞ்சாபி மொழி பேசும் இந்துக்களும் இந்திமொழி பேசும் பஞ்சாபியரும் பெண்கொடுத்துப் பெண் எடுத்து வாழும் முறையையும் மேற்கொண்டுள்ளனர். இந்து பஞ்சாபியரோடு சீக்கிய மதம் சார்ந்த பஞ்சாபியரும் நாட்டுப் பிரிவினையின் போது பாகிஸ்தானில் இருந்து வந்துள்ளனர். இந்த இருவிதப் பஞ்சாபியர்களிடையே உள்ள முக்கிய வேற்றுமை வருமாறு: சீக்கிய பஞ்சாபியர் பஞ்சாபி- இந்தி இருமொழியாளர். ஆனால் தங்களது இனக்குழுவின் அடையாளத்திற்காகப் பஞ்சாபி மொழியை ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்து சீக்கியர்கள் பஞ்சாபி மொழியைப் பேசினாலும் இந்தி மொழியை மாத்திரம் வரிந்து கொண்டனர். மக்கட்தொகைக் கணக்கெடுப்பின் போது இந்திதான் தங்களது தாய்மொழி என்று அறிவித்துள்ளனர். இந்தியில் பேசத் தெரியாதபோது கூட (தில்லிச் சூழலில் இவை தவிர உருதும், ஆங்கிலமும் பயன்பாட்டில் உள்ள மொழிகள்). இரங்கீலா அவர்களது ஆய்வின் தகவலாளர்கள் பஞ்சாபியைத் தாய்மொழியாகக் கொண்ட கல்லூரி மாணவர்கள். இவர்கள் பொதுவாகப் பன்மொழியாளர்கள். பஞ்சாபி, இந்தி, ஆங்கிலம் பேசுபவர்கள். இந்த ஆய்வின் முடிவுகள் வருமாறு (Rangeela, 1986):

1. பஞ்சாபியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளோர் பஞ்சாபி, இந்தி, ஆங்கிலம் என மூன்று மொழிகளையும் பயன்படுத்துகின்றனர்.

2. இவர்கள் தங்கள் தாய்மொழியான பஞ்சாபி மொழியை ஒருகளத்தில் பயன்படுத்தாமல் இருந்தால், அதை நிவர்த்தி செய்யும் விதமாக வேறுகளங்களில் பஞ்சாபி மொழியைச் செறிவாகப் பயன்படுத்துகின்றனர். ஏனென்றால் பஞ்சாபி, இந்தி, ஆங்கிலம் என்ற மூன்றுமொழிகளுமே பஞ்சாபியர்களது பயன்பாட்டுக்கு என்று விதிக்கப்பட்ட களங்களில் வழங்குகின்றன. மொழி அழிவு, மொழித்தாவல் இந்தச் சூழலில் உள்ளதா என்று பார்த்தால் இல்லை என்றே சொல்லலாம். பயன்பாட்டில் உள்ள மொழியை இழந்து ஒரு மொழியாளராக இந்தி, ஆங்கில மொழியாளராக ஆவது கிடையாது. எப்போதும் வரலாற்றுக் காலத்தில்கூடப் பஞ்சாபியர்கள் ஒருமொழியாளர்களாக இருந்ததில்லை என்பதை முன்பே கண்டோம். இந்தக் காரணங்களால் பஞ்சாபியரிடையே (இந்து பஞ்சாபியரிடையேயும் கூட) தாய்மொழியான பஞ்சாபிய மொழி இழப்பு நேரவில்லை என்பதை இந்த ஆய்வு தெளிவாகப் புலப்படுத்தியுள்ளது.

6.1.3 சிந்தி மொழி

சிந்திமொழி வடமேற்கு இந்தியாவில் பேசப்படும் இந்தோ ஆரியமொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மொழி. இந்தியாவில் சிந்தி மொழி பேசுபவர்களுக்கென்று தனி மாநிலம் எதுவும் கிடையாது. ஆங்கிலேயரால் ஆட்சி செய்யப்பட்ட பிரிக்கப்படாத இந்தியாவில் (பாகிஸ்தான் தனி நாடாகப் பிரிவதற்கு முன்பு) சிந்து பகுதிகளிலும் சிந்தி மொழி பேசுவோர் வாழ்ந்து வந்தனர். இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர், கட்ச் பகுதி நீங்கலாக பாகிஸ்தானில் உள்ள சிந்து மகாணம் சிந்து மொழி பேசுவோரது வாழ்விடமாக அமைந்தது. இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்குப்பின்னர்ச் சிந்தி மொழி பேசும் இந்துக்கள் இந்தியாவிற்குள் குடிபுகுந்தனர். பிரிவினைக்கு முன்பு சிந்து மாகாணத்தில் இருந்த சிந்தி பேசும் மக்களில் பெரும்பாலோர், நிலச்சுவான்தார்களைத் தவிர வணிகம் மற்றும் தொழில் துறைகளைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். இந்தத் தொழில் முறைக் காரணங்களால் சிந்தி பேசும் இந்துக்கள் சிந்து மாகாணத்தின் பெரிய சிறிய நகரங்களிலேயே வாழ்ந்து வந்தனர்.

அடிப்படையிலேயே சிந்திமொழி பேசும் இந்துக்கள் நகரம் சார்ந்து வாழ்பவர்களாதலால் பாகிஸ்தான் சிந்து

மாகாணத்திலிருந்து இந்தியாவிற்குக் குடிபெயர்ந்தபோது நகரங்களிலேயே குடியேறத் தொடங்கினார்கள். 1947-48 க்களில் ஏறக்குறைய எட்டு இலட்சம் இந்து சிந்தியர் சிந்து மாகாணத்திற்கு அருகாமையில் உள்ள இந்திய மாநிலங்களான இராஜஸ்தான் (அப்போது மத்திய மாகாணங்கள், தற்போது மத்தியப் பிரதேசம்) மற்றும் பிரிக்கப்படாத பம்பாய் மாநிலம் (தற்போது குஜராத் மற்றும் மகாராஷ்டிரா) ஆகியவற்றில் குடியேறினர். இவர்களில் ஒரு சிறிய ஆனால் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய நல்ல மதிப்புக் கொண்ட குழுவினர் இந்தியத் தலைநகர் தில்லியில் குடியேறினர். பெரும்பாலான இந்து சிந்தியர், பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்த போது இந்திய மாநிலங்களான இராஜஸ்தான் (ஜோத்பூர், கோடா, ஆஜ்மீர், ஜெய்ப்பூர், பில்லாரா) மத்திய மாகாணம் (இந்தோர், உஜ்ஜைன், ரட்லாம், பைராகாட், போபால்) ஜபல்பூர், ராய்கட், ரைப்பூர் பிலாஸ்பூர், அமராவதி, பாந்த்ரா, அகோலா, பம்பாய் மாநிலம், உல்லாஸ்நகர், அகமதாபாத், பரோடா, சூரத், பம்பாய் ஆகியவற்றில் குடியேறினர். பிரிவினைக்கு முன்னர் இருந்த குடும்ப அமைப்பு சிதையாமல் குடும்பம் குடும்பமாக அண்டை அயல் குடும்பத்தினரோடு குடியேறினர். (Thakur 1995: 159). இவர்கள் தொடக்க காலத்தில் இந்திய அரசினரது கூடாரங்களில் தங்கினர். பிறகு பிழைப்பு வேண்டி இவர்கள் குழுக்களாக ஊர் ஊராகச் சென்று முடிவில் பம்பாய், சௌராஷ்டிரம், கட்ச், மத்தியப் பிரதேசம் போன்ற பகுதிகளில் நிலைத்தனர். (Thakur, 1959 :33). சிந்திமொழி பேசுவோர் இந்தியாவில் 7,76,029 பேராக (1948 மக்கட்தொகைக் கணக்கெடுப்பு) உள்ளனர்.

சிந்தி மொழியில் உள்ள விசோலிக் கிளைமொழி (Vicholi dialect) ஆங்கிலேயரது ஆளுகைக்குட்பட்ட நூறாண்டுக் காலத்தில் (1843-1947) இலக்கியமொழியானவுடன் ஏனைய ஐந்து சிந்திக் கிளைமொழிகள், கிளைமொழித் தகுதி நிலையிலேயே நின்றன.

சிந்தி மொழி பேசுவோர்க்கு என்று தனி மாநிலம் எதுவும் இந்தியாவில் இல்லை. அதனால் பெரும்பாலான சிந்திமொழி பேசும் மக்கள் குறிப்பாக, ஆண்களும் குழந்தைகளும் தாங்கள் தங்கி வாழும் இருப்பிடங்களுக்கு அண்மையில் உள்ள மற்ற இந்திய மொழிகள் பேசுவோரோடு தொடர்பு கொள்ளத்தொடங்கினர். இந்தியாவின் பல பகுதிகளைத் தங்கள் இருப்பிடமாக-வாழும் இடமாகக் கொள்ளத் தொடங்கிய சிந்தி பேசுவோர், அந்தந்தப் பகுதியினரோடு கலந்து சமுதாயப் பொருளாதார அமைப்புப் பின்னலில் இணையத் தொடங்கினர். இந்த இணைப்பின் விளைவாகத் தாய்மொழி சிந்தி பல பயன்பாட்டுக் களங்களை இழந்தது. தங்களது இனத்திற்குள்ளேயே பேசிக் கொள்ள மாத்திரம் பயன்படும் மொழியாக மாறியது.

இந்தியாவில் சிந்தி இன்றைக்கு மிகக் குறைந்த சமுதாய மொழியியல் பயன்பாட்டைக் கொண்டுள்ளது. தங்கள் குழுவினரோடு மாத்திரம் பேசப் பயன்பாட்டில் உள்ள இந்த மொழி, குறிப்பாகப், பெண்கள் வயது முதிர்ந்த ஆண்கள் இவர்களாலேயே தக்கவைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. பெரு நகர்ப்புறத்தில் வாழ்வோர் கல்வி கற்று தாய்மொழிச் சிந்தியைத் தங்களது குடும்பத்தில் உள்ள மூத்தோரிடம் பேசுவதற்கு மாத்திரம் பயன்படுத்துகின்றனர்.

சிந்திக் குழந்தைகளில் ஏராளமானோர் குழந்தைப் பருவத்தில் சிந்தி மொழியைப் பேசக் கற்றுக் கொள்கின்றனர். ஆனால் சிந்தி மொழியில் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்வதில்லை. பல பெற்றோர் தங்கள் குழந்தைகளைச் சிந்தி மொழியல்லாத பிறமொழிப் பள்ளிகளுக்கு அனுப்புகின்றனர். சிந்தி மொழி பேசும் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகும்போது இந்தியாவின் அரசியல் சமூகப் பொருளாதாரச் சூழலுக்குச் சிந்தி அல்லாத மொழி மூலமாகத் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. சிந்தி மொழி பேசும் குடும்பங்களில் பலர், தங்கள் குழந்தைகளிடம் பேசுவதற்குக் கூட சிந்தி மொழியைப் பயன்படுத்துவதில்லை. மாறாக அந்த மாநிலத்து மொழி அல்லது இந்தி அல்லது ஆங்கிலம் மூலமாகவே பேசுகின்றனர். (Daswani 1975).

இதுபோன்ற சமுதாய மொழியியல் காரணங்களால் இந்தியாவில் தற்போது வழக்கில் உள்ள சிந்தி மொழி இரண்டு வித மாற்றங்களை ஏறக்குறைய ஒரே சமயத்தில் ஏற்றுக் கொண்டுள்ளது.

1. சிந்தி மொழியில் இருந்த கிளைமொழி வேற்றுமைகள் மிகக் குறைந்து ஏறக்குறைய அழிந்தே போய்விட்டன.

2. மற்ற இந்திய மொழிகளின் தொடர்பால் பல்வேறு சிந்தி மொழியல்லாத பிற இந்தியமொழிக் கூறுகள் தற்போதைய சிந்தி மொழியில் புகுந்துவிட்டன. புகுந்து விட்டன என்றால் ஏற்கெனவே இருந்த பல சிந்திமொழிக் கூறுகளை அகற்றி என்று பொருள். இதனை மொழித் தழுவல் எனலாம்.

பேராசியர் தாஸ்வானி அவர்கள் ந. பர்ச்சானி அவர்களோடு இணைந்து இந்தியாவில் வழங்கி வரும் சிந்தி மொழி குறித்த சமுதாய மொழியியல் ஆய்வு ஒன்றினைச் செப்டம்பர் 1975 முதல் மே 1976 வரை நிகழ்த்தியுள்ளார். இந்த ஆய்வின் பல குறிக்கோள்களில் சிந்தி மொழியைத் தக்கவைத்துக்கொள்ளும்,

கற்றுக்கொள்ளும் நிலைப்பாடுகளில் சிந்தி மொழி பேசுவோரது மனப்பாங்கு எவ்வாறுள்ளது என்பதும் ஒன்றாகும்.

இந்த ஆய்வுக்காக சிந்தி மொழி பேசும் மக்கள் வாழும் பகுதிகளான (1) புனே (2) உல்லாஸ் நகர் (3) பம்பாய் பெருநகரம் (மகாராஷ்டிரம்) (4) அகமதாபாத் பெருநகரம் (குஜராத்) (5) காந்திதாம் ஆதிப்பூர் (கட்ச்) (6) ஆஜ்மீர் (இராஜஸ்தான்) (7) தியோலலி (மகாராஷ்டிரம்) (8) தில்லிப்பெருநகர் ஆகிய எட்டு பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

மொழிதக்கவைப்பு என்ற நோக்கில் இடம்பெற்றுள்ள இவ்வாய்வின் முடிவுகள் வருமாறு:

1. நாட்டின் பிரிவினைக்கு முன்பு சிந்திமொழியில் காணப்பட்ட வட்டாரக் கிளைமொழி வேறுபாடுகளை இன்றைய சிந்திமொழி பேசுவோர் இனங்கண்டு கொள்ளவில்லை. ஏனெனில் வேறுபாடுகள் மறைந்துவிட்டன.இது கிளைமொழிகள் இழப்பாகும்.

2. முப்பது ஆண்டுக் காலமாகச் சிந்தி மொழி பிற இந்திய மொழிகளோடு தொடர்புகொண்டிருந்திருப்பதால் (ஆய்வு நிகழ்ந்த காலம் 1975 - 76) சிந்தி மொழி பல சிந்தி மொழியல்லாத இந்திய மொழிகளின் மொழிக்கூறுகளை ஏற்றுக் கொண்டுள்ளது. அதாவது சிந்தி மொழி சிந்திமொழியல்லாத வேறு இந்திய மொழிகளின்பால் ஈர்க்கப்பட்டு மொழியில் பல மாற்றங்களை மேற்கொண்டுள்ளது. ஒரு மொழி தான் எதிர்ப்படும் மொழிகளின் மொழிக்கூறுகளைத் தழுவிக் கொள்வதை மொழி இழப்பு என்று கூற முடியுமா? என்பது விவாதத்திற்குரிய பொருள்.

3. ஒரு சந்ததியினரிடமிருந்து இன்னொரு சந்ததியினரது சிந்தி மொழி ஆளுமையைக் கணக்கு எடுத்துப் பார்க்கும் போது (மொத்தம் மூன்று சந்ததியினர் ஆளுமை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது), அது இறங்குமுகமாக உள்ளது புலனாயிற்று. அதாவது மூன்றாவது சந்ததியினரது ஆளுமை மிகக் குறைவாக உள்ளது.

4. இந்தப் போக்கு சிந்தி மொழி இழப்பைச் சுட்டிக் காட்டுகிறதுதானே. மேலே (3 இல்) உள்ளது போலவே சிந்தி மொழி குறித்த மனப்போக்கு சந்ததிக்கு சந்ததி நலமான மனப் போக்கிலிருந்து நலமற்ற மனப்போக்கின்பால் இறங்கு முகத்தில் சென்று

கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அதாவது குறிப்பிட்ட மூன்றாவது சந்ததியினரின் நலமற்ற மனப்பாங்கின் அளவு மூன்றாவது சந்ததியினரது சிந்தி மொழி ஆளுமையோடு தொடர்புள்ளதாக அமைகிறது. எனலாம். அதாவது சிந்தி மொழி குறித்த மூன்றாவது சந்ததியினரின் மனப்பாங்கும் மொழி இழப்பிற்கு வித்திடுகிறதோ என்ற பெரும் ஐயத்தை உண்டாக்குகிறது. இந்த ஆய்வின் ஆசிரியர்களான பேராசிரியர்கள் தாஸ்வானி, பர்ச்சானி அவர்கள் கூறுவதுபோலச் சிந்தி மொழி தக்கவைப்பு, இழப்பு குறித்து ஆய்வுமுறைச் செறிவு நிறைந்த விரிவான ஒரு ஆய்வு தேவை என்ற கூற்றினைக் கூறி இந்தப் பகுதியை நிறைவு செய்யலாம்.

6.2. பழங்குடியினர் மொழிகள்

இந்தியப் பழங்குடியினர் மொழிகள் பொதுவாக மொழி இழப்புக்கு உட்பட்டவை என்றும் அவை அழிந்தொழியும் நிலையில் உள்ளமொழிகள் (endangered languages) என்றும் மொழியியல் அறிஞர்களிடையே பரவலாகப் பேசப்பட்டு வரும் கருத்துக்களாகும் (Ekka 1979, Kubchandani 1983). மொழி இழப்பு என்று இந்த நிலைக்குப் பழங்குடியினர் இருமொழியமே முதன்மைக் காரணம் என்ற கருத்தும் எழுந்துள்ளது (Annamalai 1990). பழங்குடியினர் இருமொழியம் குறித்து இயல் 4.3 இல் கூறியதை நினைவுகூருங்கள். ஏறக்குறைய ஐம்பது விழுக்காட்டுப் பழங்குடியினர் (இந்திய மக்கள் தொகையில் இவர்கள் 7.76 விழுக்காட்டினர் 1961 ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பு) தமது பழங்குடியினர் மொழியல்லாத வேறு ஒரு மொழியையே) தங்கள் தாய்மொழியாக அறிவித்தது. பழங்குடியினரது இருமொழியம் நிலைத்த தன்மையற்ற இருமொழியம் என்பதைத் தெளிவாக்குகிறது என்றும், இதன் அடிப்படையில் பழங்குடியினர் பொதுவாகத் தங்களது மொழிகளை இழக்கும் நிலையில் உள்ளனர் என்ற கருத்தும் வலுப்பெற்றுள்ளன.

இந்தியப் பழங்குடியினரது இருமொழியம் மற்றும் நிலையா இருமொழியம் என்ற கருத்தைக் கருதுகோளாகக் கொண்டு இப்பகுதி, இந்தியப் பழங்குடியினரது மொழிச்சூழல், மொழி இழப்புக்கு வித்திட்டுள்ளதா, வித்திட்டிருந்தால் எந்த அளவிற்கு என்பதை இனி, ஆராயும்.

இந்தியப் பழங்குடியினர் மொழி ஆய்வு, மொழிக்கல்வி ஆய்வு போன்ற துறைகளில் இந்நூலாசிரியர் பெற்றுள்ள அனுபவங்களின் வழியாகவும் மற்ற மொழியியல் வல்லுநர்களது

ஆய்வு முடிவுகளின் அடிப்படையிலும் இக்கருதுகோள் சோதிக்கப்படுகிறது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்துவரும் பழங்குடியினர் தங்களது மொழியை இழக்கின்றனர் அல்லது தக்கவைத்துக் கொள்கின்றனர் என்பதும் இழப்பு நேரிட்டால் எந்தச் சூழலில் மொழி இழப்பு நேரிடுகிறது, இழப்பிற்கான காரணிகள் எவை என்பதும் இப்பகுதியில் ஆராயப்படுகின்றன.

6.2.1 நாகலாந்து மொழிகள்

நாகலாந்து மாநிலத்தில் ஏறக்குறைய 23 பழங்குடி இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் பேசும் 23 மொழிகளில் 18 மொழிகள் தாய்மொழிக் கல்விக்காக நாகலாந்து மாநில அரசால் அங்கீகாரம் பெற்றுள்ளன. இம்மொழிகள் திபெத்திய-பர்மிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை (Tibeto- Burman). நாகலாந்தின் மொழிகளைப் பேசுவோரது மக்கட் தொகை, மொழிக்கு மொழி வேறுபடுகிறது. குகி என்ற மொழி பேசுவோர் 1,175 ஆக இருக்க, கொன்யாக் என்ற மொழி பேசுவோரது மக்கட்தொகை 72,338 ஆக உள்ளது. நாகர்களில் பெரும்பாலோர் தங்கள் தாய்மொழியை மாத்திரமே பேசும்திறன் உள்ளவர்களாகவும், நிலப்பரப்பில் அடுத்து வாழும் வேறொரு நாகக் கூட்டத்தினர் பேசும் இன்னொரு நாகமொழியில் மொழித்திறன் அற்றவர்களாகவும் உள்ளனர். ஒரு நாகமொழியினர் இன்னொரு நாகமொழியினரோடு பேசிக்கொள்ள நாகாமிஸ் (Nagamese) அல்லது நாகாபிட்ஜின் (Nagapidgin) என்கிற பொதுமொழியே (lingua franca) பயன்படுகிறது. இம்மொழி எழுதப்படுவதில்லை. ஆங்கிலமொழி இந்த மாநிலத்தின் ஆட்சிமொழியாகும். பொதுவாகப் படித்தவர்கள் தங்கள் தாய்மொழி தவிர இந்தி மற்றும் ஆங்கிலத்தில் திறன் உள்ளவர்களாக இருக்கின்றனர்.

நாகலாந்து மாநிலத்தின் எழுத்தறிவு விகிதம் 61.3 விழுக்காடு ஆகும் (1991 மக்கட்தொகைக் கணகெடுப்பு). அங்கீகரிக்கப்பட்ட நாகமொழிகள் ஒவ்வொன்றையும் அரசினர் பள்ளிகளில் கற்கவும் நாகமொழிகள் மூலமாகப் பாடங்களைக் கற்கவும் வாய்ப்புகள் உள்ளன. ஒவ்வொரு நாக மொழியையும் வளர்ப்பதற்கென்று அரசு சாராத தன்னார்வக் குழுக்கள் இலக்கியக்கழகம் (Literature society) என்ற பெயரிலே இயங்குகின்றன. பல நாகமொழிகள் கிருத்துவ மதப் பிரார்த்தனைக்குப் பயன்படுகின்றன. நாகமொழிகளில் உள்ள விவிலிய நூல்களைப் படிப்பதற்காக நாகமொழிகள், மாதா கோவில்களிலேயே தொடக்க நிலையில் கற்பிக்கப்படுகின்றன. நாகர்கள் எழுத்தறிவு பெறுவது முதலில் அவரவர் நாகமொழியிலேயே என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

நாகர்களது இருமொழியமான நாகத்தாய்மொழி- நாகமிஸ் அல்லது நாகலாந்தில் நிலவும் பன்மொழிச் சூழலால் ஏற்பட்டுள்ள பன்மொழியமான நாகத்தாய்மொழி, நாகமிஸ், இந்தி, ஆங்கிலம் இவை எதுவுமே நாகமொழி இழப்புக்கு வித்திடவில்லை என்றே கூறலாம். நாகர்கள் தங்களது மொழி, பண்பாடு குறித்து உயர்வு மனப்பான்மை கொண்டிருப்பதாலும் ஒவ்வொரு நாகமொழியுமே அரசு மற்றும் அரசுத்துறை சாராத நிறுவனங்களால் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்படுவதாலும் இந்தப்பாதுகாப்பு முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஏற்றவகையில் நாகலாந்து மாநிலம் தனிமாநிலமாக அரசியல் செல்வாக்கோடு திகழ்வதாலும் மொழி இழப்பு நேர்வதற்கான சாத்தியக் கூறுகள் பொதுவாக இங்கு இல்லை எனலாம்.

6.2.2 கார் நிகோபாரிய மொழி

அந்தமான் நிகோபார் தீவுகளில் பேசப்படும் கார்நிகோபாரிய மொழி ஆஸ்திரோ ஏசியாடிக் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பழங்குடியினர் மொழியாகும். கார்நிகோபார் தீவில் வாழ்பவர்களில் 95 விழுக்காட்டினர் கார்நிகோபாரிய மொழி பேசும் பழங்குடியினர். இவர்கள் கிருத்துவ மதத்தைச் சேர்ந்தவர்கள். அந்தமான் நிகோபார் தீவுகளின் தலைமைப் பாதிரியார் (Bishop) கார்நிகோபாரிய மொழி பேசும் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர். கார்நிகோபாரியமொழி பேசும் இப்பழங்குடி இனத்தவரது சமூக, அரசியல், பொருளாதார வளர்ச்சிப் பணிகளுக்கான அதிகாரம் கிருத்துவ தலைமைப் பாதிரியாரிடம் உள்ளது. கார்நிகோபாரியமொழி வளர்ச்சிப் பணிகள் தலைமைப் பாதிரியாரின் ஒப்புதல் மற்றும் அங்கு வாழும் உள்ளூர்மொழி அறிஞர்களின் வழிகாட்டலோடுதான் பொதுவாக நடைபெறுகிறது. அரசுப்பள்ளிகள் தவிர, மாதாகோவில்களும் கார்நிகோபாரிய மொழியைக் கற்றுத்தருகின்றன. மைய அரசின், இந்தியமொழிகள் நடுவண் நிறுவனம், மொழிப்பாட நூல்களைத் தேவநாகரி, ரோமன் என்று இரண்டு எழுத்து முறைகளில் தயாரித்திருந்தபோதும் அவர்கள் ரோமன் எழுத்து முறையிலேயே கார்நிகோபார் மொழியை எழுதப்படிக்கக் கற்கின்றனர். அந்தமான் நிகோபார் தீவுகளின் பொதுமொழியான இந்தி மொழியைப் பேசும்திறன் கொண்டவர்கள் பள்ளிகளில் இந்தி மொழி கற்கின்றனர். கார்நிகோபார் - இந்தி இருமொழியத்தால் கார்நிகோபாரிய மொழி, அழிவைச் சந்திக்கவில்லை.

கார்நிகோபாரிய மொழி தக்கவைப்பின் காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. தம் தாய்மொழி கார் நிகோபாரிய மொழி குறித்துப் பழங்குடியினரிடையே பெருமித உணர்வு உள்ளது.

2. நிறுவனங்களின் பாதுகாப்பு உள்ளது. தலைமைக் கிருத்துவ மதபோதகர் கார்நிகோபார் தீவுகளின் வளர்ச்சி, பழங்குடியினரின் வளர்ச்சி, மொழி வளர்ச்சி ஆகியவற்றில் கொண்டுள்ள தலைமைப் பங்கு ஒரு காரணம். இன்னொன்று அந்தமான் அரசு. இந்திய மொழிகளின் வளர்ச்சி, பாதுகாப்பு ஆகியவற்றுக்காகப் பணிபுரியும் மைசூர் இந்தியமொழிகளின் நடுவண் நிறுவனம் போன்ற நிறுவனங்களின் வழிகாட்டுதலோடு கார்நிகோபாரிய மொழிக்கல்வியைப் பள்ளி அளவில் ஊக்கப்படுத்துகிறது. அரசின் இந்த ஊக்குவிப்புக்குக் காரணம் கார்நிகோபார் தீவுகளின் வளர்ச்சி குறித்த அதிகாரம் தலைமைப் பாதிரியாரிடம் உள்ளதுதான். இத்தீவும் ஏனைய நிகோபார் தீவுகளும் ஏறக்குறைய நாகலாந்து மாநிலம் போல ஒரு தன்னாட்சி முறை கொண்டவை எனலாம்.

3. கார்நிகோபாரிய மக்களது எழுத்தறிவு முதலில் தங்களது பழங்குடியினர் தாய்மொழியில்தான் தொடங்குகிறது. வேறு பல பழங்குடியினர் மொழிச்சூழல்களில் தங்களது எழுத்தறிவு முதலில் (முதலும் கடைசியுமாகக் கூட) மாநில அதிகார வலிமை கொண்ட இரண்டாவது மொழியில் தான் தொடங்குகிறது.

6.2.3 மஹல் மொழி

அரபிக்கடலில் உள்ள இலட்சத் தீவுகளில் ஒன்றான மினிகாய் என்ற தீவில் வாழும் முகமதிய இனத்துப் பழங்குடியினர் பேசும்மொழி மஹல்- என்பதாகும். இத்தீவில் இவர்களே பெரும்பான்மையினர் (மக்கட் தொகை: 5035, 1971 மக்கட்தொகைக் கணக்கெடுப்பு) மஹல் மொழி, வரலாற்றுக் காலத்தில் சிங்கள மொழியிலிருந்து பிரிந்த ஒரு இந்தோ ஆரிய மொழியாகும். நாகமொழிகளைப்போலவும் கார்நிகோபார் மொழியைப் போலவும் மஹல் மொழியும் அரசு மற்றும் மதநிறுவனங்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்படுகிறது. மினிகாய் தீவுக்கு அருகில் தான் அயல்நாடான மாலத்தீவுகள் (Maldives) உள்ளன என்பதையும் இத்தீவுகளில் உள்ள முகமதிய மக்கள் பேசும் மொழியும் மஹல் மொழிதான் என்பதையும் இங்கே குறிப்பிடவேண்டும்.

இலட்சத் தீவுகளின் பொதுமொழி இலட்சத்தீவு மலையாளம் என்பதால் இப்பழங்குடியினர் மஹல், மலையாளம்

என இருமொழியாளர்களாக உள்ளனர். மஹல், மலையாளம், இந்தி, அரேபியம் எனச் சிலர் பன்மொழியாளர்களாகவும் உள்ளனர். இவர்களது இருமொழியம் தாய்மொழியான மஹலை இழக்கச் செய்யவில்லை. நாகாலாந்துமொழிகள், கார்நிகோபாரிய மொழி ஆகியவற்றின் சூழலுக்குரிய ஏறக்குறைய அதே காரணங்களும் வேறுசில காரணங்களும் தான் மஹல் மொழி இழப்பு நேராததற்கான காரணங்களாகும். அக்காரணங்கள் வருமாறு:

1. இவர்கள் தம் பழங்குடியினர் தாய்மொழி மஹல் குறித்த உயர்வு மனப்பாங்கு கொண்டுள்ளவர்கள். இத்தீவுக்கு அருகில் உள்ள அண்டை நாடான மாலத்தீவுகளில் இதே மொழி மஹல் பேசப்படுவதோடு ஆட்சி அதிகார, கல்வி வலிமை பெற்ற மொழியாகவும் உள்ளது. மினிகாய் தீவில் பணிபுரியும் ஆசிரியர்கள் தங்களது மஹல் மொழி உயர்கல்விக்காக அரசின் அங்கீகாரத்தோடு மாலத்தீவுகளுக்குச் சென்று வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

2. இவர்களது எழுத்தறிவு முதலில் தங்களது தாய்மொழியான மஹல் மொழியில் தான் மதநிறுவனமான மகுதி மூலம் தொடங்குகிறது. (இங்கு அரேபிய மொழியும் கற்றுத் தரப்படுகிறது. குறிப்பாக மதநூல்களைக் கற்பதற்கு).

3. இவர்கள் எழுத்தறிவு: ஆண்களுடைய எழுத்தறிவு உயர்ந்த விழுக்காட்டைக் கொண்டுள்ளது. (பெண்களது எழுத்தறிவு விகிதம் குறைவு).

4. இவர்களது பொருளாதார நிலை ஏறக்குறைய உயர் மத்திய தரத்தினரது நிலையோடு ஒத்துள்ளது. வீட்டுக்கு ஒருவராவது வெளிநாட்டுக் கப்பல்களில் பணிபுரிபவராக உள்ளனர். இயல்பாகவே இவர்களுக்குக் கடல் பயண மயக்கம் (Sea sickness) வருவதில்லை. அதனால் வெளிநாட்டுக் கப்பல் கம்பெனியினர் இவர்களைக் கப்பல்களில் பணிக்கு அமர்த்திக் கொள்கின்றனர்.

5. இவர்கள் மலையாள இருமொழியாளர்களாக இருந்தால் கூட மலையாள மொழி மீதும் மலையாளம் பேசுபவரோடும் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களாக உள்ளனர். (இது, நூலாசிரியர் மஹல் மொழி பேசுபவர்களோடு மினிகாய் தீவுகளில் பல மாதங்கள் தங்கியிருந்து பணியாற்றியபோது நேரடியாகக்

கண்டுணர்ந்ததாகும். சமுதாய மொழியியல் கோட்பாட்டிற்கேற்ப மொழி பேசுபவரோடு பழகி வினாக்கள் தொடுத்துக் கண்டறியும் ஒருமுறையாகும் இது). மலையாள மொழி குறித்த இந்த மிகைப்பட்ட இழி மனப்பாங்கு கூட இவர்களது மொழிதக்கவைப்புக்கு ஒரு உந்துதல் காரணியாக இருக்கலாம். இன்னொன்று பழங்குடியினர் பலரிடையே வெளியாட்கள், (பொதுவாக அவர்கள் அரசு அலுவல் புரிபவர் அல்லது வணிகர்கள்) தங்களது பொருளாதார வளத்தைச் சுரண்டுபவர்கள் என்ற மனப்பாங்கைக் கொண்டுள்ளார்கள். இந்த மனப்பாங்கின் விகிதம் மஹல் மொழிச் சூழலில் அதிகம் உள்ளதாகக் காணப்படுகிறது. இந்த நிலை கார்நிகோபாரிய மொழிச் சூழலிலும் காணப்பட்டாலும் கார்நிகோபார் தீவுகளின் தன்னாட்சி முறை போன்ற ஒன்றால் பிறமொழியினர் மீதுள்ள வெறுப்பு கார்நிகோபாரிய மொழி பேசுபவர்களிடையே அதிகமாக இல்லை எனலாம்.

நிலப்பரப்பில் இவர்களே பெரும்பான்மையினராக இருப்பதால் இந்த நோக்கில் இவர்களது மொழிகளைச் சிறுபான்மையினர் மொழிகள் என்ற சொற்றொடரால் குறிப்பதும் விவாதத்திற்குரியதாகிறது. இவர்களது இருமொழியம் நிலைத்த இருமொழியாக உள்ளது. இந்தியப் பழங்குடியினர் பெரும்பான்மையோராக ஒரு நிலப்பரப்பில் அரசியல் அல்லது நிறுவனங்களின் ஆதரவோடு வாழும்போது அவர்கள் பேசும்மொழி பாதுகாக்கப்படுகிறது. மொழி அழிவு நேர்வதில்லை எனலாம்.

6.2.4 நீலகிரிப் பழங்குடியினர் மொழிகள்

தமிழ்நாட்டின் நீலகிரிப் பழங்குடியினர் தோடர் (675 பேர்), கோத்தர் (1178பேர்), குறும்பர் (2466 பேர்) பணியர், (5809 பேர்) எனப் பலதரப்பட்டவராக வாழ்கின்றனர். அவர்கள் பேசும் மொழிகளான தோடமொழி, கோத்தமொழி, இருளமொழி, பணியமொழி முதலியன திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை. இப்பழங்குடியினர் வாழும் நிலப்பரப்பு தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம் என மூன்று மாநிலங்களையும் சேர்ந்ததாக உள்ளதால் தமிழ், கன்னடம், படகமொழி, மலையாளம் போன்ற மொழிபேசும் மக்கள் கூட்டத்தினரது தொடர்போடும் அவர்கள் பேசும் மொழிகளின் தொடர்போடும் வாழ்கிறார்கள். நீலகிரிப் பழங்குடியினரது இருமொழியம் (பன்மொழியம்) பழங்குடியினர் மொழி, வேறு ஒரு பழங்குடியினர் மொழி, தமிழ் அல்லது

கன்னடம் அல்லது மலையாளம், படகமொழி என்றே அமையும். நீலகிரிப் பழங்குடியினரது ஒட்டுமொத்த எழுத்தறிவு விகிதம் பொதுவாக இந்தியப் பழங்குடியினரது ஒட்டுமொத்த எழுத்தறிவு விகிதமான 11.29 விழுக்காட்டைவிட அதிகமாக உள்ளது. (தோட மொழியினர் 36 விழுக்காடு, கோத்தமொழியினர் 40 விழுக்காடு, குறும்ப மொழியினர் 18 விழுக்காடு, இருளமொழியினர் 21 விழுக்காடு, பணிய மொழியினர் 5 விழுக்காடு : 1971 மக்கட்தொகைக்கணக்கெடுப்பு).

அரசுத் துறையினரது அரவணைப்பு எதுவும் இவர்களது மொழி தக்கவைப்பிற்கு உதவவில்லை எனலாம். அரசு சாராத தன்னார்வ நிறுவனங்கள் சில கூடலூரில் 'அக்கார்டு' போன்றவை மொழி இழப்பு நேராமல் இருப்பதற்கு மறைமுகமாக உதவுகின்றன எனலாம். பழங்குடியின மக்கள் தங்களது பூர்வீக நிலப்பரப்பை விட்டு வேறு இடங்களுக்குச் செல்லாத வண்ணம் நிலப் பெயர்ச்சியிலிருந்து தடுப்பது (நிலப் பெயர்ச்சி நேரிடும்போது பல சமயங்களில் மொழி இழப்பும் நேரிடுகிறது.), பழங்குடியினரது மரபு சார்ந்த அறிவைப் பாதுகாப்பது, பழங்குடியினர் தம்மீது அவநம்பிக்கையின்றி, பெருமையும் நம்பிக்கையும் கொண்டு மற்றவர்களோடு குறிப்பாக நிலத்தைக் கையகப்படுத்துபவரோடு போராடவைப்பது - போன்ற செயல்பாடுகளின் ஊக்குவிப்பு மொழி இழப்பை நேராமல் காப்பதற்கு உதவுகின்றன எனலாம். பழங்குடி மொழியினர் எழுத்தறிவின் தாக்கம் அதிகம் கொண்டவராக இருப்பின் அவர்கள் தங்கள் தாய்மொழியை இழந்து விடுவதற்கான சாத்தியக்கூறுகளை அதிகம் கொண்டவராக இருப்பர் என்பது மொழியியல் அறிஞர்களது நம்பிக்கை (Asher 1994). (இந்தியாவில் பழங்குடியின மொழி பேசுவோருக்கு எழுத்தறிவு, பெரும்பாலும் அவர்கள் தாய்மொழி அல்லாத மாநிலப் பெரும்பான்மையோர் மொழிகளில் தான் கிடைக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது). இது நீலகிரிப் பழங்குடி மொழிகளைப் பொறுத்தவரையில் முற்றிலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய கருதுகோளாக அமையவில்லை எனலாம். மொழி இழப்பு இங்கு அருகிக் காணப்படுவதாகத் தோன்றுகிறது. (இது தொடர்பாக நிகழ்த்தப்பட்ட குறும்ப முன்னோடிக் கள ஆய்வின் விவரங்களை இயல் 7 இல் காணலாம்.)

ஆனால் கிருத்துவ மதம் சார்ந்த தோடர்களிடையேயும் கஸபர் சிலரிடையேயும் மொழி இழப்பு நேர்த்துள்ளமை சில ஆய்வுகள் மூலமாக (Perialwar 1995, Mullie 2009), நாம் அறிந்து கொள்ளமுடியும்.

ஏறக்குறைய 50 ஆண்டுக் காலமாகக் கிருத்துவத் தோடர்களுக்குத் தங்கள் இனம், மதம் சார்ந்த மணமகள் கிடைக்காததால் பழங்குடியினர் இனமல்லாத தாய்மொழி தமிழ் அல்லது மலையாளம் அல்லது கன்னடமொழி பேசும் கிறித்துவப் பெண்களை மணக்கவேண்டிய நிலைக்கு உட்பட்டுள்ளனர். மணவாழ்க்கைக்குப் பிறகு வீடுகளில் தோடமொழியைப் பயன்படுத்தமுடியாத சூழல் உருவாக அதன் காரணமாக இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அதாவது அடுத்த சந்ததியினர் தோடமொழி இழப்புக்கு உள்ளாகின்றனர். இதுபோல, வேறுமொழி பேசும் பழங்குடி இனத்தில் பெண் எடுப்பதால் கசபமொழி இழப்பு நேரிடுகிறது.

6.2.5 மத்திய இந்தியாவின் மொழிகள்

6.2.5.1 குடுஃக் மொழி

மத்திய இந்தியாவில் பழைய சோடாநாக்பூர் பகுதியில் வாழும் ஒராவோன் (Oroan) என்னும் பழங்குடியினர் பேசுவது திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த வடதிராவிட மொழியான குடுஃக் (kUrUX) என்பதாகும். இப்பகுதியில் இப்பழங்குடியினர் ஆஸ்டிரோ ஏசியாடிக் மொழி பேசும் பழங்குடியினர் அல்லாதோருடனும் கலந்து வாழ்கின்றனர். 1961 மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி குடுஃக் பேசும் பழங்குடியினரின் மொத்த மக்கட்தொகையில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பகுதியினர் தங்களது குடுஃக்மொழியை இழந்துவிட்டனர் (Ekka, 1979). வேலைவாய்ப்பு போன்ற பொருளாதாரக் காரணங்களால் காலங்காலமாக நேரிடும் இடப்பெயர்ச்சியானது, பழங்குடியினரது சமூகப்பண்பாட்டு நெறிமுறைகளைக் காக்கும் நிறுவனங்களான இளைஞர் குடில்கள் போன்றவற்றின் அழிவுக்குக் காரணமாக அமைகிறது. தொடர்ந்து, பண்பாட்டின் ஒரு கூறான பழங்குடியினர்மொழி, இடப்பெயர்ச்சியின் விளைவால் எதிர்கொண்ட மாநில அதிகார மொழியின் வலிமையால் அழிந்து படுகிறது எனலாம். மொழி இழப்பு இப்பழங்குடியினரிடையே தற்காலத்தில் வேகமாகப் பரவிக் கொண்டிருப்பதாக உணரப்படுகிறது. (Gnanasundaram and Elangaiyan 2000). இக்காரணங்களால், குடுஃக் பழங்குடியினமொழியினரது இருமொழியம் நிலையா இருமொழியம் எனலாம். (குடுஃக் மொழி தொடர்பான சில செய்திகள் இயல் 1 இல் தரப்பட்டுள்ளதை நினைவுகூருங்கள்.)

6.2.5.2 மத்திய இந்தியாவின் இதரமொழிகள்

உலக ஐக்கிய நாடுகளின் (UNO) ஆவணம் ஒன்று உலகில் 5000 மக்கட் தொகைக்கும் கீழே உள்ள மொழிகள் இன்னும் ஒரு

நூற்றாண்டிற்குள் அழிந்து விடும் என்று ஓர் எச்சரிக்கைக் குறிப்பைக் கொடுத்துள்ளது. மத்திய இந்தியாவில் 5000 மக்களுக்கும் குறைவான மக்களால் பேசப்பட்டு வரும் குறிப்பாக, முண்டா மொழிக் குடும்ப, திராவிட மொழிக் குடும்ப மொழிகளில் பல, எடுத்துக்காட்டாகப் போடோ (ரெமோ) குதுப், கதபா, பரங்கி, கோரும், (முண்டா மொழிக் குடும்ப மொழிகள்) இண்டி ஆவே (திராவிடம்) ஆகியவை இது நாள் வரையிலும் மொழி இழப்பைச் சந்திக்கவில்லை. ஜார்ஜ் வேன்டிரியம், 2004) என்பவர் தெற்கு ஆசியமொழிகள் என்ற தலைப்பில் எழுதியுள்ள தனது கட்டுரையில் (Mosley, 2004 283 - 347) மத்திய இந்தியாவில் பேசப்படும் திராவிட, முண்டா மொழிகள் அழிவை நோக்கி நகர்ந்து கொண்டுள்ள மொழிகள் என்கிறார்.

6.2.6. அந்தமானிய மொழி[2]

அந்தமான் நிகோபார் தீவுகள், இந்தியாவிற்குத் தென்கிழக்குப் பகுதியில் வங்காள விரிகுடாவில் நிலைபெற்றுள்ள தீவுகள் ஆகும். இந்தத் தீவுகளின் மொத்த நிலப்பரப்பு 630 சதுர கிலோமீட்டர். அந்தமான் தீவுகளையும் தெற்கே உள்ள நிகோபார் தீவுகளையும் பிரிப்பது இடையே கடலில் ஊடாடியிருக்கும் பத்து டிகிரிக் கால்வாய் ஆகும். அந்தமான் நிகோபார் தீவுகள் கிரேட் அந்தமான் தீவுகள் (Great Andaman Islands) என்றும், சிறிய அந்தமான் தீவுகள் என்றும் பிரிந்துள்ளன. சிறிய அந்தமான் தீவுகளில் ஓங்கே என்ற பழங்குடியினர் (100 பேர் 1991 ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பு) வாழ்கின்றனர். பெரிய அந்தமான் தீவுகளில் தெற்கு அந்தமான் பகுதியிலும் எட்லாந்து தீவுகளிலும் ஜாரவா என்ற பழங்குடியினரும் வடக்கு அந்தமான் பகுதியில் சென்டினல் என்ற பழங்குடியினரும் ஸ்டிரெய்ட் அயலண்டு என்ற பகுதியில் அந்தமானியர் என்ற பழங்குடியினரும் வாழ்கின்றனர். மானிடவியலார்கள் கூற்றுப்படி அந்தமான் தீவுகளில் வாழும் பழங்குடியினர் அனைவரும் (ஜாரவா, சென்டினலியர், அந்தமானியர்) தென் கிழக்கு ஆசியாவின் நீக்கிரிடோ இனத்தைச் சேர்ந்தவர்கள் (Pandit 1976: 81 -96) ஆவர். நிகோபார் தீவுகளில் வாழும் பழங்குடியினர் மங்கலாய்டு இனத்தைச் சேர்ந்தவர்கள். அந்தமானியர் நீக்கிராய்டு இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆங்கிலேய அரசு இந்தியாவில் அந்தமான் நிகோபார் தீவுகளின் தலைமை இடமான போர்ட் பிளேரில் அரசியல் மற்றும் அரசியல் சாரா ஏனைய குற்றவாளிகளுக்குத் தண்டனை தரும் நோக்கில் ஓர் இருப்பிடம் ஒன்றை 1858இல் உருவாக்கியது. இக்காலக்கட்டத்தில் அந்தமானியப் பழங்குடியினர் எண்ணிக்கை 5000 இலிருந்து 8000 வரை இருந்திருக்கலாம் என்பது ஓர் யூகம். இவர்கள் ஏறக்குறைய

கிரேட் அந்தமான் தீவுகள் அனைத்திலும் பரவலாக ஒரு காலத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். அப்போது கிரேட் அந்தமானியர் : (1) அகா சரி (2) அகா கொரா (3) அகா ஜெரு (4) அகா போ (5) அகா கெடே (6) அகா கொல் (7) ஒகு ஜூவோய் (8) அகா புசிக் வார் (9) அகா பியெ (10) அகா பலெ என்ற பத்து இனக்குழுக்களாக வாழ்ந்துள்ளனர். ஒவ்வொரு குழுவினரும் தங்களுக்கென்று ஒரு தனித்த பேச்சு வகையினைக் கொண்டிருந்திருக்கின்றனர்.

அந்தமானியரது மக்கள் தொகை, 19 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஆங்கிலேய அரசு இந்திய குற்றவாளிகளுக்கென்று தண்டனைக்கான இருப்பிடம் ஒன்றை உருவாக்கிய அந்த 1858ஆம் ஆண்டிலிருந்து வேகமாகக் குறையத் தொடங்கியது. அந்தமானியர் வாழ்ந்த பகுதிகளில் ஆங்கிலேயர் நிலக்கையகப்படுத்தம் செய்யத் தொடங்கிய போது ஆங்கிலேயச் சிப்பாய்களுக்கும், அந்தமானியப் பழங்குடியினருக்குமிடையே மூண்ட போர்களால், அந்தமானியர்கள் பெருமளவில் கொல்லப்பட்டனர். பின்னர் ஆங்கிலேயர்களுக்கும் அந்தமானியர்களுக்குமிடையே சமாதானம் ஏற்பட்டபோது அந்தமானியர்களுக்கு ஆங்கிலேயரோடும் பழங்குடியினர் அல்லாத இந்தியர்களோடும் பல பகுதிகளில் இருந்து வந்து குடியேறி வாழத்தொடங்கிய இந்தியர்களோடும் தொடர்பு ஏற்பட்டபோது அந்தமானியர், முதன்முறையாகப் புகையிலை, மது, கஞ்சா போன்றவற்றிற்குப் பழக்கமாகி அடிமையாயினர். மாத்திரமல்ல, பலவிதமான நோய்களையும் பழங்குடியினர் அல்லாத இவர்களிடமிருந்து புதிதாகப் பெற்றனர். 1868 இல் நிமோனியா காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளனர். 1876 இல் சிபிலிஸ் என்ற பால்வினை நோய்த் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். 1877 இல் அம்மை நோயைப் பெற்றுள்ளனர். 1892 இல் இன்புளூயன்ஸா என்ற சளிக்காய்ச்சலால் அவதிப்பட்டுள்ளனர். இவை அனைத்துமே அந்தமானியப் பழங்குடியினரில் பெரும் பகுதியினரைக் கொன்று குவித்துவிட்டன. (Awaradi 1990: 227). ஆங்கில ஏகாதிபத்தியத்தினரோடு நிகழ்ந்தபோர்களால் வாலிப வயது ஆண்கள் அழிந்தொழிந்தனர்.

எஞ்சியிருந்த அந்தமானியர்கள் தாங்கள் காலங்காலமாகப் பின்பற்றிவந்த பழங்குடியினர்க்கே உரிய தங்கள் வாழ்வியல், பண்பாட்டு முறைகளை விட்டுவிடத் தொடங்கினர். புதிய பழக்க வழக்கங்களை மேற்கொண்டனர். புதிய உணவுப்பழக்கம், புதியதாக உடை உடுத்தும் பழக்கம் ஆகியவை இவர்களது உடல் நலத்தைச் சீரழித்தன. எடுத்துக்காட்டாக வேட்டையின் பொருட்டுக் காட்டுக்கோ கடலுக்கோ செல்லும் போது தாங்கள்

அணிந்திருக்கும் ஆடை மழையினால் நனைய அதைக் கழற்றி மாற்றிக் கொள்ளவேண்டும் என்ற பட்டறிவு இல்லாத காரணத்தால் மார்புச்சளிநோய் மற்றும் நுரையீரல் சார்ந்த நோய் தாக்கி, பின் அவதிப்பட்டு இறந்துள்ளனர். ஜப்பானியர்கள் இரண்டாம் உலகப்போரின் போது 1942 மார்ச்சு மாதத்திலிருந்து 1942 அக்டோபர் வரை அந்தமான் தீவுகளைத் தங்கள் வசமாக்கிக் கொண்டபோது இந்த அந்தமானியப் பழங்குடியினரில் பலரை, ஆங்கிலேயரது உளவாளிகள் என்று தவறுதலாகச் சந்தேகப்பட்டு, கொன்று குவித்துள்ளனர். நூற்றாண்டு வாரியான அந்தமானியப் பழங்குடியினரது அழிவைப் பின்வரும் அட்டவணைகள் தெளிவாக்கும்.

அட்டவணை 9

அந்தமானியரது மக்கட் தொகை அழிவு

ஆண்டு	1901	1911	1921	1931	1951	1961	1961	1971	1988	1998
மக்கட் தொகை	625	453	209	90	23	19	24	23	28	35

1901 முதல் 1971 வரையிலான மக்கட்தொகை விவரம், இந்தியமக்கட் தொகைக் கணக்கு விவரணை (Census of India) யைச் சார்ந்தது 1975, 1988, 1998 ஆண்டுகளுக்கான மக்கட்தொகை விவரம் கள ஆய்விலிருந்து பெறப்பட்டது.

அட்டவணை 10

அந்தமானிய மக்கட் தொகை அழிவு: இனக்குழு மற்றும் வயதானோர்-குழந்தைவாரியாக

	1901			1911			1921			1975
	வயதா	குழந்தை	மொத்தம்	வயதா	குழந்தை	மொத்தம்	வயதா	குழந்தை	மொத்தம்	
அகா - சரி	31	8	39	26	6	32	15	2	17	4
அகா-கொரா	63	33	96	57	18	78	36	12	48	1
அகா-போ	31	17	48	40	22	62	12	5	17	6
அகா-ஜெரு	178	40	218	143	37	180	84	17	101	11
அகா-கெடெ	54	5	59	28	4	32	16	0	16	0
அகா-கொல்	8	3	11	2	0	2	0	0	0	0
ஒகோ-ஜூவாய்	40	8	48	9	0	9	5	0	5	0
அகா-புசிக்வார் (போஜிக்யா)	45	5	50	33	3	36	8	1	9	0
அகா- பலெ	15	4	19	14	1	15	4	0	4	0
அகா-பியெ	30	7	37	9	1	10	0	1	1	1
மொத்தம்			625			453			209	23

1901 இலிருந்து 1911க்கானவை இந்திய மக்கட்தொகைக் கணக்கெடுப்பிலிருந்து பெறப்பட்டுள்ளன. (Chakraborty 1990). 1921ஆம் ஆண்டுக்குப் பிறகு மக்கட்தொகை எண்ணிக்கை குழுவாரியாக கணக்கிடப்படவில்லை.1975க்கான எண்ணிக்கை கள ஆய்வுக் குறிப்பிலிருந்து பெறப்பட்டது.

பல தீவுகளில் சிதறிக்கிடந்த அந்தமானியர்களது மக்கட்தொகை 19 ஆகக் குறைந்தபோது (1961 மக்கட்தொகைக் கணக்கெடுப்பு) இந்திய அரசு இதுபோன்ற மிகப்பழமையான பழங்குடியினங்களை அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் பல சிறு தீவுகளில் சிதறிக் கிடந்த அந்தமானியர், எல்லாரையும் ஒன்று திரட்டி 1970 ஆம் ஆண்டில் தெற்கு அந்தமானில் ஸ்டிரெய்ட் அயலண்டு என்ற ஒரு சிறிய தீவில் குடிபெயர்த்தினர். அந்தமானியர், தங்குமிடம் (வீடு) உடை, உணவு, மருந்துகள் எல்லாம் இலவசமாகப் பெற்றனர். இந்த 19 அந்த மானியரும் ஜெரு, கோரா, போ, சரி மற்றும் பல் வா என்ற 5 இனக்குழுக்களோடு ஆங்கில ஏகாதிபத்தியத்தினரால் ஏற்கெனவே அந்தமானுக்குக் கூலி வேலை செய்யக்கொண்டு வரப்பட்ட பர்மாவைச் சேர்ந்த கரண், இந்தியாவின் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த ஓராவோன் (அந்தமானில் இவர்கள் ராஞ்சிக்காரர் என்று அழைக்கப்படுகின்றனர்) ஆகியோர் அந்தமானியர்களோடு இணைந்து வாழ்ந்தனர். இந்திய அரசினரது பழங்குடியினர் பாதுகாப்பு என்ற கொள்கை, அந்தமானியரது மக்கட் தொகைப் பெருக்கத்துக்கு ஓரளவிற்கு உதவியது எனலாம். இதற்குச் சான்றாகப் பின்வரும் அட்டவணை உள்ளது.

அட்டவணை 11

1998 ஆம் ஆண்டில் அந்தமானியரது மக்கட் தொகை

வயது (ஆண்டுக் கணக்கு)	ஆண்	பெண்
0-4	2	1
5-9	2	1
10-14	2	3
15-24	3	4
25-44	6	5
45-54	1	0
55-64	1	2
65 உம் 65க்கு மேலும்	1	1
	மொத்தம்	35

வயது மற்றும் பால் வேறுபாடு நிலைகளில் தரப்பட்டுள்ளது. இவை கள ஆய்வின் மூலம் பெறப்பட்டவை.

அந்தமானிய மொழி மக்கட்தொகைக் கணக்கெடுப்பு ஏட்டில், அந்தமானிய மொழி குறித்த குறிப்பு ஒன்று உள்ளது. இது எந்த ஒரு மொழிக்குடும்பத்திலும் (இந்தியாவின் 4 மொழிக்குடும்பங்கள் எதிலும்) சேராத ஒரு மொழி (Nigam 1972:8): பிரவுன் என்பவர் (Brown 1948:495) அந்தமானிய மொழிகள் உலகின் எந்த ஒரு மொழிக்குடும்பத்தின் கூறுகளையும் கொண்டிராமல் தனியாக ஒரு மொழிக் குடும்பமாக ஆகும் நிலையில் உள்ளன என்கிறார். கிரேட் அந்தமான் தீவுகளில் பேசப்பட்ட இந்த அந்தமானிய வகைகளும் (மொழி வகைகளோ அல்லது கிள்ளமொழி வகைகளோ எதுவாயினும்) ஒன்றோடு ஒன்று ஒத்த மொழி உறவு கொண்டவைகளாக உள்ள இவைகளில் பல அழிந்து விட்டன அந்தமானிய மொழி என்ற வகை மாத்திரம் எஞ்சியுள்ளது: தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் அந்தமானி ; மொழி பேசுவோர் இப்போது தாங்கள் பேசும் மொழி ஜெரு வகையைச் சேர்ந்தது என்கின்றனர். ஆனால் (Manoharan 1989, Manoharan & Gnanasundaram, 2007) இன்றைய அந்தமானிய மொழி ஏற்கெனவே அழிந்து போன பல அந்தமானிய வகைகளின் கலப்புமொழி; இந்தக் கலப்பில் ஜெரு வகைக்கூறுகளின் விழுக்காடு அதிகம் என்கின்றனர். அந்தமானியரது மக்கட்தொகையின் சுருக்கத்தால் இவர்களது திருமண உறவு முறையில் இப்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. திருமணத்திற்காக முன்னோர் கடைபிடித்த விதிமுறைகளை இப்போது இவர்கள் பின்பற்றுவதில்லை.

6.2.6.1 அந்தமானியரது இருமொழியம்

அந்தமான் நிகோபார் தீவுகளின் பொதுமொழி இந்தி. அங்கு வாழும் பன்மொழியாளர் எல்லோரும் இந்தி பேசுவர். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து வந்து அந்தமானைத் தாயகமாகக் கொண்டவர்களிடமும், அரசு அதிகாரிகளுடனும் அந்தமானியப் பழங்குடியினர் தொடர்பு கொண்டிருப்பதால்

இவர்கள் பொதுவாக இந்தி இருமொழியாளர்களாக உள்ளனர். இவர்களது சமூகத் தேவைகளுக்கும், மாறி விட்ட பண்பாட்டுப் பழக்கங்களுக்கும், மாறிவிட்ட தங்கள் பணிமுறைகளுக்கும் இப்போது இவர்களுக்கு இருமொழியம் தேவைப்படுகிறது. இவர்களது அடிப்படைத் தேவைகளான உணவு, உடை எல்லாமே அரசு மூலமாகவோ அல்லது தங்கள் வாழுமிடத்திலிருந்து அடுத்துள்ள போர்ட் பிளேர் நகரக் கடைகளில் இருந்தோ பெறுகின்றனர். இந்தி மொழியைப் பயன்படுத்தித் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்றனர். இவர்களது உணவுப் பழக்கம் மாறிவிட்ட நிலையில் அரிசி, கோதுமை, சமையல் எண்ணெய் (கடைகளில் விற்கப்படும்) காய்கறிகள், இறைச்சி, மீன் போன்றவைகளை வாங்கிக் கொள்கின்றனர். எப்போதாவது கடலுக்குச் சென்று மீன் மற்றும் கடல் ஆமை போன்றவற்றை வேட்டையாடிப்பிடித்து உண்பர். இருப்பிடத்திற்கு அருகில் உள்ள கம்பிவேலியில் அவ்வப்போது சிக்கிகொள்ளும் மானைப் பிடித்து மான்கறி உண்பர். அவர்கள் பயன்படுத்தும் பாத்திரங்களான தவா, கடாய், படீலா, எல்லாமே இந்திமொழிச் சொற்கள். அவர்கள் உடுத்தும் உடைகளைக் குறிக்கும் சொற்களான சல்வார், கமீஸ், லுங்கி இவையும் இந்திச் சொற்கள். மேலும் சபாதி, சப்ஜி, புனானா 'பொறித்தல்', சேகானா 'வறுத்தல்' போன்ற இந்திச் சொற்களும் ஆங்கிலம் வழியாகப் பெற்ற இந்திச் சொற்களான சாரி 'புடவை' சர்ட் 'சட்டை' பேன்ட் 'கால் சட்டை' போன்றவையும் அவர்களது அன்றாட அந்தாமானிய மொழிப் பேச்சில் காணப்படும் சொற்களாகும்.

35 அந்தமானியர்களில் 3 வயதுக்குட்பட்ட 5 குழந்தைகள் நீங்கலாக எல்லா அந்தமானியர்க்கும் (30 பேரும்) தாய்மொழி அந்தமானியமும் தீவுகளின் பொதுமொழியான இந்தியும் என இருமொழிகள் தெரியும். வங்காள மொழி நான்கு பேருக்கும் பர்மிய மொழி ஐந்து பேருக்கும் தெரியும். வங்காளமொழி ஒரே ஒரு ஆணைத்தவிர 40 வயதுக்கு மேற்பட்ட எல்லா ஆண்களுக்கும் தெரியும். முந்தைய பரம்பரையினர் பர்மியரோடு தொடர்பு

கொண்டிருந்தனர். சிலர் பர்மியரோடு திருமண உறவும் கொண்டிருந்தனர். இந்தத் தொடர்பு, அந்தமானியர் 'ஸ்டிரெய்ட்' அயலண்டுப்பகுதிக்கு வந்து குடியேறியதற்கு முன்பு தான் இருந்திருக்கிறது. பர்மியரோடு உள்ள தொடர்பு இப்போது குறைந்துவிட்டது. 40 வயதுக்கும் கீழே உள்ள பெண்கள் போர்ட் பிளேரில் உள்ள பள்ளிகளில் இந்திமொழி வழியில் கல்வி கற்றுள்ளனர். அப்பள்ளிகளில் வங்காள மொழி மாணவர்களும் இருந்திருக்கின்றனர். அந்தமானியர்களுக்கும் அந்தமானியர் அல்லாத பிறமொழிக்காரர்களுக்கும் இடையேயும் திருமண உறவு ஏற்பட்டுள்ளது. முகமதிய இளைஞன் ஒருவன் அந்தமானியப் பெண்ணை மணந்து கொண்டுள்ளான். அந்தமானிய இளைஞர்கள் இராஞ்சிப் பெண்களை மணந்து கொண்டுள்ளனர். இப்படிப்பட்ட கலப்பு மணங்கள் அந்தமானியச் சமூகத்தில் இப்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஏனெனில் திருமணத்திற்குப் பெண்ணோ பையனோ அவர்களது பழங்குடியினத்திலேயே கிடைக்காத நிலை இப்போது உருவாகியுள்ளது.

இதுபோன்ற சூழலில் உருவாகியுள்ள இந்த முழுமையான இருமொழியம் (total bilingualism) அந்தமானியர்களிடையே தாய்மொழி இழப்பினை உண்டாக்கியுள்ளதா? இதற்கு விடையாக முதலில் அந்தமானியர்களது இருமொழியத் தன்மையை விளக்குவோம். அந்தமானியம், இந்தி ஆகிய இரண்டு மொழிகளிலும் இவர்களுக்கு உள்ள மொழி ஆற்றலை முதலில் விளங்கிக் கொள்வோம். 40 வயதுக்கும் மேற்பட்டவர்களது (இதில் 8 முதிர்ந்த வயதினரும் உள்ளனர்) தாய்மொழித்திறன் நன்கு உள்ளது. அவர்கள் இந்தி மொழியின்கடன் சொற்களுக்கு இணையாக உள்ள அந்தமானியச் சொற்களை இலகுவாகக் கூறுகின்றனர். இவர்கள் மிக எளிதாக அந்தமானிய மொழியில் வாக்கியங்களையும் உரைக்கோவைகளையும் உருவாக்குகின்றனர் இந்தப் பிரிவினர் இந்தி மொழியில் சரளமாகப் பேசுகின்றனர். இந்த வயதுப் பிரிவினரில் உள்ள பெண்களால் இந்தி மொழியைச் சரளமாகப் பயன்படுத்த முடியவில்லை. தயங்கித் தயங்கிப் பேசுகின்றனர். வினாக்கள் இந்தி மொழியில் கேட்கப்பட்டால், அந்தமானிய மொழியில் பதில் சொல்வதையே இவர்கள் விரும்புகின்றனர். இந்தி பேசினால் புரிந்து கொள்ளும் ஆற்றல் இவர்களிடையே நிரம்ப உள்ளது. பெண்கள் போர்ட்பிளேருக்கு அடிக்கடி செல்வதில்லை. சென்றாலும் ஆண் துணையோடு மாத்திரம் செல்கின்றனர். இந்தி மொழித்திறன் குறைவுக்கு இது ஒரு காரணமாக இருக்கலாம்.

அந்தமானியரில் 16 வயதிலிருந்து 40 வயதுக் குட்பட்டவர்களான நடுத்தரவயதினர் (மொத்தம் 10 பேர்)

அந்தமானிய மொழியை நன்கு பேசுகின்றனர். நிறைய இந்திக் கலப்போடு இந்தி மொழியைத் திறம்படப் பயன்படுத்துபவர்களாக உள்ளனர். இந்த இந்திமொழி அந்தமான் நிகோபார் தீவுகளின் பொது வழக்கில் உள்ள வட்டார இந்தியாகும்.

3 வயதிலிருந்து 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களது, அதாவது இளம் வயதினரது (இவர்கள் 12 பேர்) அந்தமானிய இந்தி மொழித்திறன்கள் பற்றி அறியத் தேர்வு ஒன்று நடத்தப்பட்டது. ஒருமொழியின் அடிப்படைச் சொற்களாக உள்ளவற்றில் 100 தேர்ந்தெடுக்கப் (Gudschinsky 1956) பட்டன. இச்சொற்களை இந்த இளம் வயதினரிடம் நேரடியாகக் கூறாமல் ஒவ்வொரு சொல்லையும் குழந்தைகளே யூகித்து அறிந்து கொள்ளும் விதமாகப் பின்வரும் முறை அதாவது, விடுபட்ட சொல்லைப் பூர்த்தி செய்தல் பெயர்சூட்டல் போன்றவற்றைப் பயன்படுத்திக் குழந்தைகளே, சொற்களை அந்தமானிய மொழியிலும் இந்தி மொழியிலும் கூறும் வண்ணம் செய்யப்பட்டது. குழந்தைகள் (இணையான) அந்தமானிய மொழிச்சொற்களையும் இந்தி மொழிச் சொற்களையும் கூறினர். இந்திமொழியிலோ அந்தமானிய மொழியிலோ குழந்தைக்குத் தெரியாத சொற்கள் கூறப்படாமல் விடுபட்டுப்போயின.

இருமொழியிலும் குழந்தைகளுக்குத் தெரிந்த சொற்களின் (அதாவது கற்ற சொற்களின்) விழுக்காடு கணக்கிடப்பட்டது. அவை கீழே உள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

அட்டவணை 12

இளம் வயதுப் பிரிவினர் இருமொழியிலும் கற்றுள்ள சொற்களின் விழுக்காடு

வயதுப் பிரிவு	அந்தமானிய மொழியில் (கற்ற) அறிந்த சொற்களின் விழுக்காடு	இந்தி மொழியில் அறிந்த (கற்ற) சொற்களின் விழுக்காடு
3-5	37	50
6-10	63	85
11-15	82	90

அட்டவணை தெரிவிப்பது போலவே குழந்தைகள் அந்தமானிய மொழியை விட இந்தி மொழியில்தான் அதிகச்சொற்கள் அறிந்துள்ளவராக, கற்றுள்ளவராகக் காணப்படுகின்றனர். ஆனால் வயது கூடக் கூட அந்தமானியம் இந்தி ஆகிய இரண்டு மொழிகளிலுமே சொற்களின் எண்ணிக்கை ஏறுமுகத்தில் தான் உள்ளது. அந்தமானியச் சொற்களைக் குழந்தைகள், அரிதாக நடைபெறும் கூட்டு நிகழ்வுகளான மீன்பிடித்தல், கடல் ஆமை வேட்டை போன்றவைகளிலும், பண்பாட்டு நிகழ்வுகளான வயதுக்கு வரும் சடங்கு போன்றவைகளிலும் பங்கேற்கும் போது கற்கின்றனர். இந்தி மொழிச் சொற்களைப் பெற்றோருடன் போர்ட்பிளேருக்குச் செல்லும்போது, சிகிச்சைக்காக மருத்துவமனைக்குச் செல்லும்போது, இந்திமொழிப் படங்களைப் பார்க்கும் போது கற்றுக் கொள்கின்றனர். பள்ளிகளிலும் இந்தி மொழி கற்றுக் கொள்ளப்படுகிறது. குழந்தைகளது இந்தி மொழிச் சொற்கள் எந்தக் காலக்கட்டத்திலும் அந்தமானியச் சொற்களை விட அதிகமாகத்தான் உள்ளன. ஆனால் அந்தமானியச் சொற்கள் கற்றுக் கொள்ளலில் எந்தக் காலக்கட்டத்திலும் (வயதிலும்) தேக்கமோ பின்னடைவோ ஏற்படவில்லை. இந்திமொழிச் சொற்களின் மொத்த அளவீட்டையும் இந்தி மொழிப்பயன்பாட்டுக் களங்களின் அதிக எண்ணிக்கையையும் கணக்கில் எடுத்துக்கொள்ளும் போது, இந்த இரு மொழியத்தில் இந்தி மொழி, பயன்பாட்டு வலு கொண்ட மொழியாக உள்ளது தெளிவாகிறது. இந்திமொழி மூலம்தான் இவர்கள் எழுத்தறிவு பெறுகிறார்கள். அந்தமானிய அரசின் வேண்டுகோளுக்கிணங்க 1994 ஆம் ஆண்டில் தேவநாகரி எழுத்துகள் மூலம் அந்தமானிய மொழிப்பாட நூல் உருவாக்கப் பெற்றும் (Ranganatha and Manoharan, 1994) அவை அந்தமானியர்க்கான பள்ளியில் இதுநாள்வரையில் பயன்படுத்தப்படவில்லை. இந்தப் பாடநூல்கள் தவிர அந்தமானிய மொழியில் வேறு நூல்கள் எதுவும் இல்லை. எழுத்தறிவு தரும்மொழியாக, அலுவலக மொழியாக மற்றும் கடைத்தெரு மொழியாக இருப்பதாலும் இந்தி, மதிப்புப் பெற்ற மொழியாக விளங்குகிறது.

வயதில் மூத்தோர் தங்களுக்குள்ளாக மாத்திரம் அந்தமானிய மொழியைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். அவர்கள் இளையவர்களோடு அந்தமானிய மொழியைப் பேச விரும்புகின்றனர். ஆனால் எப்போதெல்லாம் அந்தமானியமொழி மூலம் தாங்கள் பேசுவது, அறிவுறுத்துவது இளையோர்க்குப் புரியவில்லை என்று உணர்கிறார்களோ அப்போதெல்லாம் இந்தி மொழியைப் பயன்படுத்தத் தொடங்கி விடுகின்றனர். மூத்தோரது அறிவுறுத்தல்கள் பொதுவாகப் பண்பாட்டுச் சடங்குகளை

நிறைவேற்றுதல் தொடர்பாகக் கூட இருக்கும். அறிவுறுத்தல்களைப் பொதுவாக வயதான ஆண்கள் தான் வழங்குகின்றனர். பெண்கள் எப்போதும் இளைய வயதினரிடம் அந்தமானிய மொழியைத் தான் பயன்படுத்துகின்றனர்.

நடுத்தர வயதினர் மூத்தோரிடமும் தங்கள் குழுவினரிடமும் பொதுவாக அந்தமானிய மொழியில் தான் பேசுகின்றனர். இந்தி மொழியில் பேசுவதிலும் இவர்கள் திறன் உள்ளவர்கள். ஆனால், இளையவர்களிடம் இவர்கள் அந்தமானிய மொழியிலும், இந்தி மொழியிலும் பேசுகின்றனர். பேசிக்கொண்டிருக்கும் அந்தமானிய மொழியை நிறுத்திவிட்டு இவர்கள் இந்திமொழியில் இளையோரோடு உரையாடுவர். பொதுவாக இவர்களது அந்தமானிய மொழியில் இந்திக் கலப்பு அதிகம் காணப்படுகிறது. எல்லா அந்தமானியரும் கூட்டம் நடைபெறும்போது அரசு அலுவலர்களோடும் மருத்துவமனை அலுவலர்களோடும் மற்றும் அந்தியரோடும் இந்தி மொழியில் பேசுகின்றனர்.

இக்காரணங்களால்தான் சில ஆய்வறிஞர்கள் அந்தமானியர்கள் குறிப்பாக, இளம் தலைமுறையினர் இந்தி மொழியைத் தமது தாய்மொழியான அந்தமானியத்தை இழக்கும் அளவிற்கு நன்கு கற்றுள்ளனர் என்கிறார்கள் (Awaradi, 1990:230).

6.2.6.2. மொழிகுறித்த மனப்பாங்கு (Language attitude)

அந்தமானியர்களது தாய்மொழி அந்தமானியம். தீவுகளின் பொதுமொழி இந்தி - இவை குறித்த மனப்பாங்கு எவ்வாறுள்ளது என்பதை அறிந்து கொள்வதற்கான ஆய்வும் 1996 -97 ஆண்டுகளில் அந்தமானியரது இருப்பிடமான ஸ்டிரெய்ட் அயலண்டில் நிகழ்த்தப்பட்டது. முதியவர்கள் அந்தமானிய மொழி மீது நன்நம்பிக்கை கொண்டுள்ளனர். அந்தமானியரது தனித்தன்மையைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தங்கள் மொழியையும் பண்பாட்டையும் பாதுகாத்துக் கொள்ள விழைகின்றனர். நடுத்தர வயதினர் அந்தமானிய மொழியை நன்கு பயன்படுத்துவது குறித்து, முதியவர்கள் திருப்தியடைந்தாலும், இளம் வயதினர் இந்திமொழி கலந்து அந்தமானிய மொழியைப் பயன்படுத்துவதைக் கண்டு மனம் கலங்குகின்றனர். இளம் வயதினர் நல்ல அந்தமானிய மொழியில் தேர்ச்சி பெற வேண்டும் என்று முதியோர்கள் விரும்புகின்றனர். முதியவர்களும், நடுத்தர வயதினரும் 'அந்தமானிய மொழியில் பாடப்புத்தகங்கள் தயாரிக்கப்பட்டுச் சிறுவர்களுக்கு அந்தமானிய மொழியைப் பள்ளி மூலமாகக் கற்பித்தல் வேண்டும்; அப்போதுதான் அந்தமானியப் பண்பாடும் மரபும் இளம் தலை முறையினரிடம் சென்றடையும்' என்கின்றனர்.

இந்தி குறித்த முதியவர்களது மனப்பாங்கு இவ்வாறுள்ளது. தாங்கள் விளிம்பு நிலை மனிதர்கள், இந்த விளிம்பு நிலை வாழ்வும் நிலைக்க வேண்டுமானால் இந்தி மொழியைக் கற்றுக் கொள்வது அவசியம். ஆனால், அதே சமயம் தங்களது அகக் களன்களான வீட்டுச் சூழல் (தங்கள்) இனத்தினர் ஒன்றுகூடும் சமூக நிகழ்வுகள் போன்றவற்றில் இந்தி மொழியையே பயன்படுத்துவதை இவர்கள் விரும்புவதில்லை. ஏனெனில் இந்தக்களங்களில் பயன்படும் இந்திமொழியின் செல்வாக்கு தங்களது மொழியையும் பண்பாட்டையும் அழித்துவிடும் என்று நம்புகின்றனர். மூத்த வயதுப் பெண்கள் இந்தி மொழி பேச நாணப்படுகிறார்கள்; தயங்குகிறார்கள். அவர்கள் தங்களுக்கு இந்திமொழி தெரியும் என்பதைக் கூட வெளிக்காட்டிக் கொள்ள விரும்பவில்லை. நடுத்தர வயதினர் இளம்வயதினரிடம் இந்தி மொழியில் பேசிப்பேசி இளம் வயதினரை, அந்தமானிய மொழியைச் சரியாகக் கற்காமலேயே செய்து விடுகின்றனர் என்று முதியவர்கள் நடுத்தர வயதினர் மேல் குறைபட்டுக் கொள்கின்றனர்.

நடுத்தர வயதினரது அந்தமானிய மொழி குறித்த மனப்பாங்கு ஏறக்குறைய உள்முக உணர்வுக்கும் புறநிலை உணர்வுக்கும் இடைப்பட்ட நிலையில் உள்ளது எனலாம். முதியவர்கள் போல இவர்கள் அந்தமானிய மொழி மீது முழு நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. எனினும் இவர்களும் அந்தமானிய மொழிதக்கவைப்பு (பாதுகாப்பு) இக்காலக்கட்டத்தில் தேவையான ஒன்று. தங்களது குழந்தைகள் கற்கும் வகையில், பள்ளியில் அந்தமானிய மொழி கற்பிப்பதும் தேவையான ஒன்று என்றும் ஒத்துக் கொள்கின்றனர். முதியவர்கள் நம்புவது போலவே தாங்கள் வாழ்வதற்கும், தங்களது இனத்தின் அடையாளம் காப்பாற்றப்படுவதற்கும் அந்தமானிய மொழி தக்கவைப்பு இன்றியமையாத தேவை என்று நடுத்தர வயதினரும் நம்புகின்றனர். ஆனால் இவர்கள் முதியவர்களைப் போலல்லாமல் இந்தி மொழியின் பயன்பாடு குறித்து ஒரு மிதவாதப் போக்கினைக் கொண்டுள்ளனர். வீட்டுக் குடும்பச் சூழலில் இந்தி பயன்படுத்தப்படுவதை இவர்கள் சகித்துக் கொள்கின்றனர். நடுத்தர வயதினரைப் பொறுத்தவரையில் இந்திமொழி பரவலாகப் பலராலும் பயன்படுத்தப் படும் மொழி; உயர்மதிப்பு கொண்டமொழி; இந்திமொழியின் பயன்பாடு முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்களைத் தேடித் தருகிறது; பலரோடு தொடர்பு கொள்ள உதவுகிறது.

இளைய வயதினர் அடுத்தவர்கள் முன்பு அந்தமானிய மொழியைப் பேசுவதில் மிகவும் வெட்கப்படுகின்றனர். தாம்

பேசுவது இரகசியமாக இருக்கவேண்டும் என்னும் போது மாத்திரம் அந்தமானிய மொழியில் பேசுகின்றனர். தங்களுக்கு அந்தமானிய மொழி தெரியும் என்பதையே காட்டிக் கொள்வதில்லை. தங்களுக்குள் பேசிக்கொள்ளும் போதும் மூத்தவர்களிடம் பேசும்போதும் இந்தி -அந்தமானியம் கலந்த மொழி வகையைப் பேசுவதையே விரும்புகின்றனர். வயதானோர் பேசும் இந்தி மொழியைப் பற்றித் தாழ்வான எண்ணம் கொண்டிருக்கிறார்கள். வயதானோர் பேசும் இந்தி சுத்தமான இந்தி இல்லை என்ற எண்ணம் கொண்டவர்கள். இவர்கள் பேசும் இந்தி அதிகம் அந்தமானிய மொழி கலக்காத இந்தியாக உள்ளது. அதே சமயம், இவர்கள் அதிகம் இந்தி கலந்து அந்தமானிய மொழி பேசுகிறார்கள். ஆனால், இவர்கள் வயதாக ஆக, தங்கள் மொழி குறித்த மனப்பாங்கில் மாற்றம் கொண்டவர்களாக மாறுகிறார்கள். அந்தமானிய மொழித்தேவையை உணர்கிறார்கள். ஏனெனில் தங்களுக்கு அது ஓர் அடையாளத்தைத் தருவதால். இதுவரையிலும் விவரித்த மொழிப்பயன்பாடும் மொழிகுறித்த மனப்பாங்கும் அந்தமானிய இனத்தினர் அனைவரும் தங்கள் இருமொழியம் குறித்து நன்நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளார்கள் என்பதைப் புலப்படுத்தும். இச்சூழலில், மொழி இழப்பு எதுவும் நேரவில்லை என்பதை மேலும், பின்வருமாறு விளக்கலாம். முதியோர் பயன்படுத்தும் விதமாக இளையோர் அந்தமானிய மொழியைப் பயன்படுத்தாவிட்டாலும் இளையோர், பெரியவர்கள் ஆகும் போது பழங்குடியினர் இனத்திற்கே உரிய குழுச் செயல்பாடுகளைப் புதிதாக எதிர்கொள்ளும் போது (அரிதாக என்றாலும்) அதாவது கடலுக்குச் சென்று மீன் பிடித்தல், கடல் ஆமை, கடல் குதிரை போன்றவற்றை வேட்டையாடுதல் போன்ற நிகழ்வுகளால் இவர்களது அந்தமானிய மொழி கற்றலின் வேகமும் செறிவும் அதிகமாகின்றன. இது போன்ற பழங்குடியினர் பரம்பரைச் செயல்பாட்டுச் சூழல்களில் அந்தமானிய மொழிப் பயன்பாடுதான் விஞ்சியுள்ளது. கலைச் சொற்கள், செயல் வினைகள் எல்லாம் அந்தமானிய மொழி சார்ந்தவையாக உள்ளன. எனவே புதிய சூழல்களில் அந்தமானியத் தாய்மொழி கற்றல், பயன்படுத்தல் என்பது அந்தமானியச் சமுதாயச் செய்தி இணைப்பு வழிப் பின்னலால் (Communicative net work) விளைந்த ஒன்றாக உள்ளது. அதாவது சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கான மதிப்பு கொண்ட- இந்திமொழி, இனம்குறித்து அடையாளப்படுத்துதல் என்ற மதிப்பு கொண்ட - தாய்மொழி அந்தமானியம் என இந்த இரண்டு மொழிகளுமே அந்தமானியரது இருமொழியப் பயன்பாட்டுச் சுழற்சியில் உள்ளவை எனலாம்.

அந்தமானியரது குறைந்த மக்கட் தொகைதான் மொழி அழிவிற்கு ஏதுவான காரணியாக அமைந்திருக்கிறது. அந்தமானியர் தாங்கள் காலம்காலமாகப் பின்பற்றி வந்த திருமண உறவிற்கான விதிகளைத் தற்போது தளர்த்திக் கொண்டுள்ளனர். முன்பு ஒன்றுவிட்ட அண்ணன், தம்பி, ஒன்று விட்ட தங்கை மற்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒரே மரபைச் சேர்ந்தவர்களிடையே திருமண உறவு நிகழாமல் இருந்தது. தற்போது உள்ள குறைந்த எண்ணிக்கை கொண்ட அந்தமானியச் சமூகச் சூழலில் ஆண்களுக்குத் திருமணவயதில் பெண்கள் கிடைக்காததாலும் பெண்களுக்குத் திருமணவயது ஆண்கள் கிடைக்காததாலும் முன்பு பின்பற்றி வந்த திருமண விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன. மாத்திரமல்ல, தங்களது இனக்குழு அல்லாத கூட்டத்தில் இருந்தும் ஆணோ, பெண்ணோ திருமணத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இது போன்ற கலப்புத் திருமணங்கள் மூலம் பிறக்கும் குழந்தைகளை இந்தச் சமூகம் ஏற்றுக் கொள்வதோடு குழந்தைகள் அந்தமானியர்களாகவே வளர்கிறார்கள். அந்தமானியத் தாய்மொழி இந்திமொழிக் கலப்போடு இந்தவிதமாகப் பாதுகாக்கப்படுகிறது. மொழிக் கலப்புள்ள அந்தமானிய மொழியை, மூத்த தலைமுறையினர் வெறுத்தாலும் இளைய தலைமுறையினர் தங்கள் மொழியாக ஏற்றுக் கொள்கின்றனர். எனவே இளந்தலைமுறையினரின் காலந்தாழ்த்திய மொழி கற்றல் இந்தி கலந்த அந்தமானிய மொழியைத் தாய்மொழியாக ஏற்றுக் கொள்ளல் என்ற இந்த இரண்டுவிதப் போக்குகளால் மொழி இழப்பிலிருந்து அந்தமானிய மொழி தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறது. இது நாள் வரையிலும் மொழி இழப்பைச் சந்திக்காமலேயே உள்ளது எனலாம்.

பழங்குடியினர் மொழிச் சூழல்களில் எந்த ஒரு மொழியிலும் முழுவதும் மொழி இழப்பு நிகழ்ந்துள்ளதாகத் தெரியவில்லை. இந்தியாவின் பன்மொழிப்பயன்பாட்டு இறையாண்மை இன்றளவும் செறிவாக இருந்தபோதிலும் தங்கள் மொழியைப் பேசிப் பயன்படுத்தி வந்த ஒரு சமூகத்தில், ஒரு பகுதியினர் மாத்திரம் சில சமுதாய மொழிச் சூழல்களில் தங்கள் மொழியை இழந்து விடுகின்றனர் என்பது தான் காணக்கிடக்கும் உண்மை. எடுத்துக்காட்டுகளாகக் குடுஃக், கோண்டி (திராவிட மொழிகள்), குதுப் (முண்டாமொழி)போன்ற மொழிச்சூழல்களில் தங்கள் முன்னோர் மொழியை இழந்து விடுபவர்கள் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளனர். அதிகார வலிமை கொண்ட மாநிலமொழி, பழங்குடியினரது வாழ்வில் நிகழும் நிலப்பெயர்ச்சி, கலப்புத் திருமணம், நகரமயமாதல் (மாநிலமொழியில் பெறும்)

எழுத்தறிவு போன்றவை மூலமாகப் பழங்குடியினரது செறிவான சமூகக்கட்டுக் கோப்பை அசைக்கும்போது, கட்டுக்கோப்பு நெகிழத்தொடங்குகிறது. இது போன்ற நெகிழ்ச்சியான சூழல்களில் பழங்குடியினர் இருமொழியம் நிலையாத இருமொழியமாக மாறித் தாய்மொழி இழப்பிற்கு வித்திடுகிறது எனலாம். பழங்குடியினர் சமுதாயத்தில் இயல்பாக உள்ள கட்டுக்கோப்பு மொழி தக்கவைப்பு என்ற அளவிற்கு வலிமையாக இருந்தால் மொழி இழப்பு ஏற்படுவதில்லை. எடுத்துக்காட்டாக அந்தமானியச் சமூகத்தில் இருமொழியத்தால் உண்டாகும் மொழித் தேய்வினை, இழப்பினை ஈடு செய்யும் வகையில் அவர் சமூகத்தின் கட்டுக் கோப்பின் ஒரு பகுதியாக உள்ள காலந்தாழ்த்திய மொழி கற்றல் போன்றவைகள் நேரிடும் மொழி இழப்பினைத் தடுத்து மொழிதக்கவைப்பிற்கு உதவுகிறது எனலாம்.

6.2.7. மொழி தக்கவைப்பினை ஊக்கப்படுத்தும் புறக்காரணிகள் (External factors for language maintenance)

இந்தியச் சூழலில் மொழிதக்கவைப்பிற்கான புறக்காரணிகள் வலிமையற்றதாக உள்ளன. இந்தியச் சட்டம் எட்டாவது அட்டவணைச் சட்டம் உட்பட இந்திய மொழிச் சிறுபான்மையினரது, பழங்குடியினரது நலன்களைப் பாதுகாக்கும் வகையில் இல்லை; ஒப்பீட்டளவில் பெரும்பான்மை மொழி பேசும் மக்களது நலன்களைப்பாதுகாக்கும் அளவிற்கு இல்லை. எடுத்துக்காட்டாக மாநிலப் பெரும்பான்மையினரது மொழி கற்றல் அல்லது ஆங்கிலம் கற்றல் கொள்கைகளோடு ஒப்பிடும்போது, சிறுபான்மையினர் மொழி கற்றல் கொள்கை வலிமையற்றதாக உள்ளது. (Ekka, 1984). எப்படி வலிமையற்றதாக உள்ளது என்பதைத் தொடர்ந்து காண்போம்.

> பள்ளிகளில் சிறுபான்மையினர் மொழி பேசும் குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்தது 40 ஆக இருந்தால்தான் மாநிலங்கள் அவர்களுக்குத் தாய் மொழிக்கல்வியை நடைமுறைப்படுத்த முயலும். அதாவது அந்த எண்ணிக்கைக்குக் குறையும் போது நீதிமன்றம் போன்றவை கண்டிப்பாக நடைமுறைப்படுத்தித் தான் ஆக வேண்டும் என்று வலியுறுத்த முடியாது.

(இது தொடர்பான அரசியலமைப்புச் சட்டப் பகுதிகளைப் பிற்சேர்க்கை 5 இல் காணலாம்.)

மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் சிறுபான்மையினரது கல்விநலன்களைப் பேணுவதற்காக நிறைவேற்றுகின்ற

தீர்மானங்களும் உடன்படிக்கைகளும் சட்டத்தைப் போலன்றி வலுவற்றவை (ஞானசுந்தரம் 1997: 245).

மொழிச்சிறுபான்மையினரது நலம் காக்க அமைக்கப்பட்டுள்ள சிறுபான்மையினர் மொழிக் குழுமம் (Commissioner Linguistic Minorities) சிறுபான்மை மொழியினர்க்கான மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்தும் அளவிற்கு அதிகாரம் எதுவும் இல்லாத ஓர் அமைப்பு. 1986 ஆம் ஆண்டின் தேசியக் கல்வித்திட்டம் (National Education Policy 1986) பழங்குடியினர் மொழிகளைப் பழங்குடி மொழிக் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டுக்குத் தொடக்கப்பள்ளி நிலையில், மாநில மொழியோடுகூட பயன்படுத்த வேண்டும் என்ற பரிந்துரையைப் பொதுவாக மாநிலங்கள் நடைமுறைப்படுத்துவதில்லை. இந்த இருமொழியக் கல்வி (Bilingual education) பழங்குடியின குழந்தைகளுக்கு ஏற்றது என்று இந்தியமொழிகள் நடுவண் நிறுவனம் போன்ற உயர் ஆய்வு மையங்களின் பரிந்துரையையும் இது தொடர்பாக இந்த நிறுவனம் பழங்குடியினர் மொழிகள் பலவற்றில் தயாரித்து மாநிலங்களுக்கு அளித்துள்ள பாட நூல்கள், கற்றலுக்கான எளிய அகராதிகள், சில மொழிகளில் ஒலி நாடாக்கள், ஒளிப் பேழைகள் எல்லாம் பொதுவாகப் பயன்படுத்தப்படாமல் தேங்கிக்கிடக்கின்றன. ஓரிரு மாநிலங்கள், சில ஆண்டுகள் ஏனோ தானோ என்று பயன்படுத்தி விட்டுப் பிறகு பழைய கல்விமுறைக்கே, பழங்குடியினக் குழந்தைகள் அறியாத மாநில மொழி மூலம் அளிக்கும் கல்விமுறைக்கே திரும்பவும் மாறிவிடும். பழங்குடியினர் மொழி, கல்வி என்ற களத்தில் பயன்பாட்டைக் கொள்ளும் போது அது மொழி அழிவிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் என்பது இந்த இருமொழியக் கல்விக் கொள்கையின் ஒரு உள்ளார்ந்த சமுதாயயியல் குறிக்கோள் ஆகும். ஆனால் இந்த முயற்சி அனைத்தும் தோல்வியைத் தழுவிய முயற்சிகளாகவே அமைந்துள்ளன. பழங்குடியினர்க்கான முன்னேற்றத்திட்டங்களைச் செயல்படுத்த முனையும் அரசு இயத்திரம் பழங்குடியினர் மொழியைப் பொதுவாக மொழி என்றே ஏற்றுக் கொள்வதில்லை. பழங்குடியினர் மொழிகளைப்பற்றிக் கவலைப்படுபவர்கள் பொதுவாக மொழியியலார்கள் மட்டுமே. இந்தப் பகுதியின் முடிவுரையாகக் கீழே வருவனவற்றைக் குறிப்பிடுவோம்.

1. பழங்குடியினர் இருமொழியம் இந்திய இருமொழியத்தோடு ஒப்பிடும் போது நிலையாத இருமொழியமாக உள்ளது என்பது ஏறக்குறைய ஒப்புக்கொள்ளக்கூடிய ஒன்றாக உள்ளது. பழங்குடியினர் இருமொழியம், நிலையாத இருமொழியம் தான் என்ற நிலைப் பாட்டை எடுத்துக் கொண்டால் இந்தக் கருத்துக்கும் புறனடையாகச் சில

மொழிச்சூழல்கள் உள்ளன. அவை அந்தமானிய மொழிச்சூழல், நீலகிரிப் பழங்குடிமொழிகள் சூழல் போன்றவைகளாகும்.

2. திபெத்திய பர்மிய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் பொதுவாக மொழி இழப்பிற்கு உட்படுவதில்லை என்று கூறுவதை விட, கிருத்துவ மதப் போதகர்கள் மூலமாக எந்தப் பழங்குடி இனத்தவர் எல்லாம் கிருத்துவர்கள் ஆகிறார்களோ அந்த இனத்தவர்களது மொழிகளில் இழப்பு நிகழவில்லை எனலாம். மதபோதகர்கள் கல்வி, மருத்துவம் ஆகிய துறைகளில் தன்னலமற்ற சேவை செய்து பழங்குடியினரின் நம்பிக்கை பெற்று அவர்களை மதமாற்றத்திற்கு உட்படுத்துகின்றனர். மதமாற்றத்தின் செயல்பாடு பல சமயங்களில் பழங்குடியினர் மொழிகள் மூலமாகவே நடைபெறுகின்றது. விவிலிய நூல் பழங்குடியினர் மொழியில் பெயர்க்கப்படுதல், தேவாலயங்களில் பழங்குடியினர் மொழி மூலமாகவே பிரார்த்தனை நிகழ்வுகள் என இவை மொழி தொடர்பான சிலபணிகள் ஆகும். பழங்குடியினர் கல்வி பெறும் போது, கல்வி மூலமாக அவர்கள் முன்னேறும் போது விளிம்பு நிலை மனிதர்களாக உள்ள இவர்கள் இது நாள் வரையிலும் பெறாத தன்னம்பிக்கையையும், சுயமரியாதையையும் பெறுகின்றனர். இவை எல்லாமே தங்களைப் பற்றிய ஒரு விதப் பெருமித உணர்வை பழங்குடியினர்க்கு உண்டாக்குகின்றன. பெருமித உணர்வை அடையப்பெறும் இவர்கள் தங்களது மொழி குறித்தும் பெருமித உணர்வு கொள்கிறார்கள். இவர்கள், தங்கள் மொழிகளை அழியாமல் தக்கவைத்துக் கொள்வதற்கு இதுவும் ஒரு காரணம். எடுத்துக்காட்டாக, கார்நிகோபார் தீவில் பேசப்படும் கார்நிகோபாரிய மொழியின் பாதுகாப்பிற்குக் கிருத்துவ மதத்தின் பங்களிப்பு சிறப்பாக உள்ளது எனலாம். கிருத்துவத் தோடர்களது சூழல் வேறுவிதமானது. தோடர்கள் எப்போது கிருத்துவ மதத்தைத் தழுவினார்களோ அப்போதே அவர்களது திருமணம் தோட இனத்தைச் சேராத-தோட மொழி பேசாத ஆனால் கிருத்துவ மதத்தைச் சேர்ந்த பிறமொழியாளர்களோடு அமையத் தொடங்கியபோதே இக் குடும்பங்களில் இச்சூழல்களில், தோட மொழி அழியத் தொடங்கியது எனலாம். ஏனெனில் இந்தப் புதிய கிருத்துவச் சூழலில், எடுத்துக்காட்டாக, தந்தை தோட மொழியாளராகவும், தாய் தமிழ் மொழியாளராகவும்

இருக்கும்போது இவர்களுக்கிடையே நிகழும் மொழிப் பரிமாற்றம் தமிழாக உள்ள போது (தோட இனத்து ஆண்கள் பொதுவாகத் தமிழ் இருமொழியாளர்கள்) இவர்களது குழந்தைகள் தோடமொழி கற்கும் வாய்ப்பு அற்றவர்களாக வளர்ந்து விடுகிறார்கள். இச்சூழலில் தோட மொழி நிலைக்கவில்லை எனலாம், (Mulley, 2009). மத்திய இந்தியாவில் வாழும் வடதிராவிடக் குடுஃக் மொழி பேசும் கிருத்துவ ஓரோவோன் இனத்தினரது மொழிதக்கவைப்பு இழப்பு கிருத்துவ மதப் பங்களிப்பு என்ற நோக்கில் இங்கு ஆராயப்படவில்லை. இது குறித்த தேவையான தகவல்கள் தரவுகள் நூலாசிரியர்க்குக் கிடைக்காத காரணத்தால் இது இங்கு ஆராயப்படவில்லை.

6.3. கிளைமொழிகள் இழப்பு

ஒவ்வொரு இந்திய மொழியிலுமே, பொதுக் கிளைமொழியின் பயன்பாடு சமுதாய மொழியியல் காரணிகளான கல்வி, நகரியமாதல் தகவல் தொடர்புச் சாதனம் போன்றவைகளால் அதிகமாகும்போது கிளைமொழிகளின் பயன்பாடு குறையத் தொடங்கிப் பிறகு அழிவையும் நோக்கிச் செல்கிறது எனலாம். கிளைமொழிகள், தமிழ் மொழிச்சூழலில் அழியும் பாங்கினை இந்தப் பகுதியில் காண்போம். அதற்குமுன்பு, தமிழின் கிளை மொழிகள் பற்றி அறிந்து கொள்வோம்.

6.3.0. தமிழில் கிளைமொழிகள்

தமிழின் கிளைமொழிகளைப் பொதுவாக வட்டாரக் கிளைமொழிகள், சாதிக் கிளைமொழிகள் என்ற இருபெரும்பிரிவில் அடக்குகின்றனர். கிளை மொழிகளில் புதைந்து கிடக்கும் வளங்களாக உள்ளவைகளில் சில வருமாறு.

(1) எழுத்து வழக்கில் அருகிப் போன பழந்தமிழ்ச்சொற்கள். எடுத்துக்காட்டாக, பச்சைமலைப் பழங்குடியினர் பேசும் தமிழ்க் கிளைமொழி வழக்கில் உள்ள *ஓயி* 'என்ன' என்ற பொருளில் (தமிழ் லெக்சிகன் பக்கம் 626).

தோரு 'வாய் என்ற பொருளில்' (தமிழ் லெக்சிகன் பக்கம் 374); *இசு* 'அறுத்தல், வெட்டுதல் என்ற பொருளில்' (தமிழ் லெக்சிகன் பக்கம் 271) உள்ள பழந்தமிழ்ச் சொற்களைக் குறிப்பிடலாம் (Maheswaran, 1979).

(2.) கலைச்சொல் வளத்தினைக் கொண்டுள்ள ஏராளமான தொழிற் பெயர்கள், தமிழ்க் கிளைமொழிச் சொற்கள் வட்டாரத்தை, சாதியை அடையாளப் படுத்துவது போலச்

சில சொற்கள், மதத்தையும் (religion) அடையாளப்படுத்தும்.

6.3.1. வட்டாரக் கிளைமொழிகளும் அவை பேசப்படும் நிலப்பரப்புகளும்

தமிழ்க் கிளை மொழிகள் வழங்கும் நிலப்பரப்பும் அவற்றின் உட்பிரிவுகளும் வருமாறு:

1. வடக்குக் கிளைமொழி (அல்லது தொண்டை மண்டலக் கிளைமொழி)

   வடகிழக்கு - சென்னை,
   செங்கல்பட்டு (காஞ்சிபுரம்):
   வடமேற்கு - வேலூர், கிருஷ்ணகிரி, தென் ஆர்க்காட்டின் (விழுப்புரம், கடலூர், சிதம்பரம்) ஒரு பகுதி

2. மத்திய தமிழ்நாடு அல்லது கிழக்குப்பகுதி: காவிரி நீர்ப்பாசனப்பகுதி:

   திருச்சி, தஞ்சாவூர், கரூர்...... புதுக்கோட்டை

3. மேற்குத் தமிழ்நாடு:

   மேற்குப்பகுதி (வடபுறம்) சேலம், ஈரோடு
   மேற்குப்பகுதி (தென்புறம்) கோயம்புத்தூர், திண்டுக்கல்

4. தென்தமிழ்நாடு

   மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் தென்மேற்கு: இராமநாதபுரம்

   தென்கிழக்கு : தூத்துக்குடி

6.3.1.1. வடக்குக் கிளைமொழி (தொண்டை மண்டலக் கிளை மொழி)

வடக்குக் கிளைமொழிப் பகுதி பொதுவாக 'ய' கரக்கிளை மொழிப்பகுதி எனப்படும். (Meenakshisundaran 1965) இக்கிளைமொழிப் பகுதியில் ஒலிப்புள்ள வெடிப்பொலிகள் (voiced, plosives, viz, b,d,j,g/ ஒலிப்பிலா வெடிப்பொலிகளோடு (voiceless plosives viz p,t,m,c,k)) ஒலியன் நிலையில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இந்த ஒலியன் மாற்றம் இப்பகுதிகளில் பேசப்படும் தெலுங்கு, உருது மொழிகளின் தொடர்பினால் விளைந்ததாகும். ஆந்திர மாநிலம், தொண்டை மண்டலப் பகுதிக்கு அடுத்துள்ளது. உருது மொழி பேசிய ஆர்க்காடு நவாபுகள்

தொண்டை மண்டலத்தின் ஒரு பகுதியை ஆண்டுள்ளது உருபு மொழித்தொடர்புக்குரிய காரணமாகும்.

6.3.1.2. மத்திய தமிழ்நாடு அல்லது கீழைத் தமிழ்க் கிளைமொழி

இந்த நிலப்பகுதியில் தான் தமிழின் சிறப்பு ஒலியான ழகரம் சரியாக உச்சரிக்கப்படுகிறது என்பது மறைந்த தமிழ் மொழியியல் பேராசிரியர் கமில் ஸ்வலபில் அவர்களது நம்பிக்கையாகும். இந்த ஒலி இங்குள்ள பிராமணரல்லாத படித்தவர்களது வழக்கில் உள்ளது என்பது கமில் ஸ்வலபில் அவர்களது கூற்று. மேலும் இவர்களது பேச்சினை முன் மாதிரியாகக் கொண்டுதான் பொதுப் பேச்சுத் தமிழ் உருவாகி வருகிறது என்பர் கமில் ஸ்வலபில் அவர்கள் (Zvelebil, 1964)

6.3.1.3 மேற்குத் தமிழ்நாட்டுக் கிளைமொழி

/லழள/ ஒலியன் வேறுபாடுகள் மறையப்பெற ஒரே ஒரு ஒலியனாக /ல/ மாத்திரம் இந்தக் கிளைமொழி வகையில் உள்ளது. குறிப்பிட்ட ஒரு வகைக் குரல் ஏற்றத்தோடு பேசுவது இப்பகுதிக் கிளைமொழியின் ஒரு சிறப்பு ஆகும். இன்னொரு சிறப்பு: சொற்கள் பலவற்றில் குறிப்பாக மூவிடப் பெயர்களில் மரியாதை விகுதி *-ங்க* சேர்த்துப் பேசுவது ஆகும். கோயம்புத்தூர் வகைக் கிளைமொழியில் துணைவினையான - போடு என்பதன் பயன்பாடு மிக அதிகம்.

எடுத்துக்காட்டு: *சாப்டுப்போடு* 'சாப்பிடு - கண்டிப்பாக' என்ற பொருளில். உடைமைப் பொருளில் பயன்படும் வேற்றுமை விகுதியான *-ன்ற்-* என்பது இக்கிளைமொழியில் உள்ளது. எடுத்துக்காட்டு: என்ற புஸ்தகம் 'என்னுடைய புத்தகம்' என்ற பொருளில். மற்றக் கிளை மொழிகளில் இதற்கு இணையான விகுதி - ஓடெ என்பதாகும். எடுத்துக்காட்டு: என்னோடெ புஸ்தகம்.

6.3.1.4. தென் தமிழ்நாட்டுக் கிளைமொழி

ழ கர ஒலியனும் ள கர ஒலியனும் இணைந்து ளகர ஒலியனாக இருப்பது இக்கிளைமொழியில் காணக்கூடிய ஒரு கூறாகும். இந்தக் கிளை மொழியின் உட்கிளை மொழிப் பகுதியில் உள்ள கன்னியாகுமரியில் மாத்திரம் தான் றகர ஒலியன் மக்களது பேச்சு வழக்கிலும் உள்ளது. (மற்ற எல்லாத் தமிழ்க் கிளை மொழிகளிலும் இது ரகரமாக உள்ளது.)

கோளாறு என்ற சொல் இந்தக் கிளை மொழியில் கொண்டுள்ள பொருள் ஒழுங்கு (ஒழுங்குமுறை) என்பதாகும். ஆனால் மற்றக் கிளை மொழிகளில் கோளாறு என்பதன் பொருள் 'குழப்பம்' என்பதாகும். திருநெல்வேலிப் பேச்சு வழக்கில்

(மாத்திரம்) நிகழ்கால (இடைநிலை) விகுதியாக -த- உள்ளது. எடுத்துக்காட்டு *அவன் பேசு தான்* 'அவன் பேசுகிறான்' என்ற பொருளில். கன்னியாகுமரி வழக்கு தென்கிளை மொழி வழக்கில் ஓர் உட்கிளை மொழி வழக்காகும் *ஊசி, பசு* போன்ற சொற்களில் உள்ள ஒலியன் /ச்/ கன்னியாகுமரி வழக்கில் /ய்/ ஒலியனாகத் திரிந்துள்ளது. *ஊயி, பயுவு* என்பது கன்னியாகுமரி வழக்குகள் முறையே 'ஊசி', 'பசு' என்ற பொருளில்.

6.3.2. சாதிக் கிளை மொழி[4]

தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு சாதியினரும் ஒரு கிளைமொழியைக் கொண்டிருக்கவில்லை (சாதிக் கிளைமொழி பற்றிய ஆய்வு இன்னமும் சரியான முறையில் நடைபெறவில்லை, சண்முகம் பிள்ளை அவர்கள் மேற்கொண்ட ஒரு முயற்சியைத் தவிர (Pillai, 1965). ஆனால் பிராமணர் சாதிக் கிளைமொழியை இனங்கண்டு கொள்ளப் பிராமண சாதிக்கே உரிய தனித்த மொழிக் கூறுகள் உள்ளன. (Ramanujam 1968, Sankaranarayanan 1980).

6.3.3. பொதுப் பேச்சுத் தமிழ் (Standard spoken Tamil)

வட்டார, சாதிக் கிளை மொழிகளுக்குப் புறமாகத் தமிழில் தற்காலத்தில் பொதுப் பேச்சுத் தமிழ் என்று ஒன்று உருவாகிக் கொண்டுள்ளது. வட்டார, சாதி மொழிக் கூறுகள் தவிர்த்து ஆனால் அவற்றிற்கு இணையான (பொருள் மாறுபாடு நேராத) சொற்கள் இந்தப் பேச்சுவகையில் இடம்பெறுகின்றன என்பதும் அந்த வகையான சொற்கள் எழுத்துத் தமிழுக்கு நெருக்கமானவை என்பதும் பலராலும் தெரிவிக்கப்பட்டுள்ள, ஏற்றுக் கொண்டுள்ள கருத்தாகும் (Annamalai, 1976, Shanmugam Pillai, 1987, Gnanasundaram 1980). சில சமுதாய மொழியியல் காரணிகளான பரவலாக்கப்பட்ட கல்வி, இடப்பெயர்ச்சி, தகவல் தொடர்புச்சாதனம் போன்றவற்றால் வீட்டுக் கிளைமொழிப் பயன்பாட்டிலிருந்து வட்டார, சாதி மொழிக்கூறுகள் தவிர்த்த ஒரு பொது வகைப் பயன்பாட்டுக்குச் சில சூழல்களில் மாறும்போது உருவாவது தான் பொதுப் பேச்சுத் தமிழ் (சண்முகம் பிள்ளை 1987). இளம் தலைமுறையினரது பேச்சு மூத்த தலைமுறையினரின் பேச்சிலிருந்து வேறுபடுகிறது. பொதுப் பேச்சுத் தமிழ் பல்வேறு வட்டார, சாதிகளைச் சேர்ந்த படித்த இளம் தலைமுறையினர் ஒன்று கூடும் சூழல்களில் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ளப் பயன்படுத்திக் கொள்ளும் நடைதான் பொதுப் பேச்சுத் தமிழ் என்கிறார்.

அண்ணாமலை (Annamalai, 1976) பொதுப் பேச்சுத் தமிழ் என்பது மனைமொழியில் உள்ள வடுப்பட்ட மொழி உருவங்கள்

நீக்கப்படும்போது பெறுகின்ற ஒரு பேச்சு வகை. வடுப்பட்ட மொழி உருவங்கள் நீக்கப்படும் முறையானது வட்டார, சாதி அடையாளங்கள் அற்ற மொழியுருவங்களைப் பொதுப் பேச்சுத் தமிழில் கொண்டுவந்து சேர்த்து விடுகின்றன. சில வேளைகளில் எல்லாச் சொற்களுமே வடுப்பட்ட சொற்களாக இருந்து விட்டால் அப்போது ஆங்கிலக் கடன் சொற்கள்கூட இடம்பெறும் என்கிறார். மேற்கூறிய கருத்துகளை விளக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அட்டவணையைக் காண்க.

அட்டவணை 13

கிளைமொழி வழக்கிற்கு இணையான வட்டார, சாதிக்கூறுகளற்ற பொதுவழக்கு

எண்	கிளை மொழி	வட்டாரம்/ சாதி/மதம் இவற்றை அடையாளப் படுத்தும் கிளைமொழி வழக்கு	இணையான வட்டாரம்/ சாதி/மதம் இவற்றை அடையாளப் படுத்தாத பொது வழக்கு (பொதுப் பேச்சுத் தமிழ்)	இணையான எழுத்துத் தமிழ் வடிவம்
1.		:த:பா[5]	தடவெ	தடவை/ முறை
	வடகிளைமொழி[5]	:பல்லி	பல்லி	பல்லி
		அந்தாண்டெ	அந்தபக்கம்	அந்தப் பக்கம்
		நாயனா	அப்பா	அப்பா
		பயொம்	பழொம்	பழம்
		காஸூ (வினைச் சொல்)	காச்சு	காய்ச்சு (எ-டு பாலைக் காய்ச்சு)
		குந்து (வினை)	உக்காரு	உட்கார்
2.	மத்திய/கிழக்குக் கிளைமொழி	எம்ப்ளது	எம்பது	எண்பது
		திருஸா/திருநா கரட்டான், ஒடெகதா/ஓந்தி	திருவுழா ஓணா (ன்)	திருவிழா ஓணான்
		சாப்டுப்போடு	சாப்டுவிடு	சாப்பிட்டு விடு

எண்	கிளை மொழி	வட்டாரம்/ சாதி/மதம் இவற்றை அடையாளப் படுத்தும் கிளைமொழி வழக்கு	இணையான வட்டாரம்/ சாதி/மதம் இவற்றை அடையாளப் படுத்தாத பொது வழக்கு (பொதுப் பேச்சுத் தமிழ்)	இணையான எழுத்துத் தமிழ் வடிவம்
3.	மேற்குக் கிளைமொழி	என்ரெ	என்னோடே (என்)	என்னுடைய (என்)
		கலுவு (வினை)	கழுவு	கழுவு
4.	தென்கிளைமொழி	அங்கிட்டு/ அங்குனெ	அந்த பக்கம்	அந்தப் பக்கம்
		வாளெ	வாழெ	வாழை
	கன்னியாகுமரி உட்கிளைமொழி	அறி (வினை)	அரி	அறி 'நறுக்கு'
		ஊயி	ஊசி	ஊசி
		பயுவு	பசுமாடு	பசு
5. ஆ	திருநெல்வேலி உட்கிளைமொழி	பாடுதான் (-த) -நிகழ்கால இடைநிலை / விகுதி)	பாடுகிறான்(-ற-) நிகழ்கால இடைநிலை /விகுதி)	பாடுகிறான் பாடுகின்றான்
5.	பிராமணர் கிளைமொழி	வரெச்செ	வர்ரப்ப	வரும்போது
		ஆத்துலெ	வீட்லெ	வீட்டில்/ வீட்டிலே
		நோக்கு	ஒனக்கு	உனக்கு
		மன்னி	அண்ணி	அண்ணி
6.	பிராமணர் அல்லாதோரது வழக்கு	மச்சா(ன்)	ப்ரதர்இன்லா	மைத்துனன்
7.	முஸ்லீம் வழக்கு	வாப்பா	அப்பா	அப்பா

இக்கருத்துக்களை ஒட்டி இந்நூலாசிரியரால் 1980 ஆம் ஆண்டில் ஆய்வு ஒன்று நிகழ்த்தப்பட்டது. மனைமொழியில் உள்ள வட்டார, சாதிக் கூறுகள் தவிர்க்கப்பட்டு அவற்றிற்கு இணையாக உள்ள பொது மொழிக் கூறுகள் தாங்கிய ஒரு நடைக்கு, தமிழ்க்கிளை மொழியாளர்கள் கலவைச் சூழல்களில் மாற்றமடைகிறார்களா என்பதைக் கண்டறிய ஒரு சோதனைக் கள ஆய்வு நிகழ்த்தப்பட்டது. ஆய்வில் பங்கேற்றவர்கள் தமிழகத்திலிருந்து வந்து மைசூரில் கணவரோடு வாழத் தொடங்கிய படித்த குடும்பத்துப் படித்த பெண்கள் (Gnanasundaram 1980).

இந்தக் கள ஆய்வின் முன்னோடியாக, கள ஆய்வில் இடம் பெறப்போகும் பெண்கள் அனைவரிடமும் அவர்கள் தங்களது மனைமொழிகளில் பொதுவாகப் பயன்படுத்தும் வட்டார/சாதி மொழிக் கூறுகள் தாங்கிய சில சொற்களை அளித்து அத்தகைய சொற்களை (படித்த) அந்நியர்களிடம் கலவைச் சூழல்களில் பயன்படுத்துவீர்களா, மாட்டீர்களா என்று கேட்ட போது பலர் அச்சொற்கள் பலவற்றைப் பயன்படுத்த மாட்டோம் - பயன்படுத்த விரும்பவில்லை என்று விடையளித்தனர்.

எப்போது ஒருவர் தனது மனைமொழியில் உள்ள ஒரு கிளை மொழிச் சொல்லைக் குறிப்பிட்ட ஒரு சூழலில் பயன்படுத்த ஏற்றதல்ல என்று (உள ரீதியாகக்) கருதுகிறோரோ அப்போது அது வடுப்பட்ட சொல்லாகக் கொள்ளப்படுகிறது. மதுரை, சென்னை, தஞ்சாவூர், இராமநாதபுரம் சார்ந்த கிளைமொழிகளும், பிராமணக் கிளைமொழியும் இந்த ஆய்வில் இடம்பெற்றன. ஆய்வின் முடிவுகள் பின்வருமாறு அமைந்திருந்தன.

வடுப்பட்ட சொற்களாக இனங் காணப்பட்டவைகளில் பல கலவைச் சூழலில் பயன்படுத்தப்படாமல் நீக்கப்பட்டு அதற்கு இணையான வடுப்படாத பொதுச் சொற்கள் பயன்படுத்தப்பட்டன. (இதன் முழுவிவரம் அறியக் காண்க: (Gnanasundaram, 1980).

மிகச் சிறிய அளவில் (சில பல குறைபாடுகளோடு) நிகழ்த்தப்பட்ட இந்த ஆய்வு மூலம் ஒன்று தெளிவாகியது. மனைச் சூழலில் பயன்படுத்தும் கிளைமொழிக் கூறுகள், கலவைச்சூழலில் நீக்கப்பட்டு அவற்றிற்கு இணையான (கிளைமொழிகள் நீக்கிய) ஒரு பொது மொழியை - (பொதுவாகப் படித்தவர்கள்)ப் பேசுகிறார்கள் என்பதும் இவ்வாறு கிளை மொழிக் கூறுகளை நீக்கி எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் பொதுக் கூறுகள் கொண்ட பேச்சுவகை ஆளுக்கு ஆள் வேறுபடும் என்பதும் இந்த வேற்றுமை, தமது வட்டார சாதிக் கிளைமொழி குறித்த ஒருவரது மனப்பாங்கின் வேறுபட்ட தன்மைக்கு ஏற்ப அமைகிறது என்பதும் தெளிவாயின.

ஒருவர் தம் தாய்மொழிக்கு ஒப்பான தம் கிளை மொழியை வீட்டுச் சூழலில் பயன்படுத்துவது பிறகு, கலவைக்குழுச் சூழலில் படித்தவர்களிடையே உரையாடும்போது கிளைமொழிக் கூறுகளை நீக்கி எல்லோர்க்கும் பொதுவான ஒரு பேச்சுவகைத் தமிழில் பேசுவது என்பது ஏறக்குறைய இருகிளைமொழியம் போல உள்ளது எனலாம். பழங்குடியினர் இருமொழியம் எப்படி நிலையாத இருமொழியமாக உள்ளதோ அதைப் போல இந்த இருகிளைமொழியமும் நிலையாத இருமொழியம் போல அமைந்துள்ளதோ என்று எண்ண வேண்டியுள்ளது. ஒருவர் தமது கிளை மொழிக் கூறுகள் கொண்ட பேச்சு வகையை, குறிப்பிட்ட ஒரு சமுதாய மொழிச்சூழலில் பயன்படுத்த விரும்பாது போதல் என்பது ஏறக்குறைய தம் கிளைமொழி குறித்த ஒரு தாழ்வு மனப்பான்மையைக் கொண்டுள்ளார் என்பது தானே பொருள். தாழ்வு மனப்பான்மை கொள்வதால் தானே கலவைச் சூழலில் அதைப் புறந்தள்ளிப் பொதுப் பேச்சுக்குச் செல்கின்றனர். மக்கள், கிராமங்களை விட்டு நகரங்களுக்குப் பிழைப்புத் தேடிச் செல்லல், பரம்பரை பரம்பரையாகக் கிராமங்களில் செய்து வந்த தொழில்களை விட்டுத் தாம் கற்ற கல்விக்கேற்ப நகரம் சார்ந்த அலுவல்கள், தொழில்கள் செய்தல் என்ற புறக்காரணிகள் பெருகப் பெருகக் கிராமம் என்ற நிலச் சூழலில் ஒருவர் தாம் கற்ற கிளைமொழி (வட்டாரக் கிளை மொழி அல்லது சாதிக் கிளைமொழி) எதுவாயினும் அழியத் தானே செய்யும்.

இந்தத் தலைமுறையினரில் பெரும்பாலும் நடுத்தர வயதினர் இரு கிளைமொழியம் கொண்டவர்களாக உள்ளனர். இளைய தலைமுறையினரில் பெரும்பாலோர், புறக்காரணிகளின் சக்தியால் கிளைமொழிகளைத் தங்களது பெற்றோரிடம் இருந்து கிடைக்கப் பெற்றவர்களாகத் தெரியவில்லை. கிளைமொழிக் கள ஆய்வின் அனுபவங்களும் இதைத்தான் தெரிவிக்கின்றன. மரபுக்கிளை மொழியினரின் கருத்தின்படி (கருதுகோள்) கிளைமொழிகள் தம் சொந்தக் கிராமத்தை விட்டு வேறு ஊர்களுக்குச் சென்று வாழாத படிப்பறிவற்ற வயதானவர்களிடம் உள்ளது என்பதை இங்கே நினைவு கூரலாம்.

வயதில் இளையோர்கள் கிளைமொழிகளை இழந்து கொண்டுள்ளனர். தொழிற்பெயர்கள் பல்வேறு விலங்கு - பறவை - ஊர்வனவற்றின் பெயர்கள் பரம்பரைத் தொழில் செய்தல் தொடர்பான செயல்முறைச் சொற்கள், மூலிகை வைத்தியம், பாட்டி வைத்தியம் தொடர்பான சொற்கள், பழமொழிகள், விடுகதைகள், நாட்டார் கதைகள், பாடல்கள் எல்லாமே வயதானவர்களிடம் இருந்து இந்தத் தலைமுறையினர்க்கு வந்து

சேருவதாகத் தெரியவில்லை. இவை எல்லாமே அழிவை நோக்கிப் போய்க் கொண்டுள்ளன. நாளடைவில் படித்த தமிழர்களது இருகிளைமொழியத்தில் உள்ள ஒரு வகையான, 'வட்டார/சாதிக்கிளைமொழி' என்பது அழிந்தொழிந்து விடலாம். இந்த அழிவிற்கு மூலகாரணமாக விளங்குவது தற்போது கிளைமொழியினரிடையே நிகழ்ந்து கொண்டிருக்கும் பொதுப் பேச்சுத் தமிழாக்கம் தான். இதை ஊக்குவிக்கும் சக்திகளாக உள்ளவைதான் கல்விப் பரவல், நகரமயமாதல், தகவல் தொடர்புச் சாதனம் போன்றவை எனலாம்.

இந்த நோக்கில் கமில் சுவலபில் அவர்கள் கூறுவது போலப் 'பொதுப் பேச்சுத் தமிழ் என்பது நிலம் சார்ந்த படித்த மத்திய தரப் பிராமணரல்லாதோரது பேச்சை அடிப்படையாகக் கொண்டது' அல்ல. மாறாகப் படித்தவரது நிலையா இரு கிளைமொழியத்தால் நிகழ்வது எனலாம்.

கிளைமொழி என்பது பொதுவாக, 'படிப்பறிவின்மை', 'ஏழ்மை', 'கிராமப்புறப் போக்கு' போன்றவற்றை அடையாளப்படுத்துபவை என்ற மதிப்பீடு தமிழர்களிடம் குறிப்பாகப் படித்த தமிழர்களிடம் ஏற்படும்போது இவை விரும்பாத புறந்தள்ளவேண்டிய அடையாளங்களாக மதிப்பிடப்படுகின்றன. இவைகளைப் பயன்படுத்தும் போது, தங்கள் சமூக அடையாளம் வெளிப்படுவதை விரும்பாதவர்களாக, குறிப்பாகப் படித்தவர்கள் உள்ளார்கள் எனத் தோன்றுகிறது.

எடுத்துக்காட்டு ஒன்றை இங்கே குறிப்பிடலாம். பிராமணர்களில் இந்தத் தலைமுறையினர்[6] பலர் கலவைக் குழுச் சூழல்களில் பேசும் போது (குறிப்பாக, பிராமணரல்லாதோரிடம் பேசும் போது) பிராமணமொழிக் கூறுகள் தவிர்ந்த பொதுப் பேச்சுத் தமிழில் பேசுவதைப் பலர் அறிந்திருக்கலாம். பிராமண மொழிக்கூறுகள் பிராமணர் அல்லாதோரது மொழிக் கூறுகள் போலப் படிப்பறிவற்ற நிலைக்கு அடையாளமற்ற இவர்கள், பிராமண மொழிக் கூறுகள் தவிர்த்த ஒரு நடையை மேற்கொள்வது, சில சமுதாய அரசியல் காரணங்களுக்காக தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதைத் தவிர்த்துக் கொள்வதற்காகவே எனலாம்.

ஆனால் பிராமணர்களது இருகிளைமொழியம் நிலைத்த கிளைமொழியமாக உள்ளதோ என்று நினைக்கத் தோன்றுகின்றது. இந்திய விடுதலைக்கு முன்பு பிராமணர் தமிழ் மதிப்புயர் தமிழாக இருந்தபோது பிராமணரல்லாத சில உயர் சாதியினரும் கூடப் பிராமணத் தமிழை அப்போது பேசமுயன்றனர். தற்காலத்தில்

படித்த இளையோர் கூட வீட்டுச் சூழலில் தொடர்ந்து பிராமணத் தமிழைப் பேசுபவர்களாகவும், வெளிச்சூழல்களில் பிராமணத் தமிழ்க் கூறுகள் நீக்கிய பொதுப் பேச்சு வகையைப் பேசுபவர்களாகவும் உள்ளனர். இந்த நோக்கில் இவர்களது பிராமணமொழிக் கூறுகள் வீடு என்ற களத்தில் தொடர்ந்து வாழும் எனத் தோன்றுகிறது. ஏனெனில் இது தங்களது குழு ஒற்றுமைக்குப் பயன்படுகின்ற ஒன்றாகக் கருதப்படுகின்றது. அப்படியானால் வீட்டுச் சூழலில் பயன்பாட்டில் உள்ள பிராமணத் தமிழ் மொழிக் கூறுகளை வடுப்பட்ட மொழிக்கூறுகளாக இவர்கள் கருதவில்லை என்றாகிறது. இந்தக் கருத்து விவாதத்திற்குரியது. இந்தக் கருத்தினைக் கருதுகோள் என்ற அளவில் தான் ஏற்றுக்கொள்ளமுடியும். இந்தக் கருதுகோளை மையமாகக்கொண்டு விரிவான ஆழமான ஆய்வினை மேற்கொண்டால் தான் மேற்கொண்ட கருதுகோள் சரியா, தவறா என்பது தெரிய வரும்.

வட்டாரக் கிளைமொழிகளைத் தனித்த மொழிக்கூறுகளின் அடிப்படையில் இனங்கண்டு கொண்ட அளவிற்கு, பிராமணரல்லாதோரது சாதிக் கிளைமொழிகளை இனங்கண்டு கொள்ளவில்லை.

நிலையாத கிளை மொழியம் என்பது வட்டாரக் கிளைமொழிகளுக்குப் பொருந்தும்; பிராமணர் கிளைமொழிக்குப் பொருந்தாதோ எனத் தோன்றுகிறது.

இனி, பிராமணர் கிளைமொழி நிலைத்த இரு கிளைமொழியத்தில் உள்ளதா, நிலையாத இரு கிளை மொழியத்திலா என்பது ஆய்வுக்குரிய பொருள் என்ற அளவில் இந்த விவாதம் இங்கே நிறைவு பெறுகிறது. இந்த விவாதங்களின் மூலம் பெறும் முடிவுகள்: கிளைமொழிகள் குறிப்பாக, கிராமம் சார்ந்த வட்டாரக் கிளைமொழிகள் அழியும் போக்கில் உள்ளன. பிராமணர் கிளை மொழிகள் நிலைத்த இரு கிளை மொழியச் சூழலில் உள்ளன என்ற கருதுகோளின்படி இவை மனை மொழிச் சூழலில் தொடர்ந்து வாழும் எனத் தோன்றுகிறது. இந்த முடிவுகள் ஏறக்குறைய ஊக அடிப்படையில் உள்ளதால் கருதுகோள் என்ற அளவில் தான் இவற்றை ஏற்றுக் கொள்ள முடியும். விரிந்த, ஏற்கெனவே கூறியபடி ஆழமான ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

6.4. இந்திய அட்டவணை மொழிகளின் பயன்பாட்டுக் களன்கள் சுருக்கம் மொழி இழப்பே

இந்தியா ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளுக்கும் மேலாக ஆங்கிலேயரது ஆட்சியில் உட்பட்டிருந்ததால் ஆங்கில

மொழியின் பயன்பாடு கல்வி, ஆட்சி, நீதி, சட்டசபை, தகவல்தொடர்பு போன்ற களன்களில் தொடர்ந்து நீடித்து வரலாயிற்று. இந்தியா விடுதலை பெற்ற பின் மொழிவழி மாநிலங்கள் உருவாகின. மாநிலத்தின் பெரும்பான்மையோரால் பயன்படுத்தப்படும் எட்டாவது அட்டவணை மொழிகள் மூலமாக எழுத்தறிவில் பின்தங்கியுள்ள இந்தியர்கள் கல்விபெற, ஆட்சி, நீதி, சட்டசபை, தகவல்தொடர்பு போன்ற களங்களில் தேவைப்படும்போது, தங்களது மொழிகள் மூலமாகப் பங்கேற்க, இந்திய அரசும் மாநில அரசுகளும் இந்த மொழிகளைக் குறிப்பாக மாநிலத்தின் பெரும்பான்மையோர் பேசும் இம்மொழிகளை மேற்குறிப்பிட்ட களன்களில் பயன்பாட்டிற்குக் கொண்டுவர முயற்சித்தனர். ஏறக்குறைய 50 ஆண்டுகள் கழிந்த பிறகும் இந்தியாவைப் பொறுத்தவரையில் இந்த முயற்சி பெரிய பலனைப் பெற்றுத் தந்ததாகத் தெரியவில்லை. எடுத்துக்காட்டாகத் தமிழ்நாட்டில், பொதுவாக முதுநிலைப் பட்டபடிப்பு, பொறியியல், மருத்துவம், கணினிசார்ந்த தகவல் தொழில் நுட்பம் போன்ற உயர்கல்விக்கு ஆங்கிலமும், பிறவற்றிற்குக் குறிப்பாக, கீழ்மட்டநிலைக் கல்விக்குத் தமிழும் என்ற நிலைப்பாடே உள்ளது. இன்னமும் கூறப் போனால் தமிழ் வழிக்கல்விக்கு ஆதரவின்றி ஆங்கிலம் வழிப் பாடங்களைக் கற்பிக்கும் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் தான் செல்வாக்கு அதிகமாக உள்ளது. ஆங்கிலம் வழிக் கற்பிக்கும் மழலையர் பள்ளிகள், தொடக்க நிலைப்பள்ளிகள், நகரங்களில் மாத்திரமல்ல கிராமங்களிலும் பல்கிப் பெருகியுள்ளன. இது போன்ற நிலைப்பாடு பிற மாநிலங்களிலும் காணப்படுகிறது. உத்திரப்பிரதேச மாநிலப் பள்ளிகளில் தாய்மொழி இந்தி வழியாகக் கல்வி கற்போர் 35 விழுக்காட்டினர் எனவும் மீதியுள்ள 65 விழுக்காட்டினர் ஆங்கிலம் வழியாகக் கல்வி கற்பிக்கும் பள்ளிகளில் பயில்கின்றனர் எனவும் ஒரு அறிக்கை தெரிவிக்கிறது (Ajayuprety, 2005). அண்மைக் காலத்தில் கருநாடக மாநிலத்தில் கல்வியாளர்கள், எழுத்தாளர்கள் சமுதாய நலத்துறையினர் ஒருங்கிணைந்து ஆங்கில மொழிப்பாடம் அரசினர் பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்தே பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர். அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் குறிப்பாகக் கிராமப்புற மாணவர்கள், நகர்ப்புற மாணவர்களுக்கு இணையாக ஆங்கில மொழியில் திறன்கள் பெறவேண்டும். ஆங்கில மொழித்திறன்கள் பெற்றால் தான் வேலை வாய்ப்புத் தேடும்போது கிராமப்புற மாணவர்கள் நகர்ப்புற மாணவர்களோடு சம நிலையில் போட்டிபோட இயலும் என்பது இக்கோரிக்கைக்கான காரணமாகக் கூறப்பட்டுள்ளது. (Hindu, 2005) (பெங்களூர் பதிப்பு) இனி ஆட்சிமொழி என்ற வகையில் தமிழின் பயன்பாடு

பொதுவாகக் கீழ்மட்டங்களில் மாத்திரம் பயன்பட மாநிலத்தலைமை அலுவலகம் போன்றவற்றில் ஆங்கிலத்தின் செல்வாக்கே தொடர்கிறது எனலாம். நீதித்துறையில் பொதுவாக ஆங்கிலத்தின் பயன்பாடே அதிகம் உள்ளது. நீதித்துறையில் தீர்ப்பு ஆங்கிலத்தில் தான் வழங்கப்படுகிறது. வேண்டினால் தமிழ் மொழிபெயர்ப்பு கிடைக்கும் (இராமமூர்த்தி, 1997; B.D. Jayaram and K.S. Rajyashree 2000.)

இந்நிலையே பொதுவாக மற்ற இந்திய மொழிச் சூழல்களிலும்கூடக் குறையக் காணக்கூடிய நிலை. அதாவது சமூகப் பொருளாதார மேம்பாடு, அரசியல் போன்ற செல்வாக்கு நிறைந்த களன்களுக்கு ஆங்கில மொழிப் பயன்பாடும், குடும்பச்சூழல், இலக்கியம் போன்ற சமூகப்பொருளாதார அரசியல் செல்வாக்கற்ற களன்களுக்கு இந்திய மொழிகளின் பயன்பாடும் என்ற நிலையே உள்ளது எனலாம். அதாவது இந்திய மொழிகளின் பயன்பாட்டுக்களன்கள் சுருங்கிவிட இதன் காரணமாக இந்திய மொழிகளின் வளர்ச்சியும் தேக்கமடைகிறது.

இதன் இன்னொரு விளைவு, எழுத்தறிவுபெற்ற இந்தியர்களில் பலர் (பெரும்பான்மையோர் எழுத்தறிவு பெற்றிருப்பது அவரவர் இந்திய மொழிகளில் தான்) நமது நாட்டுக் குடியாட்சி முறையில் நேரடியாகப் பங்குகொள்ள முடியாமல் போய்விடுகிறது எனலாம்.

இந்த நிலைக்கு உலகமொழியாக உயர்ந்துள்ள ஆங்கிலமே முழுமுதற் காரணமாக அமைந்துகிடக்கிறது. (இது தொடர்பான செய்திகள் விரிவான முறையில் இயல் 3.2இல், இந்தியாவில் ஆங்கிலத்தின் நிலை என்ற பகுதியில் விளக்கப்பட்டுள்ளதை நினைவுகூருங்கள்)

உலகமொழியான ஆங்கிலம் தமது பொருளாதார மேம்பாட்டிற்கு உதவும் என்ற ஆழமான நம்பிக்கையின் காரணமாக ஆங்கிலம் தொடர்ந்து இந்தியா போன்ற நாடுகளில் பொருளாதார அரசியல் வலிமை மிக்க களங்களில் ஆட்சி செலுத்துகிறது எனலாம். இந்திய அரசியல் நிர்ணயச்சட்டப் பரிந்துரைகளின்படி இந்திய மைய அரசும் மாநில அரசுகளும் இந்தியமொழிகளை எல்லாக் களன்களிலும் பயன்படுத்திப் பொதுமக்களைத் தத்தம் மொழிகள் வழியாக இந்தியக் குடியாட்சியில் பங்குபெறவைத்து அவர்கள் வாழ்வை முன்னேற்றுவது என்ற முயற்சி, இன்றுவரை பலன் நிறைந்த முயற்சியாக அமையவில்லை எனலாம். ஒரு எடுத்துக்காட்டை இங்கே குறிப்பிடலாம்.

1982 இல் தஞ்சாவூரில் உள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ் வழியாகப் பொறியியல், மருத்துவப் பட்டப் படிப்புகளைத் தொடங்க முயற்சி மேற்கொண்டது. அவற்றிற்கான பாடப் புத்தகங்கள் பொறியியல், மருத்துவம்துறை சார்ந்த தமிழ் ஆங்கில கலைச்சொல் அகராதிகள் எல்லாம் தயாரிக்கப்பட்டன. சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் தமிழில் பொறியியல் பட்டப்படிப்பு (B.E.)க்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மாணவர்கள், தமிழ் வழியில் பொறியியல் பட்டப் படிப்பு பயில விண்ணப்பங்களையும் அனுப்பினர். அந்த நிலையில் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் கைவிடப்பட்டன என்ற கசப்பான வரலாற்று உண்மை (Gnanasundaram and Rangan 2005), தொழில் நுட்பக் கல்வி என்ற களத்தில் ஒரு இந்திய மொழியை நுழையவிடாமல் தடுக்கும் அளவிற்கு, உலகமொழி ஆங்கிலம் வலிமையாக உள்ளது என்பதையே காட்டுகிறது. இந்திய மொழிகள் மூலம் இப்படிப்பை மேற்கொண்டால் தொழில் நுட்பத்துறையில் இந்தியர்கள் சிறந்து விளங்கு முடியாது என்ற நம்பிக்கையை இந்திய விஞ்ஞானிகள் பலர் விவாதமாக எடுத்துரைப்பர். (இது தொடர்பான விரிவான செய்திகள் இயல் 3 இல் இந்தியாவில் ஆங்கிலத்தின் நிலை என்ற பகுதியில் விளக்கப்பட்டுள்ளதை நினைவுகூருங்கள்.)

ஆங்கிலமொழி மாத்திரம் வலிமை வாய்ந்த சமூகப் பொருளாதார அரசியல் மேம்பாட்டுக் களன்களில் அதாவது வலிமையான களன்களில் தொடர்ந்து செயல்பட்டால் இந்திய மொழிகள் இப்பயன்பாட்டுக் களங்களை இழக்க நேரிடும் (மொழிகள், பல களன்களில் பயன்படப் பயன்படத்தான் வளர்ச்சி பெறும். இதற்கு நல்ல எடுத்துக்காட்டு உலகமொழி ஆங்கிலமே என்பது அனைவரும் அறிந்த ஒன்று). அதாவது மொழியின் பயன்பாட்டுக்களன்கள் சுருங்கிவிடும். இதுவும் ஒருவகையான மொழி இழப்புதான்.

இன்று உலகப் பொதுமயமாதலின்[6] தாக்கம் ஒரு வகையில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் சீர்கேட்டிற்கு வித்திடுவது போலப் பண்பாட்டு மாற்றங்களுக்கும் அதன் ஒரு கூறான மொழியின் அழிவிற்கும் வித்திடுகிறது எனலாம். நகரமயமாதல் போல உலகப் பொதுமயமாதலும் கிராம-சிற்றூர்ப் புற மனிதர்களைப் பெருநகரங்களுக்கு வேலை வாய்ப்பு தொடர்பாகப் புலம் பெயரவைத்துவிடுகிறது. நகர்ப்புறங்களில் வேலைவாய்ப்பு நாடி வருவோர் உலகப்பொது மொழியான ஆங்கிலத்தில் தேர்ச்சியும் வெளியீட்டுத் திறனும் பெற்றவர்களாக இருந்தால் மாத்திரமே பொதுவாக வேலைவாய்ப்புப் பெறுகின்றனர். மேலும், அண்மையில் பல்கிப் பெருகியுள்ள கணினியை மையமாகக்

கொண்டுள்ள தகவல் தொழில் நுட்பத்துறை இத்துறையில் திறன் பெற்றவர்களாக இருந்தாலும் ஆங்கிலமொழியில் நல்ல திறன் பெற்றவர்களாக இருந்தால் மாத்திரமே நல்ல ஊதியம் தந்து அலுவலில் அமர்த்திக் கொள்கிறது. பொருளாதார மேம்பாட்டுக்குத் தகவல்தொழில் நுட்பத்துறை, இத்தகவல் தொழில் நுட்பக் கல்விக்கு ஆங்கிலமொழியே என்ற நிலைப்பாடு உள்ளபோது மாணவர்களும், உலகமொழி ஆங்கிலத்திற்கு முன்னுரிமைகொடுத்து இந்தியமொழிகளைப் புறக் கணிக்கின்றனர். எனவே உலகமயமாதல் தாராளமயமாதல் சந்தைவணிகம் போன்றவை இந்தியா உட்பட உலகநாடுகள் பலவற்றில் உலகமொழி ஆங்கிலத்தின் பயன்பாட்டை அதிகரிக்கின்றன. அதாவது இது வலிமை வாய்ந்த பலகளன்களில் அந்தந்த நாட்டுத் தேசியமொழிகளைச் செயல்படாமல் செய்துவிடுகின்றது. மொழிகளின் பயன்பாட்டுத் தன்மை குறிப்பாக, வலிமை வாய்ந்த களன்களில் வலுவிழந்து போவதும் செயல்படாமல் போவதும் ஒரு வகையான மொழி இழப்பு தான். (பல இந்தியமொழிகள் (தமிழ் உட்பட) வரலாற்றுப் பழமையான காலத்தில் வலிமை வாய்ந்த பலகளன்களில் பயன்பட்டிருப்பதை நாம் இங்கே நினைவில் கொள்ள வேண்டும்). இந்தியமொழி இழப்பிற்கு உலகமொழி ஆங்கிலம் காரணமாக அமைந்துகிடக்கிறது.

இந்த அச்சுறுத்தல், இந்த மொழி இழப்பு நாம் முன்பு விவரித்த மொழி இழப்பை விட அதாவது பெரும்பான்மையோர் மொழிகள் சிறுபான்மைப் பழங்குடியினர் மொழிகளை இழக்கச் செய்வதை விட வலிமை வாய்ந்ததாகத் தோன்றுகிறது. ஏனெனில் இந்தவகையான மொழி இழப்பில் வரலாற்றுப் பண்பாட்டுப் பழமையான பல இந்திய மொழிகளும் அடங்குகின்றன.

இயல் 7

மொழி இழப்பு குறித்த கள ஆய்வுகள்: குறும்பர், இருள மொழிகள்

7.1. நீலகிரி உயிரியல் நிலப்பரப்பில் குறும்பர்மொழி

குறும்பர் (அல்லது குறுபர்) என்பது இனப்பொதுச் சொல். தென் இந்தியாவில் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா மாநிலங்களில் அமைந்திருக்கும் தொடர்ச்சியான ஒரு பெரிய நிலப்பரப்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் பழங்குடியினத்தில் குறிப்பாக, கூடலூர் மற்றும் முதுமலைச் சரணாலயப் பகுதிகளில் வாழும் குறும்பர்கள் பெட்ட குறும்பர் (மலைவாழ் இடையர் என்பது பொருள்) என்றும், கர்நாடகப் பகுதியில் சாம்ராஜ் நகரம், ஹெக்கட தேவன கோட்டைப் பகுதி மற்றும்` குடகு மாவட்டங்களில் வாழும் குறும்பர் பெட்ட குறுபர் அல்லது காடு குறுபர் (மலை அல்லது காட்டில் வாழும் இடையர் என்பது பொருள்) என்றும் கேரளமாநிலம் வயநாடு மாவட்டத்தில் குறிப்பாக, வயநாடு சரணாலயப் பகுதியில் வாழும் இவர்கள் ஊராளிக் குறுமன் (கிராமத்தலைவன் மலைவாழ் இடையர் என்பது பொருள்) என்றும் அழைக்கப்படுகின்றனர். பேராசிரியர் எமனோ (Emeneau, 1969) அவர்கள் குறும்பர் இனமக்கள்(மூன்று உட்பிரிவுகளாக மூன்று மாநிலங்களில் வாழ்ந்தாலும்) இவர்கள் அனைவரும் பேசுவது தனித்த சிறப்பு மொழிக் கூறுகளைக் கொண்ட ஒரே மொழி என்கிறார். (மூன்று மாநிலங்களிலும் வாழ்பவர்களது) மொத்த மக்கட்தொகை 8,192 (1971 மக்கட் தொகைக் கணக்கெடுப்பு) ஆகும். 1994 ஆண்டின் எக்னோலாக் 14 இன் அறிக்கையின் படி(KB) இவர்களது மக்கட்தொகை 10,000 ஆகும்.

தமிழ் நாட்டுப் பழங்குடியினர் மொழி வகையான பெட்ட குறும்பமொழிக்கு ஜெயபால் (Jayapaul, 1978) கள ஆய்வுத் தரவுகளின் அடிப்படையில் ஒரு இலக்கணம் எழுதியுள்ளார். கமில் ஸ்வலபில் அவர்கள் (Zvelebil, 1982) குறும்பர் பழங்குடியினர் மொழியைப் பற்றிய ஓர் மொழியியல் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

உபாத்தியயா (Úpadhyaya, 1982) குடகு மாவட்டத்துக் காடு குறும்பர் மொழி வழக்கு குறித்து ஒரு கட்டுரை எழுதி வெளியிட்டுள்ளார். கொயில்ஹொ என்பவர் (Coelho, 2003) தமிழ் நாட்டுப் பெட்ட குறும்ப மொழி வகை குறித்து ஆராய்ந்து பெட்ட குறும்ப மொழிக்கு இலக்கணம் எழுதியுள்ளார்.

கர்நாடகத்தில் வாழும் பெட்ட குறும்பர் பயன்படுத்திவரும் மூலிகைச் செடிகளின் பெயர்கள் அடங்கிய பழங்குடியினர் பண்பாட்டு மருத்துவம் தொடர்பாக எழுந்துள்ள விஜயேந்திரா என்பவரது ஆய்வு நூல் (Vijayendra, 1997) பெட்ட குறும்பமொழியில் வழங்கி வரும் மூலிகைச் செடிகளின் பெயர்கள் அறியப்பயன்படும்.

7.1.1. குறும்ப மொழியின் சிறப்புக் கூறுகள்

வளைநா ஒலி ஏற்ற (அல்லது நடு) உயிர் ஒலிகள் (Retroflexed vowels or centralized vowels) இவை வளை நா ஒலி கொண்ட மெய்யொலிகள் அல்லது ரகரத்திற்கு முன்னர்த் தோன்றுகின்றன.

எடுத்துக்காட்டுகள்

(1) இர்ல /ïrla/'' 'இரவு'
இளியெ /ïḷiye/ (வினை) 'இழி, கீழே இறங்கு'
கூரெ /kïre/ 'வீடு'
எண்ணெ /ëṇṇe/ 'எண்ணெய்'
ஏணி /ëëṇi/ 'ஏணி'
ஏரெ /ëëre/ (வினை) 'ஏறு'
கே ளெ /këëḷe/ (வினை) 'கேள்/கவனி'

2) ஒலிமாற்றமாக :ட்- (D) ஜ் ஜ் - (-jj-) ஆகமாறுவது

:கு:டி guḍi (கன்னடம்) >: குஜ்ஜி
குடி kuṭi (வினை தமிழ்) > குஜ்ஜெ 'குடி'
அங்:க:டி angaḍi (கன்னடம்) > angaJJi

படர்க்கைப் பெயரில் (3rd person pronoun) பால் வேறுபாடு இல்லை. படர்க்கைப் பெயர்களின் வினைப் பயனிலைகளிலும் பால்வேறுபாடுகள் இல்லை.

(3) இறப்பில்லாச் செயவென் வாய்பாட்டு வினையெச்சங்களுக்கு (non- past infinitive suffixes) முன்பு அசைநிலை விகுதி பழந்தமிழில் உள்ளது போல -ப்- ஆக உள்ளது.

ந:ட -ப்- அ = நடப்ப 'நடக்க/நடப்பதற்கு என்ற பொருளில்'
பு:டி-ப்-அ = பு:டிப்ப 'பிடிக்க/பிடிப்பதற்கு என்ற பொருளில்'

(4) கலைச்சொல் தகுதிபெற்றுள்ள விசேடச் சொற்கள் (அ) மூலிகைப் பெயர்கள்
(ஆ) யானை பிடித்தல் சூழலின் போது பயன்படுத்தப் படும் சொற்கள்

(5) உரைக்கோவைகள்
குறிசொல்வோரும் பூ சாரிகளும் (priests) பாடும் :பிஞ்சிப்பாடல்

அவர்கள் வாழ்வு முறைச்சுழற்சியில் வேறுபட்ட காலப்பகுதிகளில் பின்பற்றப்படும் சடங்குகள் பாடல்கள், கதைகள் முதலியன.

(7) குழந்தைகளுக்குப் பெயரிடல். தங்கள் இனக்குழு அல்லது உட்பிரிவுகளுக்கு ஏற்ற முறையில் உள்ள மரபு சார்ந்த பெயர்களைக் குழந்தைகளுக்கு வைப்பர். இது பண்பாட்டு மொழியியல் தொடர்பானது. ஆண்குழந்தையாக இருந்தால் பரம்பரை பரம்பரையாக வழக்கில் உள்ள 8 ஆண் பெயர்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பெயரிடுவர் அப்பெயர்கள் வருமாறு: : பூமன், கேதன், காளன், மா:தன், மான்:பன், மாறன், ச:டயன், சோமன். பெண் குழந்தையாக இருந்தால் பரம்பரையாக வழக்கில் உள்ள 8 பெண் பெயர்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பெயரிடுவர். அவை வருமாறு: :பூமி, கேதி, காளி, மா:தி, மாண்:பி, மாறி, ச:டச்சி, சீர்த்தி (Jayapaul, 1978)

(8) இச்சமூகத்தினரிடையே ஏற்படும் வழக்குகள் வயதில் மூத்தவர்களால் தீர்த்து வைக்கப்படும். வழக்குகளைச் சந்திக்கும்போது இவர்கள் **அம்பாலெ** என்று கூறப்படும் கூரை வேய்ந்த ஒரு மண்டபப் பகுதியில் பகலில் கூடி வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறுவர். அம்பாலெ, இளம் வயதினர் முதியவர்களோடு தங்கி உறங்கும் விடுதியாகவும் அமைகிறது.

7.1.2. குறும்ப மொழி வகைகளில் மொழி இழப்பு

மொழி இழப்பு, மொழிதக்கவைப்பு என்ற நிலைப்பாட்டில் குறும்ப மொழியின் மூன்று வகைகளான பெட்ட குறும்பமொழி

(தமிழ்நாடு), பெட்ட குறுபமொழி (கருநாடகம்), ஊராளிகுறுமன் மொழி (கேரளம்) ஆகியவை எந்தக் கட்டத்தில் உள்ளன; மொழி இழப்பு உண்டாகியிருந்தால் ஒவ்வொரு மொழிவகையின் இழப்பாட்டு விகிதம் எவ்வளவு என்பதை அளவீடு செய்வதற்காக இந்த நூலாசிரியர், பேராசிரியர் ஆர். பெரியாழ்வார், திராவிடப் பழங்குடியினர் மையத்தின் முன்னைப் பேராசிரியர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்), பேராசிரியர் கி. அரங்கன் (முன்னாள் கணினி மொழியியல் மற்றும் திராவிட மொழிகளின் ஒப்பாய்வுத் துறைப் பேராசிரியர், திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திர மாநிலம், மற்றும் மொழியியல் துறைத்தலைவர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்) ஆகியோருடன் இணைந்து 2005 ஆம் ஆண்டு மே - ஜூலை மாதங்களில் மூன்று மாநிலங்களிலும் உள்ள குறும்ப மொழியினரிடம் நிகழ்த்திய கள ஆய்வின் விவரங்களை இனிக் காண்போம்.

ஆய்வின் நெறிமுறை

மொழி தக்கவைப்பு உள்ளது என்றால் பழங்குடியினர் மொழி ஒரு தலைமுறையினரிடம் இருந்து இன்னொரு தலைமுறையினரைச் சென்றடைய வேண்டும் அதாவது வயதான மூத்த தலைமுறையினரிடமிருந்து நடுத்தர வயதினரும் மூத்த தலைமுறை மற்றும் நடுத்தர வயதினரிடம் இருந்து இளம் வயதினரும் தங்கள் மொழியைக் கற்றிருக்கவேண்டும். எப்போது குழந்தைகள் முழுவதுமாகக் கற்பதை நிறுத்திவிடுகிறார்களோ அப்போது மொழி அழியத் தொடங்குகிறது என்பதை ஏற்கெனவே இயல் 5, 6 ஆகியவற்றில் கண்டோம். இந்தக் கோட்பாட்டின்படி இந்த ஆய்வுக்கு மூன்று வகையான வயதினரும்: மூத்தவயதினர் (46-60 வயது), நடுத்தர வயதினர் (30-45 வயது), இளம் வயதினர் (8-29) தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஒவ்வொரு வயதினரிலும் இருபாலரும் (ஆண்-பெண்) தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆண் இரண்டு பேர், பெண் இரண்டு பேர் என மூன்று வயதினரிலும் மூன்று மாநிலங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மொத்தம் (2x2x3x3=36) 36 தகவலாளர்களிடமிருந்து ஆய்வு தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

களஆய்வுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பழங்குடியினப் பகுதிகள் (கிராமங்கள்) பின்வரும் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றோடு அவர்களது இருமொழிய / பன்மொழியத் திறன்களும் இடம்பெற்றுள்ளன.

அட்டவணை 14

கள ஆய்வில் இடம்பெற்ற ஊர்கள், பழங்குடியினரது இருமொழியம் - பன்மொழியம்

	தமிழ்நாடு	கருநாடகம்	கேரளம்
பழங்குடியினர் வாழுமிடம்	முதுமலை சரணாலயம் (45 கிராமங்கள்)	பந்திப்பூர் சரணாலயம்	வயநாடு சரணாலயம் (100 கிராமங்கள்)
கள ஆய்வில் இடம்பெற்ற கிராமங்கள்	1. காமராஜபுரம் 2. தெப்பக்காடு (கூடலூர்)	1. பிரம்மகிரி 2. ஜக்கஹள்ளி (ஹெக்கட தேவனகோட்டை)	1. பேகூர் 2. கோனவயல் (மானந்த வாடி)
இருமொழியம்/ பன்மொழியம்	பெட்ட குறும்ப மொழி, தமிழ், மலையாளம்	பெட்ட குறுப/காடு குறுபமொழி, கன்னடம், ஜேனு குறுப மொழி	3. ஊராளி குருமன் மொழி, மலையாளம், கன்னடம் (நடுத்தர வயதினர்)

வினாத்தாள் முறை

மொழி இழப்பைக் கணக்கிடப் பின்வரும் வினாத்தாள் முறை பின்பற்றப்பட்டது. 100 எண்ணிக்கையில் உள்ள மொழி அடிப்படைச் சொற்களையும் மொழியில் காணப்படும் அடிப்படை வாக்கியங்கள் 25 ஐயும் கொண்டு இந்த 100 சொற்களில், 25 வாக்கியங்களில் எத்தனை இப்பழங்குடியினர் மொழிவகைகளில் (மூன்று மாநிலமொழி வகைகளிலும்) வாழ்கின்றன, எத்தனை அழிந்து விட்டன என்பனவற்றை ஒவ்வொரு வயதுப் பிரிவினரிடமும் (அவர்களில் ஆண்கள் மற்றும் பெண்களிடம்) சோதித்து அறியப்பட்டன.

பழங்குடியினர் மூன்று மாநிலங்களிலுமே இருமொழியாளர்கள். அவர்கள் பழங்குடியினத் தாய் மொழியோடு அந்தந்த மாநில மொழியையும் (தமிழ்- தமிழ்நாட்டில், கன்னடம், கருநாடகத்தில், மலையாளம்- கேரளத்தில்) பேசும் திறன் கொண்டவர்கள். எனவே ஆய்வாளர்கள் மூன்று பேரும் அந்தந்த மாநில மொழியைப் பயன்படுத்தித் தகவல்களைச் சேகரித்தனர். அடிப்படைச் சொற்களுக்கு இணையான அவரது மொழிச்சொற்களை அவர்களே கூறும்படி செய்யப்பட்டது.

இந்த ஆய்வில் (1) அடிப்படை வாக்கியங்களைச் சோதனைக்குட்படுத்துவதில் சில இடர்ப்பாடுகள் நேர்ந்தமையால் அவற்றைக் கணக்கிற்கு எடுத்துக்கொள்ள முடியவில்லை. (2) நடுத்தர வயதினரது மொழிதக்கவைப்பு சற்றேறக்குறைய வயதானவரது மொழிதக்கவைப்போடு ஒத்திருந்ததால் இந்த ஆய்வு முடிவில் இரண்டும் ஒன்றாக்கப்பட்டன. இளையோரது மொழி இழப்பின் எண்ணிக்கைதான் குறிப்பிடும்படி உள்ளது.

பின்வரும் அட்டவணை, மாநிலம் தோறும் நிகழ்ந்துள்ள மொழி இழப்பின் அளவீட்டை விழுக்காட்டளவில் குறிப்பிடுகிறது.

அட்டவணை 15

அடிப்படைச் சொற்கள் இழப்பு : ஓர் ஒப்பீடு

	தமிழ்நாடு ஆண் பெண்	கருநாடகம் ஆண் பெண்	கேரளம் ஆண் பெண்
மூத்தவயதினர் (46-60)	மொழி இழப்பு இல்லை	மொழி இழப்பு இல்லை	மொழி இழப்பு இல்லை
நடுத்தர வயதினர் (30-45)	மொழி இழப்பு இல்லை	மொழி இழப்பு இல்லை	மொழி இழப்பு இல்லை
இளைய வயதினர் (8-29)	7% 5%	18% 15%	40% 15%

இளைய வயதினர் இழந்துள்ள பழங்குடியினத் தாய் மொழிச் சொற்கள் (தாய்மொழிச் சொல்லும் அதன் பொருளும் தரப்பட்டுள்ளன)

தமிழ் நாடு	கருநாடகம்	கேரளம்
1. கிவி 'காது' 2. *தோண்டி 'கேழ்வரகு' 3. நிருஞ்சி 'கொசு' 4. *கெம்ப்பு 'சிவப்பு' 5. பத்தொண்டு 'பதினொன்று' 6. முகளு 'கூரை' 7. மலெமோடு	1. :குஜ்ஜெ 'நெற்றிப்பொட்டு' 2. அங்:கஜ்ஜி 'கடை' 3. மீனு 'நட்சத்திரம்' 4. கேர்ரு 'காற்று' 5. பி:த்:தி 'சாம்பல்' 6. தோண்:டி 'கேழ்வரகு' 7. * வேரு/:பியரு 'வேர்' 8. ம:கு 'குழந்தை'	1. நெலிகெ 'நாக்கு' 2. பொட்டெ 'வயிறு' 3. * கூரெ 'வீடு' 4. * கென்னி 'கயிறு' 5. *பொத்து 'சூரியன்' 6. * :பான 'வானம்' 7. * மல்லு/பொரி 'நிலா'

'மேகம்' *குறியிடப்பட்ட இச்சொற்களைப் பெண்கள் இழக்கவில்லை குறியிடப்படாத 5சொற்களைத்தான் பெண்கள் இழந்துள்ளனர். ஆண்கள் 7 சொற்களை இழந்துள்ளனர்	9. கித்தலி 'தங்கை' 10. ப:கலு 'பகல்' 11. *நெண்:டு 'நேற்று' 12. இருலுக்க 'இரவு' 13. பல்மன் 'பழைய' 14. சூ:டு 'சூடு' 15. :பொள்ளெ 'வெள்ளை' 16. என்:பது 'ஒன்பது' 17. :தாரு 'யார்' 18. எர்:கு 'பக்கம்/அருகில்' * குறியிடப்பட்ட இச்சொற்களைப் பெண்கள் இழக்கவில்லை குறியிடப்படாத சொற்களைத்தான் பெண்கள் இழந்துள்ளனர். ஆண்கள் 18 சொற்களை இழந்துள்ளனர்.	8. * மீனு 'நட்சத்திரம்' 9. * :பின்னு 'மின்னல்' 10. கெரெரு 'காற்று' 11. *:பீதி 'சாம்பல்' 12. மீனு 'மீன்' 13. *ம:கெ 'குழந்தை' 14. *கிதாளு 'தங்கை' 15. *:கனெம:கெ 'கணவன்' 16. *பொனும:கெ 'மனைவி' 17. ப:கலு 'பகல் பொழுது' 18. இருலுக்க 'இரவுப் பொழுது' 19. *நெண்டு 'நேற்று' 20. இண்:டு 'இன்று' 21. கேகுங்:க 'நாளை' 22. *பல்மன் 'பழைய' 23. *பொய்மன் 'புதிய' 24. * அப்பல 'மோசமான' 25. * நெண்டிச் சொ 'ஈரம்' 26. சூடு 'சூடு' 27.* :பல்:பிரிக 'வலது' 28. * ஏடு:பிரிக 'இடது' 29. எர்:கு 'பக்கம்' 30. *கிரி:து 'சிறிய' 31. *தால்/கினேரி 'தாழெ/ கீழெ' 32.*:பொள்ளெ/ :பெல்லெ 'வெள்ளை' 33. மூரு 'மூன்று' 34. உ:த்:த 'நீளம்' 35. * நாக்கு 'நான்கு' 36. * என்:பது 'ஒன்பது'

		37.பத்தொண்டு 'பதினொன்று' 38. :தாரு 'யார்' 39. *என்னெ 'எப்போது' 40. எஞ்ஜாங் : கெ *குறியிடப்பட்ட இச்சொற்களைப் பெண்கள் இழக்கவில்லை, குறியிடப்படாத 15 சொற்களைத் தான் பெண்கள் இழந்துள்ளனர். ஆண்கள் 40 சொற்களை இழந்துள்ளனர்.

7.1.2.0. குறும்பர் மொழி வகைகளின் இழப்பு: மொழிக்காரணிகள், மொழித்தொடர்பில்லாக் காரணிகள்

குறும்பர் மொழி வகைகளில் நேரிடும் இழப்பு மொழித் தொடர்பான காரணிகளாலும் மொழித்தொடர்பில்லாத சமூகவியல் காரணிகளாலும் ஏற்பட்டுள்ளன. இந்த இழப்பு பெரும்பாலும் மூன்று மாநிலங்களிலும் உள்ள இளைய தலைமுறையினரிடம் தான் ஏற்பட்டுள்ளது.

7.1.2.1. மொழிக்கூறுகளின் இழப்பு

இவர்களது மொழிவகைகளின் சில இழப்புகள் அதிகார வலிமைபெற்ற மாநில மொழிகளை எதிர்ப்படுவதால் நேரிடுபவைகளாக உள்ளன.

1) தங்கள் மொழியில் சிறப்பாக உள்ள வினை ஒலியுடன் கூடிய உயிர் ஒலிகள் (Retro flexed vowels) அம் மாநிலமொழி வகைகளின் உயிர்ஒலிகளின் தன்மைக்கு ஏற்ப வளை நா ஒலியற்ற உயிர்ஒலிகளாக (non retro flexed vowels) மாற்றமடைந்துள்ளன.

2) இறப்பில்லாக் காலத்தில் செயவென் வாய்பாட்டு வினையெச்சத்திற்குப் (non past infinitive suffix) பிறகு இடம் பெறும் -ப்- விகுதி இளைய தலைமுறையினரின் பேச்சில் -ப்- விகுதியாவும் உள்ளது. சில வேளைகளில் (சில சொற்களில்)தற்காலத் தமிழில் உள்ளது போல -க்-

விகுதியாகவும் -ஓர் இருநிலைத் தன்மையில் (free variation) உள்ளது.

நட -ப்- அ = நடப்ப எனவும்

நட -க்- அ = நடக்க எனவும் இரண்டு விதமாக அமைந்து விடுவது ஒரு மாற்றமாகும். தற்போது இது இரண்டு விதமாக உள்ளது. நாளடைவில் ஒரு வேளை மொழியின் சிறப்புக் கூறான நடப்ப போன்றவை முற்றிலுமாக நீங்கி நடக்க போன்றவை மாத்திரம் பயன்பாட்டிற்கு வந்துவிடலாம். இந்த மாற்றமும் மூன்று மாநிலங்களது பேச்சு வகைகளில் காணக்கிடக்கின்றது.

3) சிறப்புப் பெயர் வகைகள் குறிப்பாக மூலிகைச் செடிகளின் பெயர்கள் மூன்று மாநில இளையோரது பேச்சு வகைகளில் காணப்படவில்லை.

4) யானை பிடித்தலை இளைய தலைமுறையினர் தங்கள் வாழ்க்கையில் ஒரு செயல் முறையாகக் கொள்ளாததால் அச்செயல் தொடர்பான சொற்களையும், தொடர்களையும் இழந்துள்ளனர்.

5) இளைய தலைமுறையினரிடமும் சில சமூகப் பண்பாட்டு மாற்றங்கள் (பரவலாகும் கல்வியால்) ஏற்படுவதால் அவர்களிடையே குறிசொல்பவர்கள் / பூசாரிகள் உருவாவதாகத் தோன்றவில்லை. எனவே குறிசொல்லலின் போது பயன்படுத்தும் பிஞ்சிப்பாட்டு வகைகள் பயன்பாட்டில் இருந்து நீங்கியுள்ளதாகத் தோன்றுகிறது.

6) நாட்டார் வழக்காற்றியலில் உள்ள பாடல்கள், கதைப்பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள் எல்லாமே அழிந்துள்ளன.

7) அவர்களது வாழ்வியலோடு பின்னிப் பிணைந்துள்ள சடங்குகளை இளைய தலைமுறையினர் இழந்து விட்டதாகத் தோன்றுகின்றது. இந்த இழப்பின் தொடர்பாக அந்தப் பயன்பாட்டின்போது வெளிப்படும் மொழி நடையும் அழிந்துள்ளதாகத் தோன்றுகிறது.

7.1.2.2. பண்பாட்டு மொழியியல் கூறுகளின் இழப்பு

இதுநாள்வரையிலும் இவர்களிடையே பழக்கத்தில் இருந்த பெயரிடும் முறையானது இப்போது மாற்றம் அடைந்துள்ளது. இளம்தலைமுறையினது பெயர்கள் வீட்டில் மரபு சார்ந்த பெயர்களாகவும் பள்ளிக்கூடம் போன்ற பொது இடங்களுக்குத்

தற்காலப் பெயர்களாகவும் உள்ளன. அதாவது மரபுப் பெயர்கள் வைக்கப்பட்டாலும் அதனுடன் இன்றைய இந்திய மொழிய நவீனப் பெயர்களையும் உடன் வைத்து விடுகின்றனர்.

7.1.2.3. சமுதாயப் பண்பாட்டியல் கூறுகள் அழிதல்

அன்றாட வாழ்க்கையின் போது, வழக்குகள் உண்டானால் பெரியவர்கள் அம்பாலெ என்ற சமூகக் கூடத்தில் ஒன்று கூடி வழக்குகளை விசாரித்துத் தீர்த்து வைத்த, மரபு சார்ந்த அந்தப் பழைய முறை இப்போது அழிந்து கொண்டுள்ளது. கள ஆய்வுக்காகத் தரவுகள் சேகரிக்கச் சென்றிருந்த இரண்டு கேரளக் கிராமங்களிலுமே அம்பாலெ என்ற சமூகக்கூடமே இல்லை. கருநாடகத்தில் ஒரு கிராமத்தில் இல்லை. வழக்கு தீர்க்கும் இந்த பழமையான மரபு சார்ந்த முறைமை அழியும் போது அச்சூழலில் பயன்பாட்டில் இருந்து வந்த மொழி வழக்குகளும் அழிகின்றன.

7.1.2.4. மொழிதக்கவைப்பு – இழப்பிற்கான காரணங்கள்

மூன்று மாநிலங்களிலும் உள்ள இளையதலை முறையினரிடம் காணப்படும் மொழிதக்கவைப்பு - இழப்பிற்கான காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1) மலையாள இரு மொழியத்தோடு ஒப்பிடும்போது தமிழ் இருமொழியம், கன்னட இருமொழியம் இரண்டிலுமே, பழங்குடியினர் மொழி வகைகளின் பயன்பாடு வலுவானதாக உள்ளது. மலையாள இரு மொழியமோ பழங்குடியினர் மொழிவகையை நீக்கிக் கொள்ளும் முறையில் உள்ள இருமொழியமாக உள்ளது. இங்கே ஒன்றை நினைவு படுத்திக் கொள்ளவேண்டும். கேரளத்தில் உள்ள பழங்குடியினரில் பெரும்பான்மையோர் மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்போது தங்கள் தாய்மொழியாக மலையாளத்தைத்தான் குறிப்பிட்டுள்ளனர் என்பதை இயல் 4.3 இல் விளக்கியுள்ளதை நினைவுகூறுங்கள்.

2) தமிழகத்தில் இப்பழங்குடியினரது இருப்பிடங்கள், நிலங்களைக் கையகப்படுத்துதல் போன்ற செயல்பாட்டால் தொல்லைக்குட்படாமல் நிலைத்த தன்மையில் உள்ளன. நிலங்களைக் கையகப்படுத்தும் முயற்சிகளை முறியடிப்பதில் கூடலூரில் உள்ள ‘அக்கார்டு’ (Accord) போன்ற தன்னார்வுக் குழுக்கள் உதவுகின்றன. நிலப்பெயர்ச்சி நேர்வதிலிருந்து இவர்கள் தடுக்கப்படுவதால் மொழி இழப்பு நேர்வதும்

தடுக்கப்படுகிறது. கர்நாடக மாநிலப் பழங்குடியினர் கிராமங்களில், பள்ளிகள் இவர்களது இருப்பிடங்களுக்கு அருகாமையில் உள்ளன. பள்ளியில் கழித்த நேரம் போக இவர்கள் தங்களது சமூதாயத்தினரோடு ஒருங்கிணைந்து வாழ்வியல் நிகழ்வுகளில் பங்கேற்கின்றனர். கேரள மாநிலத்தில் இத் தலை முறையினரில் பெரும்பாலோர் குறிப்பாகச், சிறுவர்கள் பள்ளிக் கல்விக்காக ஆண்டின் பெரும்பகுதியை உண்டு உறைவிடப்பள்ளிகளில், விடுதிகளில் தங்கிக் கழித்துவிடுவதால், தங்களது சமுதாயத்தினரோடு ஒருங்கிணைந்து வாழ்வது ஏறக்குறைய இளம் வயதிலிருந்தே தடைப்பட்டுவிடுகிறது. பெண்கள் உண்டு உறைவிடப் பள்ளிகளில் தங்கிப்படிப்பது மிகக்குறைவு. எனவே தான் கேரள மாநிலத்தில் ஊராளிக் குறுமன் மொழி வகையில் ஆண்களிடையே மொழி இழப்பு மிக அதிகமாகவும் (40 விழுக்காடு) பெண்களிடையே குறைவாகவும் (15 விழுக்காடு) உள்ளது.

தமிழ்நாடு, கருநாடக மாநிலங்களில் வீட்டுச் சூழலில் மாநில மொழிப்பயன்பாடு ஏறக்குறைய இல்லை என்றே கூறலாம். கேரள மாநிலத்தில் மாநில மொழியான மலையாளத்தின் பயன்பாடு குறிப்பாக இளந்தலைமுறையினரிடத்தில் பெருகியுள்ளதாகத் தெரிகிறது. தமிழ் நாட்டில் தங்கள் பழங்குடியினர் மொழி குறித்த இழி மனப்பாங்கு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. கருநாடக மாநிலத்துப் பழங்குடியினரிடையே அவர்களது மொழி வகை குறித்த உணர்வு எவ்வாறு உள்ளது என்பது புலப்படவில்லை.

கேரள மாநிலத்தில் நிகழும் சமுதாய அரசியல் விழிப்புணர்வு நிகழ்வுகளின் தாக்கம் குறும்பர் பழங்குடியினச் சமுதாயம் வரை சென்று சேர்வதாகத் தெரிகின்றது. இக்காரணங்கள், தற்காலத்தில் பழங்குடி மொழியினரைக் கல்வியின் பால் நாட்டம் கொண்டவர்களாக மாற்றுவது போலத் தெரிகிறது. கல்வி, துவக்க நிலையில் மலையாள மொழி மூலமே சாத்தியமாகிறது. இக்காரணங்கள் தாய்மொழி இழப்பைத் துரிதப்படுத்துகின்றன எனத் தெரிகிறது.

இந்த முன்னோடி ஆய்வின் முடிவுகள் வருமாறு :

கேரளம்

மொழி இழப்பின் அளவு அதாவது ஊராளிக் குறுமன் வகையின் இழப்பு அதிகமாக உள்ளது. பெண்களை விட

ஆண்களிடம் அதிகமாக உள்ளது. பெண்களது மொழி இழப்பு 15 விழுக்காடு. ஆண்களது மொழி இழப்பு 40 விழுக்காடு. கேரளத்தில் வழங்கும் குறுபர் மொழியின் இழப்பு அதிகமாக உள்ளது.

கருநாடகம்

அடுத்த நிலையில் கருநாடகம் உள்ளது. இங்கும் பெண்களை விட ஆண்களிடையே தான் மொழி இழப்பு அதிகமாக உள்ளது. பெண்களது மொழி இழப்பு 15 விழுக்காடு. ஆண்களது மொழி இழப்பு 18 விழுக்காடு.

தமிழ் நாடு

பெட்ட குறும்ப மொழி வகையில் உள்ள இழப்பு தமிழ்நாட்டில் குறைவாக உள்ளது. இங்கும் பெண்களை விட ஆண்களே மொழி இழப்பில் முன்னணியில் உள்ளார்கள். பெண்களது மொழி இழப்பு 5 விழுக்காடு. ஆண்களது மொழி இழப்பு 8 விழுக்காடு. இந்த மொழிச் சூழலில் ஆண்கள்தான் முதலில் மொழியை இழக்கிறார்கள்.

யுனெஸ்கோவின் சமீபத்திய அழியும் நிலையில் உள்ள இந்திய மொழிகள் பட்டியலில் குறுப அல்லது குறும்ப மொழி வகை (கர்நாடகத்தில் பேசப்படுகிறது) இடம்பெற்றுள்ளதை இங்கே குறிப்பிடலாம். இது தொடர்பான செய்தியை அறியப் பிற்சேர்க்கை 2ஐக் காணவும்.

7.2. இருளமொழி இழப்பு/தக்கவைப்பு[7]

அட்டக்கல்

கோவை மையப்பகுதியிலிருந்து சுமார் 18 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அட்டக்கல் என்ற கிராமத்தில் (பாரதியார் பல்கலைக் கழகத்திலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது) இருளர் இனப் பழங்குடியினர் வாழ்கின்றனர். (ஏற்கெனவே இயல் 2இல் தமிழ்நாட்டின் மொழிச் சூழல் என்ற பகுதியில் இருளர் பற்றித் தெரிவித்த விவரங்களை நினைவுகூருங்கள்.) பழங்குடியினரின் தனித்த ஒரு மொழியாக இருளமொழியைப் பேசும் இவர்களில் பெரும்பான்மையோர் நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்டங்களில் வாழ்கின்றனர். அட்டக்கல்லில் வாழும் இருளர்கள் பேசுவது நீலகிரி நல்லூர், பதிவேட்டக்காடு இருளக்கிளை மொழியாகும் (Perialwar, 1995). மலையடிவாரத்தில் அமைந்துள்ள இவர்களது ஊர் தனித்துள்ளது. இந்த ஊரில் இருளர்களே வாழ்கின்றனர். அவர்களில் சிலர் கிருத்துவ மதத்தைத் தழுவியவர்களாகவும் உள்ளனர். ஒரு கிருத்துவத் தேவாலயம் இங்கே உள்ளது.

இங்குள்ள இருளர்கள் தமிழ் இருமொழியாளர்களாக உள்ளனர். இளைய தலைமுறையினர் பள்ளிப் படிப்பை மேற்கொண்டுள்ளனர். பள்ளிப் படிப்பைத் தொடராத, தொடர விரும்பாத சிறுவர்களும் இங்குள்ளனர். பள்ளிக்கல்வியின் இன்றியமையாமை குறித்து அவ்வப்போது அரசு கல்வித்துறையிலிருந்து ஆசிரியர்கள் வந்து அறிவுரை கூறிச் செல்கின்றனர். ஒரு தொடக்கப்பள்ளி இங்குள்ளது. பாரதியார் பல்கலைக் கழகமொழியியல் ஆய்வாளர்கள் அவ்வப்போது தங்கள் மொழியியல் ஆய்வின் பொருட்டு இங்கு வந்து செல்கின்றனர்.

7.2.1. கள ஆய்வுமுறை

பகுதி 7.1. இல் குறிப்பிட்டபடி குறுப மொழி இழப்பு/ தக்கவைப்புக்குப் பின்பற்றிய அதே ஆய்வு முறைதான் இருளமொழி இழப்பு/தக்கவைப்பிற்கும் பின்பற்றப்பட்டது. மூன்று வகையான வயதுக் குழுவினரும் (ஆண் பெண் இருபாலரும்) : மூத்த வயதினர் (45 வயதுக்குமேல்) நடுத்தர வயதினர் (30 - 45 வயதினர்) இளம் வயதினர்(15-27 வயதினர்) எனத் தகவலாளர்களாக (ஆண்: 2 பெண் : 2x3 வயதுக் குழுவினர் =) மொத்தம் 12 பேர் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இந்த ஆய்விலும் வினாத்தாள் முறை பின்பற்றப்பட்டது. இந்த ஆய்வில் (1) மாரிஸ்வதேஷ் (Morrisswadesh) அவர்களது மொழி அடிப்படைச் சொற்கள் 100 உம் (Gudshinsky, 1956) (2) இருள மொழியின் தனித்த மொழிக்கூறுகளை வெளிப்படுத்த உதவும் 25 சொற்களும் (3) மொழியின் 25 அடிப்படை வாக்கிய அமைப்புகளும் பயன்படுத்தப்பட்டன. இவை பின்னிணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இருளமொழிப் பழங்குடியினர் மூன்று வகையான வயதுப் பிரிவினரிடமிருந்தும் வினாத்தாள் முறையைப் பின்பற்றித் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

7.2.2. இருளமொழி ஆய்வின் முடிவுகள்

ஆய்வின் முடிவுகள் வருமாறு

7.2.2.1 ஒலி இழப்பு, ஒலியன் நிலையில்

1) பெரும்பான்மையான நீலகிரி மொழிகளில் காணக்கிடக்கும் வளை நாவொலி உயிர்கள் இருளமொழியிலும் உள்ளன. இந்த வளை நா உயிர் ஒலிகள் அட்டக்கல் பகுதியில் உள்ள இளம் வயதினரது இருளமொழி வகையில், தமிழ் மொழியின் தாக்கத்தால் தமிழ் மொழியில் உள்ளது போல வளை நா ஒலியற்ற உயிர் ஒலிகளாகச் சில சொற்களில் காணப்படுகின்றன. (நடுத்தர, மூத்த வயதினரது பேச்சில் வளை நா ஒலியேற்ற உயிர்ஒலிகள் உள்ளன.)

அட்டவணை 16

இளம் வயதினரது இருளமொழியில் வளை நா ஒலியற்ற உயிர் கொண்ட சொற்கள்

எண்	தமிழ்ச் சொல்	இளம் வயதினர்	நடுத்தர/மூத்த வயதினர்
1.	சதை	செடெ	செடெ
2.	அவன்	அவென்	அவ
3.	முட்டை	மு:ட்:டெ	மு:ட்:டெ
4.	முடி	மெ:குரு	மெ:குரு
5.	உறங்கு	ரொங்கு	ரொங்கு
6.	கை	கெய்யி	கெய்யி

2) இருளமொழியில் காணப்படும் சிறப்பு ஒலியன் கூறுகளின் மாற்றம் வருமாறு (Perialwar, 1977; 1995) :

அ) அ > எ

ஆ) யா > ஆ

இ) மொழிமுதல் உயிர் அல்லது அசை இழப்பு

ஈ) அண்பல் வெடிப்பொலி

உ) மொழியீற்று மெல்லொலி இழப்பு

ஊ) மொழியீற்று லகர ஒலி இழப்பு

எ) இரண்டு உயிர்ஒலிகளுக்கு இடையே லகர இழப்பு

ஏ) உயிர்மெய்க்கு முன்பு லகர இழப்பு

ஐ) முன்னண்ண உயிர்களுக்கு முன்பு (ஆனால் உயிர்களுக்குப் பின்பு வரும் வளை நா ஒலிகள் தவிர்ந்த) ககரம் சகரமாதல் (Burrow 1968). இந்த 9 ஒலியன் கூறுகளின் மாற்றம் இடம்பெற்றுள்ள சொற்கள், மூன்று பிரிவு வயதினரிடையேயும் சோதித்து அறியப்பட்டன. இளம் வயதினர் உட்பட எல்லோரும் இந்தமொழிக் கூறுகளில் பெரும்பாலனவற்றைத் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். கீழ்வரும் சில சொற்களில் மாத்திரம் அண்பல் வெடிப்பொலி (alveolar stop viz. /t/) இரட்டிக்கும் போது தமிழ்மொழியில் உள்ளதுபோல வளை நா ஒலியாக மாற்றம் பெற்றுள்ளது. எடுத்துக்காட்டு: தீற்று > தீட்டு 'ஊட்டு என்ற பொருளில்'

மொழி முதலில் வரும் ஒலிப்புள்ள இதழ்குவி வெடிப்பொலி (voiced bilabial plosive viz /b/) தமிழ்மொழியில் உள்ளது போல ஒலிப்பிலா இதழ்குவி வெடிப்பொலியாக (voiceless bilabial plosive viz /p/) மாற்றம் அடைந்துள்ளது.

மேலும் மிகைத்திருத்தம் (hyper correction) காரணமாக மொழி முதலில் உள்ள ஒலிப்பிலா இதழ்குவி வெடிப்பொலி (voicless bilabial plosive viz /p/) ஒலிப்புள்ள இதழ்குவி வெடிப்பொலியாக (voiced bilabial plosive viz /b/) மாறியுள்ளது. எடுத்துக்காட்டு: பேரு > : பேரு ('பெயர் என்ற பொருளில்')வாக மாறியுள்ளது.

7.2.2.2. சொல் இழப்பு

அடிப்படைச் சொற்களில் 5 விழுக்காடு தாய்மொழிச் சொற்களை இளம் வயதினர் இழந்துள்ளனர். அதற்குப் பதிலாகத் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துகின்றனர். வயதானோர் மற்றும் நடுத்தர வயதினர் தாய்மொழிச் சொற்கள் எவற்றையும் இழக்கவில்லை.

அட்டவணை 17

இளம் வயதினரது இருளமொழிச் சொற்கள் இழப்பு

எண்	அடிப்படைச் சொல்	இருளமொழிச் சொல்: வயதானோர் நடுத்தர வயதினர்	தமிழ்ச்சொல் தாக்கம்: இளம் வயதினர்
1.	பல	அல்லெ	பல
2.	பெண்	பொண்:டரி	பொம்பளெ
3.	முழங்கால் முட்டு	சந்து	முட்டி
4.	சூரியன்	பொது	சூரியன்
5.	நட்சத்திரம்	மீனு	நக் ஷத்ர

7.2.2.3. உருபன்மைக் கூறுகள் இழப்பு

உருபன்மைக் கூறுகள் இழப்பு பற்றி விவரிப்பதற்கு முன் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். வாக்கிய அமைப்புகளின் அடிப்படை எதுவும், எந்த வயதினரிடமும் மாறவில்லை. இழப்பு நேரவில்லை. வாக்கியங்களில் உள்ள உருபன்மைக்கூறுகளில் சிலவற்றிற்கு இழப்பு நேர்ந்துள்ளது. அதாவது அவை தமிழ் மொழி உருபன்மைக் கூறுகளுக்கு ஏற்ப

மாற்றம் பெற்றுள்ளன. இளைய வயதினரது இருளமொழி வழக்கில் மட்டும் இந்த மாற்றம் புறநிலையில் தான். அதாவது இருளமொழி உருபன் கூறுகளுக்குப் பதிலாகத் தமிழ்மொழி உருபன் கூறுகள் இடம்பெற்றுள்ளனவே தவிர அடிப்படை இருளமொழி இலக்கண விதிகளில் மாற்றம் ஏதும் இல்லை என்பது பின்வரும் பகுதிகளில் தெளிவு பெறும்.

7.2.3.1 இருளமொழியில் இறந்த காலம் இறப்பிலாக் காலம்

இருளமொழியில் இறந்த காலம் இறப்பிலாக் காலம் என இரண்டு காலங்கள் உள்ளன. இறப்பிலாக் காலத்தின் விகுதிகள் (non past tense suffixes) -க்க்- (-kk-) மற்றும் - : க் (-ஞ்-) ஆகும். இருளமொழியின் இறப்பிலாக்கால விகுதிகள் மூத்த மற்றும் நடுத்தர வயதினரது இருளமொழி வகைகளில் மாற்றம் இல்லை. ஆனால் இளைய வயதினரது இருளமொழிப் பேச்சில் -க்க்- > -ப்ப்- காக மாறியுள்ளது. -:க் (-ஞ்-) > -வ்- ஆக மாறியுள்ளது.

இந்த மாற்றத்தின் காரணம் இளம் வயதினர் அதிகமாக எதிர்கொள்ளும் தமிழ்மொழியில் உள்ள எதிர்கால விகுதிகளான -ப்ப- மற்றும் -வ்- ஆகியவற்றால் எனலாம். இளைய வயதினர், தமது இருளப் பேச்சு வகையில் இருளமொழிக்கே உரித்தான இறப்பில்லாக் காலம் (இது நிகழ்காலம், எதிர்காலம் இரண்டையும் பொருள் அடிப்படையில் உள்ளடக்கியது) உருபன்களான (விகுதிகளான) -க்க்- மற்றும் -: க்- இரண்டையும் இழந்து விட்டனர் எனலாம். இருளமொழி விகுதிகளை இழந்து அதற்குப் பதிலாக (இவர்களது பேச்சில்) தமிழ் விகுதிகளான (முறையே) -ப்ப்- மற்றும் -வ்- ஐப் பெற்றிருந்த போதிலும் இந்த மாற்றம் இருளமொழியின் கால வகையான இறந்தகாலம், இறப்பில்லாக் காலம் என்ற கட்டுக்கோப்பை மாற்றிவிடவில்லை என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். அதாவது தமிழ் மொழியிலிருந்து இளைய வயதினர் பெற்ற விகுதிகளாகப் -ப்ப்- மற்றும் -வ்- இருந்தபோதிலும் இவை தமிழ் மொழியில் உள்ளதைப் போல எதிர்காலத்தைச் சுட்டவில்லை. மாறாக இருளமொழியின் இலக்கணக் கூறான இறப்பில்லாக் காலத்தைத்தான் சுட்டுகின்றன என்பதை மனதில் கொள்ளவேண்டும். கால உருபுகளில் நிகழ்ந்துள்ள (உருவ)மாற்றம் இருள மொழிக்கென்று உள்ள கால அமைப்பை மாற்றவில்லை. தமிழில் உள்ள விகுதிகள் இருளமொழியில் புகுந்த விட்டபோதும் அவை இருளமொழிக் கால அமைப்பை மாற்றவில்லை எனலாம். எடுத்துக்காட்டுகளைப் பின்வரும் அட்டவணையில் காண்க.

அட்டவணை 18

இறப்பிலாக் காலம்

வயதானோர்/நடுத்தர வயதினர் இருளமொழி	இளைய வயதினர் இருளமொழி	தமிழ் மொழியில் பொருள்
1) நாமு தேங்காயெ விக்கேமு	நாமு தேங்காயெ விப்பேமு	நாம் தேங்காயை விற்கிறோம் /
2) நா நின்னோடெ வரு:கெ	நா(ன்) நின்னோடெ வரு:கெ/வருவெ (இரண்டாட்ட நிலை: free variation)	நான் உன்னுடன் வருகிறேன்./ வருவேன்.
3) அவெ மீனு பு:டிக் க போயிருக்கா	அவெமீனு பு:டிக்க போயிருப்பா	அவன் மீன் பிடிக்கப் போயிருக்கிறான்/ போயிருப்பான்
4) நா பேசு:கலெ	நான் பேசலெ	நான் பேசவில்லை, பேசமாட்டேன்.

7.2.3.2 இருளமொழியில் உயிரில் பெயர்கள் உயிருள் பெயர்கள்

இருளமொழியில் உயிரில் பெயர்கள் *கெட* என்னும் இருத்தல் வினையையும் உயிருள் பெயர்கள் *இரு* என்னும் இருத்தல் வினையையும் ஏற்பது இலக்கண விதியாகும். அட்டக்கல் பகுதியில் வாழும் இளம் வயது இருளர்களிடையே இந்த விதி பின்பற்றப்படவில்லை.

அட்டவணை 19

உயிரில் பெயர்கள் உயிருள் பெயர்கள்

மூத்த/நடுத்தர வயதினர்	இளம் வயதினர் வழக்கு	(தமிழ் மொழியில்) பொருள்
1. வானம் கருப்பா கெடக்குது	வானம் கருப்பா இருக்குது	வானம் கறுமையாக இருக்கிறது.
2. ஆபுள்ளெ சன்னமா இருக்கா	ஆபுள்ளெ ஒல்லியா இருக்கா	அந்தப் பெண் ஒல்லியாக இருக்கிறாள்

ஆனால் சில சந்தர்ப்பங்களில் மூத்த வயதினரும் கெட என்ற இருள வழக்கிற்குப் பதிலாக இரு என்ற (தமிழ்) வழக்கைப் பயன்படுத்துகின்றனர். இது மேலும் ஆராயப்பட வேண்டிய ஒன்று.

7.2.3.3. கொடு/தா பயன்பாடு

இருள மொழியில் வயதானோரிடமும் நடுத்தர வயதினரிடமும் கொடு என்ற சொல் தான் பயன்பாட்டில் உள்ளது. தற்காலத் தமிழ் மொழியில் உள்ளது போலக் கொடு, தா என்ற இரண்டு சொற்கள் இல்லை. இளம் வயதினரிடையே தற்காலத் தமிழ்மொழியில் உள்ளது போலக் கொடு, தா என்ற இரண்டு பயன்பாடுகளும் ஒரே பொருளில் உள்ளன.

7.2.3.4 இறப்பிலா எதிர்மறைக் காலப் பயனிலை

இருளமொழியில் உள்ள இறப்பிலா எதிர்மறைக் காலப் பயனிலை யான பேசுஃகலெ (நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் இரண்டிற்குமானது), இளம் வயதினர் இருளமொழி வழக்கில் தமிழ்மொழிக்கு ஏற்பப் பேசலெ என்று மாறியுள்ளது. இருளமொழியில் இளையோரால் பயன்படுத்தப்படும் பேசலெ என்ற பயனிலை, பொருள் நிலையில் இருளமொழியில் உள்ளதைப் போல நிகழ்கால எதிர்மறை, எதிர்கால எதிர்மறை என்றே உள்ளது; தமிழில் உள்ளதைப் போல அல்ல. இறந்தகால எதிர்மறையைக் குறிப்பிட இளைய வயதினரும் இருளமொழியில் உள்ள அலெ என்பதைத் தான் பயன்படுத்துகின்றனர்.

7.2.3.5. வியங்கோள் வினைமுற்று

வியங்கோள் வினைமுற்று வடிவமான *பாடாலி* (பாடட்டும் என்பது பொருள்) என்பது இளம் வயதினரது இருளமொழிப் பேச்சில் பாடட்டும் என்று மாறியுள்ளது.

7.2.3.6 வியப்புச் சொல்வடிவம்

வியப்புச் சொல்வடிவம் *அஃக்வா* என்பது இளம் வயதினரிடையே அய்யோ, அப்பா, அ:ப்:பா எனத் தமிழ் மொழிக்கேற்ப மாற்றமடைந்துள்ளது.

7.3.3.7. பார்க்கும் போது

பாக்கக் கொல்லெ (பார்க்கும் போது என்ற பொருளில்) என்ற தொடர் இளம் வயதினர் வழக்கில் பாக்கும் போது என மாற்றம் அடைந்துள்ளது.

7.3.3.8. நிபந்தனை விகுதி

நிபந்தனை விகுதியான *ஆக்கி* என்பது இளம் வயதினரது இருள மொழிப் பேச்சில் ஆ- என மாறியுள்ளது.

7.3.3.9. மேற்கோள் சொல்லுருபு

மேற்கோள் சொல்லுருபு (quotative particle) *-எண்டு*, இளம் வயதினரது பேச்சில் தமிழில் உள்ளது போல என்று, மாதிரி, போல என மாறியுள்ளது.

7.2.4. இருளமொழி ஆய்வின் முடிவுகள்

இருளமொழி இழப்பு கோயம்புத்தூர் அட்டக்கல் பகுதி இருளப் பழங்குடி மொழியினரிடையே குறிப்பிடும்படி நிகழவில்லை என்றே கூறலாம். இளம் வயதினரது இருளமொழிப்பேச்சில் ஏற்கெனவே குறிப்பிட்டபடி தமிழ் மொழியின் தாக்கத்தால் நிகழ்ந்துள்ள மாற்றங்களை ஒலியன், சொல், மற்றும் உருபன்மைக் கூறுகள் நிலைகளில் கண்டோம். அடிப்படை மொழிச் சொற் களஞ்சியத்தின் இழப்பு (இருளமொழி இளம் வயதினரிடையே) 5 விழுக்காட்டு அளவினதாக உள்ளது. இவை, மொழி இழப்பு என்று கூறுமளவிற்கு இல்லை என்பதோடு மொழிதக்கவைப்பு இங்குச் சிறப்பாக நிகழ்ந்துள்ளது. இருளமொழி உருபன்களில் சில தமிழ் மொழி உருபன்களுக்கு ஏற்ப மாற்றமடைந்திருந்த போதிலும், இந்த வகையான மாற்றம் இருள மொழியின் அடிப்படை இலக்கணத்தை மாற்றி, மூத்த-நடுத்தர வயதினருக்கும், இளைய தலைமுறையினருக்கும் இடையே பெரிய

அளவில் மொழி வேற்றுமையை உண்டாக்கவில்லை. தலைமுறையினருக்கு இடையே உள்ள (தமது) மொழி குறித்த மனப்பாங்கு ஆய்வு நிகழ்த்தப்படவில்லை யாயினும் பொதுவான கவனிப்பின்படி இவர்கள் எல்லோரது தாய்மொழி குறித்த மனப்பாங்கு நன்நம்பிக்கை கொண்ட மனப்பாங்காகவே உள்ளது எனலாம்.

மொழி இழப்பு, சொல்லக் கூடிய அளவில் இச்சூழலில் நிகழவில்லை எனலாம். இந்த ஆய்வில், சமூகப் பண்பாட்டுவியல் தொடர்பானவை, பண்பாடியல் மொழிக்கூறுகள் தொடர்பானவை எவையும் ஆராயப்படவில்லை. ஆனால் வயது முதிர்ந்தோரிடையே நாட்டார் வழக்கியல் தொடர்பான இலக்கிய வகைகள், நாட்டார் பாடல்கள் முதலியவை உள்ளன என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவை இளைய தலைமுறையினரிடம் சென்று சேர்ந்துள்ளதா என்பது தெரியவில்லை. இந்த நோக்கில் இருளமொழியின் நடைவகைகள் குறிப்பிட்ட இந்த இருளமொழியினரிடையே எவ்வளவு தூரம் தக்கவைத்துக் கொள்ளப்பட்டன போன்றவை ஆராயப் பட வேண்டியவை. இவை எல்லாவற்றையும் உள்ளடக்கிய இருளமொழி குறித்த முழுமையான ஆய்வு இந்நூலின் பொருளுக்கு ஏற்ப இன்னும் பலவற்றை வெளிச்சத்துக்குக் கொண்டு வரும் எனலாம்.

குறிப்புகள்

1. 'எத்னோலாக்' 1974 ஆம் ஆண்டுக் களஆய்வுக் கணக்கெடுப்பின்படி, உலகமொழிகள் 5687 எனவும், 1996 ஆம் ஆண்டின் 'எத்னோலாக்' 13 ஆவது பதிப்பின்படி, உலகமொழிகள் 6,073 எனவும் உலகமொழியியல் என்சைக்ளோபீடியாவின் (International Encyclopaedia of Linguistics) உலகமொழிகளின் வரைபடம் (Atlas of the world) 6796 எனவும் இவ்வாறு எண்ணிக்கை வேறுபாடுகளோடு, கணக்கிடப்பட்டுள்ளன. மொழிகளின் கணக்கெடுப்பில் ஏன் இவ்வாறு எண்ணிக்கை வேறுபாடு நிகழ்கின்றது. காரணம் வருமாறு: எது மொழி எது கிளைமொழி என்பதை இனங்கண்டு கொள்வதில் நடைமுறைச் சிக்கல் ஒன்று உள்ளது. 'மொழி', 'கிளைமொழி', இந்த இரண்டையும் சரியாக வேறுபடுத்தி இனங்கண்டுகொள்வதில் மொழியியலாளர்களால் இதுநாள்வரையிலும் தீர்க்கப்படாமல் உள்ள ஆய்வுமுறைச்சிக்கல் ஒன்று உள்ளது. சிலவேளைகளில்

கிளைமொழித் தகுதியில் உள்ள ஒன்று தவறாக மொழி எனக் கருதப்பட்டாலோ மொழித்தகுதியில் உள்ள ஒன்று தவறாகக் கிளைமொழியாகக் குறைத்து மதிப்பிடப்பட்டாலோ மொழிகளின் எண்ணிக்கையில் வேறுபாடுகள் தோன்றலாம். எத்னோலாக்கின் 13 ஆவது பதிப்பில் கணக்கிடப்பட்டுள்ள 6,703 உலகமொழிகளில் 3074 மொழிகளின் பெயர்கள் ஒவ்வொன்றுக்கும் எதிராக இது மொழிதான் என்று உறுதி செய்ய இன்னும் ஆய்வு தேவை என்ற குறிப்பு (ஒன்று) காணப்படுகிறது. அதாவது இனங்கண்டுகொள்ளப்பட்டுள்ள இந்த 3074 வகைகளில் மொழிகள் எத்தனை, கிளைமொழிகள் எத்தனை என்பது உறுதி செய்யப்படவில்லை. கிளைமொழிகளைத் தவறாக, மொழியாகக் கணக்கில் எடுத்துக்கொண்டால் மொழிகளின் எண்ணிக்கை அதிகமாகத்தானே செய்யும். இது ஒருபுறம் இருக்க, உலகில் இன்னும் இனங்கொண்டு கொள்ளப்படாமலேயே உள்ள மொழிகள் கூடப் பல இருக்கலாம். இன்டி - ஆவெ என்னும் திராவிடப் பழங்குடியினர் மொழி, முதன்முதலில் பேரா. இராமகிருஷ்ணாரெட்டி (ஐதராபாத்) அவர்களால்தான் இனங்கண்டு கொள்ளப்பட்டிருக்கிறது. (Reddy, 2009). அம்மொழிகளை இனங்கண்டுகொள்ளும் போதும் உலகமொழிகளின் எண்ணிக்கையில் வேறுபாடு தோன்றலாம். மொழி இழப்பு என்ற இந்த ஆய்வுப் பொருளுக்கு இதுபோன்ற ஒரு ஆய்வுமுறைக் குழப்பம் அதாவது இழந்துபோவது மொழியா அல்லது கிளைமொழியா என்ற குழப்பம் உள்ளது என்பதை நாம் மனந்திறந்து ஒப்புக் கொள்ளலாம். இந்தக் குழப்பம் மொழிகளின் எண்ணிக்கையில் தடுமாற்றத்தை உண்டாக்குகிறதே தவிர மொழி இழப்பு என்ற இந்தக் கருத்தமைவைச் சிதைத்து விடவில்லை என்பதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

2. மொழி இழப்பு/தக்கவைப்பு அந்தமானிய மொழியில் இடம்பெற்றுள்ள பாங்கினை அறிந்து கொள்ளப் பேராசிரியர் இ. அண்ணாமலை (முன்னாள் இயக்குநர், இந்தியமொழிகள் நடுவண் நிறுவனம், மைசூர்) அவர்களும் இந்த நூலாசிரியரும் இணைந்து ஒரு ஆய்வினை 1995-96 ஆம் ஆண்டுகளில் நிகழ்த்தினோம். இந்த ஆய்வு விவரம், ஆய்வு முடிவுகள் அடங்கிய ஆய்வுக்கட்டுரை ஒன்று ஆங்கிலத்தில் Andamanese Biological challenge for language reversal (E. Annamalai and V. Gnanasundaram)) என்ற

தலைப்பில் எழுதப்பட்டு 2001ல் Can threatered languages be saved? Reversing language shift revisted, A 21st century perspective (Edited by Joshua A Fishman)) என்ற தலைப்பில் வெளியான நூலில் சேர்க்கப்பட்டுள்ள ஆங்கிலக் கட்டுரையில் உள்ள பல செய்திகள் இந்தப் பகுதியில் இடம் பெற்றுள்ளன. இந்த ஆய்வுக்காக என்னோடு ஒருங்கிணைந்து 'ஸ்டிரெய்ட் அயலண்டு' என்ற தீவில் களப்பணி ஆற்றிய பேராசிரியர்கள் எம்.ஆர். இரங்கநாதா, இராஜஶ்ரீ (இந்தியமொழிகள் நடுவண் நிறுவனம், மைசூர்) ஆகியோர்க்கு எனது நன்றி. மேலும் அந்தமானியப் பழங்குடியினர் மொழியில் பல காலமாக ஆய்வு மேற்கொண்டிருக்கும் முனைவர் சா. மனோகரன் (தமிழ்ச் செம்மொழி மைய நிறுவனம், சென்னை 600005) அவர்களுக்கு அந்தமானிய மொழி குறித்த பல ஐயங்களைப் போக்கியமைக்கு எனது நன்றி.

3. **National Education Policy 1986 :** "The sociocultural millieu of the scheduled tribes has its distinctive characteristics including in many cases their own spoken languages. This underlies the need to develop the curricula and devise instructional materials in the tribal languages at the initial stages, with arrangements for switching over to the regional languages."

4. சாதிக்கிளைமொழி குறித்த ஆய்வுகளின் நம்பகத்தன்மை குறித்துப் பேராசிரியர் பட்டநாயக் (Pattanayak, 1975) தனது கட்டுரை மூலமாக வினாக்கள் எழுப்பியுள்ளார். ஒரு இனத்திற்குள்ளாகவே ஏற்படும் மொழிவகை வேற்றுமைகளையும் அவ்வினத்தினரே வெவ்வேறு சூழல்களில் உரையாடும் போது கடைப்பிடிக்கும் மொழிவகை வேற்றுமைகளையும் சாதிக் கிளைமொழி ஆய்வுகளில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. சாதிக் கிளைமொழி என்பது நிலைத்து விட்ட வேறுபாடுகளுக்கு உட்படாத தன்மைகள் கொண்ட ஒன்று என்பது இந்த ஆய்வாளரது கருத்து. இந்த வரையறை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்பது பட்டநாயக் அவர்களது வாதம்.

5. இந்நூலில் பயன்படுத்தியுள்ள புதிய எழுத்துக்கள் வருமாறு: க, ட, த, ப ஆகியவற்றிற்கு முன்னே 'கோலன்' (:) இடம் பெறும்போது அவற்றின் ஒலியன் மதிப்பு பின்வருமாறு உள்ளது. இந்த ஒலியன்கள் சில பழங்குடியினர் மொழிகளிலும் தொண்டை மண்டலக் கிளை மொழியிலும் உள்ளன.

: க் = g
: ட் = ḍ
: த் = d
: ப் = p

6. உலகமயமாதல் கோட்பாட்டை ஆதரிப்போர் தரும் விளக்கம் வருமாறு:

உலகமயமாதலின் விளைவாக இன்று மனிதர்கள் தாம் வாழும் நிலப்பகுதி நாடு உலகம் என்ற நிலைகளில் பல்திறப் பண்பாட்டுச் சார்பாளர்களாக வாழும் நிலையில் உள்ளனர். தமிழன் என்பது எந்த அளவிற்கு உண்மையோ அதே அளவிற்கு இந்தியன் என்ற உணர்வும், அகண்ட நிலப்பரப்பாக இருந்தபோதும், தகவல் தொழில் நுட்பம் போக்குவரத்து போன்றவைகளால் சுருங்கிய நிலையில் காணப்படும் இன்றைய உலகின் குடிமகன் என்ற உணர்வும் மேம்படத் தொடங்கியுள்ளன. எந்தச் சமுதாயத்திலும் நடைமுறை வாழ்க்கை முறைகளும் அவற்றின் மதிப்பீடுகளும் நிலைத்த தன்மை உடையவைவல்ல. மாற்றிக் கொள்ள வேண்டிய சில மரபுசார்ந்த பண்பாட்டுக் கூறுகளை பழக்க வழக்கங்களை அப்படியே பின்பற்றுவது வேறுபட்ட சில நல்ல வாழ்க்கை முறைகளைப் பிற பண்பாட்டினரிடமிருந்து பெறமுடியாமல் செய்துவிடும். இது முன்னேற்றத்திற்கு உகந்ததல்ல. தனது இனத்தின், நாட்டின் பண்பாட்டுக் கூறுகள் எந்த அளவிற்கு அங்கீகரிக்கப்படுகிறதோ அதே அளவிற்கு உலகப் பொதுப்பண்பாட்டுக் கூறுகளும் உணர்த்தப்படவேண்டும், அங்கீகரிக்கப்படவேண்டும். உலகப் பொதுப்பண்பாடு என்பது ஆங்கிலமொழிப் பண்பாடு அல்ல. அது உலகப் பொது அறிவியல் கோட்பாட்டு முறையாகும். உலகமுழுவதும் உள்ள சமயங்களின் சாரத்தை உள்ளடக்கியதாகும். மேலும் ஒருவர் தனது இனத்தின், நாட்டின் பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டிருப்பதாலேயே உலகமயப் பொருளாதார நிலையிலிருந்து தம்மை அந்நியப்படுத்திக் கொள்ளத் தேவையில்லை. உலகமயமதாலின் விளைவாக நாடுகள் தங்களுக்கிடையே தகவல், உலகப் பொருளாதாரம் போன்றவற்றைப் பரிமாற்றம் செய்துகொள்ளும் கட்டத்தில் உள்ளன. நாட்டுமக்களின் பொருளாதார முன்னேற்றத்தை, மனதில் கொண்ட உலக நிறுவனமான யுனெஸ்கோ பன்மொழி வழக்கில் உள்ள இந்தியா போன்ற நாடுகள் பின்பற்றக்கூடிய மும்மொழிக் கொள்கை ஒன்றைப் பரிந்துரைக்கிறது (Human Resource Development, *2004)* அதுபின் வருமாறு:

